# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56+ XXVIII | சுடர் 32 | கதிர் 29 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 10, ஞாயிற்றுக்கிழமை 25.12.2016


## 108 பானைகளில் கிளிநொச்சியில் இன்று பொங்கல்

வறட்சி நீங்க வேண்டி

யாழ்ப்பாணம், டிசெ. 25
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சியை அடுத்து மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கனகாம்பிகை அம்மனுக்கு >> 51




# நீதித்துறை மீது நம்பிக்கையில்லை பன்னாட்டு நீதி விசாரணைதான் வேண்டும்

### ரவிராஜ் கொலை வழக்கு தீர்ப்பின் பின்னர் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகள் விசாரணை நடத்தவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். "ஜெனிவாவில் எமது அழுத்தத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சரியானதுதான் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலை வழக்குத் தீர்ப்பு உணர்த்தியுள்ளது. இலங்கையின் நீதித்துறையில் நம்பிக்கை வைக்க முடியாது என்பது இதனூடாக உறுதியாகியுள்ளது" என்றார் அவர்.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த வருடம் நவம்பர் 22ஆம் திகதியே அது தொடர்பான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. இந்த வழக்கிலே ஆறு பேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. ஒருவர் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்த காலப் பகுதியில் இறந்து விட்டார் எனக் கூறப்பட்டது. மற்றைய ஐந்து பேரில் இருவர் இன்னமும் தேடப்பட்டு வருகின்றனர் என >> 51

## புதிய அரசமைப்பு அடுத்த ஆண்டில் நடைமுறைக்கு

பிரிட்டன் தூதுவர் நம்பிக்கை



யாழ்., டிசெ. 25
அடுத்த வருடம் புதிய அரசமைப்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் நம்பிக்கை வெளி >> 51

## 3 கொள்கைகளுள்ளேயே சு.கவின் தீர்வு யோசனை

கொழும்பு, டிசெ. 25
ஒற்றையாட்சிக்குள் தீர்வு, வடக்கு -கிழக்கு இணைப்பு இல்லை மற்றும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை ஆகிய பிரதான 3 அடிப்படைக் கொள்கைகளுக்குள்இருந்து கொண்டே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசமைப்புத் தீர்வு யோசனை தயாரிக்கப்படும். இவ்வாறு சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.
அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துக்தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்த >> 51

## ஆழிப்பேரலை நினைவுத் தூபி முல்லைத்தீவில் நாளை திறப்பு



முல்லை., டிசெ.25
ஆழிப்பேரலை இடரால் உயிரிழந்த மக்களின் நினைவாக ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு வீதி அருகே புதிதாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நாளை அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. >> 51

## ஒற்றையாட்சி முறை தகர்க்கப்படவேண்டும்

### கூட்டமைப்பு அதில் உறுதி என்கிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், டிசெ. 25
இந்த நாட்டில் நல்லிணக்கம் மலர வேண்டுமாக இருந்தால் பேரினவாதத்துக்கு அச்சாணியாய் இருக்கின்ற ஒற்றையாட்சிக் கட்டமைப்பு தகர்க்கப்பட்டு கூட்டாட்சி (சமஷ்டி) என்ற அத்திபாரம் நிறுவப்படவேண்டும். அதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என மீண்டும் வலியுறுத்தியுள்ளது தமிழ்த் தேசியக் >> 06

## முச்சந்தி முனி



தூபி திறக்கிறது பெரிசில்லை. அதை பராமரிக்கவும் வேணும். பாவம். அந்த முள்ளிவாய்க்கால் தூபி சீண்டுவார் கிடையாது....

## யாழ்ப்பாணத்துக்கு ஆசன அதிகரிப்பு இம்முறை இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 25
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 8 ஆயிரத்து 420ஆல் >> 06

## சமல் ராஜபக்சவே 2020இல் பிரதமர்

டிலான் பெரேரா ஆருடம்

கொழும்பு, டிசெ. 25
எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசு அமைக்கவுள்ளதாகவும் அந்தப் புதிய அரசின் பிரதமராக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவே வருவார் >> 51



## புனித பிரதேசங்களாக துயிலும் இல்லங்கள்

### அறிவிக்குமாறு நேற்று கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, டிச.25
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைப் புனித பூமியாக அறிவித்து அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு பிரதேசசபைகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நேற்று கிளிநொச்சி மாவட்அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி >> 51

புதிய அரசமைப்புக்கான

## பொது வாக்கெடுப்பு மூலம் தனி ஈழத்துக்கு அங்கீகாரம்

சாடுகின்றது மகிந்த தரப்பு

கொழும்பு, டிசெ. 25
புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெடுப்பு வடக்கில் வெற்றிபெற்று, தனித் தமிழீழத்துக்கான பன்னாட்டு அங்கீகாரத்தையே கோரும். இது நாட்டுக்கு ஆபத்தாக மாறும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் >> 51

## வேண்டாம் பொருத்து வீடுகள்

கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ.25
கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பொருத்து வீடுகள் தேவையில்லை என்ற தீர்மானம் நேற்றுக் கிளிநொச்சிமாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று மாவட்ட >> 51

## பொருத்துவீட்டுத் திட்ட ஊழலை வெளிப்படுத்த வேண்டிவரும்

அமைச்சர் சுவாமிநாதனுக்கு சுமந்திரன் இறுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25
பொருத்துவீட்டுத் திட்டம் முற்று முழு தாக ஊழல் செயற்பாடு, அதனை எமது மக்கள் மீது திணிக்கின்ற நடவடிக்கைகளில் அமைச்சர் ஈடுபட்டால் அந்தத் திட்டத்தில் >> 52



## உலகில் உயரமான கிறிஸ்மஸ் மரம் காலி முகத்திடலில் நேற்றிரவு திறப்பு

கொழும்பு, டிசெ. 25
உலகின் மிக உயரமான கிறிஸ்மஸ் மரம் காலிமுகத் >> 51

## யாழ். நகரிலுள்ள காணியை கைப்பற்றப் பொலிஸ் தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ. 25
யாழ். நகரில் - முக்கிய மையத்தில் - 6 ஏக்கரில் பொலிஸ் திணைக்களத்துக்கு ஏற்கனவே காணிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு >> 53

## ஒற்றையாட்சியைத் தொடர்ந்து பேணுமாறு அஸ்கிரிய பீடாதிபதி ரணிலிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 25
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஒற்றையாட்சி தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட 5 அம்சக் கோரிக்கைகளை அஸ்கிரிய பீடாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களை >> 51

# மூத்த பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேருக்குப் பதவி உயர்வு

கொழும்பு, டிசெ. 25

மூத்த பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த பொலிஸ் அதிகாரிகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு இணங்க பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மூத்த பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு டிசெம்பர் 8ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

கே.என்.ஜே.வதிசிங்ஹ, எஸ்.ரத்நாயக்க, சி.ஏ.பிரேமசாந்த, எல்.கே.ஜே.ஜி.எஸ்.பீரிஸ், கே.பி.எம்.குணரத்ன, எல்.எச்.டப்ள்யூ.கே.சில்வா, ஏ.எச்.எம்.டப்ள்யூ.சீ.கே அழகக்கோன் ஆகியோரே பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (கு)



கிண்ணியா பிரதேசத்துக்குட்பட்ட நடுத்தீவில் தாஜுதீன் என்பவரது வீட்டில் உள்ள பசு ஒன்று நேற்றுக் காலை இரு உடல் ஒரு தலையுடன் கன்று ஒன்றை ஈன்றுள்ளது. ஈன்று ஒரு மணி நேரத்தில் கன்று உயிரிழந்தது. (த-45)





யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நள்ளிரவு இடம்பெற்ற பாலன் பிறப்பு ஆராதனையின் போது...... (வ-ரி)




# அம்பலத்தில ஆடினதுகள் பாயைப் பிறாண்டாம விடாதுகள்!

விடியக்காத்தால கண்ண முழிச்சு கட்டிலால எழும்ப கேற்றடியில் அப்புச்சி...! அப்புச்சி...! என்று கூப்பிட்டுக் கொண்டு சொந்தக்காரர் ஒருத்தர் வாசல்ல வந்து நின்றார். அவசரமா வந்த சலத்தையும் அடக்கிக் கொண்டு ஓடிப் போய் கேற்றத் திறக்க, "அப்புச்சி நீ உலகம் தெரிஞ்சனி! ஊரெல்லாம் நியாயங்கள் பிளக்கிறாய். இஞ்ச சொந்தத்துக்க நடக்கிற பிடுங்குப்பாடுகள் ஒன்றும் உனக்குத் தெரியாது" என்று உள்ளுக்க வர முன்னமே அந்தாள் குமையத் தொடங்கிட்டுது.

"பொறு.. பொறு.. வந்ததும் வராததுமா ஏன் குளறுறாய். ஆறுதலா வந்து உள்ளுக்க இரு. எனக்கு அவசரமா சலம் வருகுது. போயிட்டு வாறன்" என்று போட்டு ஓடிப் போனன்.

சும்மாவே சொன்னவங்கள் "ஆத்திரத்தை அடக்கினாலும்..." என்று பாத்ரூமுக்க போக கொமேட்டெல்லாம் பெரிய கறுத்தக் கட்டெறும்புகள் மொய்ச்சுக் கொண்டிருந்துதுகள். ஒரு வாளி தண்ணிய எடுத்து அடிச்சுக் கழுவிப்போட்டுத்தான் கடமையை முடிக்க வேண்டியதாப் போச்சு.

இந்தக் கட்டெறும்புகளைப் பார்க்க, முன்னம் ஒரு நாடகம் போட்டவங்கள் அதுக்குப் பெயர் 'சிங்கப்பூர் டொக்ரர்' அது தான் ஞாபகம் வந்தது. அதில் சிங்கப்பூருக்குப் போய் அற்றண்டன் வேலை பார்த்தவர் திரும்பி வந்து ஊரில ஒரு கிளினிக் சென்ரர் திறந்து, தான் ஒரு டொக்ரர் என்று சொல்லித் திரிவார். அங்க சலம் சோதிக்கக் கொண்டுவந்து சனங்கள் கொடுக்குதுகள். அதை போத்தில்ல வாங்கி வைக்கினம். அடுத்தநாள் விடிய போத் தில்ல எறும்பு மொச்சிருந்தா அவருக்கு சலரோகம் இருக்குமென்று தீர்மானிப்பார் டொக்ரர். பிறகு அதுக்கு மருந்து கொடுப்பார்.

எனக்கும் எறும்புகள் மொச்சுக் கிடந்ததைப் பார்க்க அந்தச் சிங்கப்பூர் டொக்ரர்தான் ஞாபகம் வந்தார். அதில இன்னுமொரு விசயமும் வரும். அந்த டொக்கரருக்கு மருந்துகள் பற்றி எதுவும் தெரியாது. உந்த மருந்து விக்கிற பையன், ஏதோ மெடிக்கல் றெப்பாம். அவன் கொண்டு வந்து ஒரு குளுசையைக் குடுப்பான், அதுக்குப் பேர் எல்லாமைசின். அதை எல்லா வைத்தியத்துக்கும் கொடுக்கலாம் என்று சொல்லுவான். இந்த போலி டொக்ரர் தன்னட்ட வாற எல்லாருக் கும் அந்த எல்லாமைசின் குளுசையைத் தான் கொடுப்பார்.

அண்டைக்குப் பேரப்பிள்ளை ஒன்றுக்குச் சுகமில்லை என்று டொக்ரர் ஒருத்தரைப் போய்பார்த்தன். பக்கத்தில இருந்த ஒரு படிச்சவர் சொல்லுறார் இப்ப எந்த டொக்ரரிட்டக் காட்டினாலும் அவை எல்லாரும் ஒக்மன்ரில் என்ற மருந்தைத்தான் எழுதிகினமாம். அப்ப நினைச்சன் இப்பவும் சிங்கப்பூர் டொக்ரரர் நாடகம் கன இடத்தில் நடக்குதுபோல எண்டு. அப்பிடியே திரும்பினா, டொக்ரரைப் பார்க்க 18 மெடிக்கல் றெப்மார்ரையும் கட்டிக்கொண்டு படையாய் நிக்கினம்.

இதுகளை மனசுக்க ஓட விட்டுக்கொண்டே காலைக் கடமைகளை முடிச்சுப் போட்டு ஆசுவாசமா வெளியில வந்தன்.

விடியக்காத்தால சீறிக் கொண்டு வந்தவர். அடங்கி ஒடுங்கி நின்றார். என்ன என்று கேட்க "உனக்குத் தெரியுமோ! என்ர பக்கத்து வீட்டுக்காரன் - உன்ர சகோதரன் மதில் கட்டேக்க ரெண்டு இஞ்சி என்ர பக்கத்திற்கு தள்ளிக் கட்டிப்போட்டான். நீதான் வந்து மத்தியஸ்தம் பார்க்கவேணும்" என்றார்.

நான் என்னத்தை மத்தியஸ்தம் பார்க்கிறது! ரெண்டிஞ்சி நிலத்துக்கு துடிக்கிறவர். எவ்வளவு நிலம் பறிபோகுது அதைப் பற்றி யோசிக்கிறாங்களே என்று நினைச் சுக் கொண்டு, "நான் என்னத்தை மத்தியஸ்தம் செய்யிறது. நீங்கள்தான் பேசித் தீர்க்க வேணும். அவையளோட பேசேலாது. பேசினா சண்டைக்கு வருகுதுகள்" எண்டன்.

"நீதான் பேசவேணும்" என்று ஒற்றக்காலில நிண்டான் பாவி. பின்ன நான் என்ன செய்ய? நான் சொன்னன் "பொறு... ஐ.நாவின்ர செயலாளர் பான் கீ மூன் இப்ப பிறியாத்தான் நிக்கிறார். அவரிட்ட ஒருக்கா கேட்டுச் சொல்லுறன், உன்ர ரெண்டிஞ்சி நிலத்தை மீட்டுத் தரச் சொல்லி!" என்று சொல்லிப் போட்டன்.

அவன் உடன கோபப்பட்டு "உனக்கு எப்பவும் உந்த விண்ணாணக் கதை தான். "அந்தாளை மத்தியஸ்தத்திற்கு கூப்பிட்டா ரெண்டிஞ்சி நிலத்திற்குப் பதிலா என்ர ரெண்டு பரப்புக் காணியையும் பறிகொடுக்க வேண்டி வந்திடும். அந் தாள் ஒரு முதுகெலும் பில்லாத மனுசன். அவரப் போய் என்ர பிரச்சினைக்கு கூப்பி டென்றியாய்" என்று குழறிக்கத்திக் வெளிக்கிட்டுப் போயிட்டுது மனுசன்.

பான் கீ மூனால அவன்ர அறுவையில இருந்து தப்பிச்சன். பிறகு, தேத்தண்ணியைக் குடிச்சிட்டு ஓடிப்போய் பேப்பரை வாங்கிக் கொண்டு வந்து திறந்தா பான்கீ மூன் மைத்திரியிட்டை விடை பெற்றுக் கொண்டார் என்று இருந்துது. மகிந்த தமிழரைக் கொன்று குவிக்க பான்கீமூன் அதுக்கு சாட்சியா இருந்தவரேயல்லா மல் அதைத் தடுத்தவரே?

அம்பலத்திலாடினதுகள் படுக்கையிலயிருந்தும் பாயைப் பாயை பிக்கிறதென்று சொல்லுவினம். அதைப்போல ஐ.நா. பதவியால இறங்கினவர் சிவனேயென்று கிடக்காமல். தென்கொரிய ஜனாதிபதித் தேர்தலில தென்கொரியாவின்ர ஜனாதிபதிப் பதவிக்கு போட்டி போடப்போறாராம். பதவியிலிருந்துருசிச் சவயளுக்கு பதவியில்லாமல் இருக்க முடியாது பாருங்கோ! அதாலதானே மகிந்தரும் இங்க இனவாதத்தைத் தூக்கிக் கொண்டு துடிக்கிறார்.

# எந்தத் தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு அதிபர் நியமனங்கள் இடம்பெறவேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

தரம் 3 அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கும் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாடசாலை அதிபர் விடயங்களைக் கையாளவேண்டியுள்ளது. இதனைச் சீராகச் செய்ய முற்பட்டபோது, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதனால் மேற்கொண்டு எதுவும் செய்யவில்லை. எனினும் இரு சாராருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்காண வரவு செலவு திட்டத்தில் கல்வி அமைச்சுக்களின் பாதீடுகள் தொடர்பாக உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துகளுக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வடமாகாண கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய ஆலோசனைக் கூட்டத்திலே இலங்கை அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனங்களைச் சுமுகமாக வழங்க வேண்டும் என்பதற்காகவே பத்திரிகையில் விண்ணப்பங்களை கோரி 84 அதிபர்களுக்கு நியமனம் வழங்கினேன். முதலமைச்சர் அதனை நிறுத்திவிட்டார். மற்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையால் எப்போதும் ஒரு தொகுதியினருக்கு சமகாலத்தில் சமபதவிநிலையை வழங்க முடியாது என்பது சாதாரண நிர்வாக விடயம்.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் தாக்கம் ஏற்படாத வகையில் பொருத்தமான பாடசாலையை வழங்க முயற்சித்தவேளை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதனால் ஒன்றும் செய்யமுடியாது போய்விட்டது. கடமைநிறைவேற்று அதிபர்களும் ஒரு கோரிக்கையை முன்வைத்தமையால் இரண்டு சாராருக்கும் பொருத்தமான முறையில் பணியை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

நீதிமன்றத்தில் நான்காம் திகதி வழக்கு வருவதால் காலம் தாழ்த்தி அதனைச் செய்யலாம் என நினைக்கிறேன். என்னுடைய ஆலோசனைக் கூட்டங்களுக்கு வருகின்றபோது தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். தரம் 11 மாணவர்களுக்கு என்ன செய்யப் போகின்றோம். 52 ஆயிரம் மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றார்கள். இவர்களின் 50 வீதத்தினரே பெறுபேற்றின் அடிப்படையில் உயர்தரம் செல்லப் போகின்றார்கள். மீதி உள்ள மாணவர்கள் என்ன செய்வார்கள். எனவேதான் அவர்களைப் பாடசாலைக்கு கண்டிப்பாக வரும்படி சுற்றறிக்கைகள் மூலம் கட்டளைகளை பிறப்பித்திருக்கின்றோம்.

மாணவர்கள் 18 வயது வரைக்கும் பாடசாலைக் கல்வியைத் தொடர வேண்டும். இதனால் தொழிற்கல்விகளை பெற்று அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

கல்வி அமைச்சு ஆலோசனையின் படி 2015ஆம் ஆண்டிலே வடக்கு மாகாணத்திலே எல்லா மாணவர்களுக்கும் 13ஆம் தரம் வரை கட்டாயக்கல்வி என்று தீர்மானித்திருக்கின்றோம். அந்த தீர்மானத்தை தற்போது நடைமுறைப்படுத்துகின்றோம். இதனை வடக்கு மாகாணத்தில் முன்னுதாரணமாகத் துணிந்து செயற்படுத்தியிருக்கின்றோம். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனால் 18 வயது வரைக்கும் மாணவர்கள் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்து தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் - என்றார். (வ-4,7)

## தரச் சான்றிதழ் இல்லாத ஹெல்மட்டுக்குத் தடை

கொழும்பு, டிசெ 25

ஜனவரி முதலாம் திகதி முதல் தரச் சான்றிதழ் இல்லாத தலைக் கவசங்களைச் சந்தைக்கு விநியோகிப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதாக வீதி பாதுகாப்பு சம்பந்தமான தேசிய சபையின் தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தரச் சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்கள் தயாரிப்பதைப் பதிவு செய்வதற்காக டிசெம்பர் 31ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கட்டாயமாகச் தரச் சான்றிதழ் உடைய தலைக்கவசத்தை மட்டுமே பாவிக்க முடியும்.

ஜனவரி முதலாம் திகதி முதல் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் தரச் சான்றிதழ் அற்ற தலைக் கவசங்களைச் சந்தைக்கு விநியோகிப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையில் தலைக்கவசங்களைத் தயாரிக்கும் 6 நிறுவனங்களில் 2 நிறுவனங்கள் தரச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளன. இந்த மாதம் இறுதியில் ஏனைய நிறுவனங்களுக்கும் தரச்சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை நிறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழக்கும் மற்றும் காயமடையும்வீதம் அதிகரிப்பதால், அதனை தடுக்கும் விதமாக புதிய தர முறை ஒன்றை அறிமுகம் செய்யும் தேவை ஏற்பட்டி ருக்கின்றது. எனவே ஜனவரி முதலாம் திகதி முதல் தரச் சான்றிதழ் இல்லாத தலைக்கவசங்களை சந்தைக்கு விநியோகிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது - என்றார். (த)

## அரச ஊழியர் சகலரும் ஜனவரி 2 உறுதியுரை

யாழ்ப்பாணம், டிசெ. 25

பாதுகாப்பானதோர் எதிர்காலத்தைத் தோற்றுவிப்பதற்காக பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரச ஊழியனாகிய நான் அரச கொள்கைகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவேன் என்ற சத்தியப் பிரமாணத்தை அல்லது உறுதியை ஒவ்வொரு அரச ஊழியரும் எதிர்வரும் 2 ஆம் திகதி எடுக்கவேண்டும். இவ்வாறு அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி சகல அமைச்சுக்கள், பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

அந்த உறுதி உரையில், பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரச ஊழியர்களாகிய நான் அரச கொள்கைகள் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைப் பொறுப் புக்களை வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் திட சங்கற்பத்துடனும் நேர்மையாகவும் மக்களுக்கு பக்கச்சார்பு இன்றியும் நிறைவேற்றுவேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-50)

## 2017 ஜனவரி தொடக்கம் வறுமை ஒழிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

நாடு முழுவதும் சகல அரச நிறுவனங்களும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வகுத்து 2017 ஜனவரி முதல் உடன் நடைமுறைப் படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபயக்கோன் தெரிவித்தார்.

'2017 வறுமையில் இருந்து விடுபடும் ஆண்டு' எனும் தலைப்பில் அவர் சகல அரச நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு இணையாக அதன் முதல் எதிர்பார்ப்பாகிய வறுமையில் இருந்து மக்களை மீட்டெடுத்தல் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியின் யோசனையின்படி 2017 வறுமையில் இருந்து விடுபடும் வருடம் என்று பிரகடனப் படுத்தப்பட்டது. அதற்குக் கடந்த ஒகஸ்ட் 29 ஆம் திகதி ஒன்று கூடிய அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.

வறுமை ஒழிப்புத் தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைக் கருத்திற்கொண்டு தேசிய திட்டம் ஒன்று ஜனவரி முதல் வாரத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது - என்றுள்ளது.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க சிறப்புக் கடமைப் பொறுப்புக்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்ததுடன் இவருக்கு உதவியாக பதினொரு உறுப்பினர்களையும் நியமித்துள்ளார்.

(த-4-50)

## பதவி விலகுகின்றார் குணரத்ன வீரக்கோன்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கரந்தெனிய தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பின் முன்னாள் அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார்.

கடந்த வருட பொதுத் தேர்தலில் தான் தோல்வியடைந்தமையாலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் தோல்வியுற்றமையினால் தனது கடமைகளைச் சரிவர செய்ய முடியவில்லை. எனவே கரந்தெனிய தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கூறினார். (த)

## இந்து மயானத்தில் மோட்டார் குண்டு நேற்று மீட்பு



மட்டக்களப்பு, டிசெ. 25

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை இந்து மயானத்தில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால், முறக்கொட்டாஞ்சேனை பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மயானத்துக்குச் சென்ற இராணுவத்தினர் மற்றும் பொலிஸார், மோட்டார் குண்டைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

குறித்த மோட்டார் குண்டு, போர்க் காலத்தில் கைவிடப்பட்டதாக இருக்கலாம் எனக் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் தெரிவித்தனர். (த)

## மதுபான நிலையங்கள் இன்று பூட்டு

கொழும்பு, டிசெ. 25

நத்தார் தினத்தை முன்னிட்டு இன்று நாட்டிலுள்ள சகல மதுபானச் சாலைகளையும் மூடிவிட அரசு தீர்மானித்துள்ளது.

இந்த உத்தரவை மீறிச் செயற்படும் மதுபான விற்பனை நிலையங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. மதுபானச்சாலைகள் மூடப்படவுள்ள இன்றைய தினம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் சிறப்புச் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சிறைக் காவலர்கள் தெரிவு மோசடியை விசாரிக்க குழு

கொழும்பு, டிசெ. 25

புதிய சிறைக்காவலர்களின் நியமனத்துக்காக அண்மையில் நடத்தப் பட்ட நேர்முகத் தேர்வின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் பற்றி விசாரிப்பதற்காக நால்வர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை கிடைத்த பின் அது மேலதிக நடவடிக்கைகளுக்காக அரச சேவைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுமென அமைச்சின் பதில் செயலாளர் ஏ.அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறைக்காவலர்களுக் கான நேர்முகத் தேர்வின் போது பல மோசடிகளும், பாரபட்சமும் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதையடுத்து அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அந்த நியமனங்களை இடைநிறுத்தம் செய்ததாகவும், இந்தச் சம்பவம் தொடர்பில் அரச சேவையாளர்கள் ஆணைக்குழு தனியாக விசாரணையொன்றை நடத்தவுள்ளதாகவும், இரு விசாரணைகளும் முடிவடைந்த பின் குறிப்பிட்ட நியமனங்களை ரத்துச் செய்து புதிதாக நேர்முகத் தேர்வுகளை நடத்துவதா இல்லையா என்பதைப் பற்றி முடிவெடுக்கப்படுமெனவும் அமைச்சின் பதில் செயலாளர் அமரதுங்க கூறினார். (த)

## ஓய்வுபெற்ற படையினருக்கு விரைவில் புதிய திணைக்களம்

கொழும்பு, டிசெ. 25

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக தனியான ஒரு திணைக்களத்தை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதுவரை, இதுபோன்ற திணைக்களமொன்று காணப்படாமையினால், ஓய்வுபெற்ற இராணுவத்தினர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

தற்போதுள்ள நிலையில், ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரிகள், அவர்கள் சேவையில் இருக்கும்போது கனிஷ்ட அதிகாரிகளாக இருந்தவர்களிடமே தமது தேவைகளை முறையிட வேண்டிய நிலை உள்ளது.

இந்தப் புதிய திணைக்க்ளத்தினால், இராணுவத்தினர் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

(த)

# பேரவைச் செயலகத்துக்குள்ளேயே அச்சுறுத்தல்

## வடக்கு அவைத் தலைவரிடம் முறையிட்டார் அனந்தி

**தி.சோபிதன்**

வடக்கு மாகாண அவைத்தலைவரை 'கௌரவ சபாநாயகரே' என்று திடீரென அழைத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன். அதனால் அனைத்து உறுப்பினர்களின் கவனமும் அவரின் பக்கம் திரும்பியது. "அவைத்தலைவரை சபாநாயகர் என்று அழைக்கிறீர்களே?" என்று சில உறுப்பினர்கள் கேள்வி கேட்கவும் செய்தனர்.

"சபாநாயகர் என்று அழைத்தால் அவரது தரமும் சபையின் தரமும் அதிகரிக்கும். அதுதான் நான் அப்படி அழைத்தேன்" என்று சற்றுச் சூடாகவே பதிலளித்தார் அனந்தி.

"வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்குள்ளேயே என்னை அச்சுறுத்தும் வகையில் சில உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்" என்றும் அவர் அவைத் தலைவரிடம் அவர் முறைப்பாடும் செய்தார்.

அதைக் கேட்ட அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் "உங்களுக்கு எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எதற்குமே நான் பொறுப்பு இல்லை" என்று பதிலளித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு அவைத்தலைவர் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியது.

அவைத்தலைவர் சிவஞானம், "கொழும்பு அரசின் அபிவிருத்திச் சட்டவரைவுக்கான எமது கருத்துக்களை விரைந்து அனுப்பவேண்டியுள்ளது. அபிவிருத்திச் சட்டத்துக்கு வட மாகாண சபை உடன்படாது என்ற நிலையை முதலமைச்சர் இப்போது சபையில் அறிவிப்பார். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தருவீர்கள் என்று நினைக்கிறேன்" என்று கூறி முதலமைச்சருக்கு நேரம் வழங்கினார்.

### ரணில் அறிவிக்கவில்லை

தொடர்ந்து முதலமைச்சர் உரையாற்றினார்.

"எனக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையேசந்திப்புஇடம்பெறவுள்ளது என்று ஊடகங்கள் வாயிலாக நான் அறிந்திருந்தேன். எனக்கு அது தொடர்பான உத்தியோக பூர்வமான அறிவித்தல்களோ, கடிதங்களோ கிடைக்கவில்லை" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

### எதிர்ப்பில்லை

முதலமைச்சரின் அபிவிருத்திச் சட்டம் தொடர்பான உரையைத் தொடர்ந்து அவைத்தலைவர் சிவஞானம் கருத்துத் தெரிவித்தார். அந்தச் சட்டவரைவுக்கு வடக்கு மாகாண சபை உடன்படாது என்று கூறினார். உறுப்பினர்களிடம் இது தொடர்பில் ஆட்சேபனை இருக்கின்றதா என்றும் வினவினார். அனைத்து உறுப்பினர்களும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காது வடமாகாண சபையின் முடிவுக்கு ஏகமனதாக ஆதரவு வழங்கினர்.

### தப்புச் செய்தால்...

ஒரு பத்திரிகையை கையில் வைத்துக்கொண்டே சடுதியாக எழும்பினார் லிங்கநாதன். சில ஊடகங்கள் நானும் ஐங்கரநேசனும் சண்டை போட வேண்டும் என்று விரும்புகின்றன போன்று உள்ளது. நான் ஒரு இடமும் பெல்டியும் அடிக்கவில்லை. எனக்கும் ஐங்கரநேசனுக்கும் தனிப்பட்ட முரண்பாடுகளும் இல்லை. நான் முன்னரே சொன்னது போல தப்பு செய்தால் யார் என்றும் பார்க்க மாட்டேன். ஐங்கரநேசன் தொடர்பான குற்றச்சாட்டுகளை நான் விசாரணைக்குழுவிடம் ஒப்படைத்து விட்டேன். இனி விசாரணைக்குழு அதனைப் பார்க்கும். அதை விட்டு நானும் ஐங்கரநேசனும் எப்போது சண்டை பிடிப்போம் என்று அவை எதிர் பாக்கின்றனவா?" என்று காட்டமாகக் கூறினார்.

### உதுகள விடுங்கோ

"சரி சரி லிங்கநாதன் உந்தப் பேப்பர்காரங்கட செய்தியளுக்கு நீங்கள் ஏன் காது குடுக்குறியள்?. உதுகளை விடுங்கோ நாங்கள் எங்கட இன்றைய விடயத்துக்கு வருவோம்" என்று சமாதானப்படுத்தினார் அவைத்தலைவர் சிவஞானம்.

பின்னர் வடமாகாண சபையின் கல்வி அமைச்சின் பாதீட்டு முன்மொழிவு இடம்பெற்றது. கல்வி அமைச்சர் குருகுலராஜா பாதீட்டு உரையாற்றினார். கல்வி அமைச்சின் பாதீடு தொடர்பில் ஆராய்வதற்காகச் சபை குழு நிலைக்கு மாறுகின்றது என்று அவைத் தலைவர் அறிவித்தார்.

குறித்த பாதீட்டை குழு நிலையில் விவாதிக்கும்போது சபையில் அதிபர் நியமனங்கள் தொடர்பில் பல கருத்துக்களை உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

பாடசாலைகளை இனிவரும் காலங்களில் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாண சபை எதிர்க்க வேண்டும் என்று பலர் சபையில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

### 6 க்குப் பிறகு வகுப்பா?

தனியார் கல்வி நிலையங்களில் மாலை நேர வகுப்புக்களை 6 மணிக்கு பின்னரும் நடத்த அனுமதி வழங்கவேண்டும் என்று சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார். ஆனால் ஏனைய உறுப்பினர்கள் எவரும் அந்தக் கோரிக்கையைக் கவனத்தில்கூட எடுக்கவில்லை.

"தனியார் வகுப்புக்களில் படிக்கின்ற பிள்ளைகள்தான் நாளைக்கு பல் கலைக்கழகங்களுக்கு போகப் போகின்றார்கள். அப்படி அவர்கள் அங்கு செல்லும்போது அங்கு 5 மணிக்கு பிறகு வகுப்புகள் நடந்தால் செல்லத்தானே போகின்றனர். இப்போதே அவர்கள் 6 மணிக்கு பின்னர் வகுப்புகளுக்கு போவதில் பிழையில்லை." என்று தனது கோரிக்கையை நியாயப்படுத்தி கல்வி அமைச்சரிடம் சிவாஜிலிங்கம் முன்வைத்தார். ஆனாலும் அந்தக் கோரிக்கை கணக்கில் எடுக்கப்படவில்லை.

### குட்டிக்கதை

"ஐயா உங்கட மணியைப் பார்த்து அடியுங்கோ' என்று அவைத்தலைவரிடம் கூறியவாறு தனது உரையை ஆரம்பித்தார் குணசீலன்.

தனது உரையில் குட்டிக் கதை கூறப்போகின்றேன் என்றும் அவர் கூறினார்.

"ஒரு பேருந்துல இரண்டு பெட்டையள் பயணிக்கினம். அதில ஒரு பெட்டை நடத்துநரிடம் இந்த யன்னல் கண்ணாடியை சாத்துங்கோ, காத்து பட்டா நான் செத்துடுவன் என்கிறாள். அதுக்கு மற்றவள் காத்துப் படாட்டி தான் செத்துடுவன் என்கிறாள். இதைக்கண்ட ஒருவர் நடத்துநரைப் பார்த்து "நீ முதலில் யன்னலை திறந்துவிடு. அப்போது ஒருத்தி செத்து விடுவாள். அதன் பின்னர் யன்னலை மூடிவிடு மற்றையவளும் செத்துவிடுவாள். அதோட அலுவல் முடிஞ்சுது" என்றார். அதற்கு நடத்துநர் "நீங்கள் இப்படிச் சொல்லுறியள் நாளைக்கு பொலிசாரோட அவையிண்ட கணவன்மார் வந்தா நான் என்ன செய்யிறது" எண்டான். அதுக்கு பின்னால் இருந்தவர் "அது இரண்டுமே என்ர மனைவிமார்தான். அதாலே ஒன்றும் நடக்காது" என்று சொல்லுகிறார். இதுதான் உட்கட்சிப் பூசல் எண்டு சொல்றது. அதேமாதிரி அங்க இருந்த கணவனின் செயற்பாடுதான் பேரினவாத அரசு. இதை அனைவரும் விளங்க வேண்டும்." என்று அவர் கதை கூறினார்.

### அல்வா

"ஆ! ஆ! இண்டைக்கு அல்வா வரும் எண்டு நினைச்சனான். ஆனா அது மாதிரியான கச்சான் அல்வா வந்திருக்கு" என்று கூறி அவர் அமர்ந்தார். (சபையில் உறுப்பினர்களுக்கு தின்பண்டம் கொடுக்கப்பட்டது).

அதன் பின்னர் மற்றைய சில உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு பின்னர் குழுநிலையிலிருந்து அவை நிலைக்கு மாற்றமடைந்து கல்வி அமைச்சின் அடுத்த ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சின் பாதீடு ஆரம்பமானது. அமைச்சர் டெனிஸ்வரன் பாதீட்டு உரையாற்றினார். பின்னர் அவை குழு நிலைக்கு மாற்றப்பட்டு மீன்பிடி அமைச்சின் பாதீடு தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

### தலா 5 மில்லியன்

முதலமைச்சர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது அமைச்சின் ஊடாக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கித் தரப்படும் என்றுகூறி அனைத்து உறுப்பினர்களுக்கும் இன்ப அதிர்ச்சி கொடுத்தார் அமைச்சர் டெனீஸ்வரன்.

விவாதங்களில் போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயற்பாடுகளைப் பெரும்பாலான உறுப்பினர்கள் பாராட்டினார்கள். மக்களுக்குத் தேவையானதை இந்த அமைச்சு தொடர்ந்தும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்றும் அமைச்சரிடம் கோரினர். சில உறுப்பினர்கள் தங்களது பிரதேசங்களில் குறித்த அமைச்சு சார்ந்து செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பிலும் தெரிவித்தனர்.

### பொய் வாக்குறுதிகள்

முல்லைத்தீவுமாவட்டத்தில்கொழும்பு அமைச்சர் மகிந்த அமரவீர பொய்யான வாக்குறுதிகளை வழங்கிச் சென்றார். தென் பகுதியிலிருந்து வரும் மீனவர்களால் இன்றுவரை எமது மீனவர்கள் பாதிப்படைந்து கொண்டிருக்கின்றனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் குழுநிலையிலிருந்து அவை நிலைக்கு மாற்றப்பட்டது. போக்குவரத்து அமைச்சின் பாதீடு முன்மொழியப்பட்டு எதிர்க்கட்சித்தலைவர் ஆமோதிக்க அமைச்சின் பாதீடு நிறைவேறுகின்றது என்று அவைத்தலைவர் அறிவிக்க முற்பட்டபோது திடீரென எழுந்தார் சிவாஜி.

"நீங்கள் அவ்வாறு அறிவிக்க முடியாது. யாராவது ஆட்சேபனைகள் இருக்கா எண்டும் கேட்க வேண்டும்" - என்றார்.

அதற்கு அவைத்தலைவர் "யாருக்காவது அமைச்சின் பாதீட்டில் ஏதாவது மாற்றுக் கருத்துக்கள் உண்டா?" என்று கேட்டார். அனைவரும் மௌனமாக இருந்தனர்.

அப்போது எழுந்த அமைச்சர் டெனீஸ்வரன், "யாருக்காவது பாதீட்டில் மாற்றுக் கருத்துக்கள் இருந்தால் சொல்ல முடியும்" என்றார். யாராவது எதிர்த்தால் அதனையும் பதிவு செய்யுங்கள் என்று சிவஞானத்திடம் கேட்டார். அவைத் தலைவரும் மீண்டும் "யாருக்காவது ஏதாவது அதிருப்தி இருக்கிறதா?" என்று கேட்டார்.

ஒலிவாங்கியின் பக்கம் சொல்லாமல் மெதுவாக சிவாஜிலிங்கம் "என்னுடைய ஆதரவு பிரேரணைக்கு இல்லை" என குசுகுத்தார். அதை அவதானித்த சிவஞானம் "அது அவர் சும்மா சொல்லுறார்" என சிரித்துக்கொண்டு பாதீடு நிறைவேற்றப்படுகின்றது என்று அறிவித்தார்.

அதன்பின்னர் அவைத் தலைவர் ஒரு விடயத்தைத் தெரிவித்தார்.

"தமிழ்த்தலைமையிடம் ஒப்படைத்த வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை நாம் ஒழுங்காக நடத்தவில்லை என்று அடையாளப்படுத்தி சபையைக் கலைக்க வேண்டும் என்ற நோக்கோடு சிலர் இங்கே செயற்படுகிறார்கள். அது எனக்கும் தெரியும். நானும் பல காலம் அரசியல் பார்த்து வந்தனான். அவையளுக்கு ஒன்று மட்டும் சொல்றன். நான் பொறுப்பேற்ற இந்த மாகாண சபையை நான் இருக்கும் மட்டும் எப்பாடுபட்டாவது சபையைக் கட்டுக்கோப்பாக வைச்சிருப்பேன்" - என்று கூறினார்.

பின்னர் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு மதியபோசன விருந்துபசார நிகழ்வுடன் கூடிய அமர்வு இடம்பெறும் என அவையை ஒத்திவைத்தார்.

(ஞ)

# வீதிப் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தால் வேலை வாய்ப்பு

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

வடக்கு மாகாண சபை 2013ஆம் ஆண்டு உருவாகியதன் பின் முதன் முதலில் ஒரு நியதிச்சட்டத்தின் ஊடாக அதிகாரசபை உருவாக்கப்பட்டு, அதனூடாக 200 பேருக்கான வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றது என்றால் அது எனது வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டமேயாகும். இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர். பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்திட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் 5 வயது சுவாஸ்திகன் என்ற மாணவன் பரிதாபகரமாக உயிர் இழந்ததை எவரும் மறந்துவிட முடியாது. அதே போன்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள் பொதுமக்கள் என எத்தனையோ பெறுமதிமிக்க உயிர்களைப் பறிகொடுத்திருக்கின்றோம். இவை மாற்றியமைக்கப்படவேண்டும். அதுவும் விரைவாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மத்திய அரசு விபத்துக்களைக் குறைப்பதற்காக தண்டப்பண அதிகரிப்பைச் செய்திருந்தது. இதனை நானும் எமது மாகாணத்தில் இருக்கின்ற பெரும்பாலான சாரதிகளும் வரவேற்றிருந்தோம். எம்மைத் தவிர வேறு எந்த மாகாணமும் இதனை வரவேற்கவில்லை. எத்தனையோ கோரிக்கைகள் பொதுமக்களிடமிருந்தும், பொது அமைப்புக்களிடமிருந்தும் விடுக்கப்படுகின்றன.போதிய நிதியின்மையால் அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

கடந்த வருடங்களில் மாகாண சபை உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாக பேருந்துத் தரிப்பிடங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியிருந்தேன். இந்த வருடமும் நிதி ஒதுக்கப்படும். கடந்த வருடங்களில் பேருந்து தரிப்பிடங்கள் கிடைக்காத உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மல்லாவியில் வருகின்ற வருடம் பெரியளவிலான பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும். எனது சிந்தனை, இலக்கு, நோக்கம் எனது மாகாண சபையின் போக்குவரத்துச் சேவையை ஏனைய மாகாணங்கள் திரும்பி பார்க்கவேண்டும். அதனைப் பின்பற்ற வேண்டும் என்பதே. தை மாதம் இணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்படும்.

வடக்கு மாகாண சபையின் ஊடாக முதலமைச்சரால் எனது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள 'நெடுந்தாரகை' படகை பொது மக்களின் பாதுகாப்பான பயணிகள் சேவைக்கு பயன்படுத்தத்திட்டமிட்டுள்ளோம். நெடுந்தீவு மக்கள், அங்கு வேலைக்காகச் செல்லும் எமது உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இதனூடாக நன்மை அடைவார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மாணவர்களின் கல்விச்சுற்றுலா மற்றும் ஏனைய பிரயாணங்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் எமது அதிகார சபையின் பேருந்துகளைப் பயன்படுத்த முடியும். இது வரையில் மத்திய அரசின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குச் சென்ற வருமானம் அனைத் தும் தற்போது எமது அதிகார சபைக்கு வருகின்றது. மிக விரைவில் பல்வேறுமாற்றங்களையும் அபிவிருத்திகளையும் இந்த துறையில் நீங்கள் பார்க்க முடியும் -என்றார்.

(ஞ-21,7,8)



நத்தார் பண்டிகைக் கொண்டாட்டத்திற்கு வவுனியா மாவட்ட கிறிஸ்தவ மக்கள் தயாராகி வருகின்றனர். நத்தார் மரங்கள் வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. சிறுவர்களை மகிழ்விக்க நத்தார் பாப்பாவும் அங்காங்கே ஆடிப் பாடிக் குதூகலப்படுத்தினார். (ற-21)

# ஒதுக்கப்பட்ட நிதிகளில் எதுவும் திரும்பவில்லை

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சைப் பொறுத்தவரையில் 2014ஆம், 2015ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சதமேனும் திரும்பிச் செல்லவில்லை. என்ன திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டதோ அந்தந்த திட்டங்கள் 100 வீதம் எந்த விதமாற்றங்களும் செய்யப்படாமல் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்கின்றது என்றும், போடப்பட்ட திட்டங்கள் மாற்றப்பட்டன என்றும் கடந்த காலங்களில் பலராலும் குற்றம் சுமத்தப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் பதிவு செய்கின்றேன்.

இந்த வருட நிதி ஒதுக்கீடாக 433 மில்லியன் ரூபா கிடைத்தது. இது வரையில் 99 வீத பௌதிக முன்னேற்றமும், 89 வீத நிதி முன்னேற்றமும் எட்டப்பட்டுள்ளது.

பல வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளபோதும் மத்திய அரசு இதுவரையில் கட்டு நிதியை விடுவிக்க வில்லை.

இன,மத,மொழிவேறுபாடுகள் இன்றி எனது அமைச்சின் செயற்பாடுகள் ஒரு வெளிப்படைத் தன்மையோடு இருக்க வேண்டுமென்பதில் நான் உறுதியாகவுள்ளேன். எமது மாகாண எல்லைக்குள் வசிக்கின்ற சிங்கள மக்களுக்கும், எமது அபிவிருத்திதிட்டம்சென்றடைந்துள்ளது.

வரவு - செலவு திட்டமென்பது மக்கள் நலன் சார்ந்ததாகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும், அபிவிருத்தித்திட்டங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். வடக்கு மாகாண சபை எதனையும் செய்யவில்லை, செய்யவில்லை யென சிலர் குறை கூறுகின்றனர். நாம் ஒவ்வொருவரும் நமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர செய்தோமா என நம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்கவும் கடமைப்பட்டுள்ளோம்.-என்றார். (ற-21,7,8)

# மகிந்தவின் அரசுக்கும் நல்லாட்சி அரசுக்கும் வித்தியாசம் இல்லை

## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ.25

மகிந்த அரசுக்கும் தற்போதைய அரசுக்கும் வித்தியாசம் கிடையாது. அவர்கள் சிந்தினையில் மாற்றம் கிடையாது. எமது தமிழ்த் தலைமைகளே இந்த அரசைப் பாதுகாக்கிறார்கள். அரசு எமக்குத் தீர்வு தரப் போகின்றது என்று சர்வதேசத்துக்குக் கூறுகின்றனர். தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் சம்பந்தன் என்ன முடிவு எடுக்கப் போகின்றார் என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பின் தலைவருமாகிய சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித் தார்.

வவுனியா பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

ஜெயலலிதா விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டவர் என்ற விமர்சனம் உண்டு. எனினும் ஜெயலலிதா தமிழ்மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என தமிழக சட்டக சபையில் தீர்மானம் நிறைவேற்றினார். இந்திய அரசு அதைக் கருத்தில் எடுக்கவில்லை. தமிழக சட்ட சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தமிழர்களுக்கு ஆதரவாக இருந்தன. அதை ஐ.நா. சபைக்கும் சர்வதேசத்துக்கும் துணிச்சலுடன் எடுத்து கூறியவர். அவர் உயிருடன் இருந்திருந்தால் ஈழத்தமிழருக்கு உற்சாகம் கொடுக்கும் சக்தியாக இன்னும் சேவையாற்றிருக்கலாம்.

தமிழர்களைக் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் அரசில் மாற்றம் ஏற்படுத்தினர். கூட்டு அரசு ஒன்றை அமைக்க உதவினர். 2016ஆம் ஆண்டு டிசெம்பர் முடிவுமுன் தீர்வு கிடைக்கும் தீர்வு என்று நாங்கள் எமது அரசியல் தலைமைகளை நம்பினோம். இன்னும் நம்புகிறோம். அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

எமது மக்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு நம்பித்தான் வாக்களித்தார்கள். அதை அவர்கள் காப்பாற்றவேண்டும். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக வடக்கு மற்றும் கிழக்கு இணைக்கப்படவேண்டும். 1987ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு 18 வருடங்களாக இணைக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணம் மகிந்தவால் பிரிக்கப்பட்டது. அதை நாம் மீண்டும் அதனை இணைக்கப் பாடுபடுகிறோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் இதனை வலியுறுத்தி யுள்ளார். இன்னமும் வடக்கு, கிழக்கு இணைக்கப்படவில்லை.

எமது சுய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். சமஷ்டி உருவாக்கப்பட வேண்டும். அதை நடைமுறைப்படுத்த சம்பந்தன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பாடுபடுகின்றனரா என்பது கேள்விக் குறியாகியுள்ளது. அரசியல் சாசன சபை உருவாக்கப்பட்டுள்ளது. வெளிப்படையான பேச்சு இடம்பெறவில்லை. ஊடகங்கள் வாயிலாகவே அறிகின்றோம். வடக்கு, கிழக்கு இணைக்கப்படும் சாத்தியமில்லை என்கிறார் சுமந்திரன்.

இந்தப் பேச்சு சம்பந்தன் அவர்களின் கருத்துத்தான். அதைத் தான் இவர் சொல்கிறார். ஒற்றை ஆட்சி தான் இனி இருக்கும் போல் உள் ளது. சமஷ்டிக்கு இடமில்லை என பிரதமரும் கூறியுள்ளார். சம்பந்தரோ அல்லது சுமந்திரனோ இதைப்பற்றிப் பேசவில்லை இந்த நிலையில் எப்படி எமது உரிமைகளை வெல்வது?. வாக்குகளுக்கான உறுதிகளை நிறைவேற்றினார்களா?. தற்போதய அரசால் ஒரே இலாபம் வெள்ளை வான் கலாசாரம் குறைந்துள்ளது மட்டுமே. அதற்குதான் விடுதலை. கிடைத்துள்ளது. இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பு, புலனாய்வாளர்களின் பார்வைக்குள்தான் தமிழ்மக்கள் இருக்கிறார்கள்.-என்றார்.

(ற-21,402)

# களவாக மணல் அகழ்ந்த சந்தேகத்தில் 14 பேர் கைது

முல்லைத்தீவு, டிசெ.25

முல்லைத்தீவு மாவட்டம் கரிபட்ட முறிப்பு காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்ந்தவர்களின் 10 உழவு இயந்திரங்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு மாவட்ட வனவள பகுதியினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கரிபட்டமுறிப்பு பகுதியை அண் டிய 9ஆம் கட்டைப் பகுதி காட்டுப் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெறும் மணல் கொள்ளை தொடர்பில் பலராலும் முறையிடப்பட்டது. அதுதொடர்பில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நேற்று அதிகாலை அந்தப் பகுதியை முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 10 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்களின் சாரதிகள் உள்ளிட்ட 14 பேரும் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்ட 14 சந்தேக நபர்களையும் விசேட அதிரடிப்படையினர் முல்லைத்தீவு மாவட்ட வனவளப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளனர். உழவு இயந்திரங்கள் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப் பட உள்ளன- என்று வனவள பகுதியினர் தெரிவித்தனர். (ற-101)

# வீதி போக்குவரத்து தொடர்பாக 16 வழக்குகள் பதிவு

யாழ்ப்பாணம், டிசெ.25

கிளிநொச்சி பளை பொலிஸாரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வீதி சோதனையில் போக்குவரத்து சம்பந்தமாக 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்று பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தெரிவித்தார்.

கிளிநொச்சிமாவட்டபிரதிபொலிஸ்மா அதிபரின் வீதிவிபத்துக்களை குறைத்தல் என்ற செயற்பாட்டின் கீழ் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புறவின் வழி நடத்தலின் கீழ் மூன்று பிரிவுகளாக பொலிஸார் வீதி சோதனையில் ஈடுபட்டனர்.

அதிவேகமாக வாகனம் செலுத்தியமை தொடர்பாக 7 வழக்குகளும், வீதி ஒழுங்குகளை கடைப் பிடிக்காமை மற்றும் வாகன விளக்குகளை ஒளிர விடாமை தொடர்பாக 7 வழக்குகளும், மதுபோதையில் வாகனம் செலுத் தியமை தொடர்பாக 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட உள்ளன என்று பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தெரிவித்தார். (ற-6)

# கிளி. ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று

## பல விடயங்கள் ஆராய்வு



யாழ்ப்பாணம், டிசெ. 25

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்காவது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் இணைத்தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை, போக்குவரத்து, மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றல், மீன்பிடி, மின்சாரம்; வீதி உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்களை புனித தலமாக மாற்றுதல் மற்றும் பொருத்து வீடு நிராகரித்தல், ஆசிரியர் பற்றாக்குறை, கிளிநொச்சி மாவட்டத்தின் கடல் எல்லை போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு இணைத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இ.அங்கஜன் ஆகியோர் இணைத் தலைவர்களாகச் செயற்பட்டனர்.

கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபை கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான அரியரத்தினம், பசுபதிப்பிள்ளை மற்றும் தவநாதன், திணைக்களம் சார் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-6,34)

## ஒற்றையாட்சி முறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

கூட்டமைப்பு. அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணம், கரவெட்டியில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிக்கின்ற வகையிலான எந்தவொரு அரசமைப்பையும் அனுமதிக்கமாட்டோம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பூகோள இலங்கை மன்றம் என்ற அமைப்பிடம் உறுதியளித்தார் என்று ஆங்கிலப் பத்திரிகையான 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டிருக்கும் நிலையில் சுமந்திரன் ஆணித்தரமாக ஒற்றையாட்சியை எதிர்த்துள்ளார்.

இது குறித்து சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய அரசாக இருந்து கொண்டு ஒற்றையாட்சி முறையிலே நிறைவேற்றுத்துறை முழுமையாக அவர்களிடம் இருப்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. சட்டவாக்கத் துறையிலே மத்திய அரசின் அதிகாரபீடம் சட்டங்களை இயற்றுவதில் மேலாதிக்கம் செலுத்துவதிலும் எமக்கு நம்பிக்கையில்லை. அதனால் தான் நாங்கள் எமது பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வைக் கேட்கிறோம். அதிகாரிகள்/ அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்படக் கூடாது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படு கின்ற உபகுழுக்களின் கூட்டங்களிலும் சரி வழிநடத்தல் குழுவிலும் சரி ஒற்றை யாட்சி நீக்கப்பட வேண் டும் என்றே கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

உபகுழுக்களின் அறிக்கையில் பேரினவாதத்துக்குத் தூண்டு கோலாக இருக்கின்ற ஒற்றையாட்சி முறை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆட்சி அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்பட்டு, பகிரப்பட்ட அதிகாரங்களைத் திருப்பியெடுக்க முடியாத வகையிலான, மத்திய அரசால் தலையிட முடியாத படியான புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக் கின்றோம். இருக்கின்றதைக் கொடுத்து ஒருவாறு பூசி மெழுகி இதனை நிறைவேற்றி விடலாம் என்ற தொனி யிலே சிலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இல்லை இந்த நாட்டிலே உண்மையாக நல்லிணக்கம் ஏற்படுவதாக இருந்தால் எல்லா மக்களிடையேயும் புதிய அரசமைப் பில் இணக்கம் இருப்பதாக இருந்தால் பேரின வாதங் களுக்கு அச்சாணி யாய் இருக்கின்ற அடிப்படைப் பொறிமுறை தகர்க்கப்பட்டுப் புதிய அத்திபாரம் ஒன்று போடப்பட வேண்டும். அந்த அத்திபாரம் ஒற்றையாட்சி என்ற அத்திபாரமாக அமையக் கூடாது. கூட்டாட்சி என்ற அத்திபாரமாக அமைய வேண்டும். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்பதற்காக ஆட்சியதிகாரம் எம் மீது திணிக்கப்பட முடியாது.

அப்படியான பொறிமுறைக்குள் ளாகத் தான் புதிய அரசமைப்புச் சம்பந்தமான பேச்சு நடந்து வரு கின்றது. உபகுழுக்களின் அறிக்கையைப் படித்துப் பார்த்தவர்கள் இப்போது அமைதியாக இருக் கின்றார் கள்.

எங்கள் மீது குற்றம் சுமத்தியவர்கள் இப்போது எங்கள் மீது வார்த்தைகளைக் கக்குவதில்லை. இப்போது எதுவுமே சொல்வதில்லை. அந்த அறிக்கைகளைப் படித்த வர்களுக்கு உண்மை தெரி கிறது. எங்களுடைய ஈடுபாட்டை அது வெளிக்கொணர்ந்திருக்கிறது. முற்றுமுழு தாக அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வை அந்த அறிக் கைகள் வெளிக்கொணர்ந்திருக்கின்றன.

அதற்குமேலாக வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை வருவது தாமதமாயிருக்கிறது. அந்த இடைக் கால அறிக்கையிலும் முற்றுமுழுதாக இப்போது இருக் கின்ற அத்திபாரம் மாற்றப்பட்டுப் புதிய ஓர் அத்திபாரம்கட்டப்படு வதற்கான பரிந்துரை முன்வைக்கப்படும். அது வெளிவருகின்ற போது அது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

எப்படியிருந்தாலும் இறுதியிலே அந்த அரசமைப்பைப் பெரும் பான்மை மக்கள் அங்கீகரிக்க வேண்டும். பெரும்பான்மை மக்கள் மத்தியில் அச்சத்தை ஊட்டி நாடு பிளவுபடப் போகின்றது என்ற பீதியை உருவாக்கி அதனைக் குழப்புகின்ற செயற்பாடுகள் தெற்கிலே நடந்து வருகின்றமை உங்களுக்குத் தெரியும். ஆனால் இது நிலையாக இருக்கின்ற ஓர் அரசமைப்புச் சட்டமாக இருக்க வேண்டுமென்றால் நாட்டில் அனைவரும் சமமானவர்களாக வாழுகின்ற ஓர் அரசமைப்புச் சட்ட மாக இருக்க வேண்டுமாக இருந்தால் இது அனைவரதும் இணக் கத்துடன் செய்யப்பட வேண்டும். பெரும்பான்மை சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்க ளும் தமது பிரதேசத்தில் தமக்குரிய கலாசாரம், பண்பாடு, விழுமியங் கள், வாழ்க்கை முறையைத் தங்களைத் தாங்களே ஆளு கின்ற வாழ்க்கை முறையை நிலைநாட்ட வேண்டும் என்ற செய்தி தெற்குக்குத் தெளிவாக எம்மால் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. இது நாட்டைப் பிளவுபடுத் துவதை நோக்காகக் கொண்டதல்ல என்பதைச் சொல் லியிருக்கிறோம். எல்லாம் நடந்து முடிந்து விட்டது. எல்லா உரிமைகளும் கிடைத்து விடும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஆரம்பப் பயணத்தைத் தொடங் கியிருக்கிறோம். தெற்கு மக்களையும் இதற்கு இணங்க வைக்க வேண்டிய பெரிய பொறுப்பு எங்களிடம் சுமத்தப்பட்டிருக்கிறது. இதற்கான முயற்சிகள் எல்லா வகையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

எங்கள் மக்களிடம் நம்பிக்கையீனம் இருப்பது நியாயமானது. 70 ஆண்டு காலம் ஏமாற்றப்பட்டு வந்தவர்களுக்கு இன்று திடீரென வந்துவிடும் எனக் கூறுவது நம் பிக் கையீனமாக இருக்கும். ஆனால் அந்த அவநம்பிக்கையை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்யாமல் கைகட்டி இருந்து விடமுடியாது - என்றார்.

இதேவேளை, 'டெய்லி மிரர்' பத்திரிகை நேற்று வெளியிட்ட செய்தியில், உப குழுக்களின் அறிக்கையில் சொல்லப்பட்டபட்டுள்ளவை வெறும் பரிந்துரைகளே என்றும் அவை நாடாளுமன்றத்தில் விவாதிக் கப்படப் போவதில்லை என்றும் அரச தலைவர் மைத்திரி பூகோள இலங்கை மன்றத்தினருடான சந்திப்பில் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. "ஆளுநர் களின் அதிகாரத்தைக் குறைப்பது, மேலவை ஒன்றை அமைப்பது உள்ளிட்ட இந்தப் பரிந்துரைகளில் சில இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிப் பவை. இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிக்கும் எந்தவொரு அரசமைப்பையும் நாம் அனுமதிக்க மாட்டோம்" என்று மைத்திரி உறுதியளித்தார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(உ-109)

## யாழ்ப்பாண....

மாத்திரமே அதிகரித்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனத்தில் அதிகரிப்பு ஏற்படாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட் டத்தில் 2016ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 5 லட்சத்து 48 ஆயிரத்து 61 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு 5 லட்சத்து 39 ஆயிரத்து 641 ஆகக்காணப்பட்ட எண்ணிக்கை இந்த ஆண்டு 8 ஆயிரத்து 420 ஆல் மாத்திரமே அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசனம் 2015ஆம் ஆண்டுவாக்காளர் பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் 7 இலிருந்து 6 ஆகக் குறைவடைந்தது. மீண்டும் 7 ஆசனமாக இருக்க வேண்டுமாக இருந்தால், ஆகக் குறைந்தது 20 ஆயிரம் வாக்காளர் எண்ணிக்கையினால் இந்த ஆண்டு அதிகரிப்புச் செய்யப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் அரசியல் கட்சிகள் உரிய அவதானிப்புச் செலுத்தவில்லை. இது தொடர்பில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் இந்த ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப் பட்ட போதே குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்தின் வாக்காளர் பெயர்ப் பட்டியல் இதுவரை இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 84 ஆயிரத்து 764 பேர் வாக்காளர்களாகப்பதிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் 83 ஆயிரத்து 224 பேரே பதிவு செய்யப்பட்டிருந்தனர். (வ-5)

## ஒற்றையாட்சி...

நேற்றுச் சந்தித்து ஆசி பெற்றார். மகாநாயக்க தேரர்களின் கையொப்பங்களுடன் கூடிய இரண்டு கடிதங்கள் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன.

கண்டி சிறி தலதாமாளிகைக்கு நேற்று முற்பகல் பயணம் மேற்கொண்ட பிரதமர் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பின்னர் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வறக்காகொட சிறி பஞ்ஞானந்த ஞானரத்ன தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார். அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் கையொப்பத்துடன் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் 5 முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

உத்தேச அரசமைப்பில் இலங்கை, ஒற்றையாட்சி நாடாகக் காணப்பட வேண்டும். மாகாண சபை அதிகாரங்கள் மற்றும் சட்டங்கள் உருவாக்கப்படும் பொழுது மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரம், கொழும்பு அரசின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் காணப்பட வேண்டும்.

நடைமுறையிலுள்ள நீதிக் கட்டமைப்புக்குப் புறம்பாக வேறு நீதிமன்றமோ அரசமைப்பு ரீதியான நீதிமன்றமோ உருவாக்கப்படக் கூடாது. பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் மற்றும் தேசிய கொள்கைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் கொழும்பு அரசின் கீழ் இருக்க வேண்டும் எனவும் அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் கடிதத்தில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

பிரச்சினைகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியை மூலாதாரமாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற காரணங்களே அரசின் முக்கிய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என மகாநாயக்க தேரர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதன் பின்னர் பிரதமர் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க திப்பட்டுவாவ சிறி சுமங்கல தேரரிடம் ஆசி பெற்றார். இதன்போது சிறப்புக் கோரிக்கைகள் சிலவற்றை உள்ளடக்கிய கடிதம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கும் செயற்பாடு அல்லது அரசமைப்பு மறு சீரமைப்பு, வடக்கு - கிழக்கு மாகாண சபைகளுக்கான் சிறப்பு அதிகாரங்களை வழங்குவது தொடர்பான விடயங்கள் அந்தக் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இனவாதம், மதவாதம், கட்சி பேதம் போன்ற குறுகிய கொள்கைகளுக்குள் சிறைப்பட்டு தற்போதைய சவால்களை வெற்றி கொள்ள முடியாது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் நாட்டின் ஒருமைப்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் வகையில் தேசிய மத நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் இருப்பின் அவற்றை அனுமதிக்க முடியாது என்று மகாநாயக்க தேரர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரணாலயங்களில் குடியேற்றங்களை அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ள மகாநாயக்க தேரர் வடக்கு - கிழக்கில் விகாரைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார். (வ-5)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் (சின்னராசா)

கருகம்பனையை (சிக்கட்டியான்) பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் (சின்னராசா) நேற்று (24.12.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் ஜெயதாசன், கேமா, மேகலா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயக்குமார், பிரவீனா ஆகியோரின் மாமனாரும் ரோஜினி, ஜெயகஜன் சாந்தன், தட்சாயினி, அபிசாந் ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.00மணியளவில் கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**பிரதேச செயலகவீதி,**
**வேதாரணியம்வளவு,**
**உடுவில்கிழக்கு,சுன்னாகம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**(0777953376)**



## திருப்பதி (மணி) குழந்தைவேலு

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி-பார்வதி அவர்களின் மூத்த புதல்வியும் குழந்தைவேலுவின் அன்பு மனைவியுமான திருப்பதி(மணி) நேற்று (24.12.2016) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 253, 8 ஆம் குறுக்குத்தெரு,**
**மணியந்தோட்டம், கொழும்புத்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 160 6482**

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற நடத்துநர், இலங்கை போக்குவரத்துச் சபை - கோண்டாவில் சாலை)**



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 23.12.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி சின்னத்தம்பி - சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கந்தையா வள்ளிப்பிள்ளை மற்றும் தங்கராசா (பசுபதி), அருணாசலம், கந்தையா (கிளைமுகாமையாளர் - சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), பரமசாமி (டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும், பகீரதன் (சுவிஸ்), மதிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும்,பத்மநாதன் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் - சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம்), கிருஷா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரணவன் (உயர்தரம் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கோபிதன், மதீசன், மதுசன் (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), திலக்சி, பவின், கெவின் (சுவிஸ்) ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பிற்பகல் ஒரு மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்:**
**சி.பத்மநாதன் (மருமகன்)**
**077 656 9964**

## ரவிராஜ் படுகொலை வழக்கின் தீர்ப்புக் குறித்து அமைச்சர் சலிப்பு

கொழும்பு, டிசெ. 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் தீர்ப்புத் தொடர்பில் நல்லாட்சி அரசின் அமைச்சர் மனோ கணேசன் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.
'நடப்பைப் பார்த்தால், ரவிராஜ் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தன் காவலரையும் சுட்டு விட்டாரோ என்று சலிப்பு வருகிறது' என்று அமைச்சர் மனோ கணேசன் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (வ-5)




## 36 இந்திய மீனவர்களுக்கு விரைவில் விடுதலையாம்

கொழும்பு, டிசெ.25
கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 தமிழக மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளதாக மீன் பிடித்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
கிறிஸ்மஸ்பண்டிகையை முன்னிட்டுதடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கு மாறு இந்திய அரசு கோரிக்கை விடுத்திருந்தது.
இந்நிலையில், இந்திய அரசின் கோரிக் கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (த)

## விபத்தில் காயமடைந்தவர் ஒருமாத சிகிச்சையின் பின் நேற்று உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், டிசெ. 25
விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் அம்மன் வீதியை சேர்ந்த நடராசா கனகலிங்கம் (வயது-75) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.
'கடந்த மாதம் 17ஆம் திகதி பருத்தித்துறை வீதியில் முதியவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, நல்லூரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் வீரகாளி அம்மன் கோயிலுக்கு முன்பாக அவரை மோதியது. இதில் காயமடைந்த நிலையில் முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார்' என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (வ-7)

## ஆடை திருடிய குற்றச்சாட்டில் கைதானோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 25
புடைவைக்கடையில்காட்சிக்கு வைத்திருந்த ஆடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். தப்பிச் சென்ற ஒருவரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பருத்தித்துறை நகரப் பகுதியிலுள்ளபுடைவைவிற்பனை நிலையத்தில், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொம்மையுடன் பெண்களின் உடைகள்திருடப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு முறையிடச் சென்றுள்ளார். அந்த நேரத்தில், நெல்லியடிப் பகுதியிலுள்ள புடைவை விற்பனை நிலையத்திலும் இவ்வாறானதொரு திருட்டு நடைபெற்றுள்ளது. அங்கு திருடிய மூவர் அருகிலிருந்த ரயர் கடையில் மோட்டார் சைக்கிள் ரயரைத் திருட முயற்சித்துள்ளனர். இதனைப் பொதுமக்கள் அவதானித்துள்ளனர். திருட முற்பட்ட மூவரையும் பொது மக்கள் விரட்டினர். இருவர் மாத்திரமே சிக்கியுள்ளனர். அவர்களை முறையாகக் கவனித்து விட்டுப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.
கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 6ஆம் திகதிவரைவிளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார். தப்பியோடியவரைக் கைது செய்வதற்கானநடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-5-ரி-26)

# படைகளால் வனங்கள் பெருமெடுப்பில் நாசம்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, டிசெ.25
இராணுவத்தினரால் வனப் பகுதிகளில்பெருமளவு காணிகள் கையகப்படுத்தப்பட்டிருப்பதால் வனங்கள் பாதிப்படைகின்றன. வனங்களின்நடுவே அவை அழிக்கப்பட்டுள்ளமை கூகுள் படங்களில் தெளிவாகத் தெரிகின்றன. எமது வளங்கள் தெற்குக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நான்காவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் இணைத்தலைவராகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
வெகு விரைவில் பல மாற்றங்களை எதிர் நோக்கியுள்ளோம். அரசியல் யாப்பொன்று புதிதாகத் தரப்படுமா அல்லது திருத்திய யாப்பொன்று எமக்குக் கிடைக்குமா என்பதில் சற்று மயக்க நிலை உள்ளது. ஏதோ சில விடயங்களில் வரும் வருடத்தில் சில முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். மத்திய அரசுடன்நாங்களும் நெருங்கி எமது கடமைகளில் ஈடுபடுகின்றோம். இரு முக்கிய கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று வடமாகாண தேவைகள் சம்பந்தமான கணிப்பை பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடன் செய்ய அரசு முன்வந்துள்ளது. பூர்வாங்க வேலைகள் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளனள.
அடுத்து பொருளாதார அபிவிருத்திக்கான குழு. அடுத்த மாதம் 27ஆம்திகதி பிரதமருடன், அமைச்சர் மலிக் சமரவிக்கிரம வடமாகாணத்துக்கு வரவுள்ளார். எமக்கான பொருளாதார தேவைகள் பற்றி ஆராயவுள்ளனர். நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொருத்தமான செயல் திட்டங்களை உருவாக்கி கைவசம் வைத்திருப்பது நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன்.
அடுத்த மாதம் பிரதமருடனும் அமைச்சர் மலிக்குடனும் நாம் பேசும்போது ஒரு ஒற்றுமையான ஒருங்கிணைந்த குரலில் எமது எண்ணங்களை உச்சரிக்க வேண்டும் என்றுகேட்டுக்கொள்கின்றேன். சரித்த இரத்வத்தையின் குழு சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி பற்றியும் எமது வளங்கள் பற்றியும் ஆராயும். எமது மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நாங்கள் அடையாளம் காணும் பாரம்பரிய தொல்பொருள் புதையிடங்கள், இயற்கை எழில்மிக்க இடங்கள், சமய வணக்கத் தலங்கள், வைத்தியத்துடன் சம்பந்தப்பட்ட இடங்கள் எனப் பலவற்றை அடையாளம் காணவேண்டும். எமக்கென ஒரு சுற்றுலா கலாசாரத்தையும், மேம்பாட்டு முறைமைகளையும் நாம் அடையாளம் கண்டு நிர்வகிக்க முன்வர வேண்டும். எம்முடைய நீர்வளங்கள், நிலவளங்கள், சீதோஷ்ண நிலமை போன்ற பலவற்றையும் மன தில் கொண்டே சுற்றுலாவின் அபிவிருத்தி அணுகப்பட வேண்டும். எமது பாரம்பரியங்களையும், கலை கலாசார விழுமியங்களையும் மறவாது செயற்பட முன்வர வேண்டும்.
எமது நிலங்கள் சூறையாடப் படுகின்றன. அதுதடுத்துநிறுத்தப்பட வேண்டும். சுண்டிக்குளத்தில் மத்திய அரசின் உள்ளீடுகள் எமது சுற்றுச் சூழலுக்கு அனுசரணையாக இல்லை என்ற கருத்து எம்மிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பறவைகள் பாதுகாப்பரணாக இருக்கவேண்டிய இடங்களில் பல கட்டடங்கள் கட்டப்பட்டு அந்த இடங்களின் அமைதி குறைக்கப்பட்டுவிட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அங்கு சென்று நிலைகளை ஆராய இன்னமும் எனக்கு நேரம் கிடைக்க வில்லை.
இவை பற்றி மத்தியுடன் கலந்தாலோசிக்க வேண்டும். திருமதி விஜயகலாவும், அங்கஜனும், எமக்குக்கட்டாயமாக ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நான் நம்புகின்றேன். எம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பது பற்றி நாம் அறியாமல் நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல் நாம் தொடர்ந்து வாழ்ந்து வருவது பொருத்தமற்றது. எங்கள் நாளாந்த குறைகள், தேவைகள்பற்றிஇங்கு ஆராயும்போது மேல்வாரியான மாகாண, மாவட்டவிடயங்களிலும் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (ு-21)

## 4 பரப்பில் சவுக்கு மரங்கள் மணற்காட்டில் தீயில் நாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் உள்ள சவுக்கங்காட்டில் ஏற்பட்ட தீயினால் மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்ற தீ விபத்தில் நான்கு பரப்பு காட்டுப் பகுதி எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.
தீவிபத்துஏற்பட்டவுடனேயே மக்கள் விரைந்து செயற்பட்டனர். இதனால் ஒரு மணி நேரப் போராட்டத்திலேயே தீவிபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
விசமிகள் சிலரே வேண்டுமென்று மரங்களுக்கு தீ மூட்டியிருக்கக் கூடும் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த சில வருடங்களாக மணற்காட்டில் உள்ள சவுக்கங்காட்டு மரங்கள் தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5-ரி-26)

## அதிபர்களுக்கு நாளை செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 25
யாழ்ப்பாணம் கல்வி வலய அதிபர்களுக்கான செயல மர்வு நாளை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தச் செயலமர்வில் 2017ஆம் ஆண்டுக்கான கருத்துரைகள், முன்வைப்புக்கள் வழங்கப்படவுள்ளதால் அதிபர்கள் மட்டுமே கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (வ-7)

## எம்.ஜி.ஆரை நினைவுகூர எவரும் முன்வருவதில்லை

### யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் கவலை



யாழ்ப்பாணம், டிசெ. 25
தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் நினைவு தினத்தை கொண்டாட யாரும் முன்வருவதில்லை என்று யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் செ.விஜயரட்ணம் தெரிவித்தார்.
அனைத்துலக எம்.ஜி.ஆர்பேரவையின் இலங்கை கழக ஏற்பாட்டில் நேற்றைய தினம் கொக்குவில் தாவடிப்பகுதியில் எம்.ஜி. ஆர் நினைவுதினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. ஆர் தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டும் தலைவராக இருக்கவில்லை. ஈழத் தமிழராகிய எங்களுக் கும் அவர் ஒரு தலைவனாகத்தான் இருந்தார். தமிழீழப்போராட்ட வரலாற்றில்போராட்டத்துக்காக அவர்களின் நிதி நெருக்கடிகளுக்கு புரட்சித் தலைவர் அங்கிருந்து சாக்கு மூட்டைகளில் பணத்தைக் கட்டி அனுப்பினார்.
அத்துடன் ஒரு சந்தர்ப்பத்தில் கப்பல் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டது. அதன் போது தமிழ் நாட்டுக் கடலில் கப்பல் வரும்போது அதனை தடுக்க வேண்டாம் என விடுதலைப் புலிகள் எம்.ஜி. ஆரிடம் கேட்டனர். அதற்கு அவரும் எமது இனத்தின் விடுதலைக்காக அந்தக் கப்பலை ஒன்றும் செய்யாது விடுதலைப் புலிகளிடம் சென்றடைய உதவினார்.
இப்படி எமது தலைவர்களை இழந்து நிற்கின்றோம். அத்துடன் எம்ஜிஆர் ஈழத் தமிழராகிய எங்களுக்கு செய்ததைப் போன்று அதே வழியில் வந்த ஜெயலலிதாவும் ஈழத்தமிழர்கள் விடயத்தில் சில கரிசனைகளைச் செய்தார் - என்றார். (வ-8)

# பற்றைகளாகவுள்ள காணிகளால் டெங்கு தொற்று ஏற்படும் அபாயம்

## நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, டிசெ.25
சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணிகள் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன. நுளம்புகளின் தொல்லை அதிகரித்து டெங்குத் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"பற்றையாகவுள்ள காணிகளுக்குள் இனந்தெரியாதோர் குப்பைகளையும், தகரக் குவளைகள், பிளாஸ்ரிக் பொருள்களையும் வீசுகின்றனர். டெங்கு நுளம்பு உற்பத்தியாகி அயலில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு டெங்குத் தொற்று ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் கல்வயல், கற்குளி, கெருடாவில், கிராம்புவில், நுணாவில், அல்லாரை, மீசாலை கிழக்கு, சாவகச்சேரி நகர், கோயிற்குடியிருப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களதும், சாவகச்சேரி பிரதேசசபையின் எழுதுமட்டுவாழ், வரணி, மந்துவில், மட்டுவில், நுணாவில், கைதடி, நாவற்குளி, தனங்களப்பு, மறவன்புலோ, இயற்றாலை, உசன், விடத்தற்பளை, கச்சாய் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களதும் நன்மை கருதியும் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்"- என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"பற்றையாகவுள்ள காணிகளை இரு வாரங்களுக்குள் துப்புரவாக்குமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் வருடாவருடம் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. காணி உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர்களால் காணிகள் துப்புரவு செய்யப்படுகின்றன. மழை காலம் ஆரம்பித்ததும் மீண்டும் அந்தக் காணிகள் பற்றைகளாகியுள்ளன. பொது மக்களின் முறைப்பாட்டுக்கமைய சுகாதார திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு காணிகளைத் துப்புரவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சபை தொழிலாளர்கள் மூலம் காணிகளைத் துப்புரவு செய்து தருமாறு காணி உரிமையாளர்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் தற்போதைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது."- என்று சபைகளின் செயலாளர்கள் தெரிவித்தனர்

"பிரதேசத்தில் மழை பெய்து பல இடங்களில் நீர் நிலைகள் காணப்படுவதால் அவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதைத் தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாவனையில் இல்லாத கிணறுகள், குளங்கள், துரவுகள் போன்றவற்றில் நீர் தேங்கி நிற்பதால் அவற்றினுள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் நிலை காணப்படுகின்றது. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. விரைவில் பற்றைக் காணிகள் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"-என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ற-21,9)

## வெண்ணெய் வேறாக்கி இயந்திரம் கையளிப்பு



சாவகச்சேரி, டிசெ. 25
வெண்ணெய்கடைந்தெடுக்கும் இயந்திரங்களை இரு சிறு பண்ணையாளர்களுக்கு வழங்கியுள்ளது சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகம்.

அலுவலகத்திற்குக் கிடைத்த மாகாண விசேட நிதி ஒதுக்கீட்டில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இரு வெண்ணெய் வேறாக்கி இயந்திரங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

மின்சாரம் மூலம் செயற்படக் கூடிய இந்த வெண்ணெய் வேறாக்கி இயந்திரம் சாவகச்சேரி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கும், வரணி, தாவளை இயற்றாலையைச் சேர்ந்த சிறு பண்ணையாளருக்கும் வழங்கப்பட்டன. (ற-9)

## மகிழ்ச்சி, கருணை நிறைந்த சிறந்த நத்தார் அமையட்டும்

### ஜனாதிபதி மைத்திரிபால வாழ்த்து



கொழும்பு, டிசெ.25
சமாதனம், மகிழ்ச்சி, கருணை நிறைந்த சிறப்பான நத்தார் இந்த முறை அமைய வேண்டும் என்று அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

வெளியிடப்பட்ட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மானிட பரிணாம வளர்ச்சியில் மனிதன் பெற்ற சிறப்புமிக்க வெற்றிகளில் மதம் சார்ந்த விடயம் முன்னிலையில் உள்ளது. மனிதர்களின் மதம் சார்ந்த நம்பிக்கைகயே அவர்கள் பிறரிடம் தயவு காட்டுவதற்கும், அவர்களின் உரிமை தொடர்பாக ஆழமாகச் சிந்திப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

2 ஆயிரத்துப் 16 ஆண்டுகளுக்கு முன்னர் அறியாமை காரணமாக சமூகச் சீர்கேடுகள் நிறைந்திருந்த காலத்தில் குழந்தை யேசுவின் பிறப்பு நிகழ்ந்தது.

அன்று ஆணவம் பிடித்திருந்த ஏரோது மன்னன் போன்ற மன்னர்களை வரலாற்றுக்கே மட்டுப்படுத்தி, சகவாழ்வின் செய்தியை உலகுக்குக் கொண்டு வந்த யேசு கிறிஸ்து பிரானை சதாகால புனிதத் தன்மைக்கு உயர்த்திய நல்ல விடயங்களை வணக்கத்துக்குரியவையாகக் கருதும் உலக மக்களே ஆவார்.

அனைவர் மீதும் உண்மையான அன்பைச் செலுத்தும் நத்தார் பண்டிகையின் உண்மையான செய்தியான சமாதானம், மகிழ்ச்சி, கருணை நிறைந்த சிறப்பான நத்தார் அமைய அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அனைவருக்கும் சமாதானமும், மகிழ்ச்சியும் நிறைந்த நத்தார் வாழ்த்துக்கள் - என்றுள்ளது. (ற)

## மழைப் பொழிவில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ.25
வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மழைவீழ்ச்சி பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தாமோதரம் சச்சிதானந்தம் தெரிவித்தார்.

"2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 795.7மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது. 2016ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து டிசம்பர் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 114.5மில்லி மீற்றர் மழை பதிவானது. இந்த வருடம் வைகாசி மாதத்தில் மட்டுமே அதிகளவான மழைவீழ்ச்சி (477.4மில்லி மீற்றர்) பதிவாகியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் மழை வீழ்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது"- என்று அவர் குறிப்பிட்டார். (ற-21)

## ஆழிப் பேரலையால் இறந்தோருக்கு நாளைமறுதினம் கயட்டையில் அஞ்சலி

முல்லைத்தீவு, டிசெ.25
ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளில் அனைத்து உறவுகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா அழைப்பு விடுத்தார்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையால் உயிரிழந்த முல்லைத்தீவு மாவட்ட உறவுகளில் ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட முள்ளியவளை நெடுங்கேணி வீதியிலுள்ள கயட்டை பகுதியில் நாளை மறுதினம் 4.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அதில் உயிரிழந்த மக்களின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ற-21)



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குள் வசிக்கும் 96 குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு ஒதியமலை கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் மற்றும் ஒட்டுசுட்டான் காணிப் பகுதி உத்தியோகத்தர்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்கினர். ஒதியமலை கிராம அலுவலர் பிரிவில் 58 பேருக்கும், பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவில் 38 பேருக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ற-21)

## நிதி ஒதுக்கீடு இல்லை: டெனீஸ்வரன் கவலை

யாழ்ப்பாணம், டிசெ.25
கடந்த வருடங்கள் போன்றே 2017ஆம் ஆண்டிலும் வடக்கு மாகாண வர்த்தக வாணிப அமைச்சுக்குவரவு-செலவுத்திட்டத்தில் ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண வர்த்தகவாணிப அமைச்சர் பா.டெனீஸ்வன் கவலை தெரிவித்தார்.

"எமது மாகாண பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள் எமது வர்த்தகப் பெருமக்கள். தென்னிலங்கை வர்த்தகர்களின் அளவுக்கு அதிகமான வருகையால் எமது வர்த்தகர்கள் அளவுக்கு அதிகமாகவே கஷ்டப்படுகின்றனர்.

எனது அடுத்த வருடத் திட்டம் இதனை சட்ட ரீதியாக கையாள வேண்டும் என்பதே. நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டு ஒரு வடமாகாண வர்த்தக வாணிப அதிகாரசபை மிகவிரைவாக உருவாக்கப்படும்."-என்றார். (ற-21)

## தமிழருக்கு பாரபட்சம் காட்டுகிறார் வடக்கு மீன்பிடி அமைச்சர்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் டிசெ. 25
முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலகங்களில் உள்ள ஒரு குளத்துக்கு மட்டும் மீன் குஞ்சுகளை வைப்பிலிட்ட வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர், குறைந் தளவு சிங்கள மக்கள் உள்ள வெலிஓயாவில் 3 குளங்களில் மீன்குஞ்சுகளை வைப்பிலிட்டுள்ளார்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்.

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட விவாதம் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண சபை பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் மீன்பிடி அமைச்சு தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சரால் குளங்களுக்கு மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன. ஒட்டுசுட்டானில் முத்துஐயன்கட்டு குளத்துக்கும், கரைத்துறைபற்றில் தண்ணிமுறிப்பு, மதவளசிங்கன் ஆகிய குளங்களுக்கும், புதுக்குடியிருப்பில் உடையார்கட்டு, விசுவமடு ஆகிய குளங்களுக்கும், துணுக்காயில் தென்னியன்குளத்திலும், மாந்தை கிழக்கில் வவுனிக் குளத்திலும் மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன.

ஆனால் வெலியோயாவில் 3 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே உள்ள ஜெனகபுர, கல்யானபுர வெள, சப்மல் வெள ஆகிய மூன்று குளங்களுக்கு மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டுள்ளன. ஆனால் வெலியோய வில் உள்ளவர்கள் மீன் பிடிப்பதற்கு தண்ணி முறிப்பு குளத்துக்கே வருகின்றார்கள்"- என்று அவர் தெரிவித்தார். (ற-21. 7)



கிளிநொச்சி முகமாலையில் அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு உணவுப் பொதியும், காணிகளை துப்புரவு செய்வதற்காக உபகரணங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டன. 15 வருடங்களுக்கு மேல் இடம்பெயர்ந்திருந்த அந்தப் பகுதி மக்கள் இந்த மாத ஆரம்பத்தில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். (ற-6)

# குருதிச் சுத்திகரிப்புத் தொகுதியை இயக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25
தாதிகள் பற்றாக்குறையால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொக்கி மாவட்ட குருதி சுத்திகரிப்புத் தொகுதியை இயக்க முடியாது உள்ளது.
இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.
வடமாகாணசபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் சுகாதார சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் 45 ஆயிரம் பேர் வெளிநோயாளர்களாகச் சிகிச்சை பெறுகின்றனர். கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இரண்டாவது கட்டடத்தளம் அமைப்பதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் அது இன்னமும் அமைக்கப்படவில்லை. சிலர் இரண்டாம் கட்ட கட்டடம் கட்டுவதற்கு விரும்பவில்லை. எனினும் அமைச்சர் அதில் உறுதியாக இருக்கின்றார் என்று கேள்விப்படுகின்றேன். அதை அமைத்துத் தரவேண்டும் என்று வேண்டுகின்றேன். கிளிநொச்சியில் குருதி சுத்திகரிக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு வைத்திய அதிகாரிகள், தாதிகள் இரண்டு வருடங்களாக அங்கு இல்லை. வைத்திய சாலை சரியான முறையில் இயங்க வேண்டும் என்றால் உடனடியாக எட்டுத் தாதியர்கள் தேவைப்படுகின்றார்கள்.
தாதிகள் குறைபாட் டால் பல பகுதிகள் இயங்காது உள்ளன. கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத அறை நோயாளர் விடுதிக்குள் உள்ளது. உயிரிழப்புக்கள் நடைபெறும்போது உறவினர் கள் அழுது புலம்பும்போது நோயாளர்கள் பீதி அடைகின்றார்கள். உடனடியாக பிரேத அறையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் - என்றார். (ற-7)

# வெளி மாவட்ட வியாபாரிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

*வடக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், டிசெ. 25
பண்டிகைக் காலங்களில் நகர்ப் பகுதிகளில் கடைகளை அமைக்கும் வியாபாரிகளால் எங்கள் வியாபாரிகள் தவறான முடிவுகளை எடுக்க (தற்கொலை செய்ய) வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ் தெரிவித்தார்.
வட மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் முதலமைச்சரின் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த காலங்களில் எங்கள் வர்த்தகர்கள் சமூகத்தின் முதுகெலும்பாக இருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்தனர். பண்டிகைக் காலங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து படையெடுத்துவரும் வியாபாரிகள் மலிந்த விலைகளில் பொருள்களை விற்கின்றனர்.
2017ஆம் ஆண்டிலும் அவர்களை கட்டுப்படுத்தாவிட்டால் எங்கள் வியாபாரிகள் (தவறான முடிவு எடுக்க) தற்கொலை செய்து கொள்ள வேண்டி வரும். அதற்கான பொறுப்பை உள்ளூராட்சி சபைகள்தான் ஏற்க வேண்டும். நல்ல படித்த பொறியியலாளர்கள் இராணுவத்தில் உள்ளார்கள் அவர்களை உள்ளூராட்சியில் உள்ள வேலைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அதை நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.என்றார்.
இராணுவத்தை எங்கள் தேவைக்கு பயன்படுத்தினால் அவர்களை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் எமது பகுதியில் இருந்து அகற்றமுடியாது என முதலமைச்சர் உரையில் குறிப்பிட்டார். இராணுவத்தை வெளியேற்றுவது தான் வடக்கு மாகாண சபையின் இறுதியான முடிவு என வடமாகாண சபை உறுப்பினர் க.விந்தன் தெரிவித்தார். (ற-7)

# வடக்குக்கு புதிய போக்குவரத்து நியதிச் சட்டம்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25
மோட்டார் போக்குவரத்துக்கான புதிய நியதிச்சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எமது மாகாணத்தில் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதில் அதன்மூலம் சீரான முறை கொண்டுவரப்படவுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திட்ட விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது அமைச்சின் கீழ் வரும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் ஊடாக வருடாந்த வரி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான சேவை முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை ஒரு லட்சத்து 81ஆயிரத்து 718 வாகனங்களுக்கான வருமான வரி அனுமதிப்பத்திரங்கள் மூலம் சுமார் 275.73 மில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.
இந்தத் திட்டத்தை வினைத் திறனுடைய சேவையாக மாற்றுவதற்கு இலத்திரனியல் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளக் கூடிய வேலைத் திட்டம் ஜ.சி.ரி.ஏ. இன் தொழில்நுட்ப அனுசரணையுடனும் யூ.என்.டி.பி யின் நிதியுதவியுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் சேவைப் பெறுநர்கள் வடக்கு மாகாணத்தின் எந்தப் பாகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும். வீட்டிலிருந்தவாறே இணையம் மூலம் கொடுப்பனவு செய்து காலாவதியான வரி அனுமதிப் பத்திரத்துக்குப் பதிலாக புதிய வாகன வரி அனுமதிப் பத்திரத்தின் பிரதியை பெற்றுக் கொள்ள முடியும். உரிய மூலப் பிரதி சேவைப் பெறுநரின் முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.
வடமாகாண மோட்டார் போக்குவரத்துக்கான வாகன வரி அனுமதிக் கட்டணத்தை மக்கள் நலனுக்கேற்ப மாற்றியமைப்பதற்குரிய ஏற்பாடு எமக்கு கிடைக்கும். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக மாகாண திறைசேரிக்கு வருடாந்தம் பல மில்லியன் ரூபா வைப்பிலிடப்படுகின்றது. ஆயினும் அவர்களுக்கு கிடைத்திருக்கும் சி.பி.ஜி ஒரு மில்லியன் ரூபா மட்டுமே. சம்பந்தப்பட்ட அதிகாரி கள் அதை உடனடியாக சீர் செய்ய வேண்டும். நவீனமயப்படுத்தலுக்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதை யாரும் அறியாதவர்கள் இல்லை. இந்த ஒதுக்கீடு மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப் படவேண்டும்.-என்றார்.(ற-21,7,8)

# பண்டத்தரிப்பு கூட்டுறவு சங்கத்துக்கு விருது

யாழ்ப்பாணம், டிசெ.25
2015ஆம் ஆண்டின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளின் புள்ளி விவரங்களின்படி யாழ்.மாவட்டத்தில் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிறப்பு முதன்மை சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன்.மோகன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தச் சங்கம் பல்வேறுபட்ட சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய மூன்று கிராமிய வங்கிகள் மூலம் அதிகமான மக்கள் அங்கத்தவர்களாக இணைந்து பயன்பெறுகின்றனர். வங்கியின் சேவைகளும் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. புடைவை நிலையம், கோப்சிற்றி என்பவற்றின் சேவைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சங்கம் மாவட்டத்தில் முதலாவது சிறந்த சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டதற்கான விருது வழங்கி வைக்கப்பட்டது. வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தினத்தில் சங்கத்துக்கான விருதை மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் வழங்கினார். (ற-17)



யாழ்ப்பாணம் உடுத்துறை பகுதியில் சுனாமி நினைவாலயத்திற்கான நுழைவாயில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் திறக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் உடுத்துறை சுனாமி பொது நினைவாலய முகப்பு வளையம் அமைக்கப்பட்டது. (ற-6)

# மன்னார் மாவட்ட நெற்செய்கைக்கு 217 மில்லியன் ரூபா மானியம்

மன்னார், டிசெ.25
மன்னார் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 800 விவசாயிகளால் 43 ஆயிரத்து 467.5 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்படவுள்ளது. அதற்காக இந்த ஆண்டு 217.34 மில்லியன் ரூபா மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு மாவட்ட பெரும்பாக உத்தியோகத்தர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.
இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
மன்னார் மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவைகள் நிலையத்தின் கீழும் 14 ஆயிரத்து 800 விவசாயிகள் நெற் செய்கை மேற் கொள்கின்றனர்.
மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 211 விவசாயிகளால் ஆயிரத்து 346 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 17 மில்லியன் ரூபாவும், பாலம்பிட்டி கமநல சேவை நிலையத்தின் கீழ் 574 விவசாயிகளால் 675 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 8.5 மில்லியன் ரூபாவும், உயிலங்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 429 விவசாயிகளால் ஆயிரத்து 706 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 21 மில்லியன் ரூபாவும் , ஆட்காட்டிவெளி கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 10 விவசாயிகளால் 2 ஆயிரத்து 400 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 30 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. நானாட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 473 விவசாயிகளால் 2 ஆயிரத்து 888 ஹெக்ரெயரில் மேற் கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 36 மில்லியன் ரூபாவும், முருங்கன் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2 ஆயிரத்து 129 விவசாயிகளால் 2 ஆயிரத்து 575 ஹெக்ரெயரில் மேற் கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 37 மில்லியன் ரூபாவும், பொற்கேணி கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 947 விவசாயிகளால் 2 ஆயிரத்து 46 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 25 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.
சிலாவத்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 346 விவசாயிகளால் ஆயிரத்து 362 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 18 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.
இலுப்பைக்கடவை கமநல சேவை நிலையத்தின் கீழ் 529 விவசாயிகளால் 800 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 10 மில்லியன் ரூபாவும் , விடத்தல்தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் 456 விவசாயிகளால் 725 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 9 மில்லியன் ரூபாவும், இரணைஇலுப்பைக்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 883 விவசாகளால் 862 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 11 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கும் அதேநேரம் மன்னார்தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் 111 விவசாயிகளால் 44 ஹெக்ரெயரில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கைக்காக 4.34 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# பதின்ம வயதில் மாணவர் மீது பெற்றோருக்கு அவதானம் அவசியம்

## யாழ்.பிரதேச செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், டிசெ.25

கெட்டிக்காரப் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே அதிக பிரச்சினைகள் எழுகின்றன. சிறுவர்கள் பதின்ம வயதை அடையும் போது நீண்ட தேடல் இருக்கும். அந்த வேளையில் பெற்றோர்கள் அவர்களைக் கவனிக்காது விட்டால் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். பெற்றோர்கள் தொடர்ச்சியாக மாணவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன் தெரிவித்தார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்ற யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் புலமைப் பரிசில் சாதனை



யாளர் மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாக்கும் பொறுப்பு பாடசாலைச் சமூகத்தின் கைகளிலேயே உள்ளது. மாணவர்கள் அதைச் சரிவரச் செய்துள்ளனர். ஆசிரியர்கள் சமூகப் பொறுப்புடன் கடமையாற்றிய தாலேயே இவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

பல அர்ப்பணிப்புகள், தியாகங்கள் செய்தே மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்றனர். புலமைப் பரிசில் பரீட்சை என்பது மாணவர்களின் வாழ்க்கையில் காணப்படும் முதலாவது தடையாகும். அதற்காக அவர்களின் பெற்றோர்கள் அயராது உழைக்கின்றனர்.

புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவதா இல்லையா என பல விவாதங்கள் நடைபெறு கின்றன. அரசு தமக்கு இக்கட் டான





நிலை வரும்போது மட் டும் பரீட்சை நிறுத்தப்படும் என்று கூறும். ஆனால் நடைமுறைப்படுத்தாது.

இந்தப் பரீட்சையில் பாதகமான விடயங்களும் சாதகமான விடயங் களும் உள்ளன. இந்தப் பரீட்சை நிறுத்தப்பட்டால் பாதிக்கப்படுவது பின்தங்கிய பிரதேசங்களில்உள்ள மாணவர்களே. அவர்கள் முன்னணிப் பாடசாலைகளில் கல்வியைப் பெறும் வாய்ப்பும், கிடைக் கும் சிறு



சிறு ஊக்கத் தொகையும் இல்லாது போகும். புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றோர்கள் காட்டும் அக்கறை தொடர்ச்சியாக நிலவுவதில்லை. அதனாலேயே மாணவர்கள் தவறான நிலைக்குச் செல் கின்றனர் – என்றார்.

இந்த நிகழ்வு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. அதற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தனும், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி இ.சத்தியேந்திரம்பிள்ளையும் கலந்துகொண்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பதக்கங்கள், சின்னங்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாணவர் களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ரி)






## உடன்தேவை

கொழும்பிலுள்ள பிரபல பாதுகாப்பு சேவை கம்பனிக்கு கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள / அனுபவமற்றO.I.C, J.S.O உடன் தேவை. சம்பளம் 35,000/= வரை. சாப்பாடு சகாய விலையில். தங்குமிடம் இலவசம். வயது 60 வரை. (J/7134) (11,17,18)

தொடர்பு தமிழில் - 071 244 6926, 011 287 1280

(Brown Berets Security Rajagiriya)

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்

10.00 / 1.00 / 7.00 — 4.00 p.m



சில்வர் — 10.15 / 1.15 / 4.15 / 7.15

ப்ரொன்ஸ் — 10.30 / 1.30 / 4.30 / 7.30

விசாரணை ☎ 021- 2227712

facebook. CeylonTheatres

www.ceylontheatres.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புலோலி தென்மேற்கு, புலோலியைச் சேர்ந்த வரும் பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க ஓய்வு நிலை கணக்கு லிகிதர்/காசாளரும், புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் கந்தமுருகேசனார் சனசமூக நிலைய செயலாளரும், முன்பள்ளி முகாமைத்துவ குழு உப தலைவரும் ஆகிய

**திரு.முருகேசபிள்ளை ஜெகதேவன்**

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிபதி மதிப்பதிற்குரிய உயர்திரு. P.சிவகுமார் அவர்களின் முன்னிலையில் 15.12.2016 அன்று யாழ்ப்பாண நீதிமன்ற வலயத்திற்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பொது மக்களுக்கான சேவையை சிறப்புடன் ஆற்றவும் நீடூழிவாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: அன்பான குடும்பத்தினர்
புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம்,
கந்த முருகேசனார் ச.ச. நிலையம், முன்பள்ளி சமூகம்.

## குருக்கள் தேவை

அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தங்கி இருந்து பூசைக் கடமைகளை மேற்கொள்வதற்கு குருக்கள் தேவை. விரும்பும் அந்தணப் பெருந்தகைகள் தங்களுடைய விண்ணப்பத்தையும் எதிர்பார்ப்பையும் 30.12.2016 இற்கு முன் கடிதம் மூலம் அறியத்தரவும்.

**திரு.சோ.நவநீதன்**
(திருப்பணிச்சபைத் தலைவர், ஒழுங்கமைப்பாளர்) 077 329 4341

**இ.குழந்தை வடிவேலு (J.P)** — தலைவர்

**திரு.க.பார்தீபன்** — செயலாளர்

**அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்**
**கைதடி வடக்கு, கைதடி.** (ஜெ 7103) (13.18)

## பணிப்பெண் தேவை

நெல்லியடியில் வசிக்கும் வயோதிப அம்மாவைப் பராமரிப்பதற்கு 40 - 50 வயதுக்கு இடைப்பட்ட பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 087 2672

nelliadyuk@yahoo.co.uk

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

அனைத்து ஸ்கேட்டின் வகைகளும் அதிரடி விலைக்கழிவில் வழங்கப்படுகின்றது

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
52, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## தொழில் வழங்குனர்கள் தேவை

புகழ்பெற்ற கம்பனி ஒன்றுக்கு கட்டுமானத் திட்டத்திற்காக கொழும்பு, பதுளை ஆகிய இடங்களுக்கு மேசன்மார், தச்சுத் தொழிலாளர்கள், கூலியாள்கள் தேவை. வாராந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**071 406 9519, 071 447 1280**

## ACCOUNTS / ADMIN ASSISTANT

**Duties & Responsibilities**

Bank reconciliations, G/L reconciliations, debtors & creditor accounts, maintenace of fixed assets register, inventory and payroll.

**Qualifications & Experience**

- Full or part qualification of AAT Sri Lanka, or equivalent.
- Working knowledge of any major accounting package, Word and Excel.
- Two years working experience in audit firm or commercial enterprise.

Applications should be addressed to the Principal, St. John's College, Jaffna and emailed to stjohns@sltnet.lk before 31st December 2016.

School Office Tel : 021 222 2432

## 25.12.2016 இல் மணிவிழாக் காணும் எமது கல்லூரி உப அதிபர்

# திருமதி சசிகலா சிவநாதன்
# அவர்களின் சேவைநலன் பாராட்டு

Congratulations!



**திருமதி சசிகலா சிவநாதன்**
BA(Hons),DIP.IN.Ed,MEd.

**சேவை விவரம்**

12.03.1984 - 13.09.1989 கொ/செனல்லூசியஸ் ம.வி - ஆசிரியை
14.09.1989 - 17.03.1997 யா/ இராமநாதன் கல்லூரி - ஆசிரியை
18.03.1997 - 25.12.2016 யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி - ஆசிரியை, பகுதித்தலைவர், உபஅதிபர்.

மாணவர் வாழ்வு உயர்ந்திட என்றே
மகிழ்வுறு பணியில் மனமது நிறைந்து
பேணிடும் பண்புகள் பெரிதுமே ஓங்க
பெருமைசேர் கல்வித் தகைமையும் கொண்டு
கல்லூரி நலனில் கவனம் மிகுந்து
கற்றல் சிறந்திட வழிபல காட்டி
இடருறும் மாணவர் எதிர்காலம் சிறக்க
ஏற்ற திசைகாட்டியாய் எம்மோடிருந்து
தோழமையோடு நெருங்கிடும் பண்பும்
துணிவுடன் கருத்துக்கள் கூறிடும் பாங்கும்
பகுதித் தலைவராய், உப அதிபராய் பணிபல செய்தீர்
கண்டிப்போடு கருணையும் காட்டி
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
நல்லாசிரியராய் வரிசையில் நின்றே
யாழ்.இந்து மகளிர் தம் எண்ணத்தில் நிறைந்தீர்
இதயம் மகிழ்ந்து வாழ்த்தி நிற்கின்றோம்
ஓய்வுறு காலம் சிறந்திட வேண்டும்
ஒப்பருங் கணவர் மக்கள் மருமக்கள்
சுற்றம் வாழ உறுதுணையாகி
நோய் நொடியின்றி நூறாண்டுகள் காலம்
வாழ்க வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி.

## ஓராண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



திருமதி
**சிவயோகம்** [சுபபி]
**நாகராசா** [சொக்கர்]

மலர்வு 11.02.1953 — உதிர்வு 08.01.2016

ஆண்டு ஒன்று ஆனதுவே நம்பர் ஆறவில்லை
நீக்கமின்றி நாளின்று
நீர்க்கதியாய்த் தவிக்கின்றோம்
வாராயோ இன்னொருகால்
எம்மோடு வாழ்வதற்கு

அன்னாரின் சிவபதப்பேறு குறித்த ஓராண்டு நினைவுநாள் நாளை 26.12.2016 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவிகுளம், பாலமோட்டை,
ஓமந்தை, வவுனியா.

(V/174)(14.17.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **சோமசுந்தரம் சண்முகலிங்கம்**
[ராசு]
(Retired Fire Brigade Officer)

மலர்வு 07.10.1938 — உதிர்வு 25.11.2016



கடந்த 25.11.2016 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட அன்புள்ளங்களுக்கும் எமது அன்பார்ந்த நன்றிகள். அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கொட்டைக்காட்டு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(C/27255)(14.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

# பெயர் மாற்றத்துடன் இனி இயங்கும் மொழிச் சங்கம்

அச்சுவேலி, டிசெ.25

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழி அமைச்சின் 'மொழிச்சங்கம்' பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'சக வாழ்வுச் சங்கம்' என்ற புதிய பெயருடன் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலக பிரிவு, மாவட்ட நிலை என்ற வகையில் செயற்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவு மற்றும் அறிக்கைகள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் என்பன உடனடியாக கிடைக்கக் கூடியதாக பிரதேசசெயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்தனர்.

பிரதேச செயலக சகவாழ்வுச் சங்கங்களின் நிர்வாகிகளை உள்ளடக்கிய நிலையில் மாவட்ட நிலைச் சங்க நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ரீதியிலான சகவாழ்வுச் சங்கம் செயற்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு சகவாழ்வுச் சங்கத்தைப் பதிவுசெய்வதற்கான படிவங்கள் மற்றும் சங்க அமைப்பு தொடர்பான உபவிதிகள் மற்றும் விவரங்கள் சகல கிராம அலுவலர்களுக்கும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்டுள்ளன. தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச மொழிகள் அமைச்சின் வேலைத் திட்டங்கள் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேசசெயலக பிரிவு மட்டத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-11)

## திருவடி நினைந்து தொழுகின்றோம்

உருவாய்
17 . 02 . 1920



அருவாய்
01 . 01 . 2011

சிவபூசா துரந்தரர் **வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**

திதி: மார்கழி அபரபக்க துவாதசி (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை

நீளநினை திருவுருவை நெஞ்சத்தின் தனித்துணையை
வானகமும் வையகமும் வாழ்த்துகின்ற வள்ளலைத்
தேனக்க நறுமலரால் செஞ்சடையார் சீர்தொடுத்த
காதலின் தந்தையைக் கைகூப்பித் தொழுகின்றோம்.

24, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.

(ஜே/7125)(11,18)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஸ்ரீ வாராஹி அம்பாள் துணை

# நெஞ்சக் கடலில் தவழும் பிறந்தநாள் நினைவலைகள்

## அமரர் சுப்பையா நல்லையா

(25.12.1932 - 25.12.2016)

[முன்னாள் வனபரிபாலன இலாகா உத்தியோகஸ்தரும்
சிலோன் புளுவரி லிமிடெட் ஸ்தாபனத்தில் கடமையாற்றியவரும்,
கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீவாராஹி அம்பாள்
ஆலய நிர்வாகஸ்தருமாவார்]



இப்பூவுலக வாழ்வை நீத்து ஸ்ரீ வாராஹி அம்பாள் சமேத காசி விசுவநாதர் திருவடி நிழலடைந்து ஆண்டுகள் இரண்டு நிறைந்து விட்டதே! இறைமகன் இயேசுபிரான் அவதரித்த இப்பொன்நாளில் தாங்களும் தம் மாதாமடி வந்தடைந்தீர்கள். எங்கள் இதயக்கோயிலில் குடியிருக்கும் தங்களையும் தங்களது கடந்து சென்ற பிறந்த நாள்களையும் மறக்குமா எங்கள் நெஞ்சம். மறக்கத்தான் முடியுமா அன்புருவே! தங்கள் 84 ஆவது பிறந்தநாளாகிய இன்று தங்கள் செல்வச் செல்விகள் அன்பு மருமக்கள் வம்சக்கண்மணிகள் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் தங்களை நினைவுகூர்ந்து மானசீகமாக பிறந்தநாள் வாழ்த்துக் கூறுவது தங்கள் செவிமடலில் கேட்கிறதா அப்பனே! தங்கள் பொன்வதனம் புன்னகையால் மலர்கின்றதா ஐயனே! நெஞ்சக் கடலில் மோதும் நினைவலைகளுக்கு ஓய்வே இல்லையே! இந்த ஜென்ம "இறுதி வரை" கனவுலகில் நான் கண்ட கற்பனையெல்லாம் நனவுலகில் நிறைவேற்றி "வெண்மதி"யில் தண்ணொளி மிளிர வாழ வைத்தீர்களே! எப்படி எப்படி நன்றி சொல்வேன் என என்மனம் தினம் ஏங்குகிறதே பாசச்சுடரே! மறு பிறவி என்பது நிஜமானால் நம் குலதெய்வம் ஸ்ரீவாராகி அம்பாள் நல்லாசியால் நான் தங்கள் மனையாளாகி நன்றிக் கடன் தீர்ப்பேன்! என் கண்கண்ட தெய்வமாகிய அன்புக் கணவரே!" கணவர் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்

**அன்பு மனைவி இந்திரா**
**ஸ்ரீ வாராஹி சந்நிதி நெஞ்சுக்கு நிம்மதி**

**திருமதி இந்திராணி நல்லையா**
**"வெண்மதி"**
**ஆனைக்கோட்டை.**

(சி.24991)(13.18)

# மேசன் பயிற்சி முடித்தோருக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 25
கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அதிகார சபையில் மேசன் பயிற்சிகளை நிறைவு செய்த 156 மேசன் தொழிலாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் நொயல் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேசன் வேலை மேற்கொண்டு வருபவர்களை இந்தத் துறையில் வலுப்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான உபகரணங்களும் சீருடைகளும் வழங்கப்பட்டன. உபகரணங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கினார்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகமும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர், ஊழியர்கள், பயிற்சியை நிறைவு செய் தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-6,34)

# டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரியின் புதிய கல்வியாண்டு 2017ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் எஸ்.முகுந்தன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முழுநேர மற்றும் பகுதி நேரமாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் டிப்ளோமா, தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் டிப்ளோமா, நிர்மாண தொழில் நுட்பவியல் டிப்ளோமா, கணிய அளவையியல் தொழில் நுட்பவியல் டிப்ளோமா ஆகிய பாடநெறிகளும், பகுதிநேரமாக மோட்டார் வாகன தொழில் நுட்பவியல் டிப்ளோமாவும், முழுநேரமாக தேசிய கணக்கீட்டு டிப்ளோமா, ஆங்கிலம் மற்றும் கல்வியியல் டிப்ளோமா ஆகிய பாடநெறிகளும் கற்பிக்கப்படவுள்ளன.
கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் தை மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.
சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடை பெறும்.- என்றார். (ற-10)

# தொழிற் பயிற்சிக் கற்கை நெறி 2017இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.25
இலங்கை தொழிற்பயிற்சி அதிகரர சபையால் 2017 ஆம் ஆண்டு இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபான பரிமாறுபவர், மின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பம், காய்ச்சி இணைப்பாளர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர். அலுமினிய பொருத்துநர், கட்டடநிர்மாண உதவியாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கும், கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் காய்ச்சி இணைப்பாளர் கற்கைநெறிக்கும், பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் மின்னிணைப்பாளர் கற்கைநெறிக்கும், யாழ்ப்பாண தொழிற்பயிற்சி நிலையத்தில் கணினி வன்பொருள் திருத்துநர் கற்கைநெறிக்கும், சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்தில் அலுமினியப் பொருத்துநர் கற்கைநெறிக்கும், கந்தரோடை தொழிற் பயிற்சி நிலையத்தில் நீர்க்குழாய் பொருத் துநர் கற்கைநெறிக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெறு கின்றன.
கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12இ கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது அந்தந்த் தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர் வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் மேற் கொள்ள வேண்டும்.- என்றார். - (ற-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சுசிலாதேவி சிவசுப்பிரமணியம்

மலர்வு
01.06.1944

உதிர்வு
08.12.2015

திதி: துவாதசி (25.12.2016)

**ஆண்டு ஒன்று சென்றிருந்தாலும் மறைந்திடுமா உங்கள் நினைவு**
**பரிதவிக்குதம்மா என் நெஞ்சம் உங்கள் புன்சிரிப்பைக் காண**
**விழியோரக் கண்ணீருடன் நிற்கின்றேன் அம்மா**
**உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

**பொன்னாலை வீதி,**
**மானிப்பாய் மேற்கு,**
**மானிப்பாய்.**

(J.7094)(13.18)

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சுப்பையா திவாகரமூர்த்தி
**(சின்னகிளியண்ணா)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கையும், கே. கே. எஸ் வீதி, கோண்டாவிலையும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா திவாகரமூர்த்தி 22.12.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி (சின்னமணி)யின் அன்புக் கணவரும் பாஸ்கரமூர்த்தி (UK), சுபாஜினி (Swiss), தயாளினி(முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு, வ.மா), அருள்நிதி (UK), ஜனுஜா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி, சொக்கநாதன் (நாதன் பிறதர்ஸ், கொழும்பு) மற்றும் தில்லையம்பலம், இராசேந்திரம், இராசசௌந்தரி, சௌபாக்கிய லட்சுமி, பாலசுந்தரம் (பொறியியலாளர்), இராமச்சந்திரன் (நாதன் பிறதர்ஸ், இணுவில்), சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன், சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் கனிஷ்டா, ஸ்கந்தரூபன், சுபாஸ்கரன் (ஆசிரியர், யா/வயாவிளான் மத்திய கல்லூரி), சிவகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷன், திஷானி, கிரன், டரிக்ஷன், டதுஷன், மானஷன், அஸ்விதா, சரணியா, சந்துஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ். வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(J/7126)
(11,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**021 224 1742**

## மரண அறிவித்தல்கள்



### பாலசுந்தரம் சிவானந்தன்
(முன்னாள் பணியாளர், அண்ணா தொழிலகம், இணுவில்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் மேதர் ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சிவானந்தன் 21.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் - பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் டுஷ்யந்தனின்( Nations Trust Bank - திருகோணமலை) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேதர் ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 615 6495/ 077 175 2717**



### திருமதி அருந்ததி சபாரத்தினம்

தங்காலைய வீதி, தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி சபாரத்தினம் 22.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற பரமு - பூரணம் தம்பதியரின் மருமகளும் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் இரத்தினராஜ், பவானி, ஜெயந்தி, வசந்தி, ஸ்ரீதரன், வாசுகி, வாசுதேவன், கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரமோகன், கணேசபிள்ளை, சகாதேவன், சிவயோகம்(கலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**71, நாயன்மார் வீதி,**
**நல்லூர்.**

(J/7108)
(14.17.18.)

**சந்திரமோகன் - 077 935 2227**
**கணேசபிள்ளை - 077 657 7364**
**சகாதேவன் - 077 512 1983**

# விளம்பரங்கள்



## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 659 3812, 077 928 5267**

## Tamil/ English Chemistry Personal Classes
Basic, inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்.

**075 046 0555**

## மணமகள் தேவை
யாழ்ப்பாணம் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த (RC) 1979 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 764 2942**

## கடை வாடகைக்கு
சுன்னாகம் பஸ்நிலையம் அருகில் ஐஸ்கிறீம் கவுஸ் ஒன்று சகல தளபாடங்களுடனும் வாடகைக்கு உண்டு.

**076 563 5711**

## காணி விற்பனைக்கு
கோண்டாவில் வடக்கில் பலாலி வீதிக்கு அண்மையில் 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**076 697 2287**

## வீடு வாடகைக்குத் தேவை
உடுவில், மானிப்பாய், இணுவில், சுன்னாகம், கோண்டாவில் போன்ற இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 839 9428, 077 865 1131, 077 952 8394**

## வீடுவளவு விற்பனைக்கு
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முன்னால், இரகுநாதஐயர் பதிப்பகத்துக்கு சமீபமாக, அச்சுக்கூட ஒழுங்கையில் (Press Lane) 6 பரப்புக் காணி (6 LMS. V.C) வீட்டுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**011 234 3560(திருமதி. அநுரதி ரட்ணராஜா), 021 222 3856(சட்டத்தரணி- கேசவன்)**

## காணி விற்பனைக்கு
மிருசுவில், உசன் சந்தியில் அம்பாள் பேக்கரிக்கும் மற்றும் நூலகத்துக்கும் ஹோட்டலுக்கும் அண்மையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 630 3757**

## ASIAN (TILE`S)
(tiles/ மாபிள், நவீன முறையில் திறம்பட குறைந்த விலையில் பதித்துத் தரப்படும்.



**தொ.பே. 077 619 4994**

## வேலையாள்கள் தேவை
அனுபவமுள்ள மேசன்மார்களும் கூலியாள்களும் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதியுண்டு. மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும். மேசன்களுக்கு 1500-2000/= உம் கூலிக்கு 1000-1500/= உம் வழங்கப்படும்.

**077 923 5781, 075 075 8791, 075 815 3031**

## பெண் உதவியாளர் தேவை
London இல் பிறந்து வளர்ந்த 16 வயதுடைய India (சென்னை) பல்கலைக்கழகத்தில் கற்கும் தாய், தந்தையுடன் தங்கியிருக்கும் பெண் ஒருவரைப் பார்ப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. அத்துடன் India செல்வதற்கான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

30 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (9 am - 7p.m)

**077 175 5720, 077 021 0255**

## வெளிநாடு செல்வதற்கான செயலக சேவைகள்
சகல விதமான செயலக சேவைகள் உட்பட எம்பசி (தூதரக) Online நிரந்தர, தற்காலிக விசா விண்ணப்பப் படிவங்களைப் பூரணப் படுத்தவும், தமிழ், ஆங்கிலமொழி பெயர்ப்பு வேலைகளையும் செய்விக்க கீழ்வரும் முகவரியில் உள்ள எமது அலுவலகத்துடன் கிழமை நாள்களில் காலை 7.30 - 4.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்

**செயலகச் சேவைகள்** (C/162) (11,18)

S.72, 3ஆம் மாடி, கொழும்பு மத்திய சுப்பர்மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு - 11 (பழைய மீன் மார்க்கட்)

**077 671 7757, 0112 392 989, 0112 458 631**

## இரண்டு மாடி வீடு விற்பனைக்கு
கொழும்பு - 04. 13.25 Perch
6 படுக்கையறை, 4 குளியலறை, 3000 Sqft / 80 feets to Galle Road.

**Ravi : 077 442 3800**

## வீடு வாடகைக்கு உண்டு
சண்டிலிப்பாயில் 10 பரப்புக்காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

**076 701 3060**

## வீடு வாடகைக்குத் தேவை
சுன்னாகம்,மல்லாகப் பகுதிகளில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**076 382 2266**

## கல் விற்பனைக்கு
தரமான கொங்கிறீற் கல், சல்லி வகைகள் விற்பனைக்குண்டு.

**077 860 0093**

## தேவை
கம்பி வேலையாள்கள், மேசன்பாஸ் மற்றும் ரைல் பாஸ் உதவியாள்கள் தேவை.

**071 358 6023, 077 592 1299**

## வேலைக்கு ஆள் தேவை
யாழ் நகரில் உள்ள பான்சிக் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை வயது (18-45)

**077 790 5333**

## மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பம் திருவோணம் - 3. 28 பாவம். 36 வயதுடைய இங்கிலாந்தில் இஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

**076 535 9284**

## ஆங்கில வகுப்புகள்
இலகுவான முறையில் விரிவாகக் கற்பிக்கப்படும்.

**076 545 6378**

## வீடு விற்பனைக்கு
இரண்டுமாடி Modern House with top Hill view வத்தளை 19.75 perch 4 குளியலறை 3500 Sqft Built in 2010, 30 மில்லியன்.

**Ravi : 077 442 3800**

## ஊர்க்கோழிகள் விற்பனைக்கு
ஊர்ச் சேவல்கள். 1½ மாத ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**076 348 8645**

## ஒத்துமாறல்
கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நகர்ப்புற 1AB பாடசாலையின் கணித பாட ஆசிரியராக பணி புரியும் ஒருவர் வட மாகாணத்தில் (யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது) கணித பாட ஆசிரியராக ஒத்துமாற விரும்புகின்றார்.

**077 867 9657**

## பெயர்மாற்றம்
மட்டுவில் தெற்கு பஞ்சலிங்கம் சுரேஜன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை பஞ்சலிங்கம் சுரேஸ் என வெளிப்படுத்தி சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**பஞ்சலிங்கம் சுரேஸ்**

## தவறிவிட்டது
சஜெந்துஜா கணேசலிங்கம் (907042758V)எனது அடையாள அட்டை மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் நுணாவில் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் 16.12.2016 அன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும்.

**077 138 6918**

## வாடகைக்கு
யாழ்ப்பாணம் பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய கடைகளும் தனி இரு மாடிக் கடையும், மின்சார நிலைய வீதியில் பஸ்தரிப்பிடத்துக்குப் பின்புறமாக இரு கடைகளும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் வாடகைக்கு உண்டு.

**கனகசபை தர்மகுலசிங்கம்**
189,191,193, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
**077 723 2535**

## வேலைவாய்ப்பு
கனடிய நிறுவனமொன்றுக்கு வீட்டிலிருந்தபடி வேலை செய்வதற்கு இருவேறு பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியை சரளமாகப் பேசக்கூடியவராகவும், கணினி அடிப்படை அறிவுள்ளவராகவும், இணைய இணைப்பு உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பதவி வெற்றிடங்கள்
1. அலுவலக நிர்வாகி 2. SEO வேலையாளர்.

job54seekers777@gmail.com
**077 338 2131** (பி.ப.6.30 இற்குப் பின்பு)

## பதவி வெற்றிடம்
### Computer Operator / Accounts Assistant
எமது பிரசித்தி பெற்ற Pest Control Company இற்கு தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரி தேவை.
தகைமை: Payrolls/ EPF, ETF
ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் கட்டாயமானது.

Please Send Your CV to: termite.com@gmail.com
Termite.com(Pvt) ltd. 077 758 3483/ 076 758 3483/ 021 492 7626
No.6, Railway Lane.Chundikuly, Jaffna.

## பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை
எமது பிரசித்தி பெற்ற நிறுவனம் ஒன்றுக்கு பயிற்சி உள்ள, பயிற்சி அற்ற ஆண், பெண் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை. வயது 19 தொடக்கம் 50 வரை. சம்பளம் OT யுடன் 35,000, சாப்பாடு செய்து தரப்படும். தேவைப்படும் பிரதேசங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை. (C 26874) (14,17,18)

**தொடர்பு: 077 198 7522**
145/161, Galwala Road, Colombo - 06

## கேள்விகோரல் -2017
### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - சிற்றுண்டிச்சாலை
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையினை 2017 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து ஒரு வருட காலத்துக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நடத்திச் செல்வதற்கான பொருத்தமான விலை மனுதாரர்களைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்வி கோரலுக்கான விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் விலை மனுதாரருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் இதர விடயங்களை மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா. 500 (அரசாங்க வரிகள் உள்ளடங்கலாக) செலுத்திப் பாடசாலையின் நிர்வாகக் கிளையில் 26.12.2016 தொடக்கம் 31.12.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்.இந்துக் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் - 2017 எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பங்கள் 03.01.2017 பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படுவதோடு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 03.01.2017 அன்று பிற்பகல் 2 மணிக்கு உடனடியாக அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரால் திறக்கப்படும்.

*தலைவர், ஐ.தயானந்தராசா,*
*அதிபர்,யாழ்.இந்துக்கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
**021 222 2431** (ச/27209) (11,18)

*செயலாளர், ந.சூரியகுமாரன்,*
*பாடசாலை அபிவிருத்திக்குழு,*
*யாழ்.இந்துக்கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

## விழிப்புலன் அற்றோர் சங்கம் கடனுதவி
யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் தனது உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கடன் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு சுய தொழில்முயற்சியை மேற்கொள்ளும் நோக்கில் 25 ஆயிரம் ரூபா வ்ரையிலான நிதி கடனாக வழங்கப்படுகின்றது.

கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு மற்றும் ஏனைய சிறு தொழில்களை மேற்கொள்ள வசதியாக அங்கத்தவர்களுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது என்று சங்கம் தெரிவித்தது. இந்தக் கடன் மூலம் 40 வரையிலான சங்க அங்கத்தவர்கள் பயன் பெற்றுள்ளனர். சங்கத்தில் மேலும் சில அங்கத்தவர்களுக்கு சுய தொழில் முயற்சிக்கான இந்தக் கடன் வழங்கப்படவும் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## வேலை வாய்ப்பு
யாழில் உள்ள பிரபல தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த சாதாரணதர கல்வியறிவு போதுமானது. 35000/= இற்கு மேல் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம்.

**078 5000580, 078 600 7598**
Hutch off Stanly Rd.Jaffna

## தவறிவிட்டது
செபஸ்ரியாம்பிள்ளை றொசாந்தன் என்பவரின் தேசிய அ.அ, மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் சாவகச்சேரி சங்கத்தானைக்கும் கைதடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

**077 514 1161**

## காணி விற்பனைக்கு
வட்டுக்கோட்டை தென்.மேற்கில் 12¼ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. சிறிய 4 துண்டுகளாகப் பிரித்து அடைத்து 4 பேர் வீடு கட்டுவதற்கு உகந்தது.

**077 432 0481**

## காணி விற்பனைக்கு
வடமராட்சி, புலோலி, மந்திகை வைத்தியசாலையிலிருந்து உபயகதிர்காமம் செல்லும் வீதியில் (பெருந்தெரு) 200 மீற்றரில் 52 பயன்தரும் பனை மரங்களுடன் கூடிய சதுரக்காணி (05 பரப்பு) உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 072 787 3716

## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

**Professional IT Courses**
- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware , Mulitmedia



**Diploma in English**
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
SPOKEN ENGLISH
ஆங்கிலக் கல்வி

DMI COMPUTER EDUCATION

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
பிரிவு 2 :- 28-12-2016. 9:00 am
பிரிவு 3 :- 02-01-2017. 9:00 am

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமைச் செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

IT & English Diploma

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுண்டுக் கோவில் அருகாமை) | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, கூட்டுறவு |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

# சேர்ந்திருப்பதா? விலகுவதா? விரைவில் முடிவெடுக்கும் சு.க

## கூறுகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, டிசெ. 25

கூட்டாட்சி அரசின் வயது 15 மாதங்களாகிவிட்ட நிலையில் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் அரசின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து தொடர்ந்தும் இணைந்திருப்பதா அல்லது அதிருப்தி மேலீட்டால் விலகுவதா என்பதை முடிவு செய்யும் என்று அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் பேச்சாளருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

2015 ஓகஸ்ட் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஐ.தே.க. - சு.க. ஆகிய இரண்டும் இணைந்த காலந் தொடக்கம் இன்றுவரை ஒப்புதல்கள், எதிர்ப்புகள், விவாதங்கள், காயப்படுத்தும் விமர்சனங்கள், கருத்து வேறுபாடுகள் என்றுபல தூரப்புநிகழ்ச்சிகளை நாம் கடந்து வந்திருக்கிறோம்.

அப்படியிருந்தும் அரசுடன் இணைந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பல வெற்றிகளைப் பதிவு செய்ய முடிந்துள்ளதோடு அரசின் ஒருமைப்பாட்டைச் சரியான வழியில் நடத்தவும் முடிந்துள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் இரு கட்சிகளும் இணைந்து கைச்சாத்திட்ட ஒப்பந்தமானது செப்ரெம்பர் 2017 இல் காலாவதியாகின்றது. எனினும் இரு கட்சிப் பொதுச் செயலாளர்களான அமைச்சர்கள் கபீர் ஹஸீம், துமிந்த திஸநாயக்க ஆகிய இருவருக்குமிடையிலான எழுதாத ஒப்பந்தத்தின் பிரகாரம் இது ஐந்து வருட காலத்துக்கு செல்லுபடியாகலாம். இதனால்தான் அரசின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து இந்த கூட்டின் தலைவிதியை நாம் நிர்ணயிக்க இருக்கின்றோம்.

முதலாவதாக பிரச்சினைக்குரிய மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுனா மகேந்திரனின் பதவிக்கால நீடிப்பை எம்மால் தடுக்க முடிந்தது. சிறிய அளவிலான வர்த்தகத்தை மேற்கொள்வோருக்கான வற் வருமானத்தின் ஆரம்ப நிலையை 33,000 ரூபாவிலிருந்து 100,000 ரூபாவுக்கு உயர்த்தி வரவு-செலவுத் திட்டத்தில் மாற்றங்களைப் புகுத்த நாமே காரணமாக இருந்தோம்.

அபிவிருத்தி சட்டவரைவு மூலம் சுப்பர் அமைச்சரை உருவாக்க முயற்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிக்கு நாம் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம்.

நாம் தொடர்ந்தும் அரசுடன் இணைந்திருப்போமா என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எம்மைக் கேட்கிறார்கள். திசை மாறிச் சென்ற கூட்டரசை நல்வழிப்படுத்தினோம். எங்கள் தலையீட்டை மதித்து சிநேகபூர்வமான முறையில் அரசு நடந்து கொண்டமையிட்டு நாங்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்பதை நினைத்து பெருமைப் படுகின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் குறிப்பாக எனக்கும் அரசை விட்டு விலகும்படியும், மகேந்திரனை மீளவும் பதவியில் அமர்த்தும் படியும், சுப்பர் அமைச்சர் பதவியை உருவாக்கும் படியும், வற்வரியை அதிகரிக்குமாறும் சொல்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும், பசில் ராஜபக்‌ஷவுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழிநடத்தப்படும் சுதந்திரக் கட்சியை நிர்மூலமாக்கவேயாகும்- என்றார். (து)


## வெற்றிப் பாதையில் நடக்க லீடர் உடன் இணையுங்கள்!



ISO 9001-2008 தரச் சான்றிதழைப் பெற்றுள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் முன்னோடியான லீடர் கம்பனிகள் தொகுதி வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் விநியோகத்தை மேலும் பரவச் செய்வதற்காக விற்பனை தொடர்பாக அனுபவம் மற்றும் ஆர்வமுள்ள சிறந்தவர்களை கீழ் காணும் பதவிகளுக்கு ஆட்சேர்க்கவுள்ளது.

## விற்பனைப் பிரதிநிதிகள்

- 35 வயதுக்குக் குறைந்தவர்கள்
- கணிதம் அடங்கலாக க.பொ.த (சா.த) மற்றும் உயர்தரம் வரை கல்வி கற்றவர்கள்
- ஆர்வலர் மற்றும் புதிய முறைகளை உபயோகித்து வினைத்திறனை வெளிப்படுத்தும் போட்டி ரீதியாக வெற்றியை நாடக்கூடிய ஆள் வலுமை கொண்டிருத்தல்
- வெற்றி இலக்கை நாடும் மற்றும் நீண்ட நேரம் தமது பொறுப்பின் பொருட்டு அர்ப்பணிப்புடன் சேவை புரியும் திறமை கொண்டிருத்தல்.
- விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களின் (FMCG) விற்பனையில் அல்லது சமமான பதவியில் 03-05 வருட அனுபவம்.
- விற்பனை தொடர்பாக தொழில்சார் தகைமையிருத்தல் மற்றும் தமிழில் கதைக்கும் திறமை மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் ரூ. 20,000/- முதல் ரூ. 30,000/- வரை. விற்பனை மீதான தரகுப் பணம், மற்றும் கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள். இரவை வெளியே கழிக்கும் போது செலுத்தும் கொடுப்பனவுகள், தொலைபேசி கட்டணங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், மற்றும் வருடாந்த போனஸ் உட்பட்ட பல கொடுப்பனவுகள்.
- கம்பனியால் பராமரிக்கப்படும் மோட்டார் சைக்கிள் (வெற்றிகரமாக எமது இலக்குகளை தொடர்ந்து 06 மாதங்கள் அடைவதாயின் மோட்டார் வாகனமொன்று வழங்கப்படும்)

உங்களிடம் மேற்கூறப்பட்ட தகைமைகள் இருப்பின் தயவு செய்து உங்கள் விபரங்களடங்கிய விண்ணப்பத்தை புகைப்படமொன்றுடன், உறவினரற்ற இரண்டு பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் எமக்கு சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பிக்கும் பதவியை காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சல் Subject பிரிவில் குறிப்பிடவும்.

**மனித வள முகாமையாளர்**
**லீடர் ஓட்டோமொபைல் (பிறைவட்) லிமிட்**
**26ஆம் மாடி, கிழக்கு கோபுரம்.**
**உலகச் சந்தை நிலையம், கொழும்பு 01**
**hrm@leadergroup.lk**



# அபிவிருத்திச் சட்டவரைவை ஆராய அவகாசம் வேண்டும்

## கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

மூதூர், டிசெ. 25

சிறப்பு அபிவிருத்திகள் தொடர்பான சட்டவரைவு தொடர்பில் மாகாண சபையின்அனைத்துஉறுப்பினர்களினதும் நிலைப்பாடு மிகவும் முக்கியமானது எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது: வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் சபை உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்ததால் சிறப்பு அபிவிருத்தி தொடர்பான சட்டவரைவை ஆராய்வதற்கு எமக்கு அவகாசம் வேண்டும். அது குறித்து ஆராய்ந்து, மாகாண சபையில்விவாதமொன்றை நடத்தியதன் பின்னர் மாகாணசபை உறுப்பினர்களின் நிலைப்பாட்டுக்கமைய தீர்மானம் எடுக்கப்படும்-என்றார். (த-ய-40)



## சிரிய மக்களின் துயர் நீங்க பள்ளிவாசலில் பிரார்த்தனை

மட்டக்களப்பு, டிசெ.25

சிரியப் போரில் சிக்குண்டு துன்பங்களை அனுபவிக்கும் மக்களின் துயர் நீங்கவும் அங்கு இடம்பெறும் மனிதப் பேரவலங்களுக்கு விடிவு வேண்டியும் ஏறாவூர்றிபாய்பள்ளிவாசலில்சிறப்புப்பிரார்த்தனைகள் இடம்பெற்றன. கடந்த வியாழக்கிழமை இரவுநேர இசாத் தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசல் நிர்வாகத் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய யூ.எல். முஹைதீன் பாவா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பள்ளிவாசல் ஜமா அத்தாரும் பொதுமக்களும் பங்குபற்றினர்.(த-ய-46)




## கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 200 பட்டதாரிகளுக்கு நியமனம்



மட்டக்களப்பு, டிசெ.25

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் 200 பேருக்கு நேற்று அரச தொழில்துறை நியமனங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை விவேகானந்தா மகாவித்தியாலய மண்டபத்தில் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் எம். அன்சார் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் முதன்மை அதிதியாகக் கலந்து நியமனங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி, வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நசீர், விவசாய அமைச்சர் இரா துரைராஜசிங்கம், முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட், மாகாணசபை உறுப்பினர்களான ஆர்.எம். அன்வர், ஜனார்த்தனன், கோவிந்தன் கருணாகரம், ஆர். துரைரெட்ணம், எச்.எம். லாஹீர் ஆகியோருடன் முதலமைச்சின் செயலாளர் யூ.எல். அப்துல் அஸீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-ய-46)

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்குக் கண்டனம்




எருவில், டிசெ. 25

உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளைக் கண்டித்து நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று பட்டினமும் பள்ளிவாசலில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஜும்மா தொழுகைக்கு பின்னர் அக்கரைப்பற்று இளைஞர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுலோக அட்டைகளை தாங்கியவாறு அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடி துவா பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். (த-ய)

## தடம் புரண்டது ரயில்

கொழும்பு, டிசெ.25

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த இரவு நேர அஞ்சல் ரயில் பதுளை ரயில் நிலையத்துக்கு அருகே தடம்புரண்டது.

அதனால் பதுளையில் இருந்து கொழும்பு செல்லவுள்ள 3 ரயில்கள் பயணத்தை ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளன என்று ரயில் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. (ற)










உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பன்னாட்டு விசாரணையின் தேவையை வலியுறுத்தும் தீர்ப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரான நடராஜா ரவிராஜ்ஜின் கொலை வழக்குத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. சந்தேகநபர்களாக மன்றில் நிறுத்தப்பட்டிருந்த கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அனைவரும் விடுவிக்கப்பட்டனர். பன்னாட்டு மட்டத்தில் இயங்கும் மனித உரிமை அமைப்புகளால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வழக்கு இது. வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு, இலங்கையில் சிறுபான்மையினருக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களில், நீதியின் தன்மை குறித்த கேள்வியை மீண்டும் பலமாக எழுப்பியுள்ளது.

நடராஜா ரவிராஜ் இளம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். சிங்களம், ஆங்கிலம், தமிழ் என மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் திறன் படைத்தவர். தமிழர்களுக்கு எதிரான போர் வடக்கு – கிழக்கில் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த காலத்தில், சிங்கள மக்களுக்கு சிங்கள மொழியில் நடக்கும் கொடுமைகளை ஊடகங்கள் வாயிலாக எடுத்துச் சொல்லி வந்தவர். நாடாளுமன்றத்திலும் அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுத்து வந்தவர்.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கொழும்பு மாவட்டம் நாரஹேன்பிட்டிய மாதா வீதியிலிருந்து, எல்விட்டிகல மாவத்தைக்குச் செல்லும் வழியில் வீதிச் சமிக்ஞை விளக்குக்கு அருகில் அவரும் அவரது மெய்ப் பாதுகாவலரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அப்போது அரசின் பக்கம் சேர்ந்திருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியான கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் அணியைச் சேர்ந்தவர்கள், கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து அவரைக் கொன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. ஜூரிகள் சபையின் முன்பாக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. எல்லோருமே பட்டதாரிகளான ஜூரிகளே இந்தச் சபையின் அங்கத்தவர்கள் என்றும் கூறப்பட்டது.

அவ்வாறு படித்த – விடயங்களை உள்ளும் புறமுமாக நன்கு புரிந்து கொள்ளக்கூடிய – ஜூரிகளாலேயே சந்தேகநபர்கள் எவரும் குற்றவாளிகள் இல்லை என்கிற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதிலும் ஏகமனதாக இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

இலங்கையின் நீதிக் கட்டமைப்பின் கீழ் இத்தகைய நீதி வழங்கும் நடைமுறை பயன்பாட்டில் உள்ளதே! எனவே அதன் அடிப்படையிலான தீர்ப்பும் சரியானதே. ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில் – நீதியை நியாயத்தை எதிர்பார்த்து நிற்கும் மக்களைப் பொறுத்தவரையில் – நியாயம் கிடைக்கவில்லை.

ரவிராஜ் கொல்லப்பட்டு 10 ஆண்டுகளின் பின்னரும், அவரது கொலைக்கான நீதி கிடைக்கவில்லை. இந்தக் கொலையில் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கே கொழும்பின் சட்டம் ஒழுங்கு காவலர்களுக்கு 9 வருடங்கள் சென்றன. ஆனால் அப்படிக் கைது செய்யப்பட்டவர்களும்கூட விடுதலை பெற்றுவிட்டார்கள். நியாயத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு அது கிடைக்கவில்லை.

இந்தக் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அரச படையினர். குற்றத்தைச் சுமத்தியவர்கள் அதே அரசின் சட்டவாளர்கள். நீதி விசாரணையை மேற்கொண்டதும் அதே அரசின் நீதித்துறைதான். அதாவது கொலைக் குற்றம்சாட்டப்பட்டவர்களும், அவர்களை விசாரித்து தண்டிக்க முயற்சித்தவர்களும் என எல்லோருமே ஒரே தரப்பினராக இருக்கும்போது, வழங்கப்பட்ட நீதியின் மீது மறுதரப்பு நம்பிக்கை இழப்பது புதியதோ, விநோதமானதோ இல்லை.

இத்தகைய நம்பிக்கையீனத்தினால்தான் போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணையை, ஆகக் குறைந்தது பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கிய நீதிக் கட்டமைப்பின் முன்பான விசாரணையை தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றார். தமிழர்களின் நம்பிக்கையைப் பெறத்தக்க நீதிக் கட்டமைப்பு ஒன்றைத் தாம் உருவாக்குவார் என்று அவர் கூறினாலும்கூட, தமிழர்கள் முற்றுமுழுதாக நம்பிக்கையை இழந்துவிட்ட அவரது நீதிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு ஏற்பாட்டையும், ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே தமிழர்களின் நிலைப்பாடு. ரவிராஜ் வழக்கின் தீர்ப்பு, அந்த நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்த்துள்ளது. எனவே, இனியாவது பன்னாட்டு விசாரணை ஒன்றுக்கு அரச தலைவர் இணங்க வேண்டும்.

# அமைதிக்கான முயற்சிகளை குழப்ப முயலும் இனவாதத் தரப்புக்கள்

வந்தியத்தேவர்

வெள்ளையின மக்களின் கடும் கோட்பாட்டுமுன்னணி, 1970களில் ஆசிய இனங்களுக்கு எதிராக லண்டனில் பெரும் பேரணிகளை நடத்தியதுண்டு. அங்கே நிறத்துவேசம் தாண்டவமாடியது. அரசு நல்லுறவுச் சட்டம் ஒன்றை உருவாக்கியது. அந்தச்சட்டம் பல்வேறு திருத்தங்களின் பின்னர் 2010 இல் சமத்துவச் சட்டம் என்ற பெயரில் ஆசிய இனத்தவர்களை மட்டுமன்றி, அனைத்து மக்களையுமே பாதுகாக்கும் வகையில் அமைந்திருந்தது. பிரிட்டனில் தலைதூக்கிய நிறவெறிக்கு எதிராக இது கொண்டு வரப்பட்டது. இதுபோன்ற ஒரு சட்டத்தை இலங்கை கொண்டிருந்தால், இந்த நாட்டில் பெரிய அழிவுகள் உருவாக வாய்ப்புக்கள் இருந்திருக்காது. இனக்குரோத வளர்ப்பாளர்களின் கரங்களில் இலவசமாகக் கிடைத்த சுதந்திர இலங்கை இன்று குருதிக் கண்ணீர் வடிக்கிறது.

இந்தச் சூழலில் புதிய அரசியல் யாப்பின் மூலம், சிறுபான்மை இனங்களின் எதிர்பார்ப்பில் உள்ள விடயங்களில் காணி பொலிஸ் அதிகாரங்களுடன், சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களிலும் மாகாணசபைக்கான அதிகாரங்கள் கிடைக்கக் கூடியதான சாத்தியக்கூறுகள் பரிந்துரையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது. ஒற்றையாட்சிக்குத்தான் எதிரானவர் என்பதை ஆரம்பத்திலேயே தான் தெரிவித்து விட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

எது எப்படி இருப்பினும் தமிழ் மக்கள் விடயத்தில் அதிகாரப் பகிர்வு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே அமையப்போகிறது. இணக்கப் பாட்டுக்கும் ஒரு அளவுண்டு என்பது பிரதமர் ரணிலின் கருத்து. முன்னைய அரசுகளால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் சிறுபான்மை இனங்களுக்கான அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டியதில்லை. தற்போது இரண்டு தேசியக் கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள ஆட்சியினூடாகத் தமிழ் சிறுபான்மை இனங்களுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்கவென புதிய அரசமைப்பை உருவாக்க முனைந்துள்ளன.

நல்லிணக்கமும், சமாதானமும் வேண்டியே சிறுபான்மை மக்கள் ஆட்சிமாற்றத்துக்கு முக்கிய காரணிகளாகச் செயற்பட்டனர். ஆட்சித் தலைமைகள் அதற்குப் பிரதியுபகாரமாகவே தீர்வு முனைப்புக்களில் இறங்கியுள்ளன. எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், அவரது தரப்பினரும் நல்லிணக்கம் ஏற்படுவதை விரும்பாதவர்களாக அதிகாரத்தைக் கைப்பற்றத் தீவிரமாக உள்ளனர். அதன் அடையாளம் தான், புதிய அரசமைப்புக் காரணமாக நாடு துண்டாகி விடும் என்ற தவறான பரப்புரை. தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் தமிழ் மக்களைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்ல முயலுகிறார்கள்.

### நெருப்பாற்றைக் கடக்க வேண்டிய நிலையில் ஈழத் தமிழர்கள்

> வடக்குக் கிழக்கு இணைந்த ஆட்சி முறை ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் இருந்துள்ளதையும் மறப்பதற்கில்லை. நீதி மன்றத்தின் மூலம் அந்த இணைப்பை ரத்துச் செய்யத் தனது செல்வாக்கை உபயோகித்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அனைத்து மக்களையும் பாதுகாக்கக் கூடியதான சமத்துவ சட்ட நடைமுறைகள் இல்லாத நாட்டில், வாழும் சிறுபான்மை மக்கள் நெருப்பாற்றைக் கடக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகி இருப்பதால், ஆற்றைக் கடப்பதற்கான அணுகுமுறைகளை மதிநுட்பத்துடன் கையாள வேண்டியது தவிர்க்க முடியாததாகியுள்ளது. வடக்கு – கிழக்கு இணைந்த சமஷ்டி முறையன்றி வேறெதனையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவின் கூற்று.

தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை மறக்க முடியாமலும், இனவாத எதிரணியினரை கட்டுப்படுத்த முடியாமலும், திண்டாடிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் நேரடி ஆதரவுடன் வரும் முதல் அரசமைப்பு என்பதால் இது விடயத்தில் புரிந்துணர்வோடு செயற்படுங்கள் எனக் கோரும் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் எனப் பல தரப்பட்ட எதிர்வு கூறல்களைக் கொண்டிருக்கும் புதிய அரசியல் யாப்பு, தமிழ் சிறுபான்மை மக்களின் முற்று முழுதான எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் ஒன்றாக அமையப் போவதில்லை என்பதே உண்மை.

வடக்குக் கிழக்கு இணைந்த ஆட்சிமுறையை, நீதி மன்றத்தின் மூலம் இணைப்பை ரத்துச் செய்யத் தனது செல்வாக்கை உபயோகித்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இப்போது முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஊடாக வடக்கு – கிழக்கு இணைப்புக்கு மீண்டும் எதிர்ப்பைத் தூண்டி விட்டிருப்பவரும் அவரே என்ற கிசுகிசுப்பும் உள்ளது. ஜனாதிபதி என்னும் அதி உயர் பதவியில் இருந்த ஒருவர், கௌரவமாக அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டிருக்க வேண்டியவர், நாடாளுமன்ற உறுப்பினராகி, கூட்டு எதிரணியை எதிர்க்கட்சியாக அங்கீகரியுங்கள்; அதன்பின் அரசமைப்புக் குறித்த சர்வசன வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஆலோசிக்கிறோம் என பிரதமர் ரணிலிடம் கூறியுள்ள மகிந்த நாட்டில் அமைதியை உருவாக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டமைக்காக வருத்தப் பட வேண்டியவர். சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் இறைமைக்கும் ஆப்புவைக்க எதிர்க்கட்சித் தலைவராகவாவது இருந்துவிட வேண்டும் என்று எனக் கருதுகிறார் போலும்.

முன்வைக்கப்படவுள்ள அரசியல் யாப்பு தமிழ் சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வைத் தரும் ஒன்றாக அமையப் போவதில்லை. எதிர்க் கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் மகிந்த உட்பட முக்கிய சிங்களத் தலைவர்களின் மதிப்பைப் பெற்ற ஒருவர் என்பதால், தடைகளைத் தாண்டிப் பாய்வதில் நியாயமான வலிமைபெற்றுக் கொள்ளுவார் எனவும் எதிர்பார்க்கலாம். புதிய யாப்பு அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் வகையில் இடம்பெற வேண்டியது முக்கியமாகும்.

# சண்டை சச்சரவுகளால் பரபரப்பாகும் வடக்கு மாகாண சபை அமர்வுகள்



ந.லோகதயாளன்

வடக்கு மாகாண சபையின் 71ஆவது அமர்வில் இடம் பெற்ற சந்தைக் கலவர நிலமையை கட்டுப்படுத்த 'நோகாமல் அடிப்பேன்; ஓயாமல் அழு' என்னும் உபாயமே கையாளப்பட்டதா கேள்வி எழுப்பப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் 2017ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் முதலமைச்சர் தொடர்பான அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் குறித்த அமைச்சுக்கள் தொடர்பில் இயலாமையும், குறைகளுமே ஓங்கி ஒலித்தன.

இதில் முதலாவது பட்டியலை உறுப்பினர் அஸ்மின் ஆரம்பித்து வைத்திருந்தாலும், அதற்கான யதார்த்தபூர்வ பதிலை முதலமைச்சர் உள்ளிட்ட எவராலும் வழங்க முடியவில்லை. அதற்குக் கிடைத்த பதில், இவ்வாறான கேள்விகளை எவரால் கேட்கமுடியும் என்பதேயாகும்?

### உறுப்பினர் சயந்தனின் வினாவால் உருவாகியது சர்ச்சை

இதற்கும் அப்பால் உறுப்பினர் சயந்தன் தனது உரையில் முதலமைச்சருக்குச் சார்பாக எழுப்பிய ஓர் வினாவே அங்கு முதலமைச்சருக்கு எதிராகத் திசை திருப்பப்பட்டது. வடமாகாண முதலமைச்சரின் பணியைத் தடையின்றி முன்கொண்டு செல்வதற்கும், அவரது சேவை மக்களைச் சென்றடையவிடாது தடுப்பதற்கும் வடமாகாண சபை உறுப் பினர்கள் சிலரே காரணமாகியுள்ளனர் என முதலமைச்சர் லண்டனில் உரையாற்றியுள்ளார். முதலமைச்சரின் சேவைக்கு இடையூறாகவுள்ளவர்கள் யார் யாரென முதலமைச்சர் கூறினால் அத்தடைகளை நீக்க உதவமுடியும் என்றார் அவர்.

இவ்வாறு உறுப்பினர் சயந்தன் முதலமைச்சரை நோக்கி வினவ, அதற்கு மற்றொரு உறுப்பினரான சர்வேஸ்வரன், முதலமைச்சரைக் காப்பதாக எண்ணிக் கொண்டு "இந்த விடயம் திசைமாறுகின்றது. அமைச்சு தொடர்பான விடயம் தொடர்பாக மட்டும் உரையாற்றுங்கள். முதலமைச்சரின் அரசியல் தொடர்பில் பேசும் இடம் அது இல்லை எனவும் கூற, அதுவரை சும்மா இருந்த சுவாமிக்கு சூடம்காட்டியதுபோல் அமைந்தது சர்வேஸ்வரனின் அந்தக் கூற்று. உடனே சிவாஜிலிங்கமும் எழுந்து, இது அரசியல் தொடர்பான விடயம். இதனை இங்கு பேசாது வெளியில் பேசுமாறு கூறியதனால் எழுந்தது சர்ச்சை.

### உறுப்பினர் விந்தனின் குற்றச்சாட்டும் உறுப்பினர் ஆனல்ட்டின் பதிலடியும்

இதன்போது வழமைபோன்றே லண்டன், ஜெனிவா, விடுதலைப் போராட்டம், என்றெல்லாம் தமது வசதிக்கும், தமது கௌரவத்திற்காகவும் ஏற்ப உறுப்பினர்கள் உரையாற்றினர். இதன்போது உறுப்பினர் விந்தனும் குறுக்கிட்டு, 'எமது விடுதலைப் போராட்டங்கள்தான் இந்தளவு நிலைக்கு எம்மை இட்டுச் சென்றன. அவற்றின் மூலம்தான் இந்த சபையும் கிடைத்தது. ஆனால் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள் அதற்கு உரிமை கோரமுடியாது எனக் கூறியபோது உறுப்பினர் ஆனல்ட், அதற்கு ஓர் சாட்டையடியாக, போராட்டம் என்பது மக்களுக்காக உயிரைக் கொடுத்துப் போராடியவர்களுக்கும், அவர்களோடு தோள் நின்று பங்களித்தவர்களுக்கும் உரித்தானது. ஆனால் தமக்காக ஆயுதம் தூக்கி, உயிர்ப்பிச்சைக்காகவும், வயிறு வளர்ப்பதற்காகவும் காலத்துக்குக் காலம் ஆண்டுக் கணக்கில் ஒட்டுக் குழுக்களாகச் செயற்பட்டுக் காட்டிக் கொடுத்தவர்களை விட உணர்வோடு மௌனமாக இருந்தவர்களே மேலானவர்கள் என்றார்.

> வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் முதலமைச்சர் தொடர்பான அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் குறித்த அமைச்சுக்கள் தொடர்பில் இயலாமையும் குறைகளுமே ஓங்கி ஒலித்தன

நிலைமை உச்சம் பெற்று, மீண்டும் சிவாஜிலிங்கம் குறுக்கீடு செய்தவேளையில், குழுநிலையில்தலைவராகவிருந்த சிவஞானம், உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை நோக்கி, ஒருமையில் வார்த்தையை உதிர்த்ததும், வார்த்தைகளை அளந்து பேசுமாறு கூறிய சிவாஜிலிங்கம் ஒலிவாங்கியைத் திருகினார். கையில் அகப்படவில்லை. அவைத்தலைவரை நோக்கிச் சீறிப்பாய்ந்தார். அதன்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினர்.

இவை அனைத்தையும் அமைதியாகப் பார்வையிட்டவண்ணம் இருந்தார் முதலமைச்சர். அது முதலமைச்சர் சார்ந்த ஓர் விடயத்தில் எழுந்த சர்ச்சை என்பதனால் குறித்த விடயத்துக்கு பதிலளிப்பதன் மூலமோ அல்லது அதற்கான பதில் பின்னர் கிடைக்கும் என உரைப்பதன் மூலமோ, அத்தனை சர்ச்சைகளுக்கும் முதலமைச்சர் முற்றுப் புள்ளி வைத்திருக்க முடியும். ஆனால் முதலமைச்சர் அவ்விதம் செயற்படவில்லை.

### முன்வைக்கப்பட்ட கேள்விக்கு ஆறஅமரப் பதிலிறுத்த முதலமைச்சர்

இதனால் ஒரு மணிநேரம் சபை நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டு, அமளிகள் ஓய்ந்த நிலையில் மீண்டும் சபை கூடியது. விவாத நிறைவின்போது உரையாற்றிய முதலமைச்சர், குறித்த விடயத்திற்குப் பதிலுரைத்தார். அதனை அவர் முன்னரே தெரிவித்திருந்தால் நிச்சயமாக சர்ச்சையே ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்காது.

முதலமைச்சர் தமது பதிலில், தான் லண்டனில் உரையாற்றும்போது, சில உறுப்பினர்கள் தடையாக இருப்பதாகத் தெரிவித்த கருத்தை, தொப்பி அளவாக இருந்தமையினால் சயந்தன், ஆனல்ட் போன்றோர் போட்டுக்கொண்டனர் என்றும், சிவாஜிலிங்கம், சர்வேஸ்வரன் போன்றோரின் போக்கைக் கருத்தில் கொண்டே தாம் அவ்விதம் தெரிவித்ததாகவும் விடயத்தை நேரடியாகவே போட்டுடைத்தார். இதன் மூலம் வடமாகாண சபையின் குழப்பக்காரர்களாக முதலமைச்சர் இனம் கண்டு கொண்டவர்கள் சிவாஜிலிங்கமும் சர்வேஸ்வரனும் தான் என்பது வெளிப்படையாகி விட்டதாகவும் கொள்ளமுடியும்.

இதற்கு மேலாக, லண்டனில் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு முதலமைச்சருக்கு உள்ளதனால், எங்களை பலிக்கடாக்களாக்கி, உங்கள் பூசையை நிறைவு செய்து கொள்ளுங்கள் என இரு உறுப்பினர்களும்தான் ஏற்றுக் கொண்டனரா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. அந்தவகையில் வட மாகாண சபையில், நான் உங்களை நோகாமல் அடிப்பேன்; நீங்கள் ஓயாமல் அழுங்கள் என்பது போன்ற மற்றுமோர் நாடகமும் இடம்பெறுகின்றதா? என்ற பலமான ஐயம் தற்போது எழுந்துள்ளது.

இதற்கும் வலுவான காரணம் உள்ளது. அதாவது, எந்த ஒரு விடயத்திற்கும் முந்திக்கொண்டு கருத்துரைக்கும் குறித்த இரு உறுப்பினர்களும், ஒட்டு மொத்தச் சபையே குழம்புவது இவர்களினால்தான் என முதலமைச்சர், அவர்களது பெயரை வெளிப்படையாகக் குறிப்பிட்டுக் கூறியும்கூட, மௌனம் காத்தமையும் இந்தச் சந்தேகத்துக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே உள்ளது. ஆக மொத்தம், வட மாகாண சபையில் இடம்பெறவேண்டிய ஆரோக்கியமான செயற்பாடுகள் நடக்கின்றனவோ இல்லையோ, இவ்வாறான சண்டை, சச்சரவுகள் குத்து வெட்டுக்களுக்கு மட்டும் குறைவில்லை எனக் கொள்ள முடிகிறது.



## வாசகர் திருமுகம்

### நலிவு நிலை காணும் கால்நடை வளர்ப்புத்திட்டம்

குடாநாட்டில், கால்நடைகளுக்கான தீவனங்களின் விலைகள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி எகிறிச் செல்கின்றன. இதனைக் கட்டுப் படுத்துவது யார்? கால்நடை உற்பத்தி தொடர்பான திணைக்களமா அல்லது மாகாண விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சா அல்லது நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவா என்று தெரியவில்லை. பாலின் நிர்ணய விலை 80 ரூபாவாக ஆக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாலைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் 67 ரூபாவை அண்மித்த விலையிலேயே கொள்வனவு செய்கின்றன. பால் விற்பனைமூலம் வரும் வருமானம் கால்நடைகளைப் பராமரிக்கவே போதுமானதாகவே இல்லை. கால்நடைகளும் அனுமதி பெற்றோ கள்ளத்தனமாகவோ வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறான நிலை தொடர்ந்தால் வாழ்வாதாரத் திட்டங்களும், கால்நடை வளர்ப்பும் கேள்விக்குறியாகிவிடும். இந்த விடயத்தில் தொடர்புடைய தரப்பினர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்வார்களா?

*சு.துரைராஜா, புன்னாலைக்கட்டுவன்*

### பொதுமக்களது தேவையை நிறைவேற்றிக் கொடுத்து உதவிடுவீர்

போர் காரணமான, நாட்டின் அசாதாரண சூழ்நிலையில், தமக்கு அவசியமான பிறப்பு மற்றும் மரண அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றுக்கான உரிய பதிவுகளை, உரிய காலத்தினுள் மேற்கொள்ள முடியாதநிலையில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், குறித்த பதிவுகளை காலம் கடந்த பதிவுகள் என்ற விதத்தில் பதிவு செய்யவென பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் தரப்பை அணுகும்போது, உரிய வழிகாட்டல்கள் ஆலோசனை வழங்கி பதிவை மேற்கொள்ள ஏற்பாடு செய்து கொடுக்காமல், தமது பொறுப்பைத் தட்டிக் கழித்து அவர்களை அலைக்கழித்து, மன உளைச்சலுக்கு ஆளாக்குவதை அறிந்து வேதனை அடைகின்றோம். பொதுமக்கள் தமக்குத் தேவைப்படும் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள உதவவேண்டிய குறித்த அதிகாரிகள், சாக்குப்போக்குச் சொல்லி மக்களைச் சிரமத்துக்குள்ளாக்குவதைக் கேள்விப்பட்டு விசனம் அடைகிறோம். பொதுமக்களுக்கான தமது கடமையை உரிய வகையில் நிறைவேற்றி உதவ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

*வ.க.ஜெயபாலன் (ஜே.பி)*
*யாழ்ப்பாணம்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கேள்வி பதில்

மருத்துவர் எம்.அரவிந்தன்




**கேள்வி:**
எனது வயது 58 ஆகும். சில வருடங்களாக எலும்பு நோ இருந்து வருகின்றது. எனது முள்ளந்தண்டு எலும்பு தேய்ந்திருப்பதாக (X-rayஇல்) குடும்ப வைத்தியர் கூறியிருந்தார். இதற்கு என்ன செய்யமுடியம் என்பது பற்றி விளக்கிக் கூறுங்கள்?

**பதில்:**
உங்களைப் போன்ற பெண்களுக்கு மாதவிடாய் நின்றதன் பின்னர் இவ்வாறான எலும்பு தேயும் நோய் (ஒஸ்ரியோ பொறோஸிஸ்) ஏற்படும் சாத்தியம் இருக்கின்றது. இதற்கு பல காரணங்கள் இருந்தபோதிலும் மாதவிடாய் நின்ற பின்னர் உடலில் ஏற்படுகின்ற ஹோர்மோன் மாற்றங்களே பிரதான காரணமாகும். இவ்வாறு எலும்பு தேய்வடையும்போது எலும்புகள் உடைவதற்கான அல்லது முறிவதற்கான சாத்தியக் கூறானது அதிகரித்துச் செல்கின்றது.
உங்களுக்கு எலும்பு நோவிருப்பதாகவும் கூறியிருந்தீர்கள். இதற்குப் பிரதான காரணமாக அமைவது விற்றமின் டி குறைபாடாகும். எமது நாட்டில் போதியளவு சூரிய ஒளி கிடைக்கின்ற போதும் அது உடலில் அகத்துறிஞ்சப்படும் அளவானது குறைவாக இருக்கின்றது. இதற்கு எமது தோலின் தன்மை மற்றும் நிறம் (Pigmentation) காரணமாகும்.
உங்களுக்கு எலும்பு தேயும் பிரச்சினை (Osteoporosis) ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்குச் சில வகையான குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். குருதிப் பரிசோதனை மூலம் விற்றமின் டி அளவைப் பரிசோதிப்பதும் அவசியமாகவிருக்கும்.
உங்களுடைய குருதிப்பரிசோதனை முடிவுகளுக்கேற்ப சிகிச்சை முறைகளை வழங்கக் கூடியதாக இருக்கும். பொதுவாக கல்சியம் அதிகமுள்ள பாலுணவுகளை உள்ளெடுப்பதால் எலும்பானது உறுதியடைகின்றது. குருதிப் பரிசோதனை (கல்சியம் விற்றமின் டி) முடிவுகளுக்கேற்ப தேவையான அளவு கல்சியம் மற்றும் விற்றமின் டி மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி உள்ளெடுக்க வேண்டியது அவசியமாகும்.
விற்றமின் டியின் அளவு மிகவும் குறைவாக இருக்கும்போது 'Mega Dose' எனப்படுகின்ற அதிக் செறிவான விற்றமின் டி மருந்தை வைத்தியரின் பரிந்துரையின்படி எடுக்க வேண்டியிருக்கும். அதேபோல எலும்பு முறிவைத் தவிர்க்கும் விதத்தில் விழுவதைத் தவிர்த்து நடத்தலும் அவசியமாகும்.
எலும்பு தேயும் நோயை (Osteoporosis) கண்டறிவதற்கான மிகச் சிறந்த பரிசோதனையாக அமைவது (DEXA Scan) ஆகும். இந்தப் பரிசோதனை மூலம் துல்லியமாக எலும்பு தேய்ந்திருப்பதை கணித்துக் கொள்ள முடியும்.
இந்த (DEXA Scan) பரிசோதனையை இன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே முதன் முறையாக இந்தப் பரிசோதனை வசதி இங்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வசதியுள்ள மூன்றாவது அரச வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலையாகும். இது எமது மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.
எலும்பு தேய்ந்திருக்கும் நிலையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொண்டு தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எலும்பு உடைதல் மற்றும் முறிவடைதலைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**கேள்வி:**
எனது வயது 20. எனது கழுத்துப் பகுதி சில மாதங்களாக வீங்கியிருக்கிறது. எனது உடல் நிறை அதிகரிப்பதோடு மாதவிடாயும் அதிகமாக இருக்கிறது. இது பற்றி ஆலோசனை தரவும்.

**பதில்:**
உங்களுக்கு தைரொயிட் சுரப்பியில் பிரச்சினையிருப்பதற்கான சாத்தியக் கூறு அதிகமாகும். தைரொயிட் சுரப்பியின் சுரப்பு குறைவாக இருக்கும்போது நீங்கள் குறிப்பிட்டது போன்ற குணங்குறிகள் ஏற்பட நேரிடுகின்றது. தைரொயிட் சுரப்பு குறைவான நிலையின் (HYPOTHYROIDISM) போது உடற் பருமன் அதிகரித்துச் செல்லுதல், சோம்பல், நித்திரைத் தூக்கம், மலச் சிக்கல், அதிக குளிரைத் தாங்க முடியாத நிலை மற்றும் மாதவிடாயின் போது அதிக குருதி வெளியேறுதல் போன்றன ஏற்படுகின்றன.
நீங்கள் உடனடியாக வைத்தியரொருவரை சந்திப்பது அவசியமாகும். உங்களுக்கு குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோன் அளவைப் பரிசோதித் துப் பார்ப்பது அவசியமாகும். உங்களின் தைரொயிட் ஹோர்மோனின் அளவு குறைவாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் தைரொக்ஸினின் மாத்திரையை வைத்திய ஆலோசனைப்படி உள்ளெடுக்க வேண்டியிருக்கும்.
தைரொக்ஸின் மாத்திரையை வெறு வயிற்றில் காலை நேரத்தில் உள்ளெடுத்தல் அவசியமாகும். இதன் பின்னர் 30 தொடக்கம் 40 நிமிடங்களுக்கு தேநீர் மற்றும் உணவு போன்றவற்றை உள்ளெடுக்கக்கூடாது. அதேபோல சில மருந்து வகைகளையும் (உ+ம்: இரும்புச் சத்து குளிசை, கல்சியம் போன்றன) தைரொக்ஸினுடன் சேர்த்து உள்ளெடுக்கக் கூடாது.
எனவே நீங்கள் வைத்தியரொருவரை நாடித் தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

**கேள்வி:** எனது மகனின் வயது 16 ஆகும். அவரது உடல் நிறையானது கூடுதலாக இருப்பதோடு கழுத்துப் பகுதியிலும் கறுப்பு நிறமான படை போன்று இருக்கிறது. எனக்கும் கணவருக்கும் நீரிழிவு நோய் இருக்கிறது எனது மகனின் நிலை தொடர்பாக ஆலோசனை வழங்கவும்?

**பதில்:** கழுத்துப் பகுதியில் கறுப்பு நிறமான படையானது காணப்படுவதை Acanthosis nigricans என்று கூறுவார்கள். இது உடலில் இன்சுலினுக்கு எதிர்ப்பு நிலை (Insulin resistance) ஏற்படுவதன் அறிகுறியாகும். தவறான உணவு மற்றும் அப்பியாசமற்ற வாழ்க்கை முறை என்பவற்றால் உடற்பருமன் அதிகரித்துச் செல்லும்போது இவ்வாறான நிலமை ஏற்படுகிறது. இவ்வாறானவர்களுக்கு நீரிழிவு நோய் மற்றும்மெட்டாபோலிக் சின்ட்ரோம் (Metabolic Syndrome) எனப்படுகின்ற நோய் நிலமையும் ஏற்பட நேரிடுகிறது.
பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருக்கும்போது அவர்களின் குழந்தைக்கு அந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும். எனவே, உங்கள் மகனானவர் இன்று முதல் உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி என்பவற்றை மேற்கொண்டு உடற்பருமனைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதைவிட வைத்திய ஆலோசனையைப் பெற்று மேலதிக பரிசோதனைகளை (குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு, குருதி அமுக்கம், கொழுப்பின் அளவு, ஹோர்மோன்கள்) மேற்கொள்வதும் அவசியமானதாகும்.

**கேள்வி:** எனது வயது 56 ஆகும். நான் மெற்போமின் (Metformin) 500 மில்லி கிராமம் மருந்தை கடந்த 5 வருடங்களாக நாளொன்றுக்கு 3 தடவைகள் பயன்படுத்தி வரு கிறேன். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குருதிப் பரிசோதனைகளின் படி எனது நீரிழிவு நோயானது கட்டுப்பாட்டில் இருப்பதாக குடும்ப வைத்தியர் கூறியிருந்தார். எனது உறவினர்கள் சிலர் மெற்போமின் மருந்தைப் பயன்படுத்தினால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுமெனக் கூறுகின்றனர். இது பற்றி விளக்கிக் கூறவும்.

**பதில்:** இது மிகவும் அவசியமானதொரு வினாவாகும். எமது மக்களிடையே நீரிழிவு நோய் தொடர்பாகவுள்ள பிழையான எண்ணக் கருக்களில் இது பிரதானமானதாகும். உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதற்தர மருந்து மெற்போமின் ஆகும். இந்த மருந்தானது நீரிழிவு நோயைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதோடு அதனால் ஏற்படுகின்ற நீண்டகாலப் பிரச்சினைகளையும் குறைக்கிறது.
இம்மருந்தானது நீரிழிவு நோய் கட்டுப்பாடின்றிப் போகும்போது ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்பை உண்மையில் குறைக்கின்றது. நீரிழிவு நோயாளியொருவருக்கு குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை குருதிப் பரிசோதனை மேற்கொண்டு சிறுநீரகப் பாதிப்பு உள்ளதா இல்லையா எனக் கண்டறியப்படுவது வழமையாகும். இவ்வாறு சிறுநீரகப் பாதிப்பானது குறிப்பிட்ட அளவுக்கு மேலிருக்கும் போது மாத்திரமே மருத்துவரானவர் மெற்போமின் மருந்தைக் குறைக்கவோ, நிறுத்தவோ வேண்டியேற்படுகிறது. எனவே மெற்போமின் பற்றிய தப்பபிப்பிராயத்தை கைவிடுவது மிகவும் அவசியமானதாகும்.




நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

சூரியகாந்தி
உதயன் 25.12.2016



யாதுமாகி

# 2004

ஆம் ஆண்டு டிசெம்பர்26ஆம்திகதி அதிகாலைப் பொழுதில் ஆரம்பமாயிற்று அந்த அவலம். கடற்பகுதிகளை அண்மித்திருந்த மக்கள் அப்படியொரு சாவு அரக்கன் தங்களைத் தேடி வருவான் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

# கடலலைகள் காவுகொண்ட உயிர்களின் நினைவலைகள்

சுனாமி—2004



இராட்சத அலையாக எழும்பிய கடல்,
கரையில் இருந்த மக்களையும்,
அவர்களின் உடமைகளையும்,
கண்ணிமைக்கும் நேரத்துக்குள்
கபளீகரம். செய்துவிட்டுச் சென்றது.
பெற்றோர்களை இழந்த குழந்தை
களும், குழந்தைகளைக் காவு
கொடுத்த பெற்றோர்களும், கண
வனை இழந்தவர்களும் எனத்
தவித்திருக்க, உற்ற-உறவுகளை,
நட்புகளை வாரிச் சுருட்டிக் கொண்
டோடியது கடல். ஒரே நேரத்தில்
ஆசியநாடுகள் பலவும் அழுது
புலம்பிய காட்சிகள் வரலாற்றில்
இடம்பிடித்துவிட்டன.

இந்தோனேசியா முதல் இந்தியா-
இலங்கை வரையான இந்து
சமுத்திரப் பெருங்கடலைப் புரட்டிப்
போட்ட சுனாமி அலைகளால் இலட்
சக்கணக் கானோர் உயிரிழந்தனர்.
அது கிறிஸ்மஸ் தினத்துக்கு மறுதி
னம் என்பதால் மகிழ்ச்சியின் பின்
னர் மக்களைக் கெடூரமான சேகம்
பீடித்திருந்தது.

நாளை சுனாமி நினைவு தினமாகும்.
கடல்மாதாவின் கோரத்தாண்டவம்
முடிந்து இத்தோடு 12வருடங்கள்
நிறைவடைந்து விட்டன. 2004ஆம்
ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதிக்கு
முன்னர் 'சுனாமி' என்றால் என்ன
என்பது பற்றித் தெரிந்திருக்காத
நமது நாட்டு மக்கள் அன்றைய தினம்
கடற்பேரலைகளால் காவுகொள்ளப்
பட்ட 38ஆயிரத்துக்கும் அதிகமான
வர்களின் சாவின் பின்னரே அது
பற்றியும், கடலன்னைக்கு இப்படி
யொரு வெறிபிடித்த ஆக்ரோசமுள்
ளது என்பதையும் அறிந்துகொண்
டனர். அதுவரை அடைமழை காலங்
களில், ஆறுகளி லும் குளங்களிலும்
ஏற்படும்வெள்ளப் பேருக்குகளையே
பெரிதாக எண்ணியிருந்தவர்களா
லும் அதற்கே ஈடுகொடுக்க முடியாதி
ருந்தவர்களாலும் ஒரு தென்னை
மரத்தையும் தாண்டி உயர எழுந்து
வந்து தம்மைத் தாக்கிய கடலலை
களிலிருந்து எவ்வாறு தம்மைப் பாது
காத்துக் கொள்ளமுடியும்? ஜப்பா
னிய மொழியில் சுனாமி என்பதன்
அர்த்தம் துறைமுகப் பேரலை என்
பதே. நாம் 2004 இல் சந்தித்த கடல
லைகள் போன்ற இராட்சத அலை
களுக்கு அந்த நாடு இதற்கு முன்பே
பல தடைவைகள் முகம் கொடுத்தி
ருக்கின்றது. ஆனாலும் தனது
வளர்ச்சியடைந்த தொழில்நுட்பத்தின்
காரணத்தால் இத்தகைய பெரிய
அலைகள் தோற்றம் பெறுவதை
முற்கூட்டியே அறிந்து, தற்காப்பு
நடவடிக்கைகளை மேற்கொண்டு
விடுகின்றது. தொழில்நுட்பத்தில்
விருத்தியடைந்திராத எம்மால் இவ்
வாறான சர்ந்தர்ப்பங்களில் முற்
பாதுகாப்புடன் செயற்படமுடியாமல்
போனமை துரதிர்ஷ்டமே.
இதனாலயே 2004இல் திடீரெனக்
கொந்தளித்த கடலலையால்
பரிதாபகரமாகச் சக உறவுகள் பல
வும் சாவடைந்தன.

### இயற்கையின் சக்தி

2004இல் ஏற்பட்ட அந்த ஆழிப்
பேரலை உண்மையிலேயே
இயற்கை, மனிதரைவிட எவ்வளவு
சக்தி வாய்ந்தது என்பதை நமக்குப்
புலப்படுத்தியிருந்தது. இந்தோ
னேசியாவில் உள்ள சுமத்ரா தீவு
களை அண்மித்த கடற்பிராந்தியங்
களில் கடலடியிலுள்ள தரைப் பரப்
புக்களில் ஏற்பட்ட நடுக்கத்தால்
அந்தப்பகுதிக் கடலில் ஏற்பட்ட
அசைவு(அலைகள்) ஆழம் குறைந்த
கடற்பரப்புக்களை அண்மிக்கும்
வேளைகளில் இராட்சத அலைக
ளாகித் தரைப்பரப்புக்குள் புகுந்து
சேதங்களை ஏற்படுத்தின. இவை
இலங்கை ,இந்தோனேசியா,மற்றும்
இந்தியாவின் கடற்கரைக் கிராமங்
களை வளைத்துக் கொண்டு ,ஏறக்
குறைய இரண்டரை லட்சம் உயிர்
களையும் ,கோடிக்க ணக்கிலுள்ள
அ வ ர் க ளி ன்
உடைமைகளையும் அழித்து விட்டு
ஓய்ந்தன.

எமது நாட்டின் வடக்கு-கிழக்கு கரை
யோர மாவட்டங்களே இதனால் அதி
கம் பாதிக்கப்பட்டன. கடலை நம்பி
வாழ்வாதாரம் செய்யும் கடற்கரை
வாழ் வறிய மக்கள் பலரும் கடலன்
னையால் காவுகொள்ளப்பட்டனர்.
கட்டடங்கள் இயற்கைச் சூழல் போன்
றன சிதைக்கப்பட்டன. ஏலவே போரால்
நிர்க்கதியாக்கப்பட்டிருந்த வட-கிழக்
குத்தமிழ்மக்கள்கடற்பேரலைகளின்
இத்தகைய கெடூரத்தால் மேலும்
அவலப்பட்ட னர். இவையெல்லாம்
நடந்தேறிப் பல ஆண்டுகள் கழிந்
தும் அவை ஏற்படுத்திவிட்டுப் போன
வடுக்கள் இன்னும் மறையாமலே
யிருக்கின்றன.

### இயற்கையை அழிக்காதீர்!

இயற்கைக்கு எதிராக மனிதரால்
எதுவும் செய்யஇயலாது என்பதை
சுனாமியின் பின் மனிதர்கள்
உணர்ந்திருக்க வேண்டும். ஆனா
லும் இயற்கையின் இத்தகைய
தாக்கங்களைக் குறைத்துக் கொள்
ளும் வழிமுறைகளை மனிதர்கள்
அழிப்பதே அவர்களுக்கு மேலும்
பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பல
ஆண்டுகளுக்கு முன்பு நமது
கடற்கரை ஓரங்களில் அடர்ந்த காடு
களாகப் படர்ந்திருந்த இயற்கை
எங்கே? நவீன மயமாக்கல் என்ற
வகையில் மனிதன் எப்போது
காடுகளை அழிக்க ஆரம்பித்
தானோ அப்போதே இயற்கை மனி
தனிடம் கோபித்துக் கொண்டு
இதுபோன்ற நிகழ்வுகளைக் காட்ட
ஆரம்பித்து விட்டது. கடற்கரை ஓரங்
களில் இருந்த கண்டல் தாவரங்கள்,
மாங்குரோவ் ,மற்றும் சுந்தர வதனக்
காடுகள் போன்றன அழிக்கப்பட்டு
,இன்று பல நாடுகளிலும் பெரிய
பெரிய விடுதிகளும்,வீடுகளும்
கட்டப்பட்டுள்ளன. கரையோரத்தில்
இருந்த சவுக்கு, தென்னை மரங்க
ளும் ,பவளப் பாறைகளும் பெரும்
பாலும் அழிக்கப்பட்டுவிட்டன. இப்
போது கடற்கரை முழுவதும் மரங்
களே இன்றி நகரங்களாகவே
(நரகங்களாகவே) காட்சியளிக்கின்
றன. இவ்வாறே சென்றுகொண்டிருந்
தால், இனி வருங்காலங்களில்
ஏற்படும் கடற் சீற்றத்துக்கு 2004ஐ
விடக்கூடுதலான எதிர்விளைவையே
நாம் சந்திக்க நேரும். ஆகையால்
இந்தத் தினத்தில் நாம் அனைவரும்
இயற்கையை அழிக்காதிருக்கத்
திடசங்கற்பம் பூண்டுகொள்வோமாக.

### அனைவரும் நினைவுகூருவோம்!

சுனாமிப் பேரழிவு ஏற்பட்டு 12
ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
இந்நிலையில் 12ஆம் ஆண்டு
நினைவு தினம் நாளை அனுசரிக்
கப்படவுள்ளது. இதனையடுத்து
சுனாமியால் தமது உறவுகளையும்
வாழ்வாதாரத்தினையும் தொலைத்த
மக்கள் இதனை நினைவுகூரக்
காத்திருக்கிறார்கள். மெழுகுவர்த்தி
களை ஏற்றி வைத்தும், சுனாமி
தாக்கிய கடற்கரைகளில் மலர்
தூவியும் மறைந்த தங்கள் உறவு
களுக்கு அஞ்சலி நிகழ்ச்சி களை
நடத்தி வருகின்றனர். சுனாமி யால்
சாவடைந்தோர் அடக்கம் செய்யப்
பட்ட பகுதிகளில் அவர்களின் உறவி
னர்கள், பொதுநல அமைப்பினர்
அஞ்சலி செலுத்தக் காத்திருக்
கின்றனர். சுனாமி நினைவு தினத்
தினை ஒட்டி நாம் அனைவரும்
ஒன்றிணைந்து கடல் காவு கெண்ட
நமது உறவுகளை ஒரு கணம்
நினைவு கூருவோமாகமாக!





தொடர்ந்து இடம்பெறும் அசாதாரண நிகழ்வுகளால், மகிந்த தரப்பு இவ்வாறான சதியில் ஈடுபட்டுள்ளதா? அவரின் திடீர் சீனப் பயணத்தின் பின்னணியில் ஜனாதிபதியின் கொலைச் சதி இருக்கின்றதா? போன்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவ்வாறான குழப்பங்களையும் சதிகளையும் உள்ளடக்கிய அரசியலில் அடுத்த மாற்றம் என்ன? இப்போதைய சிக்கல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஜனாதிபதி மைத்திரி எப்படிச் முகம் கொடுக்கப் போகின்றார் என்பது கேள்விக்குறியே

# குறி வைக்கப்பட்டுள்ளாரா மைத்திரி?

தவபாரதி

இலங்கை அரசி யலில் இதுவரை நிலவி வந்த பெரும்பான்மையின அரசியற் கட்சிகளின் நிலைப்பாடு மகிந்த வின் ஆட்சிக்கால முடிவோடு மாற்றுத் திசையில் பயணிக்கத் தொடங்கியது. இலங்கை அரசியலின் இரண்டு பெரிய கட்சிகளாகக் கரு தப்படும் ஐக்கிய தேசியக் கட்சி மற் றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என் பன தற்போது ஒன்றித்துச் செயற்படுவதாக உணரப்பட்டு வரும் நிலை யில், இதுவரை மறுக்கப்பட்ட உரிமைகளோடு ஒடுக்கப்பட்டு வந்திருந்த சிறுபான்மையினருக்கு, உரி மைகளும் அதிகாரங்களும் கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்ற கருத்தும் செயலாக்கங்களும் ஆட்சியி லிருக்கும் இவ்விரு கட்சிகளின் தலைமைகளிடமும் உருவாக்கம் பெறவும் வலுப்பெறவும் தொடங்கின. ஆனாலும் ஆட்சியிலி ருந்து மக்களால் தூக்கி வீசப்பட்ட மகிந்த உட்பட்ட அதிகார வர்க்கத்தினர் சிறு பான்மையினருக்குச் சமத்துவ மளிக்கும் இன்றைய அரசின் செயற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியே வருகின்றனர். இந்த நிலையில்தான் அரசின் மேற்படி நகர்வுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடியதும், குழப்பி யடிக்கக் கூடியதும் என்றும் சந்தேகப்படக்கூடிய, ஜனாதிபதியையோ ஏனைய முக்கியஸ்தர்களையோ குறிவைக்கும் செயல் என்று எண் ணக்கூடிய சம்பவங்கள் சில நடந்த வாறுள்ளன.

**சீனக்குடிமகன் ஏற்படுத்தியிருக்கும் சந்தேகம்**

சுற்றுலாவின் நிமித்தம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீனாவைச் சேர்ந்த நபர் ஒருவர், நுழைவிசைவு காலாவதி ஆகியிருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். அதன் பின்னரான விசாரணைகளிலிருந்து அவர் குறிபார்த்துத் துப்பாக்கி சுடுவதில் வல்லுநர் என்றும் அதற் காகச் சிறப்புப் பயிற்சி பெற்றிருந்தவர் என்றும் அறியப்பட்டது. அதுமட்டுமன்றி சீனத்தவர்களால் நடத்தப் படும் கொழும்பிலுள்ள கசினோ சூதாட்ட நிலையமென்றில் அவர் பணியாற்றி வந்தவர் என்றும். அவ ருடைய மனைவி சீன அரச புல னாய்வாளர் என்றும் குற்றப்புல னாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ள நிலையில், முக்கிய பிரமுகர்களை இலக்கு வைக்கும் மாபியா குழுக்களோடு இவர் தொடர்பு வைத்திருக்கக்கூடும் என்றும் சந்தேகிக்கப்படு கின்றது. ஆனால் இதை விடவும் பலத்த சந்தேகத்துடன் மக்கள் நோக் குவது, மகிந்தவின் அதிகரித்த சீனப்பயணங்களையும் குறித்த நபர் ஜனாதிபதி மைத்திரியைக் குறி வைத்தே அனுப்பப்பட்டுள்ளார் என்பதை வலுப்படுத்தும், ஜனாதிபதி உட்பட்ட முக்கியஸ்தர்கள் தங் கியிருக்கும் அலரி மாளிகையின் அருகிலுள்ள குடியிருப்புக்களில் அவர் தங்கியிருந்தமையின் பின் னனியில் ஏதாவது சதிவேலைகள் இருக்குமோ? என்பதையுமே. ஏனெனில் ஆட்சியிலிருந்து மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்பும் ஆட்சி வெறிபிடித்து அலையும் மகிந்தவுக்கு ஜனாதிபதி மைத்திரியின் சிறுபான்மையினரு டன் இணைந்து பயணிக்கும் போக்குச் சகித்துக் கொள்ள முடியாமலிருக்கின்றது என் பதை அவருடைய கூச்சல்கள், செயல்களிலிருந்தே அறிய முடிகின்றது. அத்துடன் தனது ஆட்சிக்கால முடிவுக்கு முன்னதாகவே தன்னுடைய அவ சர புத்தியால் பதவியை இழந்து, ஆளும் அவாவை இழந்தவர். இதனால் இன் றைய ஆட்சியை நிலைகுலைய வைப்பதில் அவர் மும்முரம் காட்டுவார் என்பது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றே. அத்துடன் இதற்கு முந்தைய ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதி ராகப் போட்டியிட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைச் சிறைப்பிடித்திருந்தவர் அதன் பின்னரான தேர்தலில் எதிர்பாராத விதமாகப் போட்டியிட்டு வெற்றியடைந்த இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரால் எதுவும் செய்ய இயலாமல் போனமையால் மைத்திரிக்கு எதிரான கொள்கையுடனேயே மகிந்த இருப்பார். ஆகவே இதன் பின்னனியில் மகிந்த தான் இருக் கின்றார். என்றே மக்கள் சந்தேகிக் கின்றனர்.

**சோதிடர் ஏற்படுத்திய பரபரப்பு**

ரோஹண விஜேமுனி என்ற சோதிடர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிரிழந்து விடுவார் என்று ஆரூடம் கூறியுள்ளார்.

நாளாந்தம் இவரின் கருத்துக்கள் சமூக வலைதளங்கள் ஊடக வலுப் பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் விமர்சனமாக இருந்த இந்த விடயம் தற்போது அச்சத்தை ஏற்படுத்தும் விடயமாகவே மாறிப் போய்விட்டது.

இதன் பின்னணியில் மகிந்த தரப்பு இருக்கலாம் என்றும் அதிலும் குறிப்பாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்சவே இதுபோன்ற விடயங் களில் மும்முரமாகத் தொழிற்படுவதாகவும் சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் இந்தச் சதியைக் கண்டுபி டித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதோடு, இது மிக ஆபத் தானதோர் விடயம் என்ற எச்சரிக்கையையும் ஊடக அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார்.

இது சீன நபரின் கைதை அடுத்து வெளிக்கிளம்பியதாகையால் மேற்படி சோதிடர் தன்னை முன்னிலைப்படுத்துவதற்காக காட்டிக் கொண்ட புரளி வித்தை என்று கருதுபவர்களும் உண்டு. 1980 களில் படையதியாரியாகவிருந்த இவர், அவ்வேளை இலங்கைக்கு ராஜிவ்காந்தி வருகை தந்திருந்த சமயம், அவரை வரவேற்பதற்கான அணிவகுப்பில் இடம்பெற்றிருந்து, தான் வைத்திருந்த துப்பாக்கியால் ராஜிவ் காந்தியைத் தாக்கியிருந்தவர்.

அதன்காரணத்தால் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு, அப்போ தைய ஜனாதிபதி பிரேமதாசாவால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்.

மேற்படி சோதிடர் இத்தகைய சர்ச்சைக் குரியவராதலால் இவருடைய ஆருடத்தால் மக்கள் பீதியடைகின்றனர்.

இதேவேளை அண்மையில் ஜனா திபதியின் பாதுகாப்பு அதிகாரி ஒரு வரின் வாகனச் சாரதி பொலன்ன றுவையில் கொலை செய்யப்பட் டிருந்தார். அந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர் தப்பிச் சென்றது கண்காணிப்புக் கமரா ஒன்றில் பதிவாகி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதன் அடிப்படையில் விசாரணைகள் வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளன. இத் தகைய காரணங்களால் ஜனாதிபதியைக் குறி வைத்து ஏதாவது திட் டங்கள் தீட்டப்பட்டுள்ளனவா? என்ற சந்தேகம் மேலும் வலுப் பெற்றுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து இடம்பெறும் அசாதாரண நிகழ்வுகளால், மகிந்த தரப்பு இவ்வாறான சதியில் ஈடுபட்டுள்ளதா? அவரின் திடீர் சீனப் பயணத்தின் பின்னணியில் ஜனாதிபதியின் கொலைச் சதி இருக்கின்றதா? போன்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவ்வாறர்ன குழப்பங் களையும் சதிகளையும் உள்ளடக்கிய அரசியலில் அடுத்த மாற்றம் என்ன? இப்போதைய சிக்கல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஜனாதிபதி மைத்திரி எப்படிச் முகம் கொடுக்கப் போகின்றார் என்பது கேள்விக்குறியே.

இதேவேளை அண்மையில் வடக்கு முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் போன்றோருக்கும் கொலை அச்சு றுத்தல் விடுக்கப்பட்டதாக வெளி வந்த செய்திகள் தொடர்பிலும் தற் போது மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.



> போர் முடிந்தகையுடன் வடபகுதிக்கு வருகை தரும் அதிகரித்த தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள், சாரதிகளின் வகிபங்கும் இத்தகைய வீதி விபத்துக்களில் இடம் பிடிக்கத் தொடங்கியுள்ளன.

# வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி விபத்துக்கள்

நிஷா

மனித இனத்தின் முன்னேற்றங்கள் அனைத்தும் அவனது வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவன்றி வேறேந்த நோக்கையும் கொண்டவையல்ல. இதற்காகவே இயந்திரங்களும் அவனது வேலைச்சுமைகளைக் குறைக்கும், இலகுபடுத்தும் இதர தொழில்நுட்பங்களும் இன்றைய உலகை ஆக்கிரமித்துள்ளன. எமது நாடு, உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய, விருத்தியடைந்து வரும் நிலையிலிருக்கும் ஒரு நாடாகும். ஆகையால் ஏனைய உலக நாடுகளில் உச்சங்கண்டுள்ள இயந்திர மயமாதல் மற்றும் தொழில்நுட்பவசதிக்ள் எமது நாட்டில் மிகவும் குறைந்த அளவிலயே பரிணமித்துள்ளன. அதிலும் இதுவரை போரால் சிதைக்கப்பட்டிருந்த வடபகுதியில் இவற்றின் செல்வாக்குகள் மேலும் குறைந்தளவே நிலவுகின்றன. ஆனாலும் அவை அதிகளவில் பயன்படுத்தப்படும் பகுதிகளில், அவற்றால் ஏற்படுகின்ற பாரதூரங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் இயந்திர, தொழில்நுட்பப் பாவனைகளின் விருத்தியும் பயன்பாடும் குறைந்து காணப்படும் எமது பிரதேசங்களிலயே அதிகளவிலான விபத்துக்களையும் பாரதூரங்களையும் காணமுடிகின்றது.

**ஓய்ந்த போருடன் எழுந்த வீதிகள்**

முப்பது வருட காலங்களாகத் தடைப்பட்டிருந்த பிற மாவட்டங்களை இணைக்கும் ஏ-9 பிரதான வீதி மட்டுமன்றி குடாநாட்டிலுள்ள உள்ளகத் தரைப்பாதைகள் அனைத்தும் அபிவிருத்தி என்ற பெயரில் போர்வடுக்களை மறைக்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டன. இதனால் தட்டுத்தடுமாறியும் தடுக்கிவிழுந்தும் பயணித்திருந்த வாகனச்சாரதிகளுக்கு வானில் மிதந்து செல்லும் உணர்வைத் தரக்கூடிய, வழுக்கும் காப்பெற் வீதிகள் புதியதொரு உத்வேகத்தை அளிக்கும் வகைக்கு வழிகோலின. பிரதான வீதிகள் மட்டுமன்றி சிறிய, உள்ளக வீதிகளிலும் தேவையற்ற, கவனவீனமான விபத்துக்கள் ஏற்படத் தொடங்கின. இதன் ஒட்டுமொத்த விவரத்தையே போரின் பின்னரான காலப்பகுதியில் அவை துரித அதிகரிப்புப் பெற்று வந்து, கடந்த 2015ஆம் ஆண்டில் 2361 விபத்துக்களும் அதன் பின்னரும் விப்த்துக்கள் இன்னமும் அதிகரித்துச் செல்லும் நிலைகளும் உணர்த்தி நிற்கின்றன. அத்துடன் போர் முடிந்த கையுடன் வடபகுதிக்கு வருகை தரும் அதிகரித்த தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள், சாரதிகளின் வகிபங்கும் இத்தகைய வீதி விபத்துக்களில் இடம் பிடிக்கத் தொடங்கியுள்ளன. அண்மையில் சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் பதினொருபேரைக் காவுகொண்ட விபத்தையும் இதில் குறிப்பிடலாம்.

**பெறுப்புமிக்க சாரதியாயிருத்தல்**

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பதால் மாத்திரம் ஒருவர் சாரதியாகிவிட முடியாது. அது நிறைந்த மக்களின் மத்தியில் மற்றவர்களுக்கும் தனக்கும் பாதிப்பு ஏற்படுத்தா வண்ணம் மக்கள் குழுமத்திடையே சாரத்தியம் செய்யக் கூடிய வகையில் ஒருவருடைய வாகனம் செலுத்தும் திறனையும் வீதி விதிமுறைகளை விளங்கிக் கொள்ளும் அடிப்படை அறிவின் நிமித்தமும் வழங்கப்படும் பத்திரமாகும். பல உயிர்கள் தன்னால் பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் அதற்கான கடப்பாடுடன் தான் பணி செய்யவேண்டும் என்பதையும் ஒவ்வொரு சாரதிகளும் தமது சாரத்தியத்தின் போதான ஒவ்வொரு தருணங்களிலும் நினைவில் வைத்திருக்க வேண்டும். முக்கியமாக யாழ்ப்பாணத்திலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கும் பயணிகளைக் காவிச்செல்லும் நீண்டசேவைச் சாரதிகளுக்கே இந்த அறிவுரை முக்கியமானது. அத்துடன் தென்னிலங்கையிலிருந்து வடபகுதிக்குப் பயணம் மேற்கொள்ளும் சக இனச் சாரதிகளுக்கும் இது கட்டாயமானது. வீதி விதிகள், வீதிகளின் நிலமைகள், வேகக் கட்டுப்பாடுகள், மக்கள் நடமாட்டங்கள், சாரத்தியத்தின் போதுதன்னைச்சுற்றியுள்ள வீதிச் சூழலைக் கிரகித்து அதற்கேற்றவாறு சாரத்தியத்தை மேற்கொள்ளும் திறன் போன்றவற்றுடன். தன்னால் இயக்கப்படுகின்ற வாகனத்தின் தரம், நிலை பற்றிய கூர்ந்த கவனிப்பும் இருக்கவேண்டும். அதன் இயந்திரச் செயற்பாடு மற்றும் ஏனைய உதிரிகளின் முறையான செயற்பாடுகள் போன்றவற்றைத் தொடர்ந்தும் கவனித்துக் கொள்வதுடன் தொடர் பராமரிப்பிலும் தொடர் கவனிப்பிலும் தனது பயணத்துக்குரிய வாகனத்தை வைத்துக் கொள்வதுமே ஒருவரைப் பொறுப்பு மிக்க சாரதியாக இணங்காண வைக்கும். புறச்சூழல்களைக் கருத்தில் கொள்ளாமல் சாரதிப்பத்திரமிருந்தால் போதும் சாரத்தியம் செய்யலாம் என்று ஒழுகின் அதன் விளைவு இந்த வருடத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய விபத்துக்களில் ஒன்றாகப் பதிவாகிவிட்ட சாவகச்சேரி-சங்கத்தானை விபத்தைச் சாதாரணமாக்கி, இன்னும் அதிக உயிர்களைக் காவு கொள்ளும் விபத்துக்களையே எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்.

**வீதி விருத்தியில் அக்கறை தேவை**

உலகநாடுகள் பலவற்றிலும் கட்டடங்கள், குடியிருப்புக்களுக்கு ஈடாக வீதிகளின் பரிணாமமும் வளர்ந்தே காணப்படும். இதனால் அந்நாடுகளில் அதிகளவில் ஒருவழிப்பாதைகள்- ஒவ்வொரு பிரதேசங்களுக்குப் போவதற்கும் வருவதற்கும் தனித்தனியாக அமைக் கப்பட்டிருக்கும்.

அத்துடன் அந்த-ஒரு வழிப்பயண வீதிகள் பரந்து விரிந்து, மிகவும் விசாலமானவையாய் காணப்படும். எமது நாட்டின் வீதிகளுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட மூன்று அல்லது நான்கு மடங்கு அகல விஸ்தீரணம் அவற்றிலிருக்கும்.

ஆகையால் ஒரு வாகனத்துடன் இன்னொரு வாகனம் நேருக்கு நோராக மோதிக் கொள்ளும் நிலமைகள் ஏற்படுவது அரிது. ஆகவே எமது நாட்டிலும் அதிவேக வீதிகளின் கட்டமைப்புக்களுக்கு அடுத்தபடியாக உலகநாடுகளிலுள்ள பரந்து விரிந்த ஒருவழிப் பாதைகளின் தேவை இனிவரும் காலங்களில் அத்தியாவசியமானதாகும் என்பதில் ஐயமில்லை.





சிறுகதை

# புதைமணல்

ம.பா. மகாலிங்கசிவம்

சுனாமியின் கோர வடுக்கள் நிறைந்த பிரதேசங்களைத் தாண்டிச் சென்ற எமது வாகனம் சண்முகம் வித்தியாலய நலன்புரி நிலையத்தின் முன்னால் சென்று நின்றது. வாகனத்தில் சென்ற இளைஞர்கள்- இளைஞகள் அனைவரும் குதித்திறங்கினோம். அரசு சார்பற்ற நிறுவனத்தின் இந்தச் சொகுசு வாகனத்தில் பயணிப்பதே ஒரு சொர்க்க போகம் தான். சுனாமிப் பாதிப்பிலிருந்து இன்னும் மீளாதவர்களுக்கு உளவளத்துணை வழங்கி அவர்களை மீட்டெடுப்பதே எமது பிரதான நோக்கமாக இருந்தது.

வாகனத்தைக் கண்ட முகாமில் இருந்தவர்கள் விழுந்தடித்துக் கொண்டு வந்து அதைச் சூழ்ந்து கொண்டனர்.

சோகம், துயரம், அவலம் எனத் துன்பத்துக்கு எத்தனை சொற்கள் உள்ளனவோ அவற்றை எல்லாம் வெவ்வேறு விதங்களில் கலந்துள்ள முகங்கள்.

"வாங்கோ... வாங்கோ..."

முகமலர்ச்சியுடன் வரவேற்றார் முகாம் பொறுப்பாளர். உளவளத்துணை வழங்கப்படவேண்டியவர்களின் விவரங்களை அவரே திரட்டி வைத்திருந்தார். அவரை ஒரு வேவு அணியினராகக் கற்பனை செய்தால் எமது வருகை ஒரு தரை இறக்கமாகவே கருதப்பட வேண்டும். இந்த எண்ணம் என்னுள் சிரிப்பை முகிழ்ப்பித்தது.

"என்ன தம்பி, சிரிக்கிறியள்?" "ஒண்டுமில்லை... நாங்கள் எங்க தங்கிறது?"

"அதுக்குத் தனியா ரூம் இருக்கிறது அந்த வகுப்பறை தான். பத்துப்பேருக்குக் காணுமே?" "ஓம் வடிவாக்காணும். இருக்கிற இடம் முக்கியமில்லை. எங்கட பணிதான் முக்கியம். நாங்கள் எங்களது பொருள்களை உரிய இடத்தில் சேர்த்தபின் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியவர்களின் பெயர்கள் வழங்கப்பட்டன. எனக்குக் கோவிந்தன் என்பவரின் பொறுப்புக் கிடைத்தது. உளவளத்துணை தொடர்பாக எனது கடந்த கால அனுபவத்தின் மூலம் அவரைக் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. "ஐயா, என்னட்ட நீங்கள் ஒப்படைத்த கோவிந்தனைப் பற்றிச் சொல்லுங்கோவன்"

"இந்த முகாமிலேயே கடுமையான பாதிப்புள்ளவர் அவர்தான். மனைவி முந்தியே இறந்துபோனா ஆசை அருமையாக வளர்த்த இரண்டு பிள்ளைகளும் கடல் கொண்டு போட்டுது அதுதான்...."

"இப்ப என்ன செய்யிறார்?"

"முகம் பேயறஞ்ச மாதிரி இருக்குது. ஒருத்தரோடையும் கதையில்லை. பிள்ளைகளை ஞாபகப்படுத்துற சம்பவங்கள் எதையும் கண்டால் உடனே தலையில் அடித்துக் கொண்டு குழறுவார். அது மட்டுமில்ல உடுக்கிற சாரம் படுக்கிற படுக்கை எல்லாத்தையும் அடிக்கடி உதறிக் கொண்டிருப்பார். நடைப்பிணமென்று ஊருக்குள்ள சொல்லுவினமே. இவருக்கு அந்த நிலைதான்" "சரி ஆள் ஆரெண்டு காட்டுங்கோ பாப்பம்" "அந்தா பச்சைச் சாரத்தோட போறாரே அவர்தான். கிணத்தடிக்குப் போறார் போல கிடக்கு"

"இஞ்ச எங்க இருக்கிறவர்?"

"இந்தச் சுவர்மூலைதான் அவற்றை இடம்." "அவரது இடத்தைப் பார்த்தேன். பாய் இல்லை ஒரு பெண் குழந்தையின் சட்டை மட்டும் விரிக்கப்பட்டிருந்தது. குழந்தையின் காற்சட்டை சேட் என்பன தலையணையாக"

"ஓ!பிள்ளைகளின் நினைவில் வாழ்தலா? குணப்படுத்தலின் முதற்படி இவரின் இந்த நினைவுகளிலிருந்து அப்புறப் படுத்தலாகத்தானே இருக்க முடியும்?"

கோவிந்தன் முகம் கழுவிவிட்டு வருவது தெரிந்தது. எவ்வாறு அறிமுகஞ்செய்து கதையைத் தொடங்குவது என்ற சிந்தனைச் சிதறல்கள் என்னைச் சுற்றி...

அவர் துவாயைத் தேடுவது தெரிந்தது. உதவிக்குச் சென்றேன். "ஐயா இந்தாங்கோ துவாய்" வாங்கிக் கொண்டே ஒரு பார்வை. நட்பும் பகையுமற்ற நொதுமல் நிலை இதுதானா? முகம் துடைத்தான பின் ஒவ்வொரு உடையாக எடுத்து உதறி இருந்த இடத்துக்கு எதிரே வைத்தார். சாரத்தின் கட்டைத் தளர்த்தி பலமுறை உதறிய பின் உடுத்துக் கொண்டார். குருதி ஓட்டத்தையே தடுப்பது போல் தலையை இரு கைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்டு பலமுறை உதறினார். எங்கோ செல்லப்புறப்பட்டு அங்கும் இங்கும் தேடினார்.

"சேட்டே தேடுறியள்?"

"ஓம்" "அந்தப்பெட்டிக்குள்ளயல்லோ வைச்சனியள்...?" சேட்டை எடுத்துத் பலமுறை உதறினார் போட்டார். மீண்டும் கழற்றி உதறியபின் போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

கோவிந்தனின் இருப்பிடத்துக்கு அருகில் முதியவர் ஒருவர் திருநீற்றுப் பூச்சுடன் படுத்திருந்தார். அவரிடம் ஏதாவது அறியலாமா?"

"ஐயா உங்களிடம் பேசலாமா? உங்கட பெயர் என்ன?" "சங்கரப்பிள்ளை"

"உங்களுக்குச் சுனாமியால பாதிப்பொன்றும் இல்லையோ"

"இல்லாமல்..... எனக்குப் பிள்ளைகள் இல்லை மனிசியத்தான் கடல் கொண்டு போட்டுது." "இவர் ஏன் இப்பிடி இருக்கிறார்"

"ஆர் கோவிந்தனே? இப்ப கொஞ்சம் பரவாயில்லையெல்லோ முந்திச் சாப்பாடு தண்ணி வென்னி ஒண்டும் இல்லை. பிறகு நான் தான் ஒருமாதிரிச் சுகப்படுத்திச் சாப்பிட வைச்சனான்."

"நீங்கள் சுகப்படுத்தினனீங்களோ? என்ன செய்தனீங்கள்?"

"இவருக்கு இவற்றை மச்சானோட நெடுகப் போட்டி... சுனாமி வந்த அண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு ரவுணுக்கு வெளிக்கிட்டவராம். அப்ப மச்சான் காரன் வீட்டை வந்ததால அதுகள் போகாம நிண்டுட்டுதுகள். அதுகள் மச்சானாலதான் செத்ததெண்டு அவரில கோபம்."

"அது கிடக்கட்டும் நீங்க எப்படி அவரைச் சுகப்படுத்தினனீங்கள் எண்டு சொல்லுங்கோவன்."

"பொறுங்கோ அதுதான் சொல்லுறன் இவரைச் சாப்பிடப் பண்ண வேற வழி தெரியலை ஒருபொய் சொன்னன். மச்சான் காரன் உனக்குச் செய்வினை செய்ததால தான் இவ்வளவும் நடந்தது எண்டு நம்பவைச்சன். பிறகு அவரை இருத்தி எனக்குத் தெரிஞ்ச மந்திரமெல்லாம் சொல்லி தண்ணி தெளிச்சு விபூதியும் பூசி விட்டன். அதோட கொஞ்சம் முகம் வெளிச்சுது. சாப்பிடவும் தண்ணி குடிக்கவும் தொடங்கினார்.

"பிறகென்ன நல்ல வேலை செய்திருக்கிறியள்"

"ஆனால் அதால ஒருபிரச்சினையும் வந்திட்டுது. நான் சொன்ன செய்வினை திரும்பவும் தன்னில ஏறி விடுமோ என்று நினைக்கத் தொடங்கினார். அதுதான் அடிக்கடி உடுப்பை உதறுகிறார்."

"சைற் எவெக்ற்" என்பது இதுதானோ?" என்றாலும் முதியவர் கோவிந்தனைச் சாப்பிடப்பண்ணியிருப்பதே பெரியவிடயம் தானே? நாங்க எவ்வளவோ கதைச்சு கஷ்ரப்பட்டுச் செய்யவேண்டும் என நினைத்த ஒன்றை சின்னச் செயற்பாட்டால முடிச்சுப் போட்டாரே?

இதுதான் தமிழரின் பாரம்பரிய உளவளத்துணை முறையா?

நூல் கட்டுதல், விபூதி போடுதல் என்பவற்றைத் தமது உளவளத்துணை முறையினில் சேர்த்துக் கொள்ளா விட்டாலும். அவற்றைத் தவறென்று நிராகரிக்கவில்லை. எனவே இந்த முறைகளாலே குணப்படுத்த முடியுமா என முயன்று பார்க்க விரும்பினேன். "அப்ப பெரியவர் மிச்சம் இருக்கிற செய்வினையை நீக்க இன்னும் ஒருக்கா இரண்டுதரம் திருநீறு போட்டிருக்கலாமே?" "எனக்கும் அப்படி ஒரு எண்ணம் வந்தது தான். எண்டாலும் அதை மாத்த பிறகும் என்ன நடக்குமோ எண்டு பயம் வந்திட்டுது. தன்ரை உடுப்பைத்தானே உதறிறார் எண்டு விட்டிட்டன்."

வெளியே போன கோவிந்தன் உள்ளே வருவது தெரிந்தது. அவர் வரும் வழியில் சென்று எதிர் கொண்டேன்.

"நீ..நீங்க ஆர்? எனக்கு உதவி எல்லாம் செய்யிறியள் ?" "ஐயா .......நானும் இஞ்சை கிட்ட இருக்கிறவன் தான் .எனக்கு ஒரே ஒரு பிள்ளை. அதைக் கடல் கொண்டு போட்டுது. அதுதான் மன ஆறுதல் தேடிஇஞ்சை வந்திருக்கிறன். "

"கடவுள் எல்லாருக்கும் ஏன்தான் சோதினையளைக் கொடுக்கிறானோ எண்டு தெரியேல்லை?"

"என்னையா அப்படிச் சலிக்கிறியள். உங்களுக்கும் ஏதேனும் பிரச்சினையோ?'

ஏதேனும் பிரச்சினை இல்லைத்தம்பி எல்லாமே பிரச்சினை தான்"

இப்போது தான் அவர் முகத்தைக் கிட்ட வைத்து நேருக்கு நேராய் பார்க்கிறேன். சூரியனை மேகக்கூட்டங்கள் மறைக்கவும் விலகவும் வானம் இருண்டு ஒளிர்ந்து கொண்டிக்குமே .அது மாதிரி குழப்பமும் தெளிவும் கலக்கும் கண்கள் . அவை எங்கும் நிலை பெறாமல் யாரையும் நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி தரை தழுவுகின்றன.ஞாபக அலைகள் மனப் பாறையில் மோதி மோதித் திரும்பிச்செல்வதான கலங்கல் நிறைந்த முகம் .

"என்ன ஐயா ஒரே சலிப்பாக கதைக்கிறியள்?" "ரண்டு பிள்ளையளையும் கடல் அள்ளிக்கொண்டு போனாச் சலிக்காம என்ன செய்யிறது?" "நீங்க சொன்னது சரிதான் ஐயா கடவுள் எல்லோருக்கும் கஷ்டங்களைத் தான் குடுக்கிறான்"

"ஓம் தம்பி ரவுணுக்குப் போகேக்கை

(46 ஆம் பக்கம்..)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வீரசிவாஜி



ஊர்ஊராகச்சென்று பொது மக்களை விதம் விதமாக ஏமாற்றி பெருந்தொகைப் பணத்தைச் சுருட்டுகிறது ஒரு மோசடிக் கும்பல். அவர்களிடம் ஏமாறும் கதாநாயகன், அந்தக் கும்பலுக்கு எதிராகக் களம் இறங்குவதுதான் வீரசிவாஜி.

புதுச்சேரியில் வாடகைக்கு வாகனம் செலுத்துபவராக இருக்கும் நிராதரவான 'சிவா' என்கிற சிவாஜி (விக்ரம் பிரபு), அங்கே உணவகம் நடத்தும் வினோதினியைத்தனது உடன்பிறவாத அக்காவாக எண்ணிப் பழகுகிறார். வினோதினியின் 12வயது மகள் யாழினியின் மீது பாசத்தைப் பொழிகிறார். அந்தக் குழந்தைக்கு வந்துவிட்ட நோயைக் குணமாக்க வேண்டி சிகிச்சைக்காகப் பணம் திரட்டும் வேளையில் பண மோசடிக் கும்பலிடம் சிக்கிக்கொள்ளும் நாயகன், கூடவே மோசமான விபத்திலும் மாட்டிக்கொள்கிறார். விபத்திலிருந்து மீண்டு, மோசடிக்காரர்களை அவரால் வெல்ல முடிகிறதா? என்பதுதான் கதை.

மோசடிக் கும்பலை மட்டுமே சுற்றி வராமல், சுவாரஸ்யமான கிளைக் கதைகளை குடும்பம், காதல், நகைச்சுவையில் தோய்த்து, குத்தாட்டம் போன்ற அம்சங்களையும் சேர்த்துச் சரியான கலவையில் தந்துவிட முயற்சித்திருக்கிறார் இயக்குநர் கணேஷ் விநாயக். கூடவே நாயகனுக்கு ஏற்படும் திடீர் விபத்தின் மூலம் திரைக்கதையில் விறுவிறுப்பையும் கூட்டுகிறார். ஓரளவுக்குச் செல்லுபடியாகும் அவரது முயற்சி பல இடங்களில் பலவீனமாயுள்ளது. முக்கியமான திருப்பங்கள் எல்லாமே எதிர்பார்க்கக்கூடிய விதத்தில் இருப்பதுதான் காரணம். படத்தின் மிக முக்கியமான திருப்பம் காட்சிப்படுத்தப்பட்ட விதமும் பலவீனமாக இருக்கிறது. நகைச்சுவை நண்பர்களாக வரும் சுரேஷ் (யோகிபாபு), ரமேஷ் (ரோபோ சங்கர்) ஜோடியின் நகைச்சுவையில் இடம்பெறும் பெரும்பாலான சிரிப்பு வசனங்களை மனம்விட்டு ரசிக்கலாம். ஆனால் அவர்களைப் பாலியல் தொழில் தரகர்களாகச் சித்திரித்த விதம் குடும்பப் பார்வையாளர்களுக்கு ஏற்றது அல்ல. ஜோன் விஜய், மொட்டை ராஜேந்திரன் ஆகியோரின் நகைச் சுவை கலந்த மிகையான வில்லத்தனம் வழக்கமான ஒன்றாகவே இருக்கிறது.

ஞானகிரி – சசிபாலா இணைந்து எழுதியிருக்கும் வசனங்கள் படத்துக்குப் பலம். நம்பியவர்களை ஏமாற்றுவது குறித்து மொட்டை ராஜேந்திரனுக்கு 'வருத்தப்படாத. நம்புறவங்களை மட்டும்தான் நாம ஏமாத்த முடியும்' என்று ஜோன் விஜய் கொடுக்கும் சாதாரணமான பதில் ஓர் உதாரணம்.

பொலிஸ் அதிகாரியின் மகள் என்பது தெரியாமல் அஞ்சலி (ஷாம்லி) மீது காதல்கொள்வதும், எதிர்பாராத திருப்பத்தால் காதலையே மறப்பதும் சுவாரஸ்யம்.

வாகனச் சாரதிக் கதாபாத்திரம் விக்ரம் பிரபுவுக்கு நன்றாகவே பொருந்தியிருக்கிறது. ஆனால் அதற்கேயுரிய சீருடை அணியாமல் ஜீன்ஸ், ரீ–சேர்ட் என்று நவீன இளைஞராக வலம் வருகிறார். சண்டைக் காட்சிகளில் தூக்கலாகவும் மென்மையாகப் பேசும் காட்சிகளில் இயல்பு மீறாமலும் நடிக்கிறார். சண்டைக் காட்சிகளை வடிவமைத்த திலீப் சுப்பராயன் பாராட்டுக்குரியவர்.

ஷாம்லியின் நாயகி அவதாரம் திரைக்கதையில் உப்புக்குச் சப்பாணியாக இருந்தாலும் அவர் தேவையான அளவுக்கு நடித்துவிடுகிறார். டூயட் பாடல்களில் அவரது நடனமும் நடையும் ரசிக்கும்படி இருக்கின்றன.

யோகிபாபு, ரோபோ சங்கர் காட்சிகளில் நீக்க வேண்டிய பகுதிகளை படத்தொகுப்பாளர் ரூபன் சரிபண்ணவில்லை. காதல் மறதி நாடகமும் தேவைக்கதிகமாக நீளுகிறது. சண்டைக் களத்துக்கான ஒளிப்பதிவைத் தருவதில் சுகுமார் தெளிவாக இருந்திருக்கிறார். இமானின் இசையில் 'தாறுமாறு தக்காளிச் சோறு', 'சொப்பன சுந்தரி' ஆகிய பாடல்களில் மசாலா வாசனை மட்டுமே. பின்னணி இசையோ சுத்த வீண்.

பண மோசடி, கறுப்புப் பணம் என முக்கியமான பிரச்சினையைக் கையில் எடுத்த இயக்குநர், அவற்றுக்குக் காட்சி வடிவம் தருவதில் வெற்றி பெற்றிருக்கிறார். காதலையும் நகைச்சுவையையும் ஓரளவு சரியான வீதத்திலேயே கலந்திருக்கிறார். திரைக்கதையில் நாம் எதிர்பார்க்கும் இடங்களில் ஏமாற்றாமல் வந்து தொலைக்கும் காட்சிகள் தான் படத்தின் பலத்தைக் குறைக்கின்றன. இதைத் தவிர்த்திருந்தால் முழுமையான பொழுதுபோக்குப் படமாக வீரசிவாஜி இருந்திருக்கும்.





# யாழ். மண்ணே வணக்கம்...!

குத்தரிசிச்சோறும், ஒடியல்பிட்டும்
உழுத்தங்கழியும், பாணிப்பினாட்டும்
எள்ளுப்பாகும் பயத்தம்பணியாரம்,
அரியதரம் என்று நாவூறவைக்கும்
நல்லுணவுப்பெட்டகமே !

கறுத்தக்கொழுப்பானும் பலாப்பழமும்
வாழையொடு முந்திரியும்
இன்னும் பல பழங்கள் நினைவினிலே
தேனூற்றும்இனியதிருநாடே !
யாழ். மண்ணே வணக்கம்.

கிட்டிப்புள்ளும் கிளித்தட்டும்
கபடியுடன் கயிறுழுத்தல்
மாட்டுவண்டிச் சவாரியென
மக்கள் மனங்கவர்ந்த
விளையாட்டின் விளைநிலமே
விண்ணோக்கி நின்று விரிந்தாய்
யாழ். மண்ணே வணக்கம்

வெங்காயம், மிளகாயுடன்
மரவள்ளி, சோளன், கத்தரியும்
இனிக்கின்ற முந்திரியும்
கனிகின்ற கதலிப்பழமும்
விளைந்து நிற்கும் வியன்நிலமே.
செம்மண்பூசி சிவந்தமேனியர்கள்
உலவுகின்ற நன்நாடே
யாழ். மண்ணே வணக்கம்.

காவடி, கோலாட்டம்,
கும்மி, கலைகூத்து, நாடகம்
என விரியும் கலைகளின்வெளியே
இன்னிசை கானங்களும்
சின்னமேளச் செற்றுக்களும்
சீனடி சிலம்படியும்
என இரவுகளை இனிக்கவைத்த என்
இனிய தாய்நாடே.
யாழ். மண்ணே வணக்கம்.

(வளரும்)



-வேலணையூர்-தாஸ்

# பறந்து செல்ல வா



காதலே கைகூடாத விளையாட்டுப் பையனை ஒருசேர இரு பெண்கள் காதலித்தால் என்ன ஆகும்?

நாயகன் லூத்புதின் பாஷா ஒரு விளையாட்டுப் பிள்ளை. சிங்கப்பூரில் அவனுக்கு வேலை கிடைக்கிறது. அங்கு நண்பனின் அறையில் தங்குபவருக்குப் பார்க்கும் பெண்கள் மீதெல்லாம் காதல் பொங்குகிறது. அதுவெல்லாம் செதப்பி விடுகிறது. "உன் முகத்துக்கெல்லாம் காதலா" என்று நண்பர்கள் அங்கலாய்க்கிறார்கள். நண்பர்களை ஏமாற்ற, முகநூலில் கற்பனைக் காதலியை உருவாக்கி உலவ விடுகிறார்.

இடையில் உண்மையிலேயே அவருக்கு ஒரு காதலி கிடைத்துவிடுகிறார். அவளுடனான காதல் சுமுகமாகச்சென்றுகொண்டிருக்கும்போது முகநூலில் தோற்றுவித்த கற்பனைக் காதலி நிஜமாகவே நேரில் வந்து காதலைச் சொல்கிறார். இதை எல்லாம் இரகசியமாகப் படம் பிடித்துத் தொலைக்காட்சியில் காட்சிப்படுத்தத் திட்டமிடுகிறது ஒரு கூட்டம். கற்பனைக் காதலி எப்படி வந்தார்? நிஜக் காதலி என்ன ஆனார்? இதெல்லாம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டதா? இல்லையா? என்பதுதான் மீதிக் கதை.

படம் முழுவதும் இளமைத் துள்ளலும் கலகலப்பும் இருக்கின்றது. திரைக்கதையில் வெவ்வேறு இழைகளைக் கோத்து, அவற்றிடையே சிக்கலான முடிச்சுக்களைப் போட்டுச் சுவை கூட்டியிருக்கிறார் இயக்குநர் தனபால் பத்மநாபன். கற்பனைக் காதலி நாயகனின் வீட்டுக்குள் வந்து அமர்ந்திருப்பது நல்ல திருப்பம். சிங்கப்பூரின் சூழலைப் பயன்படுத்திய விதம், வசனங்கள், அடுத்தடுத்து வரும் திருப்பங்கள் ஆகியவை படத்தின் பலம். ஊகிக்கக்கூடிய காட்சிகளையும் பின்பாதியின் இழுவையையும் தவிர்த்திருக்கலாம்.

சின்னத்திரையின் ரியாலிட்டி காட்சிகள் எந்தளவுக்கு நம் வீடுகளுக்குள்ளும் ஊடுருவத் துடிக்கின்றன என்ற ஆபத்தான விடயத்தைத் தொட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதைக் காட்சிப்படுத்திய விதம் அழுத்தமாக இல்லை.

பார்க்கும் பெண்களிடமெல்லாம் வழிவது, காதலில் சொதப்புவது, வம்பில் மாட்டிக்கொண்டு திணறுவது, அப் பாவித்தனமாகப் பேசுவது என விளையாட்டுப் பிள்ளைக்கான இலட்சணங்களைத் தனது நடிப்பில் கச்சிதமாகக் கொண்டு வந்திருக்கிறார் பாஷா. "பழகுவோம்... பிடித்தால் திருமணம், பிடிக்கவில்லையா... விலகுவோம்" என்று அலட்டிக்கொள்ளாத பெண்ணாகவுள்ளார் ஐஸ்வர்யா ராஜேஷ். காதலிப்பது, கோபித்துக்கொண்டு போவது, திரும்பவும் வந்து காதலிப்பது தவிர அவருக்கு வேறு காட்சியில்லை.

சிங்கப்பூர் வாழ் சீன - தமிழ்ப் பெண்ணாக நரேல் கேங்குக்கு சொல்லிக் கொள்ளும்படியான காட்சிகள் அமைந்திருக்கின்றன. சீனப் பெண்களின் அழகு இயல்பாகவே வசீகரிக்கிறது. கோபத்துடன் நாயகனைப் பின்தொடர்வது, காதல் வசப்படுவது, காதல் கைகூடுமா என்று தவிப்பது, அதிரடியாகச் சண்டை போடுவது என்று மனதில் நிற்கிறார் நரேல் கேங். தனது நகைச்சுவை வசனங்களால் காட்சிகளைத் தாங்கிப் பிடிக்கிறார் சதீஷ்.



அவருக்கு வசமாக வாய்த்திருக்கின்றன பேயோனின் பகிடி வசனங்கள். "வீட்டுல அம்மா, அப்பா சம்பளம் கேட்கிறாங்க" என்றதற்கு, "ஏன்? அவங்களை வேலைக்கு வைச்சிருக்கிறியா?" என்பது போன்ற வசனங்கள் கதையை உற்சாகமாக நகர்த்திச் செல்ல உதவுகின்றன. "உலகம் முழுவதும் அடிவாங்குறதே தமிழனுக்குப் பிழைப்பாப் போச்சு..." என்பதற்கு, "ஆமாம், அதை வேடிக்கை பார்க்கிறதும் தமிழன்தான்" என்பதுபோன்ற யதார்த்தமான வசனங்களும் உண்டு.

பாலாஜியின் வேகமான பேச்சும் நக்கலும் வழக்கம் போலக் கைகொடுத்திருக்கின்றன. ஜோ மல்லூரி, பொன்னம்பலம், கருணாகரன் ஆகியோர் தத்தமது வேலையை ஒழுங்காகச் செய்திருக்கிறார்கள்.

பேயோனின் வசனங்கள், சந்தோஷ் விஜயகுமார் பிரபாகரனின் ஒளிப்பதிவு ஆகியவை படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. சிங்கப்பூரைத் தமிழ்த் திரையுலகில் இதற்கு முன்பு இவ்வளவு அழகாக யாரும் காட்டியதில்லை. ஜோஸ்வா ஸ்ரீதரின் இசை பரவாயில்லை. கலகலப்பும் இளமைத் துள்ளலும் சிங்கப்பூர் வாசனையும் சேர்ந்து படத்தை அதன் குறைகளை மீறி ரசிக்கவைக்கின்றன.

# இதயத்தை அர்ப்பணித்தோம் யேசுபாலா!

வீசுகுளிர் பனிவாடை கொட்ட வானில்
வெள்ளிதோன்ற மாடுறையும் தொழுவ மதனில்
நேசத்தாய் மரிமடியில் குழந்தை யாகி
நள்ளிரவுச் சூரியனாய் உதித்தாய் ஐயா!
நீசருக்குன் தூயஆவி தன்னை அளித்த
நன்றியாலே விழிகளில் நீர் பெருகு தையா!
யேசுபாலா! இதயத்தை அர்ப்பணிக்கும்
எளியோரின் வாழ்வு பூக்க அருளைப் பொழிவாய்!

ஏனப்பா அக்கிரமம் மலிந்த உலகில் அவதரித்தாய்!
நாமறிந்த மூவு லகிற்கும் கோனப்பா நீயென்று தூதர் இசைத்தார்!
குரோதமொடு கொலைப்பழிக்கும் மருந்து கொடுத்த
தேனப்பா உனது மலைப் பொழிவு! நெஞ்சம் துடித்தலறி வருகின்றோம்
உனது பாதம்! ஞானப்பால் வார்த்துநாளும் மண்ணில் அமைதி
நலங்கொழிக்கக் கயவருக்குள் அருளைத் தாராய்!



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இதுவரை நான்கு தடைவைகள் பிரதமர் பதவியை வகித்ததன் மூலமும் ரணில் விக்ரமசிங்க இலங்கை அரசியலில் முக்கியம் பெறுகிறார். சட்டமியற்றும் அதிகாரம் உள்ளிட்ட ஜனாதிபதியின் ஆட்சி அதிகார முறை நீக்கப்பட்டு பிரதமர் தலைமையிலான அமைச்சரவை முக்கியத்துவம் பெறும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறைக்கு இலங்கை மாறவிருக்கிறது. முக்கியமாக மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்குவது தொடர்பான முடிவை அது எடுக்கவிருக்கிறது.

ஆளும் கட்சி, பிரதான எதிர்க்கட்சி இரண்டும் இணைந்து நடத்தும், இலங்கையில் இதுவரை நிகழ்ந்திராத தேசிய அரசுக்கு பிரதமர் ரணில் தலைமை வகிக்கிறார். அதிக உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும் சிறுபான்மை எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை சுதந்திரக் கட்சியும் இதில் அங்கம் வகிக்கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தக் கட்சியைச் சேர்ந்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் இத்தகைய அரசியல் சட்ட மாற்றத்துக்கு ஆதரவு தரும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர். தீவிர தேசியவாதக் கொள்கை கொண்ட சிங்கள அரசியல் சக்திகளதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினதும் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் தேசிய அரசின் தலை வர்கள் இறங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில், கொழும்பில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து உரையாடியமை இங்கே தரப்படுகின்றது.



# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்

*2015 தேர்தலுக்குப் பின்னர், இலங்கையின் அரசியல் சூழல் ஸ்திரத்தன்மை அடைந்திருக்கிறது. உங்கள் வெற்றிக்குப் பிறகு மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். முன்னேற்றமும் பிரச்சினைகளும் நிறைந்த இந்தச் சூழலை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

தேசிய அளவில் கடுமையான கடன் சுமையை எதிர்கொள்ள நேர்ந்ததுடன், இலங்கை மீதான மனித உரிமைகள் மீறல் பிரச்சாரங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. இவை அனைத்துக்கும் தீர்வு காணப்பட்டுவிட்டது. ஓரளவுக்கு உறுதித்தன்மையை உருவாக்கியதுடன், பாதையையும் சீர்திருத்தியிருக்கிறோம். எங்கள் முன் இருப்பது அசாதாரணப் பணி. உலகின் எந்த நாட்டிலுமே இப்படி இரண்டு பெரிய எதிர்க் கட்சிகள் இணைந்து செயல்படவில்லை. ஆனால், இலங்கையில் அது நடந்தேறியிருக்கிறது. பல்வேறு பணிகளை முன்னெடுத்துச் செல்கிறோம். சமரச முயற்சிகளைக் கவனித்துவருகிறோம். வடக்குப் பகுதியில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், பொருளாதாரப் பிரச்சினைகளையும், வளர்ச்சியையும் கவனித்துவருகிறோம். கிராமப்புற ஏழைகளின் நலனில் ஜனாதிபதி அக்கறை செலுத்திவருகிறார். புதிய அரசியல் சட்டம் தொடர்பாக விவாதித்துவருகிறோம். இதுவரை சாதித்தவற்றை வலுப்படுத்துவதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகள் முக்கியமானவை.

*இலங்கையின் பொருளாதாரம் எப்படி இருக்கிறது?*

மேம்பட்டிருக்கிறது. பெரும்நிலை பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி வருகிறோம். இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 10-11% ஆக இருக்கும் வரி வருவாயை அதிகப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறோம். ஆட்சிக் காலம் நிறைவடையும் போது அது 15% ஆக இருக்கும் என்று நம்புகிறோம். கறுப்புப் பணத்தை மீட்பதிலும் ஈடுபட்டிருக்கிறோம். 2020க்குள் பட்ஜெட் பற்றாக்குறையை 4% என்ற அளவுக்குக் குறைக்க விரும்புகிறோம். வரிவசூலைக் கவனிப்பதும், பொது நிதியைச் சிறப்பாக நிர்வகிப்பதும் தற்போது முக்கியமானவை. துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அனுமதித்ததன் மூலம் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தியிருக்கிறோம். கொழும்பில் உள்ள ஜே.ஆர்.ஜெயவர்த்தன மையத்தை நாடாளுமன்ற நிர்வாக மேம்படுத்தலுக்குப் பயன்படுத்துவோம்.

> வடக்குப் பகுதியில் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும், பொருளாதாரப் பிரச்சினைகளையும், வளர்ச்சியையும் கவனித்து வருகிறோம். கிராமப்புற ஏழைகளின் நலனில் ஜனாதிபதி அக்கறை செலுத்திவருகிறார். புதிய அரசியல் சட்டம் தொடர்பாக விவாதித்துவருகிறோம்.



*பொருளாதார அடிப்படையிலான சவால்கள் என்னென்ன?*

ஆண்டின் ஒட்டுமொத்தப்பொருளாதார வளர்ச்சியை 7% அளவுக்கு உயர்த்த வேண்டும். அதிக முதலீடுகளை ஈர்க்க வேண்டும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். சகல தரப்பு மக்களுக்கும் வருமானம் அதிகம் கிடைக்க வழிசெய்துவிட்டுகிராமப்புறப்பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும். நாங்கள் தொடங்கிய விதத்திலேயே இவற்றைச் செய்துமுடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

*வடபகுதிப் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது?*

வடக்குப் பகுதி வளர நீண்ட காலம் தேவைப்படும். அதைப் போர் சிதைத்து விட்டது. வடக்குப் பகுதியில் முதலீட்டை ஊக்குவிக்க சிறப்புச் சலுகைகளை அளித்திருக்கிறோம். இலங்கையின் பிற பகுதிகளைவிட அங்கு சலுகைகள் இரட்டிப்பாக்கப்பட்டிருக்கின்றன.

*தேசிய அரசில் உள்ள இலங்கை சுதந்திரக் கட்சிக்குள் பிளவு காணப்படுகிறது. ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவாக இருக்கும் இலங்கை சுதந்திரக் கட்சியின் பிரிவுக்கும், உங்கள் கட்சிக்கும் இடையிலான உறவை எப்படி உணர்கிறீர்கள்?*

இரு கட்சிகளைக் கொண்ட தேசிய அரசு என்பதையும் தாண்டிய விடயம் இது. பொதுவாக, ஒருவருக்கொருவர் நல்ல புரிதலுடன் நாங்கள் செயல்பட்டுவருகிறோம். எங்களிடம் மேற்பார்வைக் குழுக்கள் இருப்பதன் காரணமாக, மொத்த நாடாளுமன்றத்தையும் ஓர் அரசாக மாற்றியிருக்கிறோம். நிர்வாகக் கொள்கைகள் அமைச்சரவையால் கவனிக்கப்படும் என்றாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதை, மேற்பார்வைக் குழுக்கள் கவனித்துக்கொள்ளும். உண்மையில் இது இரண்டு அடுக்கு அரசாக மாறிக் கொண்டிருக்கிறது.

மேற்பார்வைக் குழுக்கள் முதன்முறையாக, அமெரிக்க ஜனாதிபதி ஆட்சி முறையில் அமைக்கப்பட்டன. பின்னர், ஐரோப்பாவில், ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம் ஆகியவை கொண்டுவரப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரை, சிறிய அளவிலான திட்டங்களுக்கு அமைச்சரவை, அரசுடன் மேற்பார்வைக் குழுக்களும் உண்டு. ஏனெனில், பிரதமரும், அமைச்சரவை உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள். ஆனால், மேற்பார்வைக் குழுக்களில் அமைச்சர்கள் இடம்பெற முடியாது. அது அரசையும், எதிர்க்கட்சியையும் சேர்ந்த பிற உறுப்பினர்களால் நிர்வகிப்படுவது. கட்சிகளின் விகிதாசார அடிப்படையில் அது பிரிக்கப்பட்டிருக் கிறது.

*அப்படியென்றால், விரிவான வழிகளில் வெவ்வேறு கட்சிகள் ஒன்றிணைந்து பணிபுரிவதற்கான வழிமுறைகள் அரசியல் அமைப்பில் உண்டு என்றும், அவை நன்றாகவே செயல்படுகின்றன என்றும் எடுத்துக்கொள்ளலாமா?*

ஆமாம். இந்த வழிமுறைகள் நன்றாகவே செயல்படுகின்றன. மேலும் மேம்படுத்தலாம்.

*மகிந்தவின் ஆதரவாளர்களுக்கும், மைத்திரியின் ஆதரவாளர்களுக்கும் இடையிலான பிளவு அரசின் ஒற்றுமையைப் பாதிக்கிறதா? மகிந்த மீண்டும் தலையெடுப்பார் என்று நினைக்கிறீர்களா?*

என்னைப் பொறுத்தவரை, காலப்போக்கில் தனக்கிருக்கின்ற மீதி ஆதரவையும் மகிந்த இழந்துவிடுவார் என்றே நினைக்கிறேன். ஏனெனில், காலம் மாறி வருகிறது; இளம் வாக்காளர்கள் அவருக்கு ஆதரவாக இல்லை. அவர் மீண்டு வருவார் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், மக்கள் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்த பின்னர் மீண்டும் அதே விடயத்தை நாடமாட்டார்கள். வேறொரு மாற்றம் வேண்டும் என்று மக்கள் நினைத்தாலும், அவர்கள் புதிய விடயங்களைத் தான் தேடுவார்கள்.

ஆனால், அப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. நாட்டின் இரண்டு முக்கிய கட்சிகள் ஒன்றிணைந்து பணிபுரியும் இன்றைய சூழல் அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. பணிகள் நடக்கின்றனவா? என்பதைப் பார்க்கவே அவர்கள் விரும்புகிறார்கள். அதில்தான் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

*குறிப்பிட்ட கால வரையறைக்குள் உங்கள் இலக்குகளை எட்டிவிட முடியும் என்று நினைக்கிறீர்களா?*

ஆறு துணைக் குழுக்களின் அறிக்கைகள் வெளியாகியிருக்கின்றன. தற்போது நாட்டின் அரசமைப்பின் தன்மை, மதம் ஆகியவற்றுடன் நிர்வாகம், நாடாளுமன்றம், நீதி அதிகாரம் செயல்படும் விதம் ஆகிய முக்கியமான விடயங்களை, வழிகாட்டும் குழு கவனிக்க வேண்டியிருக்கிறது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்கும் விடயம்... இவையெல்லாம் வழிகாட்டும் குழுக்கள் கையாளும் முக்கிய விடயங்கள். ஆறு துணைக் குழுக்களின் அறிக்கைகள் மீதான விவாதம் 2017 ஜனவரி முதல் வாரத்தில் முடிவுற்ற பின்னர், வழிகாட்டும் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்திடம் தாக்கல் செய்வோம். அதன் பின்னர், அரசியல் சட்டத்தின் தன்மை தொடர்பான உண்மையான விவா தம் தொடங்கும். அது நாடாளுமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட வேண்டும். இறுதியாக வாக்கெடுப்பு நடத்தப்படும்.

*இந்தக் காரியங்கள் விரைந்து நடக்குமா? இதற்கு, நாடாளுமன்றத்தில் போதுமான ஆதரவு உங்களுக்கு இருக்கிறதா?*

உடனடியாகவே நடக்கும்எங்களுக்குப் போதுமான ஆதரவு இருக்கிறது.

*இந்த மாற்றங்களில் சிலவற்றை எதிர்க்கின்றவர்கள் அல்லது மாற்றுக்கருத்து கொண்டவர்கள் இருப்பது பற்றி...?*

அவர்களில் சிலர் ஆதரவு தருவார்கள் என்று நினைக்கிறேன். இலங்கையில் இதுபோன்ற விடயங்களுக்கு ஆதரவு எப்போதும் அதிகம்.

*ஜனாதிபதிக்கு அதிகபட்ச ஆதிக்கத்தை வழங்கும் நிர்வாக அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?*

> **தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதிகளை விடுவிப்பது, மக்களுக்கு உதவுவது என்று நிறைய பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த விடயத்தில் அரசின் தன்மையில் பெரிய அளவிலான பிரச்சினை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பல பிரச்சினைகளிலிருந்து மீண்டிருக்கிறோம். இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது.**



ஆமாம். அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். பிரதமர் தலைமையிலான அரசு அமைப்புஇயங்குவது எப்படி என்பதற்கு நாங்கள்மூன்றுதெரிவுகளை வழங்குகிறோம்.

முதல் தெரிவு- முழுமையான 'வெஸ்ட்மினிஸ்டர்'முறை.

இரண்டாவது தெரிவு- பிரதமர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுவது. தேர்தலுக்கு முன்னால் அனைத்துக் கட்சிகளும் தங்கள் பிரதமர் வேட்பாளர்களை அறிவிக்க வேண்டும் என்பது.

மூன்றாவது தெரிவு- மூன்று தெரிவுகளிலும், ஜனாதிபதி என்பவர் நிர்வாக அதிகாரம் இல்லாத, நாட்டின் தலைவர்.

*தமிழ்க் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயல்பாடுகள் மிகவும் ஆக்கபூர்வமாக இருக்கின்றன அல்லவா?*

ஆமாம், அவர்கள் செயல்பாடுகள் மிகவும் ஆக்கபூர்வமாக இருக் கின்றன என்று சொல்வேன். அவர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். மிக மிக ஆக்கபூர்வமாக இருக்கிறார்கள். 1987வரை செயல்பட்ட குழுவில் நான் இருந்தேன். ஆனால், எந்தக் கட்சியும் ஒட்டுமொத்தப் பெரும்பான்மை கொண்டிராத சூழலில் புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டுவர முயல்வது இதுதான் முதல்முறை.

*அதிகாரப் பரவல் தொடர்பாக என்ன முடிவெடுப்பீர்கள்? ஏற்கெனவே, 13ஆவது திருத்தச் சட்டம் இருக்கிறது...*

ஒப்பந்தம் தொடர்பாகக் கட்சிகளிடம் கருத்தொற்றுமை ஏற்படும். ஏனெனில், இதுதொடர்பாக மாகாண முதல்வர்களிடம் கலந்து ஆலோசித்திருக்கிறோம். ஆளுநர்களுடன் தனியாகவும் பேசி யிருக்கிறோம். மத்திய மற்றும் மாகாண ஆணையங்களுக்கான இடையிலான உறவு பற்றி தற்காலிக அறிக்கையைத் தயார் செய்ய மூன்று நபர் கொண்ட துணைக் குழுவை அமைத்திருக்கிறோம்.

*தமிழர்களின் கோரிக்கை தொடர்பான பேச்சில் இந்த முறை என்ன வித்தியாசம்?*

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதிகளை விடுவிப்பது, மக்களுக்கு உதவுவது என்று நிறைய பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த விடயத்தில் அரசின் தன்மையில் பெரிய அளவிலான பிரச்சினை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பல பிரச்சினைகளிலிருந்து மீண்டிருக்கிறோம். இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது.

தீர்வு காண்பதில் ஒரு திசையில் திடீரென்று பயணித்துவிடாமல் நிதானிப்பதிலும் இலங்கையின் ஐக்கியத்தைக் காப்பதிலும் நல்ல முடிவெடுப்பது நிச்சயம் ஒரு சவாலாக இருக்கும்...

ஆமாம். அதற்குத் தீர்வு காண்பதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள்.

அதாவது, வெறும் வார்த்தைகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல்?

இல்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்று இந்திய அரசும் தெரிவித்திருக்கிறது. இப்போது, தமிழர்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்ற வேண்டும். அது வெறும் சட்டம் தொடர்பான விடயம் அல்ல.

*எதிர்க்கட்சிகள் தேசியவாத நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன. இந்தியாவில் இந்த அரசியல் போக்கைப் பார்த்திருக்கிறோம். இலங்கையிலும் இப்படி நடக்கிறது. 'நாடு ஆபத்தில் இருக்கிறது' என்றோ, 'பிரிவினை வாத ஆபத்து இருக்கிறது' என்றோ கூக் குரல்கள் அதிகரிக்கலாம். அப்படியான சூழல் நிகழ வாய்ப்பில்லையா?*

நாங்கள் அனைவரும் தேசபக்தர்கள். அனைவரும் தேசியவாதிகள். எனவே, இந்தக் குரலை எழுப்புகிறவர்களை எதிர்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மக்கள் அதை ஏற்கவில்லை என்பதை அவர்கள் உணர்வார்கள். அரசு செயல்படும் தன்மை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் எடுக்கும் முடிவுகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

*போர்க்குற்றங்கள் தொடர்பாக பன்னாடுகள் விடுக்கும் கோரிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனவா? அல்லது மௌனமாக்கப்பட்டுவிட்டனவா?*

ஐ.நா. மனித உரிமை ஆணையம் தீர்மானத்துக்கு நாங்கள் அனுசரணையாக இருந்திருக்கிறோம். அதில் பெரிய அளவிலான பிரச்சினை இருப்பதாக நான் நினைக்கவில்லை.

*அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதில் அதிகபட்ச ஆதரவு அல்லது ஒருமித்த கருத்து ஏற்பட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க விடயம். இது சாத்தியமாகுமா?*

ஒருமித்த கருத்து எட்டப்படுவதற்கு முயற்சிக்கிறோம். வழிகாட்டும் குழுவின் அறிக்கை வெளியான பின்னர் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

மகிந்தவுடனும் மற்றவர்களுடனும் ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறீர்களா?

மகிந்த, சந்திரிகா குமாரதுங்க எல்லோரிடமும் நாம் பேசுகிறோம்.

*பன்னாட்டு உறவில் முக்கியமான மேம்பாடுகள் குறித்து...*

பிரிட்டனில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு, அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டது ஆகியவற்றுக்குப் பின்னர், பன்னாட்டு உறவுகள் தொடர்பான பிரச்சினைகளை முழுமையாகப் பார்க்க வேண்டும். மக்கள் ஒரு செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

எந்த ஒரு நாடும் தான் கொண்டிருக்கும் அதிகாரத்தை விட்டுத்தர விரும்பும் என்று நான் நினைக்கவில்லை.

ஆனால், முன்னுரிமைகளை வரிசைப் படுத்திக்கொள்வது அவசியம் என்று நினைக்கிறேன். ஆசிய நாடுகள் தங்களுக்குள் ஒத்துழைப்பை அதிகரித்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, மேற்கத்தேய நாடுகளுக்குப் பிறகு வளர்ச்சியின் மையம் நாம்தான்.

*பிரெக்ஸிட் இலங்கையைப் பாதித்ததா அல்லது பயன் தந்ததா?*

பிரெக்ஸிட் எங்களுக்குப் பயனளிக்கவில்லை. இதன் மூலம் ஏதேனும் பாதிப்பு இருந்தால் அது எங்கள் ஏற்றுமதியைப் பாதிக்கும். தங்களுக்கு என்ன வேண்டும் எனும் விடயத்தில் பிரிட்டன் தெளிவாக இருக்க வேண்டும். அந்த வெளியேற்றம் இலகுவானதா? கடினமானதா? என்பதில் அவர்கள் இன்னமும் தெளிவாக இல்லை. கொமன்வெல்த் அமைப்புடன் பொருளாதார உறவுகளை மறுநிர்மாணம் செய்ய பிரிட்டன் விரும்பினால், அதற்கான திட்ட ங்கள் அந்தநாட்டுக்கு வேண்டும். ஏனெனில், பிரிட்டனைத் தாண்டி வேறு பல நாடுகள் பங்களித்துவருகின்றன. கொமன்வெல்த் நாடுகள் பல இந்தியப் பெருங் கடலைச் சுற்றி அமைந்திருக்கின்றன.

*ட்ரம்ப் பதவிக்கு வந்தால் நமது பிராந்தியத்துக்கு என்ன கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறீர்கள்?*

அவர் புதிய அணுகுமுறையைக் கொண்டு வருவார். முன்னுரிமைகளை வரிசைப் படுத்திக் கொள்வது நடக்கும். ஆனால், இதுவரை அவர் தெரிவுசெய்திருக்கும் நிர்வாகிகள் நல்ல தெரிவுகள்தான்.

*2015 தேர்தலுக்கு முன்னர் இருந்த நிலை குறிப்பிடத் தக்க வகையில் மாற்றமடைந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?*

நிச்சயமாக் வித்தியாசம் இருக்கிறது. நம்பிக்கை தரும் வகையில்!

■ *தி இந்து*



**கணவன்- கடவுளிட்ட என்ன வேண்டினாய்?**
**மனைவி- ஏழேழு பிறவியிலும் நீங்க தான் என்ர கணவனாக வரவேணுமெண்டு வேண்டினேன். நீங்க?**
**கணவன்- அப்பாடா!!! எனக்கிது ஏழாவது பிறவியா இருக்கவேணும் என்று வேண்டினேன்.**





# நானும் நத்தார்த் தாத்தாவும்

ஜைதயா

மார்கழி மாதத்தில், மாரி மழைக் காலத்தில், பனி தோன்ற ஆரம்பிக்கும் பருவத்தில், மாட்டுத்தொழுவத்தில் மலர்ந்த இயேசு பாலனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக வீடுகளுக்கு வரும் நத்தர்த்தாத்தாவும் அவருடன் கூடவே வந்து பாடி,ஆடி எம்மை மகிழ்வித்துச் சென்றிருந்த விசுவாசிகளும் இன்றும் எனது மனத்திரையில் ஆழப்பதிந்துள்ளனர்.

அது வன்னி மண்ணின் செம்மண் போர்த்திய அழகிய கிராமம். நாம் இடம்பெயர்ந்து சென்று தங்கி வந்த ஊர்களில் ஒன்றான இலுப்பைக்கடவைக் கிராமம் தான் அது. கிறிஸ்தவர்கள் நிறைந்து வாழும் மன்னாரை அயலாகக் கொண்டதாலும், அந்தோனியார் கோவில் ஒன்றை எமது குடியிருப்பின் அருகாமையாகக் கொண்டதாலும், ஒரு தொகுதி மக்களாக அதனைச் சுற்றித் தஞ்சமடைந்திருந்த இந்துக்களாகிய எங்களையும் கிறிஸ்தவ வழிபாடுகள் ஈர்த்திருந்தன. அதற்குரிய பிரதான காரணம் நாட்டின் அசாதாரண அரசியல் சூழலாகும். அவ்வேளை அநாதரவாக அலைந்து திரிந்த மக்களைப் பாகுபாடு, பேதம் பாராமல் கிறிஸ்தவ மதகுருமார்கள் அன்புடன் அரவணைத்துத் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கினார்கள்.

அந்தக் கிராமத்தின் வனப்பு மழைக்காலத்துடன் சற்றே மிகைகொண்டிருக்கும். தண்ணீர் நிரம்பிய குளம், குட்டைகளிலிருந்து தவளைகளின் இரைச்சலும், சில் வண்டுகளின் ரீங்காரமும் வன்னி மண்ணுக்கேயுரிய சலசலப்புடன் ஒலித்துக் கொண்டிருக்கும். பாலனின் பிறப்புக்கு முன்பிருந்தே அருகிலுள்ள ஊர்களிலிருந்து பல குழுக்களும் பாலன் புகழ் பாடி நடைப்பயணம் மேற்கொண்டிருக்கும் நத்தார்த் தாத் தாக்கள் உள்ளிட்ட ஆடிப்பாடிகள் ஒவ்வோரு வீடுகளுக்கும் வாசம் செய்வர்.பாலன் பிறப்பின் பின் னரான அடுத்தடுத்த நாள்களிலும் ஒன்றிரண்டு நத்தார்த்தாத்தாக்கள் வந்து சென்றுகொண் டிருப் பார்கள். அந்தச் சிறுவயதுக்காலத்தில் பாடசாலை விடுமுறையும் கிடைத்துவிடுவதால் பாலன் பிறந் ததைக் கொண்டாடுவதற்காக எமது வீட்டுக்கு வருகைதரும் நத்தார்த் தாத்தாக்கள், எமது வீட்டில் ஆடிப்பாடி முடித்ததும். அயல் வீடுகளுக்கும் சென்று ஆடிப்பாடுவர். அவ்வேளை அவர்களுடன் கூடவே சென்று குதுகலித்துக்கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

மாலை நேரங்களும் அதைஒட்டி நகரும் இருட்டிய சில நாழிகைகளிலையும் வருகை தரும் நத்தார்த் தாத்தாக்கள், வண்ணமயமான பலூன்களையும் விதம் விதமான வண்ண ஆடைகளையும் அணிந்தவாறு. இனிப்புப் பண்டங்கள் பலவற்றை எமக்குத் தந்து பாலன் பிறப்பின் மகிழ்ச்சியைக் கொண்டாடிச் செல்வர். 'இயேசு பாலனே... சின்னப் பாலனே...நீர் பிறந்த காரணமென்ன...? தேவதூதர்கள்...' என்றவாறே, பாலன் பிறப்பின் மகத்துவங்களையும் தத்துவங்களையும் போதிக்கும் பலவகையான பாடல்களுடன் எனது வீட்டுக்கு வருகை தந்த அவர்களுடன் அயல் வீடுகள் பலவற்றுக்கும் ஆடிப்பாடியவாறே நானும் பயணித்து அவர்களுடன் இணைந்து பாலன் பிறப்பைக் கொண்டாடி ஆடிப்பாடி மகிழ்ந்த அந்தத் தருணங்களும் அழகிய நினைவுகளும் நினைக்குந்தோறும் இனிப்பவையே.





# விழிகள் கழுவியநீர் இன்னும்- வற்றவில்லை!

அழுதாளே கொடுஞ்சுனாமி அரக்கன் பிடியில்
அவலமுற்ற மண்மாதா அன்றோர் நாளில்!
விழுதொடிந்து முறிந்ததொரு ஆல மரம்போல்
வாடியுதிர்ந்த உறவுகளின் கணக்கு என்ன?
தொழுதாலும் கதறினாலும் விடுமோ பொங்கித்
துரத்தியெம்மைக்கூறுபோட்ட கொடூரம்! விழிகள்
கழுவியநீர் வற்றவில்லை இன்னும்! ஆறாக்
காயத்திற்குக் காலந்தான் மருந்து தடவும்!

கொல்லுகிறேன் பாரென்று குதித்து எழுந்து
கொத்திமனுப் பூச்சிகளை ஏப்ப மிட்டாய்!
சொல்லுதற்கோ தமிழினிலே வார்த்தை இல்லை!
சங்கார நடனத்தை ஆடிவிட்டாய்!
வெல்லத்தான் கூடுமோவுன் ஊழிப்போரை!
வெறிக்கூத்தின் உச்சங்கள்தொட்டு முடித்த
அல்லல்கள் பட்டதெல்லாம் போதும்! இனிமேல்
அம்மம்மா! வேண்டாமிக் கோர ஆட்டம்!

*கவிஞர் மு.சிங்கராயர்*





# ஐரோப்பாவில் தொடரும் அதிர்ச்சிகள்

அக்பர்

மேலைத்தேய நாடுகள் என்றழைக்கப்படும் ஐரோப்பாக் கண்ட நாடுகள் அபிவிருத்தியடைந்த வளர்முக நாடுகளாகும். முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் பங்கு வகித்ததன் பின்னர் உள்நாட்டுப்போர்கள் உள்ளிட்ட எந்தவொரு போர்களும் உலகின் ஏனைய நாடுகளைவிட இங்கு குறைந்தே காணப்படுகின்றன. மாறாகப் பொருளாதாரம், அபிருத்தி, உறுதித்தன்மையுடைய அரசியல் போன்றவற்றில் அதிக கவனம்கொண்டு நல்லதொரு வளர்ச்சியை நோக்கி நகர்ந்தபடியுள்ளன ஐரோப்பியர்களின் தேசங்கள். இதை ஒத்த அபிவிருத்தி நிலையிலுள்ள அமெரிக்காவில், மக்களிடத்தேயுள்ள ஆயுத கலாசாரம் ஏற்படுத்திவிட்டிருந்த பிரச்சினைகளைப் போல தற்போது ஐரோப்பாவிலும் ஒருவகையான பதற்றச் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இது, கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதியன்று ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸின் நீஸ் நகரில் 'பாஸ்டில்' நாள் கொண்டாட்டத்தையொட்டித் திரண்டிருந்த மக்கள் மீது பாரவூர்தி ஒன்றை வேகமாகச் செலுத்திக் கொன்ற தாக்குதல் சம்பவத்துடன் ஆரம்பமாகியிருக்கும் ஒன்று என்று ஊகிக்க முடிகின்றது.

பிரான்ஸின் நீஸ் நகரின் புரோமனாடு டெசு ஆங்கிலேசு வீதியில் நின்றிருந்த மக்கள்கூட்டத்தின்மீது பாரவூர்தி ஒன்றை மிக வேகமாகச் செலுத்தி அவர்களை முட்டிமோதியதாலும் சம நேரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாலும் 84 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர். தாக்குதல் நடத்தியவர் தனி ஒருநபர் என்றும் அந்தப் பாரவூர்தி கிட்டத்தட்ட இரண்டு கி.மீற்றர்கள் (1.25 மைல்கள்) வரையில் வேகமாகச் சென்றபடியே மக்கள் கூட்டத்தை மோதிச் சென்றிருந்தது என்பதுவும் நாம் அனைவரும் அறிந்த பழைய செய்திகளாகிவிட்ட தருணத்தில், மீண்டும் அதேபோன்றதொரு சம்பவமும் அமெரிக்காவில் அடிக்கடி இடம்பெறுகின்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலை போன்றதொரு சம்பவமும் நிகழ்ந்தேறியுள்ளது ஐரோப்பாவில்.

**ஜேர்மனி-பெர்லினில் ட்ரக் மூலம் தாக்குதல்**

பிரான்ஸின் நீஸ் தாக்குதல் ஏற்படுத்தியிருந்த சோகம் கரைந்துபோவதற்கு முன்னர் அதன் அயல்நாடாக அமைந்துள்ள, ஹிட்லரின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஜேர்மனியில் பிரான்ஸின் நீஸ் நகரில் நடத்தப்பட்டது போன்றதான அதே பாணியில், தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமையன்று குர்பிஸ்சேன்டம் வீதியிலுள்ள பிறேய்ற்ஸ்செப்லட்ஸ் என்ற சந்தைப்பகுதியில் களைகட்டியிருந்த நத்தார் தினத்தின் வருகையை ஒட்டிய விற்பனைக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த மக்களைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. மக்கள் நிறைந்திருந்த குறிப்பிட்ட சந்தைக்குள் வேகமாகப் புகுந்த பாரவூர்தி கிட்டத்தட்ட 80மீற்றர்கள் தூரம் வரையிலயே பயணித்திருந்தாலும் 12பேர் வரையில் கொல்லப்பட்டதுடன், ஏராளம் வர்த்தக நிலையங்களைத் தரைமட்டமாக்கியும், ஐம்பது பேரைக் காயப்படுத்துமளவுக்கும் நடந்தேறியுள்ளது. அதன் பின்னர் பிடிக்கப்பட்ட கொலையாளியான சாரதி, பாகிஸ்தான் நாட்டிலிருந்து ஜேர்மனிக்குள் தஞ்சம் புகுந்திருந்த அகதி என்றும் அவர் செலுத்திக் கொல்லப் பயன்பட்ட பாரவூர்தி போலந்திலிருந்து கொண்டுவரப்பட்டது என்றும் அறியப்பட்டது. இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அதற்குப் பொறுப்பேற்றிருந்தது. இதனால் ஜேர்மனி மட்டுமல்ல நத்தார் தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடவிருந்த அனைத்து ஐரோப்பிய நாடுகளும் அச்சத்திலுள்ளன.

**துருக்கியில் துப்பாக்கிச் சூடு**

அரசுக்கு எதிராகக் குரல்கொடுத்துப் பின்னர் ஆயுதம் ஏந்திப் போராடியவர்களான கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்ட நிலையில், சிரியப்போர் அதன் இரண்டாவது பெரிய நகரமான அலப்போவுடன் இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தது. அலப்போவைக் கைப்பற்றியதன் மூலம் அது நிறைவுக்கு வந்ததையடுத்து, இறுதிப்போர் வலயத்துக்குள் அகப்பட்டிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இதனிடையே மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றுவருவதாகக் குற்றம்சுமத்தப்பட்டு வருகின்றது. சிரிய ஜனாதிபதியை எதிர்த்துப் போரிட்டிருந்த கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு சிரிய அரசுக்குப் பெருமளவான இராணுவ உதவிகளை வழங்கியிருந்தது ரஷ்யா. இதனால் நான்கு வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்தும் சிரிய அரசால் கட்டுப்படுத்த முடியாமலிருந்த அந்த நாட்டின் பெரும்பான்மையினத்தவர்களான கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்டனர். அவர்களுட்பட இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் சிரியாவின் அயல் நாடாகவும் அலப்போ நகரின் அண்மையிலும் அமைந்திருக்கும் துருக்கியில், கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான சமகாலக் கலை தொடர்பான ஓவியக் கண்காட்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த ரஷ்யாவின் துருக்கிக்கான தூதுவர் கார்லோவ் அந்த நிகழ்வில் உரையாற்றும்போது பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த அதிகாரியின் ஒரே குறி ரஷ்யத் தூதுவராக மட்டுமே இருந்ததால் இதற்கான பின்னணியில் அரசை எதிர்த்துப் போராடியவர்களை ஒடுக்க உதவிய ரஷ்யா-சிரியா விவகாரம் விளங்குகின்றது.

இந்நிலையில் குறித்த கொலையாளியும் பொலிஸாரால் உடனேயே சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னரான ரஷ்ய ஜனாதிபதியின் கொந்தளிப்பு துருக்கியை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ்வாறாக அதிர்ந்துகொண்டிருக்கும் ஐரோப்பாவில் இனிவரும்காலத்திலாவது அமைதி தோன்றுமா? அல்லது அதன் அமைதி மேலும் குலைக்கப்படுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





## வரலாற்றில் இன்றைய தினம்



1988 - வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு உடனே உரிய அதிகாரங்களை வழங்கப் பிரேமதாச உத்தரவு. இந்தத் தகவலை ஆ.வரதராஜப்பெருமாள் கொழும்பில் வெளியிட்டார்.

1993 - போர்ச் செய்திகளை மக்களுக்கு மறைக்கவே அவசர காலச் சட்ட விதிகள் மீண்டும் நடைமுறைப்படுத்த சுதந்திர வெகுஜனத் தொடர்பு இயக்கம் குற்றச்சாட்டு.

1999 - வடக்கு - கிழக்கு மலையகத்தை இணைத்துப் புதிய அரசியல் குழு செல்லச்சாமி, சந்திரசேகரனுடன், குமார் பொன்னம்பலமும் ஆதரவு.

2005 - மன்னார் கிளைமோர் தாக்குதலையடுத்து தேடுதலின் போது காணாமற்போன நான்கு வயதுக் குழந்தை உட்பட 5 பேர் பேசாலையில் எரித்துக் கொல்லப்பட்டனர்.

### உன்னாலும் சாதிக்க முடியும்!!

அஞ்சாமையில்
சிங்கமாக இரு!
உழைப்பில்
கழுதையாக இரு!
நன்றியில்
நாயாக இரு!
காத்திருப்பில்
கொக்காக இரு!
தூரப் பார்வையில்
கழுகாக இரு!
ஞாபக சக்தியில்
யானையாக இரு!
உன்னாலும்
சாதிக்க முடியும்!!

*ந.யசீதரன்*






ஆர். ருக்ஷிகா
யா/ கார்மல் சிறுவர் பாடசாலை



மாட்டுத் தொழுவத்தில் அல்ல,
மக்கள் மனங்களில் பிறக்கட்டும் பாலன்

# நத்தார்ப் பரிசு



வேலைக்குச் சென்றிருந்த தியாவின் அப்பா மதியபோசனம், வீட்டுக்குத் திரும்பியிருந்தார். அம்மா, வேலைகளில் மூழ்கியிருந்தார். இயேசு கிறிஸ்துவின் படத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் மூழ்கியிருந்தாள் தியா. தியாக் குட்டி, என்னடா கண்ணு யோசிக்கிறாய்? என்றவாறு அவளை முத்தமிட்டு அணைத்தார் அப்பா. அப்பா, உலகத்திலே ஏன் ஏழைகள் பிறக்கிறார்கள்? என்று கேட்டாள் தியா. பாவம் செய்பவர்கள் ஏழைகளாகவும், புண்ணியம் செய்பவர்கள் பணக்காரர்களாகவும் பிறக்கின்றனர். இதெல்லாம் உனக்குப் புரியாது அம்மா என்றார் அப்பா. ஏழைகள் வடிவில் இறைவனைக் காணலாம் என்று எங்கள் வகுப்பு ரீச்சர் கூறினார். அப்போ, கடவுளும் பாவம் செய்தவரா அப்பா? என்றாள் தியா. அத்துடன், 10 ஏழைப் பிள்ளைகளுக்கு நத்தார்ப் பரிசாகப் புத்தாடைகள் வாங்கித் தருமாறும் அவள் கேட்டாள். அவளுடைய கேள்விகள் எதற்குமே பதிலளிக்காது குளிக்கச் சென்றார் அப்பா. இருவாரங்கள் உருண்டுவிட்டன.

இன்று நத்தார்ப் பண்டிகை. தேவாலயம் சென்றிருந்த தியாவும் பெற்றோரும் வீட்டுக்குத் திரும்பினர். பத்து வயதேயான தியாவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. இயேசு கிறிஸ்துவின் படத்தைப் பார்த்தவண்ணம் அழுதுகொண்டிருந்தாள். அவளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த அப்பா, தியாக் குட்டி, வெளியே போய் வருவோமா? என்றார். அவள் மறுத்தாள். ஆனால், வலிந்து அழைத்துச் சென்றார் அப்பா.

கருணை இல்லத்தில் அவர்கள் சென்ற கார் நின்றது. புன்னகையுடன் அவர்களை வரவேற்றார் அந்த இல்லத்தின் பொறுப்பாளர் அருட்சகோதரி மரியா. மூவரும் மண்டபம் நோக்கி நடந்தனர். அங்கே வண்ண வண்ணப் பூக்கள் போன்று சிரித்துக்கொண்டிருந்தனர் சிறுவர்கள். அவர்களுடன் ஒட்டிக்கொண்டாள் தியா. ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம். விழா முடிவில், எமது இல்லத்தில் வதியும் 100 ஏழைக் குழந்தைகளுக்குப் புத்தாடைகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் வழங்கியதுடன் அல்லாது, அவர்களுக்கான மூன்று வேளை ஆகாரத் துக்கும் நிதியுதவி செய்த மதியாபரணம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். கடவுள் அவரை ஆசீர்வதிப்பாராக என்று நன்றியுரை கூறினார் இல்லப் பொறுப்பாளர். அப்பாவை ஆரத்தழுவி முத்தமிட்டாள் தியா. அவளது வட்டக் கரிய விழிகளில் நிரம்பி வழிந்தன மகிழ்ச்சி நீரலைகள்.

*அதிசயா*





மார்கழிக் குளிர்
வாட்டிடவே- இயேசு
பாலன் பிறந்தான்
தொழுவத்திலே

மாந்தர் தம்மை
மீட்டிடவே- இயேசு
பாலன் பிறந்தான்
தொழுவத்திலே

பனிமலர் பாலன்
கதையுரைக்க- இந்த
பாரே மகிழ்ந்தது
நொடியினிலே

இனியவன் முகம்
பார்த்திடவே- அந்த
தூதரும் விரைந்தனர்
நொடியினிலே
இறையவன் நடந்த
வழிதனிலே-
நாம்
நிறைவுடன்
சென்று
நலம்
பெறுவோம்

மறையவன்
அனைவர்
மனங்களிலும்-
தினம்
பிறந்திட நன்று
வழிபடுவோம்

*ந.கவிப்பிரியா*

# நூல் அறிமுகம்



எஸ். மல்லிகா



**நூல்- யாழ்ப்பாண நினைவுகள்- பாகம்-02**
**ஆசிரியர்- வேதநாயகம் தபேந்திரன்**
**வெளியீடு- சிவகாமி பதிப்பகம் 'தேன் தமிழ்' கைதடி வடக்கு.**
**விலை- 390 ரூபா**

### பசிய நினைவுகளின் பெட்டகம்

யாழ்ப்பாண மண்ணுக்கே உரித்தான பசிய நினைவுகளின் பெட்டகமாகத் திகழ்கின்றது 'யாழ்ப்பாண நினைவுகள்– பாகம்–02 நூல். எம் மண்ணுக்கே உரித்தான பழக்க வழக்கங்கள், பண்பாட்டு விழுமியங்கள், வாழ்வியல் கோலங்களைத் தன்னகத்தே அழகுறப் பொதிந்து வைத்துள்ளது இந்நூல். இவருடைய யாழ்ப்பாண நினைவுகள்– பாகம்–01 வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. அந்தப் புகழாரம், அடுத்த நூலையும் விரைவில் வெளியிடத் தூண்டியுள்ளது. 'ஹர்த்தால் கால நினைவுகள்' முதல் 'மின்சாரம் இல்லாத கால நினைவுகள்' வரை 19 நினைவுகளைச் சுமந்து, யாழ். மண்ணின் கடந்த காலங்களை மீட்டிப் பார்க்க வைக்கின்றது இந்நூல். நினைவுகள் பொதிந்த அட்டைப் படம், நூலுக்கு இன்னும் கனதி சேர்க்கின்றது. எளிய மொழிநடை, பேசும் படம் என்பன வாசிக்கத் தூண்டுகின்றன. ஒரு அரச உத்தியோகத்தராக இருக்கும் வேதநாயகம் தபேந்திரன், வேலைப்பளுக்களின் மத்தியிலும் எழுத்தின் பால் பெருவேட்கை கொண்டு இயங்குபவர். தேடல்களில், அதிகமதிகம் தன்னைத் தொலைப்பவர். ஈழத்து இலக்கியப் புலத்தில் தனக்கென்றும் ஒரு தடத்தைப் பதித்தவர். அவரது எழுத்துலகம் மேலும் வளர வாழ்த்துக்கள்.



**நூல்- தமிழர் இந்துக்களா?**
**ஆசிரியர்- பசுந்தீவு கோவிந்தன்- B.A.(Hons) Econ**
**வெளியீடு- கோ. சரோஜினிதேவி 6ஆம் வட்டாரம்- வேலணை.**
**விலை- 390 ரூபா**

### ஆராய்ச்சிக்கு வித்திடும் புத்தகம்

ஒரு இனத்தின் அடையாளங்களுள் மதமும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை ஆதாரத்துடன் எடுத்துரைத்து ஆராய்ச்சிக்கு வித்திடுகின்றது– 'தமிழர் இந்துக்களா?' எனும் நூல்.

'தமிழ் மக்கள் இந்துக்கள் அல்லர், அவர்கள் சைவர்கள். இந்து என்றால் கள்வர் என்று பொருள். இந்தச் சொல்லைப் பயன்படுத்தித் தமிழர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்ளக் கூடாது' என்று நூலாசிரியர் கூறுகின்றார். வரலாற்றுடன் ஆத்மீகத்தையும் அழகுற எடுத்தியம்பும் நூலாசிரியர்– எளிய மொழிநடைகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். அதேநேரம் தமிழ் மக்களுடைய முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்று ஆணித்தரமாக உரைத்து அட்டைப் படத்தை சிவலிங்கத் திருவுருவால் அலங்கரித்துள்ளார். பசுந்தீவு கோவிந்தன் எழுத்துத் துறைக்குப் புதியவர் அல்லர். இதற்கு முன்னர் எண்ணற்ற படைப்புக்களைத் தமிழ் உலகுக்கு அளித்த பெருமைக்குரியவர். ஆத்மீகத்தின் பால் அளவற்ற ஈடுபாடு கொண்டு, சமய விழிப்புணர்வுக் கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள் சமைத்து வருபவர். அவரது எழுத்துப் பயணம் சிறக்க வாழ்த்துக்கள்.



**நூல்- புதைமணல் (சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்- ம.பா.மகாலிங்கசிவம்**
**வெளியீடு- கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை.**
**விலை- 200 ரூபா**

### மனித உணர்வுகளின் பொக்கிம்

மரபை உடைத்து, மனித உணர்வுகளை அழகுறப் பேசுகின்றது ம.பா. மகாலிங்கசிவத்தின் 'புதைமணல்' (சிறுகதைத் தொகுப்பு) நூல். ஆசிரியர்– மாணவர் உறவு முதல் சமுதாயப் பிரச்சினைகள் வரை எமது மண்வாசனை கலந்து புனைந்துள்ளார் நூலாசிரியர்.

விசுவாமித்திரன், புகையிரதம் மீண்டும் வரும், புதைமணல், சிக்குன் குனியா, (அ)தர்மம்?, நினைவுக் குமிழிகள், ஏன்? தூதுவன், சாணக்கியம், நீர்க்குமிழி, மூட நாரையும் கீரிப்பிள்ளையும், கானல், அபெயர்ஷேயம் என 13 சிறுகதைகளை இந்த நூல் தன்னுள் புதைத்துள்ளது. அவற்றை மிக எளிமையான மொழிநடையில் பின்னியுள்ளார் ஆசிரியர். புத்தகத்தைத் திறந்ததும் ஒரே மூச்சில் படித்து முடித்துவிடத் தூண்டுகிறது ஆசிரியரின் கற்பனைத் திறன். அதற்கு இறக்கை கட்டியுள்ளது அட்டைப்படம்.

தமிழ்ப் புலமைப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த இவர், கவிதைகள் புனைவதிலும் நன்கு தேர்ந்தவர். அத்துடன், நகைச்சுவைத் தொடர்களும் எழுதியுள்ளார். பேச்சாற்றலிலும் சிறந்து விளங்குகின்றார். அவரது எழுத்துலகம் மலர வாழ்த்துக்கள்.



# என்ன மகன் இவன்?

அராலியூர் நிலா

அன்பு பேரன்பாவது காதலில் தான். இந்தப் பேரன்பினைப் போலொரு மாமருந்தில்லை– வலிமை ஏதுமில்லை. மலையனைய துயர் வந்தாலும் தாங்கும் சக்தி இந்தப் பேரன்புக்கு உண்டு. இத்தகைய பேரன்பினால்– உண்மை அன்பினால் ஆளப்படும் காதலர்கள் மத்தியில் சிறு ஊடல் வந்தாலே அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது. இதில் பால் வேறுபாடு கிடையாது. இத்தகைய பெரும் காதலைச் சுமந்துள்ள தலைவி ஒருத்தியின் நிலையினை நற்றிணை மிக அழகாகச் சொற்சித்திரம் ஆக்கியுள்ளது. காதலால் கலங்கிப்போய் பெண்கள் நிலை குலையும் போது அன்போடு அருகில் வந்து நயமாகப் பேசித் தன் காதலைத் தெரியப்படுத்த வேண்டியது ஆண்களுக்கான சிறந்த பண்பு. நான் பெரும் காதலால் வாடி இருந்தபோது அருகே வந்து இன்மொழிகளை அன்பாகக் கூறி என் வாட்டத்தைப் (தலைவன்) போக்குவான் என்று நினைத்தால் அவன் என்னைக் கண்டுகொள்ளவே இல்லை. சுத்தம் செய்யப்படாத முத்தைப்போல என்னுடைய பெண்மை இவனுடைய கவனிப்பின்மையால் மங்கிக் கிடக்கிறது. நானோ தாங்கிக் கொள்ளும் இயல்பான பெண் தன்மையினால் சகித்துக் கொண்டிருக்கிறேன். அவனுடைய மார்பினால் வருத்தமடைந்து கிடக்கும் என் இயல்பை அறியாமல் இருக்கிறானே– இவன் என்ன மகன்?

நோய்அலைக் கலங்கிய மதன்அழி பொழுதின்
காமஞ்செப்பல் ஆண்மகற்கு அமையும்
யான்என் பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கிக்
கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத்து ஏய்ப்பக் குவிஇணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன்
என்ன மகன்கொல் தோழி தன்வயின்
ஆர்வ முடைய ராகி
மார்புஅணங்கு உறுநரை அறியா தோனே?
(நற்றிணை: 94– இளந்திரையனார் பாடியது)

தலைவன் மீது தலைவி கொண்டுள்ள பேரன்பின் வலியை அவளுடைய காதல் மொழி இவ்வாறு பேசுகிறது. அவனுடைய பேரன்புக்காக அவளுடைய பெண்மை ஏங்குகிறது.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

முத்தமிழே முத்தமிழே
முத்தச் சத்தம் ஒன்று கேட்பதென்ன
முத்தத் தமிழ் வித்தகியே
என்னில் வந்து உன்னைப் பார்ப்பதென்ன...



# வேண்டாமே மணமுறிவு

### மூன்றாம் நபரின் தலையீடு

"முன்பெல்லாம் எப்படி இருந்தோம், இப்பத்தேயப் பிள்ளைகளைப் பார்த்தால், வாழவே பிடிக்கவில்லை" என்று பெரியவர்கள் ஆதங்கப்படுமளவுக்கு அமைந்துவிட்டது நம் இளைய தலைமுறையின் வாழ்வியல் செல்நெறி. திருமணம், மனமுறிவு, அதனைத் தொடர்ந்து மணமுறிவு. இவ்வளவுதான் அவர்கள் வாழ்க்கை என்றாகிவிட்டது.

வீட்டில் இடம்பெறும் சிறிய சண்டைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய முதியவர்கள், முதியோர் இல்லங்களில் முடங்கிக் கிடக்கின்றனர். எஞ்சியிருக்கும் சிலரும் தமது மகள்களுக்கும் மகன்களுக்கும் அறிவுரை கூறாது சுயநலத்தில் சுருங்கிவிட்டனர். இதனால் பிள்ளை களோ மண்ணில் நல்ல வண்ணம் வாழத் தெரியாது தவிக்கின்றனர். அன்றைய தம்பதிகள் கோவில், கொண்டாட்டம் என்று குதூகலமாக வாழ்ந்தனர். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்தனர். ஆனால், இன்றைய தம்பதியரை ஆடம்பரம் துரத்துகின்றது, இயந்திரம் மிரட்டுகின்றது. ஆற அமரப் பேசிய முகமறிந்த நட்புக்கள் காணாமல் போய்விட, முகமறியாத முகநூல் நண்பர்கள்- மூன்றாம் மனிதர்கள் அவர்கள் வாழ்வை அதிகம் ஆக்கிரமிக்கின்றனர்.

அயோக்கியர்களையும் நண்பர்கள் என்று காண்பிப்பது தான் முகநூலின் அடிப்படைச் செயன்முறை. அதிலிருந்து அறுவடையாகும் வருமானத்தை வங்கியில் குவித்துக் கொள்ளும் அது, இதனால் பலியாகும் தம்பதியர் மற்றும் மனிதர்கள் வாழ்க்கைக்குப் பொறுப்பேற்காது. நட்பை வளர்ப்பதற்கு வெள்ளைக்காரன் கண்டுபிடித்ததை, உறவை முறிக்கப் பயன்படுத்துகின்றனர் நம்மவர்கள். நட்பு எனும் பெயரில் முகநூல் பரிசளித்த ஒரு மூன்றாம் மனிதனால், தன் அருமை மனைவி மற்றும் பிள்ளைகளைப் பிரிந்திருக்கிறான் அரவிந்தன்.

'ஒரு நல்ல மனிதனின் வாழ்க்கையில் சிறந்த பகுதி- அவனது சிறிய, குறிப் பில்லாத, நினைவில் கொள்ளாத இனிமையும் அன்புமான செயற்பாடுகள்தான்' என்று வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் கூறியுள்ளார். ஞாபகங்களை மீதம் வைத்து, அந்த இரண்டையும் அவன் அள்ளிச் சென்றுவிட்டான் அரவிந்தன் வாழ்விலிருந்து.

(தொடரும்)



## தடைகளைத் தாண்டி...

கால வெளியதனில் வாழ்வுதனைக் கரைக்காதே
கவலைகள் தீராதென்று வீண்பேச்சு உரைக்காதே
கோல நிலவுதனை வெறுங்கைகள் மறைக்காதே
கொள்கையதில் உறுதியெடு வேகத்தைக் குறைக்காதே

முயற்சியே மூலதனம் இடைவிடாது முன்னேறு
முயன்று இங்கு தோற்றவர் யார்? முடிந்தால் நீ கூறு
அயர்சி கொண்டு கிடந்தால் உனக்கேது நிதம் சோறு
அவற்றையெல்லாம் துடைத்து எறி பெருகட்டும் பலம் நூறு

நம்பிக்கை கொண்டு நீயும் தீர்க்கமாய் முடிவெடுப்பாய்
நானிலத்தில் குழிபறிக்கும் துட்டருக்கு அடி கொடுப்பாய்
வெம்பியே துவளாது கரைசேர்க்கும் ஒரு துடுப்பாய்
வெற்றி பெற்று வாழ்வில் புகழ்மாலைதான் தொடுப்பாய்

சாணேற முழம் சறுக்கும் சலிப்படைந்து போகாதே
சாதிக்கப் பிறந்தவன் நீ மனம் புழுங்கி வேகாதே
வீணான வார்த்தையரை உன் வாழ்வில் விலக்கிவிடு
வீறு கொண்டு எழுந்திங்கு மன அழுக்கைத் துலக்கிவிடு

தடைகளைத் தாண்டி வெற்றி நடை போடுவாய்
தளர்வு வரும் போதெல்லாம் ஊக்கமதை நாடுவாய்
உடைத்தெறிந்து தடைக்கல்லைப் படிக்கல்லாய் மாற்றுவாய்
உண்மையை உணர்ந்து நின்று மனவிளக்கை ஏற்றுவாய்

தி.சாந்தகுமார்
யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி.

## காதல்



பழங்காலக் கோவிலைப் போல
பாழடைந்த கனவுகளுக்குள்
கற்பூரமேற்றுவது காதல்....!

விரல்களில்லாதவனையும்
கவிதை வடிக்கத் தூண்டுவது காதல்....!

அந்த தங்க கண்கள் தரிசிக்கையில்
அங்கங்களின் ரோமங்கள்
எழுந்து நிமிர்ந்தும் குளிர்ந்து விழுந்து
சிலிர்க்கச் செய்வது காதல்....!

தரிசாய் கிடக்கும்
வறண்ட வாலிபத்தில்
துளசிச் செடிகளைத்
துளிர்க்கச் செய்வது காதல்....!

காதல்....
இளமை சுமக்கும் பூ பொதி - மூட்டை
விழித் துளிகளின் பிரதி
விம்பமாய் கதிர்களாய்...
வாலிபத்துக்குள் வந்துவிடும் வானவில்



# கிறிஸ்மஸ் சமையல்

## கருப்பட்டி முட்டை புடிங்



**தேவையானவை:**

கருப்பட்டி - 100 கிராம்
தண்ணீர் - 5 மேசைக்கரண்டி
முட்டை - 2 (90 -100 கிராம் இருக்க வேண்டும்)
வெனிலா எசென்ஸ் - ஒரு தேக்கரண்டி
வெண்ணெய்/எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை:

கருப்பட்டியை நன்றாகப் பொடித்துத் தூளாக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து பொடித்த கருப்பட்டி, 5 மேசைக்கரண்டி தண்ணீர் சேர்த்துக் கரைக்கவும். அதிக நேரம் அடுப்பில் வைக்க வேண்டாம். கரைந்ததும் வடிகட்டி ஆற விடவும். முட்டையை லேசாக அடித்து (நுரை வரும்வரை அடிக்கக் கூடாது), ஆறிய கருப்பட்டிப் பாகு, எசன்ஸ் சேர்த்து இலேசாகக் கலக்கவும். மோல்டு அல்லது டம்ளரில் சிறிதளவு வெண்ணெய் அல்லது எண்ணெய் (வாசனையில்லா எண்ணெய்) தடவி, முட்டை - கருப்பட்டிக் கலவையை அதில் ஊற்றவும். வாய்ப்பகுதியை பாயில் பேப்பரால் மூடவும் (இல்லையென்றால் வேக வைக்கும்போது தண்ணீர் உள்ளே சென்றுவிடும்).

அடுப்பில் ஒரு பான் வைத்து தண்ணீர் சேர்த்து நன்றாகக் கொதித்ததும் இந்த மோல்டு/டம்ப்ளரை தண்ணீரில் மூழ்கிவிடாதபடி உள்ளே வைக்கவும். மூடி போட்டு 30 நிமிடங்கள் வேகவிடவும். வெந்துவிட்டதா என்று பதம் பார்க்க, கத்தியை கலவையின் நடுவே விட்டுப் பார்க்கவும். ஒட்டாமல் வந்தால் வெந்துவிட்டது என்று அர்த்தம். இல்லை என்றால் சிறிது நேரம் வேக விடவும். வெந்ததும் வெளியே எடுத்து கட் செய்து பரிமாறவும். ஜெலிபோல இருக்கும் இந்த புடிங்..

## ஸ்பைஸ்டு குக்கீஸ்



**தேவையானவை:**

மைதா மாவு - 50 கிராம்
உப்பில்லாத வெண்ணெய் - 20 கிராம்
பொடித்த சர்க்கரை - 3 டேபிள் ஸ்பூன்
ஏலக்காய்த்தூள் - ஒரு சிட்டிகை
கிராம்புத்தூள் - 2 சிட்டிகை
பட்டைத்தூள் - ஒரு சிட்டிகை
உப்பு - ஒரு சிட்டிகை
பட்டர் பேப்பர் - தேவையான அளவு

**செய்முறை:**

வெண்ணெயை குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுத்ததும் பயன்படுத்தாமல், நன்கு நெகிழவிடவும். அந்த வெண்ணெயுடன் மைதா மாவு, உப்பு, பொடித்த சர்க்கரை, ஏலக்காய்த்தூள், கிராம்புத்தூள், பட்டைத்தூள் சேர்த்து நன்றாகக் கிளறிப் பிசையவும். சப்பாத்தி மாவு பதத்தில் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் சிறிது பால் தெளித்துப் பிசையலாம். பிசைந்த மாவை மெல்லிசாக சப்பாத்தி உருட்டுவது போல் உருட்டி அரை இஞ்ச் தடிமனில் சப்பாத்திபோலத் தேய்த்து, அதில் விரும்பிய வடிவங்களில் கட் செய்யவும். ஒரு தட்டில் பட்டர் பேப்பர் விரித்து அதன் மேல் கட் செய்த வடிவங்களை அடுக்கி30நிமிடங்கள் குளிர்சாதனப்பெட்டியில் ப்ரீஹீட் வைத்து எடுக்கவும்.

அவனை 10 நிமிடங்கள் 180 டிகிரி செல்சியஸில் ப்ரீஹீட் செய்யவும். பேக்கிங் ட்ரே மீது பட்டர் பேப்பர் விரித்து, அதன் மேல் குளிரவைத்து எடுத்த குக்கீஸ்களை வைத்து, 8 நிமிடங்கள் நடு ரேக்கில் வைத்து பேக் செய்யவும். ஓரங்கள் லேசாக பிரவுன் ஆனால் போதும். சீக்கிரம் வெந்துவிடும். அவனில் இருந்து எடுத்து குக்கீஸை ஆறவைக்கவும். ஆறியதும் காற்றுப்புகாத டப்பாக்களில் சேமித்து வைத்து ருசிக்கவும்.

## பிஸ்தா பாயசம்



**தேவையானவை:**

பிஸ்தா(உப்பில்லாதது) - 100 கிராம்
துருவிய பிஸ்தா - ஒரு தேக்கரண்டி
ரவை - 3 மேசைக்கரண்டி
சர்க்கரை - 10 மேசைக் கரண்டி
பால் - அரை லீற்றர்
கன்டெண்ஸ்ட் மில்க் - 2 மேசைக்கரண்டி
ஏலக்காய்த்தூள் - ஒரு தேக்கரண்டி
பிஸ்தா எசன்ஸ் - அரை தேக்கரண்டி
பச்சை கலர் - 1 சிட்டிகை (விரும்பினால்)
நெய் - ஒரு மேசைக்கரண்டி

**செய்முறை:**

50 கிராம் பிஸ்தாவுடன் சிறிது பால் சேர்த்து விழுதாக அரைக்கவும். மீதமுள்ள பிஸ்தாவை சிறுதுண்டுகளாக நறுக்கவும்.
அடுப்பில் சட்டியை வைத்து நெய் சேர்த்து, நறுக்கிய பிஸ்தாவைச் சேர்த்து வதக்கவும்(லேசாக வறுத்தால் போதும்). இதில் ரவையைச் சேர்த்து 30 வினாடிகள் வதக்கவும். பின்னர் பால், அரைத்து வைத்துள்ள பாதாம் பேஸ்ட் சேர்த்துக் கிளறவும்.
சர்க்கரை சேர்த்து, ரவை நன்றாக வேகும்வரை மிதமான தீயில் வேக விடவும்.
வெந்ததும் கன்டெண்ஸ்ட் பால், ஏலக்காய்த்தூள் சேர்த்துக் கிளறவும். பாயசம் கெட்டியானதும் எசன்ஸ், கலர் சேர்த்து இறக்கவும். நறுக்கிய பிஸ்தா தூவிப் பரிமாறவும்.

## காலை உணவைத் தவிர்ப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்



# இந்த வாரம்

## 25.12.2016 முதல் 31.12.2016 வரை உங்களுக்கு எப்படி?

### மேடம்

புதன், கேது, சந்திரனால் நன்மை உண்டு. பிறர் மனமறிந்து பழகுவீர்கள். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்கள் தங்கள் விருப்பம் நிறைவேற பிடிவாதம் செய்வர். சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியுடன் கருத்து வேறுபாடு வரலாம். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி அளவுடன் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு திண்டாடலாம். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

### இடபம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். மனதில் நம்பிக்கை வளரும். பணிகளை உற்சாகத்துடன் நிறைவேற்றுவீர்கள். தம்பி, தங்கை அன்பு கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேறுவர். உடல்நிலை நன்றாக இருக்கும். விவகாரங்களில் நன்மை பெற சமரசப்பேச்சு உதவும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் அதிக உழைப்பால் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் சுமாரான சலுகை பெறுவர். பெண்களுக்கு தேவையற்ற செலவு ஏற்படலாம். மாணவர்கள் சுமாராகப் படிப்பர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து தரத் தேர்ச்சி பெறுவர்.

### மிதுனம்

சுக்கிரன், சனி, புதன், ராகு அதிக நன்மை தருவர். திட்டங்கள் தடையின்றி நிறைவேறும். வாழ்க்கை நடைமுறை நல்ல முறையில் இருக்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்களுக்கு வேலைப் பளு வெகுவாகக் குறையும். பெண்கள் ஆன்மிக சுற்றுலா செல்வர். மாணவர்களுக்கு நண்பர்களின் உதவி கிடைக் கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.

### கடகம்

சூரியன், சந்திரன் நற்பலன் தருவர். மனதின் மகிழ்ச்சியை பாதுகாக்க வேண்டும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். தாயின் அன்பு, ஆசி ஊக்கம் தரும். பயணங்களால் அதிக பலன் இராது. புத்திரர்களிடம் இனிய அணுகுமுறை பின்பற்றவும். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலைப் பளு கூடினாலும், சலுகையும் கிடைக்கும். பெண்கள் அடுத்தவர் விவகாரத்தில் தலையிட்டால், பிரச்சினை தான் மிஞ்சும். மாணவர்கள் சுமாராகப் படிப்பர்.

### சிங்கம்

புதன், குரு அனுகூலமாக உள்ளனர். திட்டங்கள் கடும் முயற்சியின் பேரில் நிறைவேறும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் உங்கள் சொல்படி நடந்து படிப்பு, செயல்திறனில் முன்னேற்றம் காண்பர். உறவினர் உதவி குடும்பத்தில் மகிழ்ச்சி தரும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு வர வேண்டிய சலுகை தாமதமாகும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

### கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், செவ்வாய், கேது அனுகூலமாக உள்ளனர். உறவினர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கும். வீடு, வாகன வகையில் அதிக பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் செயல் திறமையால் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். நண்பருக்கு கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு குறையும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறப்பான தேர்ச்சி பெறுவர்.

### துலாம்

சுக்கிரன், சூரியன், ராகு அளப்பரிய நன்மை தருவர். உங்கள் பேச்சு. செயல் சிறப்பாக அமையும். நண்பர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வீடு, வாகன பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்களால், சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால், குடும்ப நிலை முன்னேறும். குடும்பத் தேவை பெருமளவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் அலுவலகத்தில் கேட்ட கடனுதவி கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

### விருச்சிகம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். தைரியத்துடன் திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள். வீடு; வாகனத்தில் அதிக பாதுகாப்பு அவசியம். புத்திரர்களிடம் இருந்த மனக்குழப்பம் விலகி புத்துணர்வு ஏற்படும். உறவினர்கள் பாசத்துடன் உதவுவர். பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். மனைவியுடன் கருத்து ஒற்றுமை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் இடையூறுகளை சமாளித்து முன்னேறுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்களுக்கு கவனச் சிதறல் ஏற்படலாம். படிப்பே கதியென இருக்கவும்

### தனுசு

சுக்கிரன், செவ்வாய், கேது அதிக நன்மை வழங்குவர். நிலுவைப் பணிகள் நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். புத்திரர்களின் செயல்திறன் சிறப்பாக அமையும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பயணங்கள் பலன் தரும். எதிர்ப்பாளர்களால் ஏற்பட்ட சிரமங்கள் அடியோடு விலகும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனை குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அதிக கவனம் செலுத்த வேண்டும். பணியாளர்களுக்கு சக பணியாளர்களுடன் பிரச்சினை வரலாம். ஒதுங்கி இருக்கவும்.

### மகரம்

சுக்கிரன், குரு, சனீஸ்வரர், புதன் வியத்தகு நற்பலன் தருவர். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். மனதில் உற்சாகம் ஏற்படும். வளர்ச்சிக்கான வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். புத்திரர்கள், உங்கள் சொல்கேட்டு நடந்து கொள்வர். எதிரிகளால் உருவான சிரமம் விலகும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து, சலுகை பெறுவர். பெண்கள் தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்புடன் ஆன்மிகத்திலும் ஆர்வம் கொள்வர்.

### கும்பம்

சூரியன், புதன், சுக்கிரன் அளப்பரிய நன்மை வழங்குவர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் உங்கள் சொல்லை வேதமென மதித்து செயல்படுவர். உடல்நிலை நன்றாக இருக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். மனைவியின் பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு பொறுப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். பெண்களுக்கு வீட்டுச்செலவுக்கு போதுமான பணம் இருக்கும்.

### மீனம்

ராகு, குரு, சூரியன், சுக்கிரனால் அதிக நன்மையுண்டு. செயல்களில் மனிதாபிமானம் மிகுந்திருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும்: புத்திரர்களின் மனக்குறையை சரிசெய்வீர்கள். கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். மனைவியின் செயல்கள் பெருமை தேடித்தரும். தொழில், வியாபாரத்தில் ஏற்பட்ட இடையூறு விலகும். பணியாளர்களுக்கு கைநிறைய சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர்களுக்கு உதவுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத் திறன் வளரும். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர்.





# கச்சதீவு அந்தோனியார் ஆலயம்

ஜோதா

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு அருகிலுள்ள ஒரு தீவே கச்சதீவாகும். இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ளது. 1974ம் ஆண்டு வரை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தத் தீவு தொடர்பாக இலங்கை-இந்தியா இடையே யாருக்குச் செந்தம்? என்கின்ற இழுபறி நிலையிருந்தது. அதன் விளைவாக இந்தத் தீவு தொடர்பான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் கச்சதீவு ஒப்பந்தப்படி, இலங்கைக்குச் சொந்தமாக்கப்பட்டது. இந்தத் தீவின் பரப்பளவு 285 ஏக்கர்(1.15 சதுர கிலோ மீற்றராகும்). இந்தத் தீவில் மனிதர்கள் யாரும் தற்போதுவரை நிரந்தரமாக வசிக்கவில்லை. அந்தோனியார் கோவில் ஒன்று மட்டும் இங்கு உள்ளது.

**இனக்கலவரத்தால் இடைநிறுத்தம்**

கச்சதீவில் மீனவர் கள் தஞ்சமடையும் தருணங்களில் உருவாக் கப்பட்டதான அந்தோணி யார் ஆலயம், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அயலிலுள்ள இரு நாட்டு மக்களும் சங்கமிக்கும் தீவாக விளங்கிய கச்சதீவு 1975 ஒப்பந்தத்திற்கு பின் இலங்கைக்குச் சொந்தமானது. ஒப்பந்தத்தின்படி கச்சதீவில் தமிழக மீனவர்கள் தங்கித் திரும்பவும், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழாவில் எப்போதும் போல் கலந்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் இதைச் சுற்றியிருக்கும் கடற்பகுதியில் மீன் பிடிக்க அனுமதி இல்லை. கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானதற்கு பின் கச்சதீவு விழாவிற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்தது. இந்நிலையில் 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து கச்சதீவு விழாவும் நிறுத்தப்பட்டது.

**திருவிழாக்களில் இந்தியத் தமிழர்கள்**

கடந்த 2002இல் மீண்டும் கச்சதீவு விழா யாழ்ப்பாணம் மறைமாவட்ட பங்கு தந்தையர்களால் நடத்தப்பட்டது. 20 வருடங்கள் கழித்து நடந்த விழாவில் தமிழகத்தை சேர்ந்த கிறிஸ்தவர்களும் கலந்திருந்தனர். தொடர்ந்தும் இடம் பெற்ற கச்சதீவு விழாக்களில் ராமேஸ்வரம், பாம்பன் பகுதிகளில் இருந்து அதிகளவில் பக்தர்களும், பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டனர். இதுவரை இரு நாட்டுப் பக்தர்களின் கூட்டுப் பிரார்த்தனையுடன் சிறப்பாக நடந்தேறியது.

ஆனாலும் கடந்த 23ஆம் திகதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட கச்சதீவு அந்தோனியார் கோவிலுக்கு இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பக்தர்களின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி காணப்பட்டது. இலங்கைக்குச் செந்தமானது என்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழகத்திலிருந்து 100பேர் வரையில்தான் திருவிழாக்களில் கலந்து கொள்ள முடியும் என்ற வரைமுறையும் கொண்டுவரப்பட்டது. இதன் காரணத்தாலும், கச்சதீவை இலங்கைக்கு மத்திய அரசு தாரை வார்த்துவிட்டது. என்று குற்றம்சுமத்தும் தமிழக மீனவர்களின் நிலையாலுமே இம்முறை கச்சதீவுக்கு வருகை தந்திருந்த தமிழக மீனவர்களின் தொகை 82பேராகக் குறைந்தது.

எனினும் தமிழக மீனவர்கள், அங்கு ஓய்வெடுக்க, தங்களுடைய மீன்பிடி வலைகளை உலர்த்த உரிமை உண்டு என்ற சரத்துகள் கச்சதீவு ஒப்பந்தத்தில் உண்டு.

**புதிய ஆலயம்**

இன்றைய கிறிஸ்மஸ் தினக் கொண்டாட்டங்களை முன்னேடுப்பதற்காகக் கடந்த 23ஆம்திகதிதிறந்துவைக்கப்பட்ட குறிப்பிட்ட ஆலயத்துக்கு 77இலட்சம் ரூபா செலவாகியுள்ளது. இலங்கைக் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த இதற்கான பணிகள் கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதன்போது தமிழக -இலங்கைக் கிறிஸ்தவர்களிடம் பாகுபாடு காட்டப்படாமல், தமிழக பக்தர்களும் தமது குடும்பத்தருடன் வருகைதந்து வழிபாடுகளில் பங்குபெற வழிசமைக்க வேண்டும் என்று யாழ். மறை மாவட்ட ஆயர் தெரிவித்திருந்தார். மதத்தால் ஒன்றிணைக்கப்பட்ட அயல் நாடுகள் இரண்டும் எதிர்காலங்களில் ஒற்றுமையுடன் கச்சதீவுத் திருவிழாவில் கலந்து கொள்வதே சிறந்ததாகும்.

> இரு நாட்டு மக்களும் சங்கமிக்கும் தீவாக விளங்கிய கச்சதீவு 1975 ஒப்பந்தத்திற்கு பின் இலங்கைக்குச் சொந்தமானது. ஒப்பந்தத்தின்படி கச்சதீவில் தமிழக மீனவர்கள் தங்கித் திரும்பவும், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழாவில் எப்போதும் போல் கலந்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் இதைச் சுற்றியிருக்கும் கடற்பகுதியில் மீன் பிடிக்க அனுமதி இல்லை.





# சிறைப் பிடிக்கப்பட்டிருக்கும் ஆலமரம்



என்.நிவின்

விநோதங்களின் விளைநிலம் பிரபஞ்சம், பிரபஞ்சத்தின் ஓரங்கம்தான் நாம் வாழும் பூமி. இங்கும், விசித்திரங்களுக்கும் விநோதங்களுக்கும் குறைவில்லை. மனிதனின் அனைத்து அறிவியல் ஆய்வுகளும் இன்றுவரை இவற்றைப் படித்துக்கொண்டுதான் இருக்கின்றன. இத்தகைய பூமியில் நிறைந்த விசித்திர சம்பவங்களில் ஒன்றுதான் இது.

பாகிஸ்தானில், பிரித்தானிய அதிகாரி ஒருவரின் உத்தரவால் 118 வருடங்களாக ஒரு ஆலமரம் சிறைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு விசித்திரமான காரணத்தையும் அவர் கற்பித்துள்ளார். தென்னிந்திய நகைச்சுவை நடிகராகத் திகழும் 'வைகைப் புயல்' வடிவேலு ஒரு படத்தில், தன்னுடைய கிணற்றைக் காணவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் அளித் தமைக்கு நேர்மாறாக அமைந்திருக்கிறது இந்த ஆலமரக் கைதுச் சம்பவம்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் இருக்கும் மாவட்டம் லண்டி கோட்டல். இங்குள்ள ஓர் இராணுவ முகாமில்தான் குறித்த ஆலமரம் நூறாண்டுகளுக்கும் மேலாகக் கைதுசெய்யப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. என்ன காரணத்துக்காக இந்த மரத்தைச் சிறைப்பிடித்து வைத்திருக்கின்றனர் என்று விசாரித்தால்... பிரித்தானிய இராணுவ அதிகாரியாகப் பணிபுரிந்து வந்த ஜேம்ஸ் ஸ்குவிட் என்பவர். குடிபோதையில் இருந்த சமயமொன்றில் மேற்படி ஆலமரம் தன்னை நோக்கி நகர்ந்து வந்ததாகவும் இதனால் அச்சமடைந்த அதிகாரி, அந்த மரத்துக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்து அதைக் கைதும் செய்தாரார். அங்கு பிரித்தானிய ஆட்சி முடிந்து பல காலம் ஆகிவிட்ட பின்னரும், அந்த மரம் சங்கிலிகளாலேயே பிணைக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில், அவர்களது ஆணையை மீறி யாரேனும் செயற்பட்டால்- அவர்களுக்கும் இதே (குறித்த ஆலமரத்தின்) தண்டனைதான் என்று அந்த அதிகாரி கண்டித்தும் இருந்தாராம். இதனால், அந்த மரத்தின் அருகே செல்வதற்குக் கூட மக்கள் அஞ்சினராம். அதேநேரம், அந்த மரத்தில் ஏதோ தெய்வீக சக்தி இருப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். இவ்வாறு கதை கதையாய்க் கொட்டிக் கிடக்கிறது அந்த மரத்தின் வேரடிகளில்.

ஆலமரம் கைதுசெய்யப்பட்டிருக்கும் இந்த விசித்திர காரணத்தால், அதனைப் பார்ப்பதற்கு அன்றாடம் சுற்றுலாப் பயணிகள் அங்கு படையெடுக்கின்றனர். அதுமட்டுமன்றி, ஒரு பிரபல இடமாகவும் அது மாறிவிட்டது. எந்த நேரம் பார்த்தாலும் மக்கள் மயமாக இருக்கிறது இந்த ஆலமரப் பிராந்தியம்.

மனிதர்கள் உயிர்வாழ மரங்கள் அவசியம். இவற்றின் வேர் முதல் தலை வரை அத்தனையும் மனிதனுக்குப் பயன்படுகின்றன. இவற்றின் அழகுகள், மனிதனுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றன. நிழலும் பசுமையும் சூழலுக்குக் குளிர்ச்சி அளிக்கின்றன. உலகம் நிலைக்க, இவற்றின் வாழ்வு அவசியம் தேவை. ஆனால், இன்று மரங்களை மனிதர்கள் கண்டபடி அழித்து வருகின்றனர். பண்டைக் காலத்தில், மனிதர்களின் அழிப்பிலிருந்து மரங்களைப் பாதுகாக்க அவற்றின் கீழே கடவுளர்களை வைத்து வழிபட்டனர். இந்த மரநிழல்களில் அநேகமாகக் கிராமியத் தெய்வங்கள்தான் வீற்றிருந்து அருள்பாலித்தன. இதனால், அந்த மரங்களை அனைவரும் பாதுகாத்து வந்தனர். இந்த நம்பிக்கை இன்றளவும் மக்கள் மத்தியில் உள்ளது. அந்தவகையில், சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் இந்த ஆலமரமும் ஒருவகையில் பாதுகாக்கப்பட்டுத்தான் வருகிறது.



அலைகடலோடு
வாழ்ந்த எம்
உறவுகளை
காணலையே
அன்போடு வாழ்ந்த எம்
கண்மணிகள்
இன்றெங்கே!

ஒன்றாய் இருந்த
உறவுகள் எல்லாம்
ஒவ்வொன்றாய்
பிரிந்தமையால்
வேதனை தீயினை
சுமந்து வாழ்வதில்
எத்தனை சாவுகள்

நினைவுகள் எல்லாம்
நெஞ்சத்தில்
நிறைவதால்
கல்லறை எல்லாம்
கண்ணீர் கோலமாய்

*மருதங்கேணியூர்*
*வே.வே.தரணிகா*



# இனி வேம்பின்றி இருக்கும் எனதகம்

என் அகம் கற்களின் குவியலில்
என் வளவின் முகப்பு மறைந்தது.

மண் என்னது தான்.
திட்டமிட்டபடி
போர் துடைத்தழித்த என் அகம்
சத்தமின்றி எழுந்தது

முன்னம் எனதகம்
மண்ணால் ஆனது தான்
முற்றத்து வேம்பின் நிழலில்
சுற்றம் கூடி
நிமிர்ந்திருந்தது
முகப்பில் என் முத்திரையோடு

இனி வேம்பின்றி
எனக்கொரு கல்வீடு இருக்கும்
முகப்பில் அந்நிய முத்திரையோடு....



நா.நவராஜ்



# வெண்பனித் தேசத்தில் தமிழர்கள்

சிற்சபேசன்

பசுபிக் சமுத்திரத்தின் தென் மேற்கில் இரண்டரை லட்சம் சதுரகிலோ மீற்றர் நிலப் பரப்பிலே நாலரை மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டதே நியூசிலாந்தாகும். வெண் முகில்கூட்டங்களின் தேசமென் வர்ணிக்கப்படுகின்ற நியூசிலாந்தின் சனத்தொகையில் எழுபது விழுக்காடு ஐரோப்பியப் பின்புலத்தையும், பதினைந்து விழுக்காடு பூர்வீகக் குடிகளான மவோரி பின்புலத்தையும், பத்து விழுக்காடு ஆசியப் பின்புலத்தையும், ஐந்து விழுக்காடு பசுபிக் பின்புலத்தையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

### இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலிருந்தே இந்தியப் பின்புலத்தைக் கொண்ட மக்கள் குறிப்பிடத்தக்க அளவுகளிலே குடியேறியதாகக் கருதப்படுகின்றது. நியூசிலாந்தில் காணப்பட்ட குடிவரவு வரைமுறைகள் ஐரோப்பியப் பின்புலத்தைக் கொண்டிராதவர்களின் குடிபெயர்வுக்கு அனுகூலமானதாகக் காணப்படவில்லை. 1980களில் நியூசிலாந்து குடிவரவு அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றங்களினால் ஐரோப்பிய பின்புலத்தைக் கொண்டிராதவர்களும் குடிபெயர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்தன. அதனைத் தொடர்ந்து பிஜீத் தீவுகளிலும், இலங்கையிலும் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகளினால் கணிசமான தமிழர் நியூசிலாந்துக்குப் புலம் பெயர்ந்தனர். 1960களிலிருந்து நியூசிலாந்தில் தமிழர் வாழ்கின்றனர். இருந்தபோதிலும் 1980களிலேயே தமிழரின் தொகை குறிப்பிடத்தக்க அளவுகளிலே அதிகரித்தது. அண்மைய கணிப்பீடுகளின் அடிப்படையில் நியூசிலாந்தில் வாழும் தமிழரின் எண்ணிக்கை இருபதினாயிரம் வரையிலானதாகும். அதிலே தமிழ் மொழியை அன்றாடப் பாவனையில் கொண்டிருப்பவர்களின் தொகை கணிசமானதாகக்காணப்படவில்லை.

### நியூசிலாந்தில் தமிழ்

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பிரதேசங்களிலேயிருந்து புலம்பெயர்ந்த முதலாம் தலைமுறையினரே தமிழ் மொழியை அன்றாடப் பாவனையில் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய அடுத்த தலைமுறையினரிடம் தமிழ்மொழி அன்றாடப் பாவனையிலிருப்பதாக திட்டவட்டமாகக் கருத முடியவில்லை. தென்னாபிரிக்கா, பிஜீத்தீவுக்ள் உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர் சில தலைமுறைகளுக்கு முன் னரேயே தமிழ்மொழிப் பாவனையை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இருந்தபோதிலும் மதநம்பிக்கை, கலாசாரப் பற்றுதல், பரதநாட்டியம், பாரம்பரிய உணவு, உடை, சமூக விழாக்கள் என்பவை தமிழ்மொழியைப் பாவனையில் கொண்டிராதவர்களையும், அண்மைக் காலங்களில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து புலம் பெயர்ந்தவர்களையும் தமிழர் என்னும் அடையாளத்துடன் ஒன்றிணைய வழிகோலுகின்றன.

நியூசிலாந்தின் பெருநகரமான ஆக்லாந்திலேயே அதிகளவிலான தமிழர் காணப்படுகின்றனர். அதற்கு அடுத்தபடியாக ஆட்சித் தலைநகரான வெலிங்டனிலே குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தமிழர்கள் காணப்படுகின்றனர். ஆக்லாந்தில் ஐந்து தமிழ் மொழிப் பாடசாலைகளும், வெலிங்டனில் ஒரு தமிழ்மொழிப் பாடசாலையும் செயற்படுகின்றன. வாரமொருதடவை சனி அல்லது ஞாயிறுதினங்களில் தமிழ்மொழிப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. அர்ப்பணிப்புமிக்க தன்னார்வத் தொண்டர்களின் அயராத உழைப்பினாலும் விடாமுயற்சியினாலுமே தமிழ்மொழிப் பாடசாலைகள் செயற்படுகின்றன. தன்னார்வத் தொண்டர்களே ஆசிரியர்களாகச் செயற்படுகின்றனர். பிற புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழ்மொழி பயிற்றுவிப்பு முறைமைகளே பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு, இலங்கை மற்றும் சிங்கப்பூர் நூல்களும் உரிய வகையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

> நியூசிலாந்தின் பெருநகரமான ஆக் லாந்திலேயே அதிகளவிலான தமிழர் காணப்படுகின்றனர். அதற்கு அடுத்தபடியாக ஆட்சித் தலைநகரான வெலிங்டனிலே குறிப்பிடத்தக்க எண் ணிக்கையிலான தமிழர் காணப் படுகின்றனர். ஆக்லாந்தில் ஐந்து தமிழ் மொழிப் பாடசாலைகளும், வெலிங்ட னில் ஒரு தமிழ்மொழிப் பாடசாலையும் செயற்படுகின்றன.

### நியூசிலாந்தில் தமிழர் கலைகள்

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் உள்ளிட்ட நுண்கலைகளை பயிலுவதில் அதிகமானவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். ஒரு வருடத்தில் குறைந்தது இருபத்தைந்து வரையான நுண்கலை அரங்கேற்றங்களேனும் நடைபெறுகின்றன. நுண்கலைகளில் தமிழ்ப் பாடல்களை பயிலுபவர்கள் பெருமளவில் அதனை ஆங்கிலத்தில் எழுதிப் படிக்கும் வழிமுறையே காணப்படுகின்றது.

தமிழ்க் கலாசார நிகழ்வுகளும் ஒன்றுகூடல்களும் கணிசமாகவே நடைபெறுகின்றன. பொதுநிகழ்வாகவோ அல்லது பூப்புனித நீராட்டு, திருமணம் போன்றதொரு தனிப்பட்ட நிகழ்வாகவோ வாரத்தில் குறைந்தது ஒரு தடவையேனும் பல தமிழர்கள் ஒன்றுகூடுகின்ற வாய்ப்புக் காணப்படுகின்றது. அத்தகைய நிகழ்வு தமிழ்மொழியிலான உரையாடல்களுக்குப் பொருத்தமான களமாகவே காணப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு குடும்பங்களிலும் குழந்தைகள் தமிழ் பேசுவதற்கு தயங்குகின்ற சூழ்நிலையில் பெற்றவர்களும் இலகுவாக ஆங்கிலத்திற்கு தாவிக்கொள்வது இயல்பாகவே நடைபெறுகின்றது.

நுண்கலை, கல்ாசார நிகழ்வு, பாரம்பரிய உணவு, உடை என்பவற்றில் இங்கு வாழும் தமிழர்களிடையே காணப்படுகின்ற ஆர்வத்தை தமிழ்மொழியைப் பேசுவதில் காணமுடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மொழிக் கல்வி மிகப்பெரிய சவாலாகவே காணப்படுகின்றது.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## போடர் கட்டிங் ரிசு சாறிகள்






போடர் கட்டிங் ரிசு சாறிகள் அறிமுக மாகியுள்ளன. அடத்தியான எம்பிரோயிடிங் வேலைப்பாடுகளுடன் கற்கள் பதிக்கப்பட்டு இவை உருவாகி யுள்ளன. இவை 5 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## 40 வயதை கடந்து விட்டீர்களா? நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவுகள்!

வாலிப வயது மட்டும்தான் கல்லையும் கரைக்கும். வயதாக வயதாக, பஞ்சை கரைக்கக் கூட சிரமப்படும் நமது உடலியக்கம். அந்தந்த வயதுக்கு ஏற்ப உணவில் மாற்றங்கள் கொண்டுவரவேண்டியது கட்டாயம். ஏனெனில், இளம் வயதில் உங்களுக்கு ஆரோக்கியத்தை அளித்த அதே உணவு உங்கள் ஆரோக்கியத்தை 40 வயதுக்கு மேல் கெடுக்கலாம். உதாரணமாக, வாழைத்தண்டு சிறுநீரகத்திற்கு நல்லது. ஆனால் 50 வயதிற்கு மேல் அதே வாழைத்தண்டு சிறுநீரகத்தின் செயல்பாட்டிற்கு தடையாகி செரிமா னத்தை கெடுக்கும். முக்கியமாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு. எனவே, நாற்பது வயதை கடந்த பிறகு, கட்டாயம் டயட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஏழு உணவுகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.



**பீன்ஸ்**

தினமும் கால் கப் பீன்ஸ் உங்கள் உணவில் சேர்த்து நீங்கள் சாப்பிட்டு வந்தால், இதயத்திற்கு கேடு விளைவிக்கும் தீயக் கொழுப்பான எல்.டி.எல் கொழுப்பானது 5% வரை குறையும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் பீன்ஸ் சாப்பிட்டு வந்தால், குருதி சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க முடியும்.

**ஓட்ஸ்**

ஓட்ஸ் ஒரு சிறந்த காலை உணவு. இதயத்திற்கு வலு சேர்க்கும். 45 - 55 வயதில் ஆண், பெண் இருவருக்கும் இதய பாதிப்புகள் அதிகம் ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, நீங்கள் ஓட்ஸ் உட்கொள்வதால் அந்த பாதிப்பை தவிர்க்கலாம். இது கொழுப்பை குறைக்கவும் பெருமளவு உதவும். பீன்ஸை போலவே, ஓட்ஸ் உணவும் எல்.டி.எல் கொழுப்பு உடலில் அதிகம் சேராமல் தடுக்கிறது.

**அப்பிள்**

தினமொரு அப்பிள் சாப்பிட்டு வந்தால் மருத்துவரை பார்க்கத் தேவையில்லை என்பார்கள். ஒரு பெரிய அப்பிள் இதய நலனை மேம்படுத்துகிறது. கடந்த 2013ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் தினமும் அப்பிள் சாப்பிடுபவர்களுக்கு டைப் 2 நீரிழிவு நோய் மிகவும் குறைவாகத் தான் ஏற்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

**நட்ஸ்**

சிப்ஸ், பிஸ்கட்டுகள் சாப்பிடுவதற்கு பதிலாக நீங்கள் தினமும் நட்ஸ் உணவை உட்கொள்ளலாம். ஸ்பெயின் நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வில் நட்ஸ் உணவை தினமும் சாப்பிட்டு வந்தால், 40 வயதிற்கு மேல் ஏற்படும் மாரடைப்பு, ஸ்ட்ரோக், இதய நோய்களில் இருந்து 28% வரை பின்தங்கி இருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

**பச்சை உணவுகள்**

கீரை, காய்கறிகள் போன்ற பச்சை உணவுகள், முக்கியமாக பசலைக்கீரை உங்கள் மதிய உணவில் சேர்த்துக் கொள்வதால் செரிமான இயக்கம் நன்றாக வேலை செய்யவும், குருதி சுத்தமாக இருக்கவும் உதவுகிறது.

**பெர்ரி**

ப்ளூபெர்ரி, ஸ்ட்ராபெர்ரி போன்ற பெர்ரி உணவுகள் மூளை நன்கு இயங்க உதவுகிறது. மற்றும் குருதி ஓட்டத்தை சீராக்கவும் பெருமளவு உதவுகிறது பெர்ரி

**தயிர்**

தயிரில் உள்ள கல்சியம் மற்றும் நல்ல பக்றீரியா உடலுக்கு பல நன்மைகளை விளைவிக்கின்றன. தயிரில் இருக்கும் உயர்ரக புரதம் 40 வயதை கடக்கும் ஒவ்வொருவரின் உடலுக்கும் மிகவும் தேவையான உணவு.

## தலை அலங்காரம்




1 தலைமுடியை பாதியாகப் பிரித்து பூல் பாண்ட் இட்டுக் கொள்ளவும்.
2 பக்கத்து தலைமுடியை கயிறு போன்று அல்லது சாதாரண பின்னலையோ பின்னிக் கொள்ளவும்.
3 வலது பக்க பின்னலை இடது பக்கத்துக்கும், இடது பக்க பின்னலை வலது பக்கத்திலும் வைத்து கிளிப் செய்க.
4 அலங்காரம் தயார்.

## உருளைக்கிழங்கு குலாப் ஜாமூன்

**தேவையான பொருள்கள்**

உருளைக்கிழங்கு - 1 கப் (வேக வைத்து மசித்தது)
கோதுமை மா - 3 மேசைக்கரண்டி
பேக்கிங் சோடா - 1 சிட்டிகை
எண்ணெய்/நெய் - பொரிக்க தேவையான அளவு

**சிரப்புக்கு :**

சீனி - 2 கப்
நீர் - 1 கப்
ரோஸ் வாட்டர் - சில துளிகள்
குங்குமப் பூ - 1 சிட்டிகை (தேவைப்பட்டால்)



**செய்முறை :**

உருளைக் கிழங்கை வேக வைத்து தோல் உரித்து துருவிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் துருவிய உருளைக்கிழங்கு, கோதுமை மா, பேக்கிங் சோடா சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும். பின்பு அதனை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்
அடி கனமாக இருக்கும் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து சீனியைப் போட்டு நீர் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க வைக்கவும். பின்பு அதனுடன் சில துளிகள் ரோஸ் வோட்டர், குங்குமப்பூ சேர்த்து அதனை தனியே வைக்கவும். சட்டியை அடுப்பில் வைத்து நெய் அல்லது எண்ணெய் ஊற்றி சூடானதும் மிதமான தீயில் வைத்து உருட்டி வைத்துள்ள உருண்டைகளை போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும். பொரித்த உருண்டைகளை சூடான சிரப்பில் போட்டு சில மணிநேரங்கள் ஊற வைத்தபின் பரிமாறவும். சூப்பரான உருளைக்கிழங்கு குலாப் ஜாமூன் தயார்.

## நாளை

மார்கழி-11
திங்கட்கிழமை -26.12.2016
திதி: துவாதசி கா.07.33
நட்சத்திரம்: அனுசம் முழுவதும்
ராகுகாலம்:07.57-09.27 வரை
சுபநேரம்:12.27-01.57 வரை
பிரதோஷ விரதம்

நல்லதம்பி மனைவி வெளியூர் போயிருந்தப்ப அவளோட போட்டோவை சுவரிலை ஒட்டி வைச்சு, அதுக்கு மேல கூரான கத்திகளைக் குறிபார்த்து எறிஞ்சு கிட்டிருந்தான். ஆனால் எந்தக் கத்தியும் அந்த போட்டோ மேல படவேயில்லை! எல்லாமே மிஸ் ஆகி கீழே விழுந்துகிட்டே இருந்துச்சு. அப்போ பார்த்து பொண்டாட்டி போன் பண்ணி, என்னங்க! என்ன பண்றீங்க? ன்னு செல்லமா கேட்டா! நல்லதம்பி சொன்னான் "ஐ மிஸ் யூ டி செல்லம்!"



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 3 | | | | |
| 2 | 9 | 7 | | | | | 4 | |
| 5 | | | 9 | | | 1 | | |
| | | | 3 | | | 2 | | |
| | | | 6 | 9 | 1 | | | |
| | | 9 | | | 4 | | | |
| | | 5 | | | 2 | | | 7 |
| | 8 | | | | | 4 | 9 | 5 |
| | | | | 6 | | 8 | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 2 | 6 | 8 | 9 | 4 | 3 | 1 |
| 9 | 8 | 3 | 1 | 5 | 4 | 7 | 6 | 2 |
| 6 | 4 | 1 | 7 | 3 | 2 | 5 | 8 | 9 |
| 4 | 9 | 6 | 8 | 7 | 3 | 1 | 2 | 5 |
| 1 | 7 | 8 | 2 | 6 | 5 | 9 | 4 | 3 |
| 2 | 3 | 5 | 9 | 4 | 1 | 6 | 7 | 8 |
| 3 | 2 | 4 | 5 | 1 | 6 | 8 | 9 | 7 |
| 8 | 1 | 9 | 4 | 2 | 7 | 3 | 5 | 6 |
| 5 | 6 | 7 | 3 | 9 | 8 | 2 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உனக்கு காது கேட்காதா...?
ஏன் கேட்கிறீங்க.....




'வேகமா' கொண்டு வரச்சொன்னா...
"வேகாம" கொண்டு வந்திருக்கே.

மகன்: பழிக்குப் பழின்னா என்னப்பா...?



அப்பா: நம்ம செஞ்ச பலகாரத்த பக்கத்து வீட்டுக்கு கொடுக்கிறதும் பதிலுக்கு அவங்க பலகாரத்த நமக்கு கொடுக்கிறதும்தான்....



பொலிஸ்: ஏன் ஐயா உன்னோட காரை இரண்டு சில்லில ஓட்டிட்டு வந்தே? குடிச்சிருக்கியா?
வண்டிக்காரன்: ஐயோ குடிக்கல சார்
பொலிஸ்: அப்புறம் ஏன்யா இரண்டு சில்லில கார ஓட்டிட்டு வர்றே?
வண்டிக்காரன்: அது வந்து சார்! எங்கிட்ட டூ வீலர் லைசன்ஸ்தான் இருக்கு அதுதான் இரண்டு சில்லில ஓட்டிட்டு வந்தேன் நான் சட்டத்த மதிக்கிறவன் சார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். உடல் நலம் சீராகும்.

**இடபம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரம் செழிக்க பணி புரிவீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** சிறிய பணி கூட நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். சுமாரான அளவில் வருமானம் கிடைக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உண வைத் தவிர்க்கவும்.

**கடகம்:** செயலில் புதிய உற்சாகம் பிறக்கும். தாமதமான பணி கூட நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரர் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் குடும்பத் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவர்.

**கன்னி:** குடும்ப பிரச்சினையில் விட்டுக் கொடுப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடை யூறு குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க விடா முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை அளிக்கும்.

**தனுசு:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**மகரம்:** முக்கிய செயலை மதிநுட்பத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். புதிய சொத்தும் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெண்கள் ஆடம்பர பொருள் வாங்குவர்.

**கும்பம்:** இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** எதிலும் பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.



நம்பியவர்களை கழுத்தறுப்பதில் துரோகியை விட எதிரிக்கே திறன் அதிகம்....

# தேசிய விருது கிடைக்காதது ஏன்? – ஷாருக்கான்

பொலிவுட்டில் 20 ஆண்டுகளுக்கு மேலாக முன்னணி நடிகராக இருப்பவர் ஷாருக்கான். இத்தனை ஆண்டுகள் சினிமாவில் இருந்தும் ஷாருக்கான், இதுவரை தேசிய விருது வாங்கியதே இல்லை. தான் ஏன் தேசிய விருது வாங்கவில்லை என்பதை சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசினார்.

"ஏன் எதற்காக விருது கிடைக்கவில்லை என்று தெரியவில்லை, விருதை குறிவைத்து நான் நடிப்பது கிடையாது. விருது எல்லாம் ரசிகர்கள், தேர்வுக் குழுவாளர்கள் கையில் இருக்கிறது. விருது கிடைக்காவிட்டாலும் அதைப்பற்றி நான் கவலைப்படுவது கிடையாது. தேசிய விருது கிடைக்காவிட்டாலும், நான் பல விருதுகளை வாங்கியிருக்கிறேன்" என்று கூறினார்.





# டோனிக்கு நெருக்கடி மேலும் அதிகரித்தது

கோக்லியின் ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும் டோனிக்கு நெருக்கடிகள் அதிகரித்துச் செல்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அண்மையில் இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்திய அணி தொடரை 4:0 என்று கைப்பற்றியது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன.

ஜனவரி 15 ஆம் திகதி ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடரை சிறந்த தரநிலையுடன் கோக்லி கைப்பற்றிய காரணத்தால் ஒருநாள் தொடரை டோனி நிச்சயம் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது.

டோனியின் ஓய்வு காலம் நெருங்குகிறது, அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைமைத்துவமும் கோக்லிக்குச் செல்லவேண்டும் என்று சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் தன்னை நிரூபித்து விமர்சனங்களைக் குறைத்துக் கொள்ள டோனி இந்தத் தொடர்களை கைப்பற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இங்கிலாந்தைத் தோற்கடிப்பது இலகுவான விடயமல்ல. அந்த அணி மிகவும் பலமானது. பட்லர், ரூட், கேல்ஸ் போன்ற அதிரடி வீரர்கள் முக்கியமானவர்களாக உள்ளனர். இங்கிலாந்து அணி பலமாக உள்ள அதேநேரம் இந்திய அணி பலவீனமாக மாறப்போகிறது. ஏனெனில் இங்கிலாந்துக்குப் பின்னர் ஆஸ்திரேலியா இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடருக்காக அஸ்வின், ஜடேயா போன்ற முக்கிய வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. சமியும் காயமடைந்துள்ளார். மொத்தத்தில் பந்துவீச்சின் முக்கிய தூண்கள் இல்லாமல் டோனி, இங்கிலாந்தை எதிர்கொள்ளப் போகிறார். இந்திய அணியின் இரண் டாம் நிலை வீரர்களின் பலத்தைப் பரிசோதிக் கவல்ல தொடராகவும் இது அமைந்துள்ளது. டோனி என்னசெய்யப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.



# என்றும் உங்களுடன் இப்படிக்கு ரொனால்டோ

சிரியக் குழந்தைகளுக்கு குறிப்பாக அலெப்போ நகரக் குழந்தைகளுக்கு ஆறுதல் தெரிவிக்கும் வகையில் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார் நட்சத்திர கால்பந்து வீரரான றொனால்டோ. இந்தப் பதிவு சிரியக் குழந்தைகளுக்கானது, நீங்கள் மிகவும் துன்பத்தில் இருக்கிறீர்கள் என்று எங்களுக்கு தெரியும். நான் மிகவும் பிரபலமான வீரர், ஆனால், நீங்கள்தான் உண்மையான ஹீரோ. நீங்கள் உங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டாம். இந்த உலகம் உங்களுடன் உள்ளது. நாங்கள் உங்கள் மீது அக்கறை கொண்டுள்ளோம். நான் உங்களுடன் இருக்கிறேன் என குறித்த காணொலியில் றொனால்டோ பேசியுள்ளார்.

சிரியாவின் அலெப்போ நகர் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையிலான போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமது பெற்றோரை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

# ஆஸி. - பாக். டெஸ்ட்; மிகப்பெரும் பாதுகாப்பு




ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான பாதுகாப்பை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிகரித்தது.

மெல்போர்ண் நகரிலேயே இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. கிறிஸ்மஸ் தினத்துக்கு அடுத்த நாள் நடைபெறும் டெஸ்ட் ஆட்டங்கள் பொக்சிங் டே டெஸ்ட் என்று அழைக்கப்படும். விடுமுறை காலம் என்பதால் ஏராளமான மக்கள் ஆட்டத்தைப் பார்க்க வருவார்கள். இந்த நிலையில் மெல்போர்ண் நகரில் கிறிஸ்மஸ் தினமான இன்று தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒரு பெண் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். இதனால் இன்றை ஆட்டத்துக்கான பாதுகாப்பை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிகரித்துள்ளது. மைதானத்து 50 மீற்றருக்கு முன்னால் வைத்து சோதிக்கப்பட்ட பின்னரேயே ரசிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இன்றைய ஆட்டத்தைப் பார்ப்பதற்கு கிட்டத்தட்ட 60 ஆயிரம் மக்கள் வரலாம் என்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை எதிர்வுகூறியது.




19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கையை வீழ்த்தி இந்திய அணி சம்பியனானது



# வருண பகவானே! கருணை கொள்வாய்!

வருண பகவானே! வருக!! வருக!!
வருவாய் எனநாம் வழிமேல் விழிவைத்தோம்!
கருணை கொள்வாய்! காத்தருள் செய்வாய்!
களத்தினில் நெற்பயிர் கருகுது அப்பனே!
உருகுது உள்ளம் உன்னையே நினைந்து!
உன்றன் அருட்திருப் பார்வை வேண்டும்!
இருகரம் குவிந்திட இரந்து தொழுகிறோம்!
இன்னும் தாமதம் ஏன்தான் ஐயனே?

அமுதினை அளிக்கும் அரும்பணி ஆற்றிட
அமுதுக்கு அமுதாம் மழைநீர் வேண்டும்!
எமது நற் தொழிலுக்கு ஏற்றம் சேர்த்திட
எல்லா உயிர்களும் உணவினைப் பெற்றிட
உமதருங் கருணை இன்றி அமையுமோ?
உகந்ததாம் இந்தத் தருணத்தில் உயர்வாய்
கமமதைக் காத்திட மழையது தருவாய்!
வருண பகவானே வணங்குகிறோம் ஐயனே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்



# பராமரிப்பில் பாகுபாடு

நெய்தனில் தீபத்தின் திரி சுடர்வது போன்று
வையகம் வாழ்வது வரலாறு படைத்த மாந்தராலே
ஐயம் திரிபுற அடைந்த நற்பேறுகள் அனைத்தும்
அவர்கள் ஆற்றிய பணியின் அற்புதக் கோலங்களே!

ஔவையும் பாரதியும் ஆக்கிய கவிதை இன்றும்
அகிலத்தில் வலம் வந்து கல்விச் செல்வங்கள்
கண்களை முத்தமிட பாடவிதானம் மகிமை கொள்வது
அவர்கள் ஆற்றிய பணியின் அற்புதக் கோலங்களே!

ஆணாதிக்கம் அழிந்திட கவி படைத்த பாரதியும்
அரிது அரிது பாடிய கவியினால் ஔவையும்
தரணியில் நாம் வாழ்ந்திட சமத்துவம் படைத்தமை
அவர்கள் ஆற்றிய பணியின் அற்புதக் கோலங்களே!

நல்லதொரு பணிசெய்யும் மாநகர சேவையில்
அல்லல் வர ஔவையை புறந்தள்ளி வர்ணம் தீட்டி
பாரதியை அழகுபடுத்தி பாராமுகம் கொள்வதில்
இவர்கள் ஆற்றிடும் பணியின் அற்புதக் கோலங்களோ?

பாரத பூமிக்கு சுதந்திரம் கிடைத்திட காந்தியுடன்
பாகுபாடு பாராது அவர் வழி நின்றனர் மக்கள்
யாழ் மண்ணுக்கு பெருமை சேர்த்திட்ட புலவரை - மறப்பது
இவர்கள் ஆற்றிடும் பணியின் அற்புதக் கோலங்களோ?

எஸ்.நடராஜா

## சொற்சிலம்பம் - போட்டி இல: 452

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | | 4 |
| | ■ | | ■ | 5 | | ■ | |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | ■ |
| | ■ | 9 | | ■ | 10 | | 11 |
| ■ | 12 | | | | ■ | 13 | |
| 14 | | ■ | | ■ | ■ | ■ | |
| | ■ | 15 | | ■ | 16 | 17 | |
| 18 | | | ■ | 19 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................................................
கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. மலை உச்சி
3. அரண்மனை
5. நட்சத்திரம்
6. மயக்கமூட்டும் பானம்
7. கவர்ந்து கொள்
9. ரணம்
10. ஒத்தாசை
12. அரசர் தலையில் இருப்பது
13. பகைவன்
14. பசுவில் இருந்து (பால்) எடு
15. உதயவேளை
16. அறைகூவல்
18. சாதனை படைத்தோருக்கு வழங்கப்படுவது
19. விருந்தாளி

### மேலிருந்து கீழ்

1. ஒரு ராசி
2. துப்பாக்கியில் இருந்து வெளிப்படுவது
3. வீட்டு வளர்ப்புப் பிராணி ஒன்று
4. சாரத்துக்கு இந்தியாவில் வழங்கும் பெயர்
5. கிருஷ்ணன் திருடித் தின்ற வெண்ணெய் இதில் இருந்ததாகக் கூறுவர்
7. களஞ்சியம்
8. கணவனை இழந்தவள்
9. நுழை
11. பிளவு
12. ஞாபகத்திலிருந்து அகற்று
14. உபகரணம்
15. கேட்பதற்கு உதவும் அவயவம்
16. சூழ்ச்சி
17. முறைப்பாட்டுக்காரன்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 450 இற்கான
சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) திருவாசகம் (6) திகில் (7) சதி (9) கவடு (10) யாத்திரை (11) தருணம் (12) புல் (13) மது (15) மரு (17) முகம் (18) காவாளி (20) அரபு (21) மாயம்

### மேலிருந்து கீழ்

(1) தியாகம் (2) வாதிடுதல் (3) சகி (4) கல்யாணம் (5) கதிரை (7) சதி (12) புருவம் (13) மகரம் (14) தும்பு (15) மகான் (16) எளிய

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.452
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(04.01.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபால்ட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 450 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**இ.பத்மலிங்கம்,**
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

**2 ஆம் பரிசு**
**செல்வி ச.அனுஷ்கா,**
மீன பவனம், நெல்லியடி
கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
**போ.கோபிசாளினி,**
இல.82/4 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**யசீலன் ரேணுகா,**
உடையா வளவு, கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

**5 ஆம் பரிசு**
**அ.அருளரசன்,**
இல.16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

**சி.இராஜரத்தினம்,**
பூம்பொழில், திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

**ந.பாலகுமார்,**
சிவன்கோவில் வீதி, காரைநகர்
வடகிழக்கு, காரைநகர்.

**வ.தி.ராஜாராம்,**
C/16, வேலுவனராமதொடர்மாடி, ஹம்டன்
லேன், வெள்ளவத்தை,கொழும்பு -06.

சொற்சிலம்பம் போட்டி இல.452இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 08.01.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 450இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# தேசத்துக்காய் விழிப்போம்!

பட்டங்கள் பெற்றவரெல்லாம்
பாடறிந்து செயற்படார்
திட்டம் ஒன்று வேண்டும்
எதற்கும் நமக்கு
நட் (ஸ்) டம் வராமல் காத்திட
நல்ல தீர்மானம் தேவை

முட்டாள் தனமாக முனைந்தால்
கெட்டழிந்து போக நேரும்
வட்டத்துள் நின்று கொண்டு
விட்டத்தைக் கூடத் தாண்டாமல்
கொட்டமடிக்கும் பலர்
மட்டம் தட்டப்பட்டு
மாண்பிழந்து போய்விடுவர்
எட்ட நின்றாலும்
கிட்டநின்றாலும்
எதிர்வினையை இனங்கண்டு
ஒட்ட நறுக்க வேண்டும் வாலை.
துட்டர்கள் சூனியம் செய்வர்
கெட்டிக்காரரென்றால்
ஓடத்துரத்த வேண்டும் பதரை
சுட்டாலும் சங்கு
வெண்மை தரும்.

குட்டுக்கள் பட்டாலும்
குரோதங்கள் பாராமல்
குன்றின்மேல் ஏறியும் வெற்றி
வாகை சூடுவர்
வாட்டும் வறுமை வரினும்
வாய்மை வழிநின்று மாறாதவர்
சாட்டைகள் கொண்டு அடித்தாலும்
தம் நிலை தாழாதவர்

ஈட்டி முனையில்
இன்னுயிர் பிரிந்திடினும்
காட்டிக் கொடுத்திடாமல்
கண்விழித்துக் காலமெல்லாம்
ஊட்டி வளர்த்த அன்னைபோல்
மண்ணுக்காய் வாழ்பவர்கள்
பூட்டிய விலங்கறுக்கும்
புண்ணிய சீலர்கள் நாட்டுயர்வே
வீட்டுயர்வாய்
நற்பணி புரிபவர்க்கு
சூட்டி மகிழ வேண்டுமிவர்க்கு
சுரக்கும் தேன் மலர் ஆரம்



அபீர்ராஜன் அன்ரனிபீற்றர்

# கம்பருக்குக் கவியுரைத்த ஔவை

சி.சக்திகிரீவன்

சோழ மகாராஜா தனது அரண்மனைக்கு புலவர்களை அழைத்து விருந்தொன்றை அளித்தான். அந்த விருந்திலே கம்பரைப் பார்த்து வேந்தன் ஒரு கேள்வியைக் கேட்டான். இவ்வுலக இன்பங்களிலே மிகச்சிறந்தது எது என்பதே அந்த வினா. அதற்குக் கம்பர் தமது கருத்தை மன்னனுக்கு உரைத்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஔவையாரோ கம்பர் உரைத்தது முழுதும் பிழை என்றார்.

அப்போ வேந்தன் ஔவையாரைப்பார்த்து எவ்வாறெனக் கேட்க ஔவையார் கூறுகிறார்.

விண்ணினின் மழையேயல்லால்
வேறொரு நதியுமில்லை
கண்ணினின்ஒளியே யல்லால்
காணுமோர் ஒளியுமில்லை எண்ணிடில் பொருளைப்
போல
இனியதோர் உறவுமில்லை
உண்ணிடில் சுவையேயல்லால்
ஒருசுகம் இல்லை மன்னே"

இதைக் கேட்ட மன்னன். ஔவையாரைப் பெரிதும் பாராட்டிக் கௌரவித்தான். கவிச்சக்கரவர்த்தி எனப்போற்றப்படும் கம்பரோ. ஔவைக்கு எதிராகப் பேசுவதற்கு அஞ்சி நடுங்கிப் பேசாதிருந்தார். ஔவையாரின் தெய்வீகப் புலமையையும் கவிபாடும் ஆற்றலையும் கண்ட கம்பர் பொறாமைகொண்டு ஏதோவோரிடத்தில் ஔவையாரை இகழவேண்டும் என்று சபதம் எடுத்துக் கொள்கிறார்.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற புலவர்கள் ஆயிரம் பொன் பெற்றால் அன்றி ஒரு பாடல் கூடப் பாடமாட்டார்கள். இதனை நம்ப முடியாமலும் இருக்கலாம். இன்று கூட கம்பராமாயண விரிவுரை செய்வதற்கு ஒரு மணிநேரத்துக்கு ஒரு லட்சம் ரூபாவைப் பெறுகிறார்கள் என்றால் அப்படி நடந்திருக்கலாம் என்பதை ஏற்றே ஆகவேண்டியுள்ளது.

ஆனால் ஔவையோ பசிக்குச் சிறிது கூழ் கிடைத்தாலும் போதும் மகிழ்ந்து ஒருபாடல் பாடுவாள். இதனால் இறுமாப் புள்ள புலவர்கள் இவரைக் கூழுக் குப்பாடி' என்று கூறுவார்கள். அவளதுமனம்பொன்மனம் என்பதை அறிவார் அறிவார்.

ஒருசமயம் கம்பர் ஔவையாரைக் காண நேர்ந்தது உடனே அவர் அம்மையாரை அடியென்று அழைக்க எண்ணி ஒரு காலடி நாலிலைப் பந்தலடி" என்று விடுகதையாகக் கூறிப் பொருள் கேட்டார். அரைக் கீரையைக் குறித்தே கம்பர் இந்தவிதம் கூறியதில் அடி எனும் இழிவான சொல்லும் காணப்பட்டது.

இதற்கு அடா என்னும் சொல்லை வைத்து கம்பரின் செருக்கை அடக்க எதிர்விடை பகர்கிறார் ஔவையார்.

எட்டேகா லட்சணமே யயமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது"

என்ற வெண்பா மூலம் விடை பகர்ந்தார்.

எட்டேகாலட்சணமே - அவலட்சணமுடையவனே, எமனேறும் பரியே- இயமன் ஏறி வருகின்ற வாகனமாகிய எருமையே, மட்டில் பெரியம்மை வாகனமே- அளவற்ற சீர் கேடான மூதேவியைத் தாங்கி வரும் கழுதையே, முட்டமேற் கூரையில்லா வீடே - முழுவதும் முகடு வேயப்படாத வீட்டின் குட்டிச் சுவரே, குலராமன் தூதுவனே - உயர்குடிப்பிறந்த இராமபிரானது துதுவனாகிய அனுமனே (குரங்கே) . ஆரைச் சொன்னாயடா. அடே நீ கூறியது ஆரைக் கீரையைக் குறிக்குமடா.

இந்தவிதம் வாங்கிக் கட்டிய கம்பர். தெய்வத் தமிழ்த் தாயான ஔவையாரின் ஆற்றலை உணர்ந்து கொண்டார். வம்பளப்பவர்களுக்கு தெய்வத் தமிழ்ச் சான்றோர்கள் தக்க பதிலடி கொடுப்பர் என்பதற்கு இது தக்க உதாரணமாகிறது.

இதை உணர்ந்து பொய்யடிமையில்லாத புலவர்களாக வாழப் புலவர்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

கௌரவ செயலாளர், இந்துசமயப்பேரவை.

"புலவர்கள் பொய்யடிமை இல்லாத புலவர்களாக வாழவேண்டும் அழுக்கா றான எண்ணத்துடன் கம்பர் ஔவையாரைக் கண்டதும் ஒரு காலடி நாலிலைப் பந்தலடி" என்றார். ஔவை யாரோ ஆரையடா சொன் னாயது என்றார்."





# சோலெகா மண்டேலா

ஜெ.காயா

தென்னாபிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஆவார். அதுவரை அவர் நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களுள் ஒருவராக இருந்தார். ஆரம்பத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பிறகு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கொரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலாவின் 27 ஆண்டுச் சிறைவாசம், நிற வெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது. சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். 1990 இல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

இனவெறி ஆட்சியில் ஊறிக் கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர். அமைதி வழிப் போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக, 27 ஆண்டுகள் சிறைப்படுத்தப்பட்டுப் பின்னர் விடுதலையாகிக் குடியரசுத் தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராகவும் திகழ்ந்தவர். இத்தகைய உலகம் போற்றும் மகத்துவமான மனிதர்களுள் ஒருவரான இவரது பேர்த்திதான் சோலெகா மண்டேலா. இவர் தன்னுடைய தாத்தா நெல்சன் மண்டேலாவின் பிரபல்யத்தின் நிழலில், வளர்ந்தவர், இருந்தாலும் ஆரம்பத்தில் ஆடம்பரமானதாக இருந்த இவருடைய வாழ்க்கை தற்போது கவலைக்குரியதாக அமைந்து விட்டது.

36 வயதே ஆகியிருக்கும் இவர் தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார், சிறுவயதில் பாலியல் துர்நடத்தைக்கு ஆளாகியிருக்கிறார். பின்னர் போதை மருந்துப் பழக்கத்திற்கு அடிமையாகித் தற்போது மீண்டிருக்கிறார். இவருடைய இரு குழந்தைகள் இறந்துள்ளன. இவ்வாறு தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுவந்த இவர் தற்போது இவை எல்லாவற்றிலும் இருந்து மீண்டு பிறரின் நல்வாழ்வுக்காகப் பரப்புரை செய்து வருகிறார்.

சோலெகா பத்து வயதாக இருக்கும் போது அவருடைய தாத்தாவான நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து விடுதலை பெற்றார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த மனிதராக மட்டுமே சோலெகாவுக்கு அவரைப் பற்றி அதுவரை தெரியும். அவர் வீட்டுக்கு வர இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்தார். தாத்தா என்று அவர் அழைத்து வந்தவர், நாட்டின் நலனுக்காக மாபெரும் தியாகத்தைச் செய்தவர் என்பதைச் சோலெகா பிற்பட்ட காலங்களில்தான் உணர்ந்து கொண்டார்.

தாத்தாவின் கடும் விதிகளும், தடைகளும் இடம்பெற்றதால் வீட்டில் நல்ல வாழ்க்கைச் சூழல் காணப்பட்டது. நிறவெறிக்கு எதிரான போராட்டம் முடிவுக்கு வந்து சில ஆண்டுகளில் சோலெகாவின் தாத்தா நாட்டின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக ஆட்சிசெய்யத் தொடங்கினார். இதன் போது வீட்டில் அதிகரித்திருந்த மண்டேலாவின் கட்டுப்பாடுகள் தளர்ந்தன.

சோலெகாவின் தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழ்ந்தவையே அவரது வாழ்க்கையைப் புரட்டிப்போட்டன. அவர் சிறுமியாக இருந்தபோது, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் மதுப் பழக்கத்தால் ஆட்கொள்ளப்பட்ட அவர் போதை மருந்துக்கும் அடிமையானார். அவருடைய இரண்டு குழந்தைகள் இறந்து போயின. இவருக்குப் புற்றுநோய் இருப்பதாகவும் அறியப்பட்டது. இப்போது போதை பழக்கத்தில் இருந்து திருந்தியிருக்கும் அவர், அவரது வாழ்க்கையை பாதித்த இந்த நிலைமைகளுக்கு எதிராக பரப்புரை செய்கின்ற தூய்மைவாதியாகச் சமூகத்தில் உலா வருகிறார்.

தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொண்ட சோலெகா, உள்ளத்து வலியை மரத்துப் போக செய்யும் முயற்சிக்கான வழிகளை தேடும் நோக்கில் தள்ளப்பட்டார். 9 வயதாக இருந்தபோது, முதல் முறையாக மது அருந்தத் தொடங்கினார். 13 வயதில், போதை மருந்து உட்கொள்வது மற்றும் மது அருந்துவதை யதார்த்த நிலமையில் இருந்து தப்பித்துகொள்ளும் வழிமுறையாக கண்டார். 21 வயதானபோதுதான், போதை மருந்துக்குத் தான் அடிமையாகி இருப்பதை குடும்பத்தில் சோலெகா தெரிவித்தார். அந்நேரத்தில் அவர் ஸெனானி என்ற பெண் குழந்தையின் தாயாக இருந்தார். அதன் பின்னர் ஆறு ஆண்டுகள் கழித்து ஸெனாமி என்கிற மகன் பிறந்தான்.

13 வயதாகியிருந்த மகள் ஸெனானி, ஜொகனஸ்பர்க்கில் நடைபெற்ற 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியின் ஆரம்பவிழாவைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, நிகழ்ந்த கார் விபத்தில் இறந்தார். மது மயக்கத்தில் இருந்த கார் ஓட்டுநர், சாலையில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புத் தடுப்பரணில் காரை மோத, காரில் இருந்து தூக்கி எறியப்பட்ட ஸெனானி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழக்க நேர்ந்தது. விபத்து நடந்த அதே நாள் இரவில் சோலெகா மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வந்தார். தற் கொலை செய்து கொள்ள முயன்றதில் இருந்து தப்பித்திருந்த அவர், ஏற்கெ னவே 10 நாள்கள் மருத்துவமனையில் இருந்த நிலையில், மெல்ல மெல்ல உடல் நலம் தேறிவந்தார்.

பின்னர் 32 வயதான ஸோலெகாவிற்கு மார்பக புற்றுநோய் இருப்பதாக தெரிய வந்தது. முதலில், இந்தப் புற்றுநோயை எதிர்கொள்ள மிகவும் பயந்து, சிகிச்சை பெற அவர் மறுத்துவிட்டார். ஆனால், நாளடைவில் இருமுறை மார்பக அகற்று சிகிச்சையும், கீமோதெரபி எனப்படும் வேதிமுறையில் நோய் அகற்றும் சிகிச்சையும் மேற்கொண்டார்.

சிகிச்சை முடிந்த சிறிது காலத்தில் அவர் கருத்தரித்தார், புற்றுநோய்க்கு பிறகு, குழந்தை பிறக்காது என்று எண்ணியிருந்தவருக்கு, இந்த செய்தி தேனாக இனித்தது. ஆனால், அவருக்கு பிறந்த மகன் ஸெனாவி குறைமாதத்தில் பிறந்து, சில நாள்களே உயிர்வாழ்ந்தான். இது சோலெகாவுக்கு மன உளைச்சலைக் கொடுத்தது.

இப்போது மிகவும் தீவிரமாக புற்றுநோய் பரவிவிட்டது. ஆனாலும் வீதிப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மேற்கொள் கிறார், அறக்கட்டளை நிறுவனம் ஒன்றை நிறுவியிருக்கிறார். புற்றுநோய்க்கு விழிப்புணர்வு அளிக்கும் தூதராகவும் அவர் செயல்பட்டு வருகிறார்.

போதை மருந்துகளையும், மதுபானங்களையும் எதிர்ப்பதில் மும்முரம் காட்டும் இவருடைய பரப்புரைகளும் அறிவுரைகளும் போதைக்கு அடிமையாகியுள்ள எமது நாட்டு இளைஞர்களுக்கும் நல்ல படிப்பினையாகவிருக்கும்.



## வேண்டாமே பொருத்துவீடு

பொருத்து வீடதிலே பொருத்தியமை வாழவிட்டு
பெருத்த துயர் தந்தால் போவோம் நாம் உயிர் விட்டு
ஆண்டாண்டு காலமாய் நாம் அனுபவித்த வேதனைகள்
வேண்டாமே எங்களுக்கு இனிமேலும் அச்சோதனைகள்
பொருத்து வீடென்று பொறிப்பந்தல் நீர் தந்து
வருத்தும் குணம் வேண்டாம் வாடிடுவோம் மனம்நொந்து
கல்லு மண் சிமெந்தால் காத்திரமாய் வீடுகட்டி
கொள்ளும் நாம் யாழ் தமிழர் அறிவீரோ ஐமைப்பற்றி
கருத்துமதை மாற்றிவிடும் கடும் போக்குமினி வேண்டாம்
பொருத்துவீடும் வேண்டாம் பொல்லாத நிலை வேண்டாம்.

*மிருசுவில் தமிழ்தாசன், மீசாலை கிழக்கு*





# விநாயகர் வழிபாடும் விரத மகத்துவமும்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

விநாயகப் பெருமானை வணங்கும் போது நெற்றியின் இருபுறமும் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு வேண்டுவது வழக்கம். அவருக்கு நன்றி செலுத்தும்போது தேங்காயைச் சிதறு காயாக உடைப்பது வழக்கம் . அவருக்குகந்த நிவேதனப் பொருள்கள் தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை, அப்பம், அவல், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலியன மற்றும் கனிவகைகள், கிழங்குவகைகள், பயறுவகைகள் ஆகியவை என்று தக்கயாகப் பரணி கூறுகிறது.

விநாயகப் பெருமானின் திருவுருவத் தத்துவத்தைச் சிந்திக்கின்றபொழுது தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகாசுரனை அழிக்க பரம்பொருளான சக்தியே யானைத்தலையும் தேவ உடலும் பூதக்கால்களும் ஐந்து கரங்களும் கொண்ட விநாயக மூர்த்தியாக அவதரித்தார். விநாயகக் கடவுளின் வலது பாதம் ஞானசக்தி என்றும் இடது பாதம் கிரியா சக்தி என்றும் கூறுவார்கள். இந்தப் பாதங்களை வணங்கும் பக்தர்களை யானையைப் போலத் துதிக்கையால் கணபதி மேலே தூக்கி விட்டு விடுவார் என்று சொல்வார்கள்.

உலகம் யாவற்றையும் தம்முள் அடக்கி இருப்பதைக் காட்டும் பெருவயிற்றின் திரு உருவமே விநாயகரின் பேழை வயிறாகும். விநாயகரின் ஐந்து திருக்கரங்களில் மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தையும் இடக்கரம் பாசத்தையும் கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும் இடக்கரம் மோதகத்தையும் தாங்கியுள்ளன. பாசம் ஏந்திய கை படைக்கும் தொழிலையும் ஒற்றைக் கொம்புள்ள கை காத்தல் தொழிலையும் மோதகம் தாங்கிய இடக்கை அருள் புரிதலையும் குறிக்கின்றன. ஆக ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களுக்குரியனவாக விளங்குகின்றன.

விநாயகரின் வாகனம் மூஞ்சூறு. அவ்வளவு பெரிய வடிவத்தை அவ்வளவு சிறிய வடிவம் எப்படித் தாங்க இயலும் என்று வியக்கலாம். மூஞ்சூறு மண்ணைக் குடையும் பழக்கம் கொண்டது. அதை போல அறிவைத் தோண்டி ஆய்பவன் ஞானத்தைப் பெற முடியும் என்பதை ஞானமூர்த்தியான விநாயகப்பெருமான் உணர்த்துகிறார். தனது நாயகனிடம் பக்திப் பேரன்பு கொண்ட யாருக்கும் வாழ்க்கையின் சுமை தெரிவதில்லை. பக்தி மேலிடும் போது மலை போன்ற பரம்பொருள் அன்பைப் பொழியும் சிறு உள்ளத்துள் அடங்கி விடுவதாகவும் இந்த உருவத்தத்துவத்தைக் கொள்ளலாம்.

**விரத மகத்துவங்கள்**

**வெள்ளிக்கிழமை விரதம்**
வைகாசி மாதத்துச் சுக்ல பட்சத்து முதற்சுக்கிர வாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது அனுஷ்டிக்கப்படுவது.

**விநாயகசதுர்த்தி**
ஆவணி மாதத்துச் சுக்கில பட்சத்தில் வருகிற சதுர்த்தியில் விநாயரைப் பூசித்து வழிபடுவது.

**குமாரசஷ்டி விரதம்**
கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்சம் சஷ்டி திதி வரையில் இருபத்தொரு நாள் அனுஷ்டிப்பது.

**சங்கடஹர சதுர்த்தி**
மாசிமாதம் தேய்பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டிப்பது.

**சதுர்த்தி மகிமை**
கணபதியை வழிபடுவதற்கு மிகவும் முக்கியமானது இது. இது சுக்கில சதுர்த்தி என்றும் கிருஷ்ண சதுர்த்தி என்றும் மாதம் இரண்டு முறை வரும். சுக்கிலபட்ச சதுர்த்தியில் பகல் பூஜையும் விரதமும் விசேஜம். கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் இரவு பூஜையும் விரதமும் விசேசமானது.

**விநாயகர் பூசைக்கு உகந்தவை அறுகம்புல்**
வன்னிப் பத்திரங்கள். மந்தாரைப் பூ ஆகியவை சிறந்தவை தாழம்பூ, துளசி ஆகியவற்றால் விநாயகரைப் பூஜை செய்யக் கூடாது. சாதாரணமாகச் சிவபூஜைக்குகந்த எல்லாப் பத்திர புஷ்பங்களும் விநாயகர் வழிபாட்டுக்கும் ஏற்றவையே. விநாயகப் பெருமான் முன்னிலையில் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும்போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி அங்கே உள்ள அமிர்தம் தேகம் முழுவதும் பரவச் செய்வதற்காகவேயாகும்.

**முதற்கடவுள்**
கணேசனே முழுமுதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகிறார். கணங்களுக்கெல்லாம் நாயகனான அவரது துணையையே நாம் நற்காரியங்கள் எதனைத் தொடங்கினாலும் முதலில் நாடுகிறோம். சுவாமி ஊர்வலங்களில் முதல் இடம்பெறும் நாயகர் அவரே. ஆற்றங்கரையானாலும் குளக்கரையானாலும் வீதியானாலும் அரசமரமானாலும் கூரைஇல்லாமல் எழுந்தருளி அருள்பாலிக்கும் பெருமை அவருக்குண்டு. பாரதம் எழுதிய எழுத்தாளரும் அவரே.

# புதைமணல்

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“ரிப்பி -ரிப்பி வாங்கிக்கொண்டாங்கோ எண்டு அனுப்பின பிள்ளையள்.... வந்து பாக்கேக்க இல்லைத்தம்பி”

குலங்கிக் குலுங்கி அழுகிறார்.அவர் அழுது துயரங்களை கழுவிக்கொள்ள சிறிது நேரம் கொடுக்கிறேன்.

“ஐயா ரவுணுக்கு போகேக்கை பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு போகோணும் எண்டு நினக்கேல்லையோ”

“ஐயோ அதுகள் வெளிக்கிட்டதுகள் தம்பி .அந்த நாசமறுப்பான் வந்து நிப் பாட்டிப்போட்டான் .

“ஆர் ஐயா அவர்?”

“அவனேனா .........அவன் என்ரை மனிசீன்ரை தம்பி தான் அந்த .....மோன்.

அண்டைக்கு மட்டும் அந்த நாய் வந்து தடுக்காட்டி இண்டைக்கு என்ரை பிள்ளையள் என்னோட இருந்திருக்கும்”

மீண்டும் தலையிலடித்துக்கொண்டு கதறியழத் தொடங்கினார்.சிறிது நேரம் அழ அனுமதித்தேன்.

“ஐயா....எனக்கு கைரேகை பார்க்கத் தெரியும் ஒருக்காப் பாக்கட்டே?”

“என்ன பூழலுக்கு.......? பாத்தாப் போல என்ரை பிள்ளையள் திரும்பி வரப் போகுதுகளே?

“இல்லை ஐயா எங்கை பிழையெண்டு பார்ப்பமே?”

“இந்தாங்கோ”

“நீங்கநல்ல கடவுள் நம்பிக்கையான ஆள் உங்களுக்கு எல்லாம் கடவுள் தந்தவர். உங்கட சொந்தக்காரர் தான் ஆரோ மனம் பொறுக்காமல் என்னோ செய்து போட்டினம் அதுதான் இந்த நிலை வந்தது”

“ஓமோம் தம்பி நீ சொல்லது சரிதானா”

“ஐயோ ஆரோ உங்களுக்கு செய்வினை செய்திருக்கினம். இங்க பாருங்கோ இந்த ரேகை கறுத்துப்போய் இருக்கு.”

“உண்மைதான் தம்பி நீ சரியாகச் சொல்லுறீர் அந்தாளும் அதுதான் சொன்னது”

“ஆனால் ... பிறகு ரேகையில கொஞ்ச இடத்தில தெளிவிருக்கு ஏதாலும் பிராயச் சித்தம் செய்தனிங்களோ”

“ ஓம் தம்பி உது ஒரு ஐயா திருநீறு பூசி தீர்த்தம் தெளித்தவர்.அதுக்குப் பிறகு கொஞ்சம் சுகம்”

“எண்டாலும் முழுசா எடுபடவில்லை. அதுகள் திரும்பியும் ஏறப்பாக்குது”

“அதுக்குத்தான் தம்பி நான் பயந்து பயந்து வாழுறன்.” “ அதே ஆளைக் கொண்டு இன்னும் இரண்டு பார்வை பார்க்க எல்லாம் சரியாகிடும்”

“தம்பி அதில வாற திருநீற்றுப் பூச்சுக்காரர் தான் நான் சொன்ன ஆள்”

“அவரே அவரை எனக்கு நல்லாத் தெரியும் செய்வினை எடுக்கிறத்தில வலுவிண்ணன்.” அந்த முதியவருக்கு ஆலோசனை வழங்கிப் பின்னர் அன்று மாலையும் அடுத்தநாள் காலையும் திருநீற்றுப் பூச்சுப் பார்வை பார்க்கப்படுகின்றது. திருநீற்றுக் கையை தலையிலிருந்து கால்வரை இழுத்து வந்து நிலத்திலே தொட்டு மந்திர உச்சாடனத்துடன். “இறங்கு இறங்கு” என அடிக்கடி கூறுகிறார். பார்வை முடிந்ததும் கோவிந்தன் முகத்தில் மகிழ்ச்சியுடன் கூடிய தெளிவு காணப்படுகிறது.

“ஐயா இப்ப உங்கட முகம் நல்லா வெளிச்சிட்டுது”

“ஓம் தம்பி ஏதோ பாரம் இறங்கின மாதிரித்தான் இருக்குது. உங்கட உதவியளை மறக்கேலாது.”

என்னும் பரிபூரண நம்பிக்கை முளைவிடத்தொடங்குகிறது. சாரம் உதறுவது நின்றுவிட்டது. செயற்பாடுகளிலே தெளிவு முற்றாகக் குணப்படுத்திவிட்டேன். இனித் தொழிலை நோக்கித் திரும்பி விட்டால் வெற்றிப் பூரிப்போடு நான் ஊர் திரும்பலாம்.

“அப்ப ஐயா உங்கட பக்கத்துவீட்டுக்காரரெல்லாம் திரும்பவும் தொழிலுக்குப்போகத் தொடங்கிட்டினம். நீங்கள் என்ன செய்யப் போறிங்கள்?”

“என்னத்துக்கு? முந்திநான் கடல்ல இருந்து இறங்கின உடன பிள்ளைகள் ஓடிவரும். மீன் வித்து கைச்செலவுக்குக் காசு குடுத்தாப் பிறகு தான் பள்ளிக்குப் போகுங்கள். இனி ஆருக்காண்டித் தொழிலுக்குப் போவன். என்னத் தனியா விட்டிட்டு போட்டீங்களே”

“ அடி வயிற்றிலிருந்து அவல ஓசை வர குழறி அழத் தொடங்கினார். நான் திகைத்துப் போனேன்.”சாண் ஏற முழம் சறுக்கும் வேலையா? அழுகை தணிந்து படிப்படியாக மீண்டும். வந்தார். என்னுடன் தாராளமாகக் கதைக்கத் தொடங்கினார். இயல்பான செயற்பாடுகளில் ஈடுபட்டார். மீண்டும் அவரைதுயர் மூட்டத்தில் இருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கை என் மனதில் கூடுகட்டத் தொடங்கியது அரச சார்பற்ற நிறுவனத்தின் வாகனம் ஒன்று அவ்விடத்தில் வந்து நின்றது. குழந்தைகளுக்கான விளையாட்டுப்பொருள்கள் அனைவருக்குமானஉடுதுணிகள்உணவுப்பொருள்கள் வழங்கபபட்டுக்கொண்டிருந்தன. இழப்புகள் பற்றிய கவனத்தை தற்காலிகமாக திருப்பிய மக்கள் அவற்றைப்பெற முண்டியடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் கோவிந்தனிடம் எந்த சஞ்சலமும் இல்லை.“ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்.”தன்மையுடன் கண்களை மட்டும் அவர்களை நோக்கிச்செலுத்திக் கொண்டிருந்தார். இவரைத் தொழிலுக்கு அனுப்புவதை விட சமூக இசைவாக்கத்தைப் படிப்படியாக வளர்த்தெடுப்பது நன்மை தரலாம் என்ற எண்ணம் என்மனதிற் பளிச்சிட்டது. பொருளுக்காக நிற்கும் வரிசையில் இவரை நிறுத்தினால் பலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் ஏற்படும்.

“ஐயா, புதுஉடுப்பெல்லாம் குடுக்கினம்... நீங்க என்ன செய்யப்போறியள்?”

“ என்னத்துக்கு? எல்லாரும் தங்கடை பிள்ளையளுக்கு விளையாட்டுச் சமான்கள் வாங்கிக் குடுக்கினம். நான் ஆருக்குக் குடுப்பன்? ஐயோ என்ரை சாந்தன் என்ரை தனுசுக்குட்டி. என்னை விட்டிட்டு எங்கை போட்டியள்?” அவலக்குரல் அந்தப் பிரதேசத்தின் தற்காலிக உற்சாகத்தையும் கழுவிச் சென்றது.

எங்களது கடமை முடிந்து திரும்ப இன்னும் சில நாள்களே இருந்தன. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற பதற்றமும் பரபரப்பும் என் மனமெங்கும்.

இவருக்கு ஏதாவது விடயத்தில் ஆர்வம் இருந்தால் அந்தத் திசையில் திருப்பி விடலாம் என்ற சிந்தனை கவிதை..... கதை ..... நாடகம் சினிமாப்படம்...?

முகாமிலிருந்தவர்களிடம் விசாரித்த போது அவர் 'கிரிக்கற்' றில் மிகுந்த ஆர்வமுடையவர் என்பதை அறிய முடிந்தது. முகாமிலுள்ள தொலைக் காட்சியில் விளையாட்டுச் செய்திகள் இடம்பெறும்போது மறைந்து நின்று பார்ப்பதைக் கண்டதாகச் சிலர் கூறினர். சுனாமிக்கு முன்னர் இலங்கை அணி விளையாடும் போட்டி என்றால் தொழிலையும் விட்டுவிட்டு யார் வீட்டிலாவது கெஞ்சி மன்றாடி ஆட்டத்தைப் பார்ப்பதையும் அறிய முடிந்தது. எனவே தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வாங்கிக் கொடுத்துக் கிரிக்கெற் ஆட்டங்களில் அவரது கவனத்தைத் திருப்புவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என் முடிவெடுத்தேன். அது மட்டுமல்ல. தொலைக்காட்சிப் பெட்டியின் பாதுகாப்பைக் காரணங்காட்டி அவரை வீட்டுக்கு அனுப்பவும் முடியுமெனக் கணித்தேன்.

யார் வாங்கிக் கொடுப்பது?

அவரது மைத்துனரே முன்வந்தார். எனக்கோ ஆச்சரியம்.

“உங்களைப் பற்றித்தானே அவர் பிழையா......”

“ஓம் எனக்குத் தெரியும். பாவம் பிள்ளையளை இழந்த கவலை. அவர் சுகப்பட்டாலே போதும். நான் வாங்கித் தந்ததெண்டு சொல்லாதேங்கோ” ஒரு நல்ல இதயத்தைச் சந்திப்பது பெரும் பாக்கியம் தான்.

காலையிலேயே தொலைக்காட்சிப் பெட்டி கொண்டு வந்து இறக்கிவிட்டு விட்டது. எங்கோ போன கோவிந்தனின் வருகைக்காகக் காத்திருந்தேன். ஊருக்குத் திரும்பவேண்டிய நான் வந்துவிட்ட நிலையில் என் கடமையை வெற்றிகரமாக முடித்த திருப்தியுடன் போவதான பெருமிதம் நெஞ்சில். அவரைக் கண்டவுடன் உடலெங்கும் பரபரப்புடன் கூடிய மின்பாய்ச்சல்.

“வாங்கோ. உங்களுக்குக் கிறிக்கற் மச் எண்டால் விருப்பமோ?”

“ஓம் என்னெண்டு தெரியும்? சின்ன வயதிலை பள்ளிக் கூட ரீமிலை விளையாடினனான். பிறகு தொழில்.... பேந்தெங்கை? எண்டாலும் இலங்கை விளையாடிற மச் எல்லாம் பாப்பன்”

“இப்ப அவுஸ்திரேலியா இலங்கைக்கு வந்திருக்கெல்லோ?”

“ஓம். நேற்றுச் செய்தீலை காட்டினவை”

“அந்த மச்சை நீங்கள் முழுசாப் பாக்க வேணுமெண்டு. ரீ.வி.ஒண்டு உங்களுக்கு வாங்கி வைத்திருக்கிறேன். இது உங்களுக்குத்தான். ஒருகணம் மின்வெட்டுப்போல மகிழ்ச்சி தோன்றி மறைய,

“ஐயோ....., என்ரை சாந்தன். எத்தினை தரம் ரீ.வி.வாங்கித்தா எண்டு கேட்டிருப்பாய். இப்ப ரீ.வி.வந்திட்டுது. நீ எங்கையப்பு போட்டாய்” தலையில் அடித்துக்கொண்டே பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினார்.



பாலர் கல்வி மேம்பாட்டுக்குரிய நூலாகிய "குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்" எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி விநாயகர் முன்பள்ளிக் கலைக் கூடத்தில் இடம்பெற்றது. ஞானக் குழந்தை இல்ல ஆசிரியை செல்வி அகிலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலாசிரியர் கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் நூலை வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் மகாலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ற-10)





அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் இலங்கை தலைமைக் கழகத்தின் தலைவர் எம்.விஜயகாந்த் ஏற்பாட்டில் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நினைவுதினம் கொண்டாடப்பட்டது.அதில் அண்மையில் உயிரிழந்த முன்னாள் முத லமைச்சர் ஜெயலலிதாவிற்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-ற)



பதினோராவது சர்வதேச எழுத்தாளர் விழா இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம்- உதய்ப்பூர் பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்றது. விழா வுக்கு அழைக்கப்பட்டிருந்த எழுத்தாளர் சாந்தன், சாகித்யஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். விழா இயக்குநர் தேவ் பரத்வாஜ் (இடது) மற்றும் கவிஞர் தேவ் மணி பாண்டே (இடது) ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)





வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் பிரமாண அடிப்படையிலான நன்கொடையில் அமைக் கப்பட்ட அறிவொளி முன்பள்ளி அலுவலகம் அண்மையில் அவரால் திறக்கப்பட்டது. (ற-10)





வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்துக்கான இர்ராஜகோபுர அடிக்கல் நடும் வைபவத்தையும் அதனை அமைக் கும் பணி தென்னிந்திய கலைஞர் பாண்டி தலைமையில் இடம்பெற்றன.

கே.கே. எஸ்.வீதி இணுவிலில் அமைந்துள்ள அஸ்ரன் சர்வதேசப் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழா நிகழ்வு அதிபர் க.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் காணலாம்.



திருகோணமலை - புளியங்குளம் ஆனந்தபுரி ஸ்ரீவராகி அம்மன் தேவஸ்தான சங்குஸ்தாபன அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது. சிவஸ்ரீ க.பால கிருஸ்ணக் குருக்களின் விசேட கிரியைகளைத் தொடர்ந்து கிழக்கு மாகாண சபை யின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அடிக்கல்லை நட்டார். நிகழ்வில் உப்பு வெளி பிரதேச சபைத் தலைவர் ஆர்.விஜேந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ற-ய-40)



சங்கானை பிரதேச செயலக கலாசார பேரவை சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பிரதேச செயலர் அ.சோதிநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (ற-10-29)



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர் அமரர் பொன்.நாகமணியின் 20 ஆவது வருட நிறைவையொட்டி, நடைபெற்ற வளர்மதி கல்விக் கழகத்திற்கு 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நிலையத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களாகவிருந்து கடந்த 20 வருட காலத்தில் சாவடைந்த 20 பேரின் நினைவாக மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் அண்மையில் கல்விக் கழக கட்டடம் அமையவுள்ள காணியில் இடம்பெற்றன.

நிலைய உப தலைவர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமரரின் சகோதரரான பொன்.கந்தையா கல்விக் கழக கட்டடத்துக்கான அடிக்கல் நடுவதையும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட கைதடி கமநல சேவை அலுவலர் கு.முரளிதரன் மரக்கன்றை நட்டார். (ற-10-9)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்துக்கு அண்மையில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசிப் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ற-10)



யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக 2007, 2008 கல்வி ஆண்டு பிரயோக விஞ்ஞான பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்துக்குட்பட்ட றாணமடு இந்து மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் கே.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பழைய மாணவர்கள், பாடசாலைகளின் அதி பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது றாணமடு பிரதேசத்தில் உள்ள ஊட்டல் பிரதேச பாடசாலைகளான சரஸ்வதி வித்தியாலயம், கண்ணகி வித்தியாலயம் , அகத்தியர் வித்தி யாலயும், ஸ்ரீமுருகன் வித்தியாலயம், றாணமடு இந்து மகாவித்தியாலயம், ஆகிய ஐந்து பாடசாலைகளின் மாணவர்களுக்கு சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ற-10)



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வெங்கலச்செட்டிகுளம் பிரதேசக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் துட்டுவாகை பகுதியில் இடம்பெற்றது.

அதில் சர்வதேச மனித உரிமைகள் தினமும் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட தலைவருமாகிய பத்மநாதன் சத்தியலிங்கம், இளைஞர் அணி செயலாளர் யோகா, அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், வவுனியா நகர கிளையின் தலைவர் கருணாநிதி, பொருளாளர் றோய் ஜெயக்குமார், உறுப்பினர் தாவீது சீலன் மற்றும் செட்டிகுளம் பிரதேச கிளையின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற-10)



வவுனியாவின் பிரபல கராட்டி ஆசான் நந்தகுமாரால் பயிற்றுவிக்கபட்டு வடமாகாண மற்றும் தேசிய ரீதியில் தங்கப் பதக்கம் உட்பட பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்று கொண்ட மாணவ. மாணவியர் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கராட்டி ஆசான் அசனார், சிவராஜ், வடமாகாண சபை உறுப்பினர் மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் செயலாளர் மாணிக்கம் ஜெகன், சந்திர பத்மன், யசோதரன், கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தனர். (10-ற)



கிழக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர்களில் ஒருவராக ஏறாவூரைச் சேர்ந்த இலங்கைப் போக்குவரத்து சபையின் ஏறாவூர் சாலை முகாமையாளரான எம்.எஸ்.அப்துல் கனி கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீரினால் அண்மையில் நிய மிக்கப்பட்டார். (10)





சுவிஸ் வாழ் உறவுகளான தீபன்-சுகந்தினி தம்பதியின் புதல்வியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவர்களினால் வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகத்திற்கு தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் அனுசரணையில் மாணவர்களுக் கான கற்றல் உபகரணங்களை அண்மையில் அன்பளிப்பு செய்தனர். (ற-10)



மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா நிதியை கல்மடு முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு வழங்கினார். இதற்கான காசோலையை வடக்கு கிராம அபி விருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகி யோர் இணைந்து பாடசாலையின் அதிபரிடம் கையளித்தனர். (ற-10)



வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்காந்தராசாவின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஊடாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவினுள் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகளது பிள் ளைகளுக்கு ஒட்டுசுட்டான் கிராம அலுவலகத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப் பட்டன. (ற-10)



கிளிநொச்சி மாவட்ட சிறுவர் கழகங்களின் பிரதிநி களுக்கான சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை, இ களிலிருந்து சிறவர்களைப் பாதுகாத்தல் தொடர்பா வலுவூட்டல் செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் மாவ அலுவலர்களான இ.செந்தூரன், பா.கோபி ஆகியோ வளவாளர்களாக கலந்து கொண்டனர். (ற-



வடமாகாண சபை உறுப்பினர் அஸ்வினின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நகர சபையில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன. (ற-9)



ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் கணினி வகுப்புக்களை ஆரம்பிக்கும் முகமாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் முயற்சியில் 8 அண்மையில் கணினிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ற-10)



கரைச்சி சிவநகர் சனசமூக நிலையத்தின் நூலகத்திற்கு கொழும்பு கொள்ளுப்பிட்டி உள்ள மெதடிஸ் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவி நிருத்திகா சிறிதரன் த கற்கையின் ஒரு பகுதியாக சமூகச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நூல்க கையளித்தார். சிவநகர் முதியோர் சங்க அனுசரணையில் சிவநகர் ச.ச. நிலைய ம டபத்தில் சிவநகர் முதியோர் சங்கத் தலைவர் அ.ரகுபதி தலைமையில் நடைபெற்ற இ நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவ வே.தபேந்திரன் கலந்து கொண்டார். (ற-

# முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பெற விரும்பும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான விண்ணப்பம் கோரல்



## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்:-

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது. அதன் பிரகாரம் முதற்கட்டமாக உடனடியாக பத்தாயிரம் (10,000) **முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை** மிகவிரைவில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள், உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் இவ்வீடுகளுக்கு 30 வருடகால உத்தரவாதத்தை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதுடன், குறைந்தபட்சம் 60-70 வருடகால பயன்பாட்டுக்குரியதென்றும் இந் நிறுவனத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுரஅடி பரப்பளவு கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-

- சூரியக்கல மின்சார வசதி
- குழாய் நீர்க்கிணறு
- சமையல் எரிவாயு அடுப்பு – சமையலறை அலுமாரி (Pantry Cupboard)
- மின்விசிறி – 03
- இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரத்தைப் பெறுவதற்கான கம்பிகளை (wiring) வீட்டில் பொருத்துதல்.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம், பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படும் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வீடுகளைப் பெற விரும்புவோர் இந்த விளம்பரத்தில் இருக்கும் விண்ணப்பப்படிவத்தையோ அல்லது உங்கள் பிரதேச செயலகத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்தையோ பூர்த்திசெய்து 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட கிராம அலுவலரின் அத்தாட்சியுடனும், பிரதேச செயலாளரின் ஒப்பத்துடனும் உங்கள் பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பித்து உறுதிச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். அந்த விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. குடும்பத் தலைவரின் முழுப் பெயர் : ..............................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................
3. தற்போதைய முகவரி : ..............................
4. கிராம அலுவலர் பிரிவு : ..............................
5. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
6. நிரந்தர முகவரியும் வதிவிட முகவரியும் : ..............................
7. குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை : ..............................
8. காணி தொடர்பான விபரம்
   - 8.1. காணி அமைந்துள்ள முகவரி : ..............................
   - 8.2. கிராம அலுவலர் பிரிவு : ..............................
   - 8.3. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
   - 8.4. உடனடியாக வீடமைக்கும் நிலையில் அக்காணி உள்ளதா? : ஆம் / இல்லை
   - 8.5. நீங்கள் வசிக்கும் காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டைக்கட்டுவதற்கு அனுமதியை அளிக்கின்றீர்களா? : ஆம் / இல்லை

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துவதோடு மேற்படி வீட்டுத்திட்டத்தின் கீழ் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு எனது பூரண சம்மதத்தினையும் என்னால் மேலே குறிப்பிடப்பட்ட காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு எனது பூரண சம்மதத்தினையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல்

விண்ணப்பதாரியினால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் அத்தாட்சிப்படுத்துவதுடன் இக்குடும்பம் உள்ளக இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் என்றும் இக்குடும்பத்திற்கு முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை வழங்குவது உகந்ததென்றும் சிபார்சு செய்கின்றேன்.

.............................. ..............................
திகதி கிராம அலுவலரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தல்

சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

.............................. ..............................
திகதி பிரதேச செயலாளரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

செயலாளர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
இல. 36 B, காலி வீதி
கொழும்பு

## பொது வாக்கெடுப்பு...

தெரிவித்ததாவது: புதிய அரசமைப்பு பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் அது தோல்வியடையும். ஆனால், வடக்கில் 99 வீதமான வாக்குகளால்அதுவெற்றிபெறும். அந்தவெற்றி நாட்டுக்குப் பேராபத்தைக் கொண்டு வரும். பொது வாக்கெடுப்பு தெற்கில் தோல்வியடைந்தாலும்கூட இந்த ஆபத்திலிருந்து தம்மால் தப்பமுடியாது.

பன்னாட்டுச் சக்திகளின் தேவைக்கு ஏற்ப இப்போது இந்த அரசு புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் நடவடிக்கையில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பன்னாட்டு மட்டத்தில் செய்யப்பட்டுவிட்டன. பெப்ரவரி 5ஆம் திகதி புதிய அரசமைப்புக்கான சட்டவரைவு நாடாளுமன்றில் கொண்டு வரப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதே புதிய அரசமைப்பின் நோக்கம். தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு என்றும் அதற்கான தீர்வாகவே அரசமைப்பு கொண்டு வரப்படுகின்றது என்றும் சாக்குப் போக்குச் சொல்லப்படுகின்றது.

இந்த நாட்டில் யாருக்குப் பிரச்சினை இல்லை? எல்லா இன மக்களும் ஏதோவொரு வகையில் பிரச்சினைகளுடன்தான் வாழ்கின்றனர். தமிழர்கள் எதிர்நோக்குவது நிர்வாக ரீதியான பிரச்சினை. அதற்கு நிர்வாக ரீதியிலான தீர்வைப் பெற்றுக் கொடுத்தால் சரி. ஆனால், நாட்டைப் பிளவுபடுத்தக்கூடிய அரசமைப்பு தேவையில்லை.

புதிய அரசமைப்பு பொது வாக்கெடுப்புக்கு வெற்றியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் பயன்படுத்தும். பிரிந்து சென்று தனித் தமிழீழத்தை அமைக்கும் ஒருமித்த நிலைப்பாட்டில் தமிழர்கள் இருப்பதையே இந்த வெற்றி உணர்த்துகின்றது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பன்னாடுகளுக்குத் தெரிவித்து பிரிந்துசெல்வதற்கான அனுமதியை பன்னாட்டிடம் கோரும்.

சிங்கள மக்களால் இந்தப் புதிய அரசமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும்கூட எமது நாட்டுக்கு இருக்கின்ற அந்த ஆபத்து நீங்காது. நான் இவ்வாறு சொன்னேன் என்று இதை எழுதி வைத்துகொள்ளுங்கள். நிச்சயம் இது நிகழும். பெரும் ஆபத்தை நாடு எதிர் கொள்ளும்-என்றார். (த-4)

## 108 பானைகளில்...

இன்று 108 பானைகளில் பொங்கலுடன் குளிர்த்தி அபிசேகமும் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக காலபோக நெற்செய்கைகள் அழிவடையும் அபாயத்தில் உள்ளன. இதன் காரணமாக இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள நீர்ப்பாச்சல் பரப்புகளில் உள்ள வயல்களுக்காக இரணைமடுக் குளத்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் வயல்கள் காப்பாற்றப்பட்டுள்ள போதிலும் மேலும் 25 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் அழிவடையும் அபாயத்தில் உள்ளது. இதனால் மாவட்டத்தில் மழைவேண்டி இரணைமடுக் குளத்தின் முன்னால் உள்ள கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இன்று சிறப்புப் பூசை மற்றும் 108 பானைகளில் பொங்கல் என்பன இடம்பெறவுள்ளதாக விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர். (த-10)

## புதிய....

யிட்டார். புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

சமூகங்களுக்கு இடையில் நீண்டகால அடிப்படையில் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள புதிய அரசமைப்பு வழியமைக்கும். அனைத்து சமூகங்களும் இலங்கையில் நல்லிணக்கத்தை அடைவதற்காக பணியாற்றவேண்டும். இலங்கையில் நல்லிணக்கத்தை நோக்கிய முன்நகர்வுகளைப் பிரிட்டன் விரும்புகிறது. கடந்த 12 மாதங்களில் பிரிட்டனும் இலங்கையும் கூட்டாக இணைந்து எட்டிய சாதனைகளை நினைவு கூர்கிறேன். அவை பொருத்தமானதாக அமையும்-என்றார். (த-4)

## சமல்...

என்றும் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

சமல் ராஜபக்ச நாடாளுமன்றில் உரையாற்றும்போதும், சுதந்திரக் கட்சியையும் அதன் தலைமையையும் மிக மரியாதையாக நோக்குபவராக உள்ளார்.

இவர் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரராக இருந்தபோதிலும், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தங்காலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் கடந்த அரசை விமர்சனம் செய்திருந்தார்.

கட்சிக்காகச் சரியாகச் செயற்படும் ஒருவராக அவர் காணப்படுகின்றார். பிரதமராவதற்கு அவர்தான் அருகதையுடையவர் என்று டிலான் பெரேரா கூறினார். (த-4)

## புனித...

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைமைகளான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, எதிர்காலச் சந்ததியினர் மாவீரர்களை நினைவுகூரும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகபுரம், தேராவில், முழங்காவில் ஆகிய மூன்று துயிலுமில்லங்களும் புனித பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டு, அவற்றை முறையாகப் பராமரிக்கும் பொறுப்பைப் பிரதேச சபைகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற யோசனையைக் கரைச்சி பிரதேச கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜெயக்குமார் முன்வைத்தார்.

இந்த யோசனை இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் செயலாளர் எம்.சிவமோகனால் வழிமொழியப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கடந்த கால ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் அவை பின்னர் கைவிடப்பட்ட நிலமைகளே அதிகம் எனவும், ஆனால் இந்த தீர்மானத்துக்கும் அந்த நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புகள் கருத்துத் தெரிவித்தன. (த-ய)

## 3 கொள்கைகளுக்...

தாவது:

இனவாதமற்ற ஒரு நாடாக இந்த நாடு மாறும் போதுதான் இலங்கை பூரண அபிவிருத்தியை அடையும். சிங்களவரின் பகுதிகளில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும், தமிழ் - முஸ்லிம் பகுதிகளில் சிங்களவர்களுக்கு எதி ராகவும் இனவாதம் பேசும்நிலை நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு- கிழக்கு தமிழர்க்கு நிர்வாக ரீதியான பிரச்சினைகள் பல இருப்பதை நாம் அறிவோம். அவர்களுக்கு இருக்கின்ற அத்தனை பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். இந்த நாட்டைப் பூரண அமைதிமிக்க - அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதா அல்லது மீண்டும் பயங்கரவாதம் ஒன்று ஏற்படும் நிலையை உருவாக்குவதா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பிரிவினைவாதத்தில் இருந்து - பயங்கரவாதத்தில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுத்த நாம் மீண்டும் ஒரு அழிவுக்குள் இந்த நாட்டைத் தள்ளிவிடுவதற்கு விரும்பமாட்டோம். பிரிவினைவாதத்துக்கு இடங்கொடுக்கமாட்டோம். ஆனால், தமிழர்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புதிய அரசமைப்பு நாட்டுக்கு விரோதமாகப் பிரிவினைவாதத்தை ஆதரிப்பதாக இருக்கும் என்று பரப்பப்படும் பரப்புரைகளில் எந்த உண்மையும் இல்லை.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு, வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லை மற்றும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்படும் அரசமைப்பு எவ்வாறு பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் என்று இந்த நாட்டு மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் இந்த புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுகின்றதே தவிர வீண் பிரச்சினைகளை உருவாக்குவதற்கு அல்ல-என்றார். (த-4)

## ஆழிப்பேரலை...

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குறித்த நினைவுத் தூபியும் அதனோடு இணைந்த நினைவு மண்டபமும் நாளைக் காலை திறக்கப்பட்டு ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலை இடரினால் உயிரிழந்த முல்லைத்தீவு மாவட்ட உறவுகளில், ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியின் அருகே அமைக்கப்பட்டிருந்த நினைவாலயம் இறுதிப் போரின்போது அழிக்கப்பட்டது.

இதன் பின்னர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் அந்த இடத்தில் நினைவுத் தூபியும் நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டது. இந்தத் தூபி நாளைக் காலை திறக்கப்பட்டு காலை 8.46 மணிக்குச் சுடரேற்றி அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் உயிரிழந்த மக்களின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-21-7)

## வேண்டாம்....

செயலர் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, அரசின் பொருத்து வீட்டுத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையில்லை என்ற யோசனையை முன்வைத்த கிளிநொச்சி கரைச்சி பிரதேச கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர், எமது மக்களுக்கு காட்போட் வீடுகள் தேவையில்லை என்றும், அமைச்சர் சுவாமிநாதன் பொருத்துவீடுகளை மக்கள் மீது திணிக்க முற்படுவதாகவும் குற்றஞ் சுமத்தினார்.

எனவே, எமது மக்களின் இயற்கையான பண்பாட்டுச் சூழலுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற இந்தப் பொருத்து வீடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

அவரது அந்த யோசனையை அக்கராயன் கமநலசேவை நிலையத்தின் தலைவர் வழிமொழிய, பொருத்து வீடுகள் தேவையில்லை என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-ய)

## நீதித்துறை...

தெரிவிக்கப்பட்டது. ஏனைய மூவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் முன்னிறுத்தப்பட்டு இருந்தனர். குற் றப்பத்திரிகையிலே இவர்கள் தவிர, சட்டமா அதிபருக்குத் தெரியாத வேறு சிலரும் சேர்ந்து தான் இந்தக் கொலைத் திட்டத்தைத் தீட்டினார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பு நடுநிசியில் வெளியானது. குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் அனைத்துக் குற்றச் சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கின் தீர்ப்புக் குறித்து கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலாசார விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். விழா பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சுமந்திரன் வழக்கின் தீர்ப்புத் தொடர்பில் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சார்பில் நீதிமன்றில் நான் முன்னிலையாகி இருந்தேன். ஆரம்பத்திலேயே அறங்கூறும் சபை (ஜூரி) மூலமான விசாரணையை எதிர்த்தோம். அப்படியிருந்தும் அறங்கூறும் சபை மூலமாகத்தான் விசாரணை நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

நீதிமன்றத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) நான் ரவிராஜ் குடும்பம் சார்பில் கருத்துக்களை முன்வைத்தபோது, "10 வருடங்களுக்கு முன்னர், காலையில் 8.30 மணிக்கு தலைநகரில் பொது மக்கள் பலர் பாத்திருக்க நாடாளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டார். சாட்சிகள் பலர் இருந்தபோதும் 9 வருடங்களாக ஒருவர் கூடக் கைது செய்யப்படாமல் இருந்தனர். 10 வருடங்கள் கடந்த பின்னரே வழக்கு விசாரணையே ஆரம்பமானது. இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையில் கூட இதனைச் செய்தவர்கள் வழக்குத் தொடுநருக்கும் (சட்டமா அதிபர் திணைக்களம்) தெரியாத வேறு சிலருடன் சேர்ந்து சூழ்ச்சி மேற்கொண்டனர் என்று சொல்லப்பட்டுள்ளது. யார் இதனைச் செய்வித்தார்கள் என்ற விடயம் தங்களுக்குத் தெரியாது என்றுதான் இந்த வழக்கை சட்ட மா அதிபர் முன்னெடுத்தார். அது யார் என்பது கண்டுபிடிக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

இந்தக் கொலையைச் செய்தவர்கள் அரச புலனாய்வுத்துறையுடன் தொடர்புடையவர்கள் என்பதை சட்ட மா அதிபரே நீதிமன்றில் சொல்லியிருக்கின்றார். முதற்படியாக இவர்களுக்கு தண்டனை கொடுக்கின்ற செயற்பாடாவது நிகழவேண்டும் என்றுதான் நான் வலியுறுத்தியிருந்தேன். ஆனாலும் அறங்கூறும் சபை (ஜூரி) அனைவரும் நிரபராதிகள் என்று தீர்மானித்துள்ளது.

எங்களுடைய நாட்டின் நீதித்துறை பன்னாட்டிலே இருக்கின்ற நாகரிகமான நாடுகளில் இருக்கும் நீதித்துறையோடு ஒப்பிடும் அளவுக்கு இருக்குமென்றால் குறைந்தது-மிக மிக குறைந்தது இந்த வழக்காவது ஒழுங்காக நடக்கவேண்டும் என நாங்கள் கோரியிருந்தோம். ஆனால் அது நடக்கவில்லை.

2015ஆம் ஆண்டு ஜெனிவாவிலே இலங்கை அரசு தனது நீதித்துறையில் இருக்கின்ற குறைபாடுகளை ஏற்றுக்கொண்டிருந்தது. இலங்கை நீதித்துறையாலே சரியான வகையில் நீதிசெய்யப்பட மாட்டாது என கருதிய பிறகுதான் இலங்கையிலே இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறலுக்காக விசாரிப்பதற்கு பன்னாட்டு விசாரணையாளர்கள் பன்னாட்டு வழக்குத் தொடுநர்கள் பன்னாட்டு நீதிபதிகளை இணைந்த பொறிமுறையை ஏற்றுக்கொள்கிறோம் என இலங்கை அரசு அந்தத் தீர்மானத்தில் கைச்சாத்திட்டது. ஆனால் அந்தத் தீர்மானத்துக்கு வரச்செய்வதற்கு நாங்கள் நிறையவே போராடியிருக்கிறோம்.

ஜெனிவாவிலே பன்னாட்டு சட்ட நிபுணர்களோடு தங்கியிருந்தபோது இலங்கை அரசமைப்பு சட்டத்திலே வெளிநாடுகளின் நீதிபதிகள் இலங்கை நீதிமன்ற செயற்பாடுகளில் பங்குபற்றுவது தவிர்க்கப்படவேண்டியது என்றுஓர் அமைச்சர் வந்துசொன்னபோதுகூட அதற்கு எதிர்ப்புக்காட்டி பன்னாட்டு நிபுணர்களை வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்களைக் கொண்ட நீதிக் கட்டமைப்பு ஒன்றுக்கு இணங்கச் செய்திருந்தோம்.

ஜெனிவாவிலே அதை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட, பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை, எங்களுடைய நீதித்துறையே சரியான வகையில் செய்யும் என சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

நாங்கள் அழுத்தம் கொடுத்து இலங்கை அரசை இணங்கச்செய்த பன்னாட்டு நீதிமன்றப் பொறிமுறையே இல்ங்கைக்கு பொருத்தம் என்பதை நேற்று முன்தினம் வெளியான தீர்ப்பு வெளிப்படுத்தியிருக்கிறது - என்றார். (உ-5, 109)

## உலகில்....

திடலில் நேற்றிரவு 11 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

இந்த செயற்கை கிறிஸ்மஸ் மரத் தின் உயரம் 325 அடிகளாகும். சுமார் 30 தொன் உருக்கு கம்பிகளாலும் இரும்பு கம்பிகளாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கிறிஸ்மஸ் மரம் 3 லட்சம் மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர். 1950ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிர்மாணிக்கப்பட்ட 221அடி உயரமான கிறிஸ்மஸ் மரமே இதற்கு முன்னர் கட்டப்பட்ட மிக உயர்ந்த மரமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. (வ-5)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 593
சீட்டிழுப்பு திகதி 2016.12.24 சனிக்கிழமை
05 39 44 60 F
சுப்பர் ஜக்பொட் ரூ.45,064,300/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2829 திகதி 24.12.2016
08 10 37 54 E 19
ரூ. 4,25,55,150/-

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 02
சீட்டிழுப்பு திகதி ▸ 24.12.2016 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
13 14 26 34 02 டிசம்பர்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 54, 76, 120/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் 23, 57,090/= | அடுத்த ஜக்பொட் 10, 00, 000/=
2016.12.29 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# அடிப்படைவாதக் கருத்துடைய இயக்கங்கள் சமூகத்தில் பிரிவினைகளை ஏற்படுத்தும்

## அதற்கான ஏற்பாடுகள் ஈழத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 25

சிவசேனை மற்றும் பொதுபலசேனா போன்ற அடிப்படைவாதக் கருத்துடைய இயக்கங்கள் ஆட்சியாளர்களால் தமது இருப்பைத்தக்கவைத்துக் கொள்வதற்காகவே உருவாக்கப்பட்டது. அடிப்படைவாதங்களால் சமூகத்தில் முரண்பாடுகளும், பிரிவினைகளுமே ஏற்படும். ஈழத்தில் இந்த விடயத்தை நன்கு திட்டமிட்டு மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு தேசிய கலை இலக்கியப் பேரவையின் உறுப்பினர் சிறிபிரகாஸ் தெரிவித்தார்.

பேராசிரியர் கைலாசபதியின் 34ஆம் ஆண்டு நினைவு ஆய்வரங்கம் நேற்றைய தினம் மாலை 4 மணியளவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து அடிப்படை வாதம், மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்களாலேயே ஈழத்தில் தலைதூக்கியுள்ளது. அடிப்படையிலேயே இந்து தத்துவ வாதத்தோடு இந்தியா, இலங்கையில் காலூன்றுகின்றது. சிவசேனை போன்ற அமைப்புக்களால் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் தனிமைப்படும் நிலை காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் தமிழ் பேசும் சமூகமாக இருந்த முஸ்லிம்கள் இன்று தனிச் சமூகமாக மதத்தினால் பிரிந்து நிற்பதற்கு முஸ்லிம் அடிப்படை வாதமே காரணம். அது போன்றே இன்று இந்து தத்துவ வாதம் கடும் போக்குடன் கோலோச்சும் போது தமிழ் பேசும் கிறிஸ்தவர்களையும் தனிமையாக்கும் போக்கு காணப்படுகிறது.

இந்திய அரசினால், இங்குள்ள தமிழ்த் தேசிய அடிப்படை வாதக் கொள்கையோடு இருக்கும் சில அரசியல்வாதிகளின் துணையோடு இந்தச் செயற்பாடு நடைபெறுகின்றது. பிராந்திய அடிப்படையில் இந்தியா இலங்கையைத்தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியுள்ளது.

மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள் இதனைச் செயற்படுத்துகிறார்கள். இதற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் துணைபோகிறார். கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் செயற்படுகின்றார். இந்து அடிப்படைவாதம் ஈழத்தில் தற்போது கோலோச்சுவது சமூகங்களிடையே முரண்பாடுகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தவே - என்றார்.

(வ-5-ரி)

## பொருத்துவீட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த ஊழலை நாங்கள் வெளிப்படுத்த வேண்டிய சூழல் தவிர்க்கமுடியாமல் ஏற்படும். இது அமைச்சருக்கு விடுக்கும் இறுதி எச்சரிக்கை.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேசசெயலகத்தின் கலாசார விழா நேற்றைய தினம் மூத்த விநாயகர் கோயில் திருமண மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் என். சிவசிறி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சரை எச்சரித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

எமது பண்பாட்டுக்கும் வாழ்க்கை முறைக்கும் எதிரான செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. அதற்கு ஓர் உதாரணமே இந்த உலோகத்தகட்டினாலான வீட்டுத் திட்டம். எமது கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சம்பந்தன் இதை ஒரு வீடு என்று சொல்லமுடியாது, கூடு என்றுதான் அழைக்க வேண்டும் என்கிறார்.

எமது மக்கள் நொந்து போயிருக்கிறார்கள். அடிப்படையாக அவர்களுக்கு ஒரு வீடு கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரிவருகின்றோம். அவர்களுக்குக் கூடு தேவையில்லை. இந்தக் கூட்டை அவர்களுக்கு கொடுப்பதன் ஊடாக அவர்களுக்கு நீங்கள் நிவாரணம் கொடுக்கவில்லை, வாழிடம் அமைத்துக் கொடுக்கவில்லை. ஒரு கல்வீடு அமைக்க எவ்வளவு செலவாகிறதோ அதை விட இரண்டுமடங்குசெலவில்ஒரு இரும்புக் கூட்டைக் கொடுக்க முற்படுகிறீர்கள். ஏன் இந்தச் செயற்பாட்டை நீங்கள் முன்னெடுக்கின்றீர்கள் என்று எங்களுக்குதெரியும். இது முற்றுமுழுதான ஒரு ஊழல் செயற்பாடு. ஊழலில் ஊறித்திளைத்திருக்கின்ற ஒரு செயற்பாடு என்பதை நாங்கள் சொல்லி இருக்கின்றோம். யாருக்கு எவ்வளவு பணம் போய்ச் சேர்ந்தது என்பதையும் சொல்லி வருகின்றோம்.

எதையும் கேட்காமல் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடுகளில் - பத்திரிகைகளில் விளம்பரங்களைப் போட்டு ஏமாற்றுகின்ற செயற்பாடுகளை மேற்கொள்வாராக இருந்தால் – அவரது ஊழலை நாங்கள் வெளிப்படுத்த வேண்டிய காலம் வரும். யாருக்கு எவ்வளவு கையூட்டுகொடுக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்த வேண்டிய காலம் வரும். இது அமைச்சருக்கு விடுக்கின்ற கடைசி எச்சரிக்கை. எமது மக்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் எமது மக்களுடைய வாழ்க்கையோடு விளையாட வேண்டாம். எமது மக்களுடைய தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடவேண்டாம். தமிழ்ப் பெயரைத் தாங்கியிருக்கின்ற அமைச்சராகிய உங்களுக்கு இழுக்கை ஏற்படுத்தும் சூழலுக்குள் எம்மைத் தள்ளாதீர்கள். இந்தப் பொருத்து வீட்டை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

எமது மக்களுக்கு அவசர தேவை ஒன்று இருக்கின்றது என்பதை வைத்து அவர்களுக்கு எதையாவது திணிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என அமைச்சரை எச்சரிக்கின்றோம் – என்றார்.

(உ-109)

### உடனடி வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள பாரஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் மேற்பார்வையாளர் 01 (சிங்கள மொழியில் தேர்ச்சி) தேவை.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
077 666 4096/ 021 221 9300

### உபயகாரர் பொதுச்சபைக் கூட்டம் -2017

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உபயகாரர் பொதுச்சபைக் கூட்டம் **08.01.2017 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு** ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய பரிபாலன சபையினர் தெரிவு நடைபெறவிருப்பதால் அனைத்து உபயகாரர் களும் அன்றைய தினம் தவறாது வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செயலாளர்,பரிபாலன சபை**
**அளவெட்டி வடக்கு**
**தவளக்கிரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.11.2016
வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத்தலைவி
அமரர் **பூரணம் மயில்வாகனம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

த.சோமசுந்தரம்
கந்தசுவாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
குடும்பத்தினர்.
077 714 1385

### விற்பனைக்கு உண்டு

TATA 207 Pik up (Aluminia full body) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 354 9092

### வாடகைக்கு

K.K.S வீதியில் (யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில்) தனியார் கல்வி நிறுவனம் அல்லது களஞ்சியசாலை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் நடத்துவதற்கான இடம் உண்டு.
072 246 9103

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் களவாஓடை ஏழாலையில் (சின்னம்மன் கோயிலருகில்) 6 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 303 6850

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் A9 பாதையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 633 7307

### பணியாளர்கள் தேவை

யாழ்- கொழும்பு போக்குவரத்து சேவை நிறுவனத்திற்கு கீழ்காணும் பணி நிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
1. முகாமையாளர்
2. கணக்குப் பதிவாளர்
3. ரான்ஸ் போட் லொறியில் டிலிவரி அனுபவம் உள்ளவர்கள் தேவை.
077 251 4982/ 077 251 4981

### VACANCIES

1. English Teacher
2. IT Teacher
3. FRENCH Teacher
4. Receptionist
- High Qualification & well experience will be advantage
- Part time also will be consider
- Reasonable Salary and others

BRITISH COLLEGE 23, Kachcheri nallur Rd. Jaffna.
Email.: bcejaffnabranch@gmail.com

### வேலைவாய்ப்புக்கள்

பல்தேசிய நிறுவனத்தின் உள்ளநாட்டு. வெளிநாட்டு புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள்.

| உள்நாடு | வெளிநாடு |
|---|---|
| யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை | டுபாய், இந்தியா, பங்களாதேஷ் |

வீசா, பயணச்சீட்டு, பயிற்சி அனைத்தும் இலவசம்.
பயிற்சியின் போது 15,000/= - 20,000/=
பின் குறைந்தது 60, 000/= இற்கு மேல் வேலை நிரந்தரமாக்கப்படும்.
மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்.
தொடர்புகளுக்கு -
077 999 4807, 077 106 2091

# குருதி சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி முதல் இயங்கும்

## சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிப்பு

தென்மராட்சி, டிசெ.25
சாவகச்சேரி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுவரும் சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி தொடக்கம் செயற்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு நிலையம் செயற்படத் தொடங்கியதும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் மாதத்தில் இருமுறை குருதி சுத்திகரிப்பை மேற் கொள்ளமுடியும்

கடந்த வாரம் குருதி சுத்திகரிப்புக்கான இயந்திரங்களும் கருவிகளும் நடுவண் சுகாதார அமைச்சால் வ்ழங்கப்பட்டு அவை பொருத்தும் பணிகள் நடைபெறுகின்றன. (ற-9)

## தென்னை செய்கைக்கு மானிய உதவி

யாழ்ப்பாணம், டிசெ.25
தென்னைப்பயிர்ச்செய்கையாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று யாழ்ப் பாண தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு மு.ப. 10 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைறும்.

"தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் தென்னைப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தென்னை, மண்ணின் ஈரப்பதனைப் பேணுதல், தென்னை மரங்களுக்கான டோலமைற் பிரயோகம், ஊடு பயிர்ச்செய்கை மற்றும் தென்னை மட்டைக் குழி அமைத்தல் போன்ற எமது மானியத் திட்டங்களின் ஊடாகப் பல தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் பயனடைந்து வருகின்றனர். இந்த வருடமும் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக மானியக் கொடுப்பனவை வழங்க உத்தேசித்துள்ளோம்"-என்றார். (ற-ரி)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## யாழ்.நகரிலுள்ள...

முன்பாக உள்ள இரண்டரைப் பரப்புக் காணியையும் தமக்கு வழங்குமாறு பொலிஸ் திணைக்களத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிர் முன்பாக இரண்டரைப் பரப்புக் காணி காணப்படுகின்றது. இந்தக் காணி தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானது என்று தெரிவித்து அதனைப் பயங்கரவாதப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நரம்பியல் விடுதித் தொகுதி அமைப்பதற்கு மேற்படி காணி தேவை என்று வைத்தியசாலைத் தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

யாழ். பண்ணைப் பகுதியில் ரெலிக்கொம்க்கு அருகில் பொலிஸ் திணைக்களத்தின் சிறப்பு அதிரடிப்படைக்கு மூன்றே முக்கால் ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. அதனைவிட புதிய பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு இரண்டு அரை ஏக்கர் காணி வழங்கப்பட்டுள் ளது. புதிய பொலிஸ் நிலையக் கட்டடம் அமைக் கப்படும் பொழுது, அந்த வளாகத்தினுள்ளேயே பொலிஸின் சகல திணைக்களங்களும் அமையப் பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலு வலகம் அமைப்பதற்கு, யாழ். போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள காணியை வழங்குமாறு கொழும்பு அரசின் காணி ஆணையாளர் ஊடாக பொலிஸ் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்னரே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அரசியல் தலைவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. (வ-5)

O/L தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி, தொழில் வாய்ப்புக்கள்
UK / USA / SWISS / NETHERLANDS / CANADA / DENMARK / FRENCE
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு O/L தகமையுடன் வேலைவாய்ப்புடன் உயர்கல்வி வாய்ப்புக்கள்....
14 வருட சேவை
• பணவசதி குறைந்தவர்களுக்கு Bank Loan பெற்றுத்தரப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
• Bank Balance குறைந்த வீதத்தில் செய்து தரப்படும்.
Bsc / Msc / Diploma & A.Diploma
ASPS 14 வருட அனுபவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
NO.53B,E.A COORAY MW,COLOMBO - 06
Tel : 0114575043 / 0773347332
max adz

போதனா ஆசிரியர்கள் தேவை
AIDE - ET - ACTION INTERNATIONAL SRI LANKA.
கீழ்வரும் போதனா ஆசிரியர் வேலை வெற்றிடமாக கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அமைந்துள்ள எமது தொழிற்கல்வி நிலையமான iLEAD (Intiative for Livelihood Education and Development ) இல் காணப்படுகின்றது
ENGLISH INSTRUCTORS
ஆங்கிலம் பயிற்றுவிப்பாளர்கள்
அனுபவமுள்ளவர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு 05.01.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் ( மின்னஞ்சலும் செய்யலாம்)
THE ADMINISTRATIVE OFFICER
23-1/1,Gregorys' Road,Dehiwala.
E-Mail : ilead.colombo@gmail.com
max adz

English Classes
➤ 1 - 11 வரையான மாணவர்கள்
➤ O/L, A/L படித்து முடித்தவர்கள் மற்றும்
➤ ஆங்கிலம் கற்கவிரும்பும் மாணவர்கள்
அனைவருக்கும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
→ O/L பரீட்சை தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு 10 வருட கடந்தகால வினாக்களுடன் விசேடமாக கற்பிக்கப்படும்.
தொ.பே. 077 005 9284/ 077 563 3289

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்
British Way® English Academy
எந்த மாற்று வழியுமில்லை British Way
இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை
நிட்டம்புவ 033 302 19 19
யாழ்ப்பாணம் 033 33 40 600
காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15
நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315
ROYALCERT DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00 IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED
இவ் இரண்டு மாத கால பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்
TOEIC Test Center | UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations | ICDL | bcs | abe Accredited College | SQA

இரண்டு மாத காலப் பயிற்சி 02 Months
காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.
இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.
03, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள் 04 Months
காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.
01, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

IELTS சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை
14, January, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

KIDS' Class Grade 1-10
சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்
சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது
14, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy
Contact (Jaffna Branch) : 033 33 40 600
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

# முல்லைத்தீவுக்கான மைதானம் வருகிறது முள்ளிவாய்க்காலில்

## விளையாத இடம் விளையாட்டுக்கு

முல்லைத்தீவு, டிசெ. 25
முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விளையாட்டு மைதானம் முள்ளிவாய்க்கால் பகுதியில் பயிரிடப்படாமல் இருந்த ஒரு வயல் காணியில் அமைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. கமநல சேவைகள் தொடர்பாக ஆராயப்பட்டபோது விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பிலும் பரிசீலனை செய்யப்பட்டே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விளையாட்டு மைதானம் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைப்பதற்கு இடம் அடையாளப் படுத்தப்பட்டது. ஐந்து ஏக்கர் பரப்பளவுடைய குறித்த விவசாய நிலத்தில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக பயிரிடப்படவில்லை. இதன் அடிப்படையிலேயே குறித்த இடம் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு உகந்தது என்று கருத்தில் கொள்ளப்பட்டது. குறித்த காணி தனிநபர் ஒருவருக்குச் சொந்தமானது. எனவே அதே அளவான காணி தண்ணி முறிப்புப் பகுதியில் அவருக்கு வழங்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

வயல் நிலங்களில் கட்டடங்கள் கட்டுவதையோ, மண்போட்டு நிரவுவதையோ நாட்டின் ஜனாதிபதி தடைசெய்துள்ளார் என்பதை சுட்டிக்காட்டி குறித்த பகுதி கமக்கார அமைப்பு மைதானம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. மத்திய விவசாய அமைச்சுக்கு கடிதமும் அனுப்பியிருந்தது. இது இணைத்தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மைதானத்துக்கு என ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் பயிரிடப்படாத காரணத்தாலும் மாவட்டத்துக்கு விளையாட்டு மைதானம் அமைப்பது அவசியம் என்ற காரணத்தாலும் மைதானம் அமைக்க இணைத்தலைவர்களால் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. (ம-7)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 25

### இந்து இளைஞரின் கரப்பந்தாட்டம்

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.45 மணிக்கு



இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### எவ்.ஏ. கிண்ணம் வவுனியா லீக்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் நடத்தத் திட்டமிட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## உருத்திரபுரம், கில்லறி அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், டிசெ. 25
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கிளிநொச்சி உருத்திரபுரம், மன்னார் கில்லறி அணிகள் வெற்றிபெற்றன.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் மன்னார் கில்லறி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் நியமனம்



யாழ்ப்பாணம், டிசெ. 25
இந்தியாவில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் தெற்காசிய மகளிர் கால் பந்தாட்டத் தொடரில் கலந்துகொள்ளும் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டார். எம். ஆர்.எம்.ஜஸ்மினே அவ்வாறு தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ளார். இலங்கை தனது முதலாவது ஆட்டத்தில் மாலைதீவை எதிர்க்கவுள்ளது. (ம-23)

## லயன்ஸ் அணி இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 25
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லயன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ.கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சண் சையின் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் லயன்ஸ் அணி வென்றது. (ம-23)

## சூதாட்டக் கும்பலால் உயிருக்கு ஆபத்து

### பீற்றர்சன் புலம்பல்



ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து தடைசெய்யப்பட்டுள்ள தென்னாபிரிக்க வீரரான அல்விரோ பீற்றர்சன், சூதாட்டக் கும்பலால் தனது உயிருக்கு ஆபத்து எனத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இருந்த பீற்றர்சன், மோசமான திறன் காரணமாக பின்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டார். உள்ளூர் ஆட்டங்களில் விளையாடிவந்த அவர் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது. பீற்றர்சனின் குற்றத்தை உறுதிசெய்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, இரண்டு ஆண்டுகளுக்குத் தடை செய்தது. இதனால் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு வரை அவர் களத்துக்குத் திரும்ப முடியாது. இதன் அடிப்படையில் சூதாட்டத்துடன் தொடர்புடையவர் என்ற கருதப்படும் பீற்றர்சன் சூதாட்டக் கும்பலால் தனது உயிருக்கு ஆபத்து என்று தற்போது தெரிவித்தார்.

கிரிக்கெட்டில் நடைபெறும் சூதாட்டத்தை ஆயுதக் குழுவொன்று செய்து வருவதை அறிவேன். இதனால் எனது உயிருக்கும் என் குடும்பத்தினரின் உயிருக்கும் ஆபத்து இருப்பதாகப் பயப்படுகிறேன் என பீற்றர்சன் தெரிவித்தார். (ம)

## 60 மில்லியன் பவுண்டுக்கு விலை போகிறார் ஒஸ்கார்

பிரேசில் அணியின் இளம் வீரரான ஒஸ்காரை 60 மில்லியன் பவுண்டுகளுக்கு சீனாவின் புகழ்பெற்ற கழகமான சாங்காய் எஸ்.ஐ.பி. ஜி. ஒப்பந்தம் செய்யவுள்ளது. ஒஸ்கார் தற்போது இங்கிலாந்தின் பிரபல கழகமான செல்சியாவுக்காக விளையாடி வருகிறார். எஸ்.ஐ.பி.ஜி. அணிக்குச் செல்ல அவர் சம்மதம் தெரிவித்தார். சாங்காய் எஸ்.ஐ.பி.ஜி. அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட இருப்பது மகிழ்ச்சி. புதிய குடும்பமான சீனாவுடன் இணைய இருப்பது எனக்கு மிகவும் முக்கியமான நாளாக இருக்கப்போகிறது என ஒஸ்கார் தெரிவித்தார். (ம)



FFSL

## சஞ்சய் விலகல்

ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்ட சஞ்சய், குறித்த பதவியிலிருந்து விலகினார்.

சஞ்சயின் விலகலால் பஞ்சாப்பின் ஆலோசகராகச் செயற்பட்டுவரும் சேவாக் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# நியூசி. - பங்களாதேஷ் தொடர் நாளை ஆரம்பம்

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரிலும் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடுவதற்காக பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. முதலாவதாக ஒருநாள் தொடர் நடத்தத் திட்மிடப்பட்டது. இதன்படி முதலாவது ஆட்டம் கிறைஸ்ட் சேர்ச் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

கடந்த இரு வாரங்களாக பங்களாதேஷ் அணி நியூசிலாந்தின் தட்ப வெப்ப நிலைகளை ஆராய்ந்து பயிற்சி பெற்று வருகிறது. தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையையும் இரு அணி வீரர்களும் வெளிப் படுத்தினர். (ம)



# கேரத்தை மட்டும் நம்பி இருத்தலாகாது வேகங்களாலேயே வெற்றிகள் சாத்தியம்

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரிலும், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடுவதற்காக இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளது. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதன்படி போர்ட் எலிசபேத் மைதானத்தில் நாளை முதலாவது ஆட்டம் நடைபெறவுள்ளது.

கடந்த சில தொடர்களில் இலங்கை அணியின் குறைகளை நிரப்பி, காத்து வழிநடத்தியவராக கேரத் உள்ளார். அவர் இந்தத் தொடரிலும் விளையாடுகிறார் எனினும் அவரது பந்துவீச்சு தென்னாபிரிக்காவை அச்சுறுத்துமா என்பது சந்தேகமே. தென்னாபிரிக்க ஆடுகளங்கள் முழுவதும் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. எனவே சுழல் பந்துவீச்சாளரான கேரத் எதிரணியை கலங்கடிப்படு மிகவும் சிரமம்.

இதனால் கடந்த சில தொடர்களைப் போல் இந்தத் தொடரிலும் பந்துவீச்சு வரிசை கேரத்தை மட்டும் நம்பியிருந்தால் மிகப்பெரிய தோல்வியொன்றே இலங்கைக்குப் பின்னால் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. எனவே தற்போது ஓரளவு திறனில் உள்ளவர்கள் என்று கருதப்படும் லக்மல் மற்றும் பிரதீப் இருவரும் பந்துவீச்சு வரிசையை பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். பிறிதொரு வேகப்பந்து வீச்சாளரான அணித்தலைவர் மத்தியூஸ், ஏற்கனவே தான் தெரிவித்ததைப் போன்று அதிகளவான பந்துப்பரிமாற்றங்களை வீசுவதற்கு முன்வர வேண்டும்.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தமட்டில் தனஞ்சய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் இருவரும் தம்மை நிருபிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அண்மைக் காலமாக சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய இவர்கள், எதிர்கால இலங்கையின் நட்சத்திரங்கள் என்ற பதிவை இலங்கை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் இலங்கைக்கு வெளியில் அவர்கள் முக்கியமான அணியை எதிர்க்கவில்லை. இதனால் அவர்களுக்கான சிறந்த பரீட்சையாக தென்னாபிரிக்கத் தொடர் அமையவுள்ளது. காயம் காரணமாக ஓய்விலிருந்த மத்தியூஸ், சந்திமல் இருவரும் அணிக்குத் திரும்பியமை மேலும் பலம். அதேபோல் அனுபவ வீரரான தரங்கவும் துடுப்பாட்ட வரிசைக்குத் தூணாக உள்ளார்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரை அந்த அணி தனது திறமையை அண்மைக்காலமாக தொடர்ந்து நிரூபித்து வருகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரைக் குறிப்பிடலாம்.

அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது ஆஸ்திரேலியா. ஒருநாள் தொடரை 5:0 என்று கைப்பற்றியது தென்னாபிரிக்கா. ஆஸ்திரேலியாவுக்குச் சென்று டெஸ்ட் தொடரையும் 2:1 என்று கைப்பற்றியது. இது இலங்கையை மனதளவில் பாதிப்புறச் செய்யக்கூடிய செய்தியே.

தென்னாபிரிக்காவின் மட்டில் இலங்கை ஆறுதல் படக்கூடிய விடயம் ஒன்று உள்ளதென்றால் அது, காயங்காரணமாக வில்லியர்ஸ் மற்றும் ஸ்ரெய்ன் இருவரும் களமிறங்காதமையே. (ம)

# கைமாறினார் கெய்ல்

கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ஜமைக்கா அணியிடமிருந்த கெய்ல், செயின்ட் கிட்ஸ் அணிக்காக கைமாறினார்.

நடப்பு வருட கரிபியன் லீக் தொடரை கெய்ல் தலைமையிலான ஜமைக்கா அணி கைப்பற்றியது. இதனால் ஜமைக்காவிலேயே கெய்ல் தொடர்வார் என்ற எதிர்பார்ப்பும் பரவலாக நிலவியது. இந்த நிலையில் ஜமைக்காவிடமிருந்து செயின்ட் கிட்ஸ் அணிக்காக கெய்ல் சென்றமை சில அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கெய்ல் மட்டுமல்லாமல் மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளரான சிம்மன்ஸும் செயின்ட் கிட்ஸின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். (ம)



## ஆஸி.—பாக். நாளை டெஸ்ட்

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனால் நாளை ஆரம்பமாகும் ஆட்டத்திலும் அந்த அணி வெற்றி பெற்றால் பாகிஸ்தானால் தொட ரைக் கைப்பற்ற இயலாத நிலை ஏற்படும். எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டு மாயின் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடியில் பாகிஸ்தான் களமிறங்குகிறது. (ம)

# மிடில் செக்ஸின் பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளார் விக்ரோறி

இங்கிலாந்துக் கழகங்களில் ஒன்றான மிடில் செக்ஸின் பயிற்சியாளராக டானியல் விக்ரோறி நியமிக்கப்பட்டார்.

நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரரான விக்ரோறி, கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வுபெற்றார். அதன் பின்னர் ஐ.பி.எல். தொடரில் பெங்களூரின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்டார். ஆஸ்திரேலியாவில் தற்போது நடை பெற்று வரும் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் பிரிஸ்பெய்ன் அணியின் தலைமைப் பயிற்சியாளராக உள்ளார்.



அவரது செயற்பாடுகள் சிறந்த நிலையில் உள்ளதை அடுத்து இங்கிலாந்தின் புகழ்பெற்ற கழகமான மிடில்செக்ஸ் த்னது தலைமைப் பயிற்சியாளராக விக்ரோறியை நியமித்தது. (ம)

# மொயின் அலி சிறந்த அடைவு

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான மொயின் அலி, நடப்பு வருடத்தில் ஒரு சகலதுறை வீரர் என்ற அடிப்படையில் சிறந்த அடைவை நிலைநாட்டியுள்ளார்.

நடப்பு வருட டெஸ்ட் ஆட்டங்களில் மொயின் அலி ஆயிரத்து 78 ஓட்டங்களையும் 30 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் ஆயிரம் ஓட்டங்கள் 30 இலக்குகள் என்ற அடைவை எட்டிய மூன்றாவது சகலதுறை வீரராக அவர் தன்னைப் பதிவு செய்தார்.

இதற்கு முன்னர் இங்கிலாந்தின் சகலதுறை வீரரான இயன் பொத்தம் முதலாவது வீரராகவும் தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரரான கலிஸ் இரண்டாவது வீரராகவும் குறித்த அடைவை எட்டியுள்ளனர். (ம)

# மீண்டும் களம் திரும்புவேன் கிவித்தோவா உறுதி நிலை



நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனையான பெட்ரா கிவித்தோவா மர்ம நபரால் கத்திக் குத்துக்கு உள்ளாகி அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்ட நிலையில் மீண்டும் களத்துக்குத் திரும்பும் நம்பிக்கையை அவர் வெளியிட்டார்.

செக்குடியரசின் கிழக்கு பகுதியில் புரோஸ் டெஜோவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் கிவித்தோவா வசித்து வருகிறார். கடந்த திங்கட்கிழமை காலை கிவித்தோவாவின் வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர் அவரை கத்தியால் தாக்கினார். கிவித்தோவாவும் தன்னைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டமையால் கையில் மட்டும் சில கத்திக் குத்துகள் விழுந்தன. கிவித்தோவா பலமாகச் சத்தம் போட்ட பின்னர் அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பின்னர் கிட்டத் தட்ட மூன்று மணிநேரம் அவரது கையில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. இந்த அசம்பாவிதத்தால் ஜனவரி 15ஆம் திகதி நடைபெறவுள்ள ஆஸ்திரேலியத் தொடரிலிருந்து கிவித்தோவா விலகுவார் என்று கருதப் படுகிறது. இந்த நிலையிலேயே மீண்டும் களத்துக்குத் திரும்பும் நம்பிக்கையை அவர் வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கிவித்தோவா, எனக்கு நடந்த இந்தச் சம்பவம் பயங்கரமானது தான். அதற்காக ஒரு பாதிக்கப்பட்ட நபராக எனக்குள் நினைத்துக்கொள்ள விரும்பவில்லை. நடந்த சம்பவத்தை திரும்பிப் பார்க்க மாட்டேன். இப்போது நன்றாக இருப் பதாக உணர்கிறேன். அதை உங்களிடம் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன். இனி காயம் எப்படி குணமடைகிறது என்பதை பார்க்க வேண்டும். 3 மாதங்களோ, 6 மாதங்களோ அல்லது ஒரு வருடமானா லும் களத்துக்குத் திரும்புவதில் உறுதியாக உள்ளேன். அதற்காக என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன் என கிவித் தோவா மேலும் தெரிவித்தார். (ம)

## கோக்லியின் புறக்கணிப்புக்கு அனுராத் தாக்கூர் வருத்தம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை அறிவித்த கனவு அணியில் கோக்லி இல்லாதமைக்கு இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் அனுராத் தாக்கூர் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது கனவு அணியை அண்மையில் அறிவித்தது. கோக்லி இடம்பெறவில்லை. இது சில அதிர் வலைகளைத் தோற்றுவித்துள்ள நிலையில் தாக்கூர் தனது வருத்தத்தையும் தெரிவித்தார்.

இந்திய அணி பன்னாட்டுத் தரப்படுத்தலில் தற்போது முதலிடத்தைப்பிடித்துள்ளது. அந்த அணியின் தலைவர் என்ற வகையில் கோக்லியை அணியில் சேர்த்திருக்க வேண்டும் அவரது புறக்கணிப்பு ஏமாற்றம் தருகிறது என்று தாக்கூர் தெரிவித்தார்.

கோக்லியின் புறக்கணிப்புக்கு வீரர்களின் பெறுபேறுகளை ஆராய்ந்த காலகட்டமே முக்கிய காரணம். இதன்படி 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி வரையிலான கால கட்டமே கவனத்தில் கொள்ளப்பட்டது. இதனாலேயே கோக்லி புறக்கணிக் கப்பட்டார் என்று நேற்றுமுன்தினம் காரணம் தெரிவிக்கப்பட்டது.

(ம)

**பணியாளர்கள் தேவை**

பொறுப்பாளர், கணக்காளர், சிட்டை எழுதுனர் ஆகிய வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் தமது சுய விவரங்களுடன் 28.12.2016 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்
(ஆண், பெண் இருபாலாரும்)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 6693, 021 222 7962

**FRENCH LANGUAGE CENTRE**
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்க்கான...
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : France இல் ஆசிரியர் பயிற்சி - 2007
DELF A1, A2,B1 இல் 100 % சித்தி. இதுவரை 1173 மாணவர்கள்
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம் 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம் PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல். CD, BOOKS பாவனை....
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து.....
செல்வோர் : யாழ். வன்னி, பிறமாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.
ஆரம்பம் 31.12.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகைபிரதக்கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)




**Rooms For Rent**

| | AC | Non AC |
|---|---|---|
| 1 Bed | 2000 | 1500 |
| 2 Bed | 2500 | 2000 |
| 3 Bed | 3000 | 2500 |

021 - 222 2330
Conditions apply
Uthayan Guest
Address:- #20 Kannathitti Lane,Jaffna.

**வேலைவாய்ப்பு**

பியகம, கடுவெல, கடவத்த, நிட்டம்பு அமைந்துள்ள ஜாம், பீம், பிஸ்கட், கிளவுஸ், பொலுத் தீன் போன்ற தொழிற்சாலைகளுக்கும் 18 -50 வரை ஆண், பெண் உடனடியாகத் தேவை. சேவை நேரம் 12 மணித்தியாலம் / 8 மணித்தியா லம். சம்பளம் 35000/= வரை பெறலாம். உணவு தங்குமிடம் வழங்கப்படும். சிங்களம் பேசுவது அவசியம் இல்லை. நண்பர்கள், குழுக்கள் ஒரே இடத்தில் ஒரே தொழிற்சாலையில் சேவை செய்யலாம்.
077 556 1880
No. 137/2/1 Colombo Road, Kegalla

அலுவலக எழுத்தாளர், உதவி எழுத்தாளர் பதவிகளுக்காக (A/L பங்கு பற்றிய 18-35 வயதுடைய பெண்கள் தேவை) யாழ்ப்பாணம், மன்னார், ஹலாவத்தை, புத்தளம், வவுனியா, கண்டி, நுவரெலிய, பதுளை, பண்டாரவளை எமது நிறுவனங்களுக்கு. சம்பளம் 20000/= வரை பெறலாம். (14 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும். கேகாலையில் உணவு, தங்குமிடம் இலவசம்)
077 600 0507
No 137/2/1 Colombo Road,Kegalla

உழைப்பால் உயர்ந்திடு வாழ்வை வெற்றி பெற இலங்கையில் மிக பிரபல்யமான நிறுவனங்களில் மனேஜர் கணக்காளர், மேற்பார்வையாளர் கெஸியர், இயந்திர பார்வையாளர் பாது காப்பு உத்தியோகஸ்தர், வாகன சாரதிகள், ஒபிசர் மற்றும் ஹொட்டல், ரூம் போய் , கிச்சின், ஹெல்பர், ஸ்டுவட், வெய்ற்றர் மற்றும் நேசிங் , ஸ்ரோர் கீப்பர், மார்க்கட்டிங் மற்றும் ஜாம், டொபி, சொக்லட், பொலித்தீன் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, தயாரிப்பு, பொதியிடல் போன்ற துறைகளுக்கு 18 -55 வயதுடைய ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தொழில் அடிப்படையில் உணவு, தங்குமிடம் செய்து தரப்படும்.
077 069 9492
No 157, Thekka Waththa, Vavuniya

**NEC**
1. பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி
2. மணிக்கூட்டு வீதி,யாழ்நகர்
A/L 2019
கலை, வர்த்தகம் , தொழில்நுட்பம் பிரிவு -I
ஆரம்பம்:-01/01/2017 Sun 9.00 am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
T.P:-0774696695

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் உள்ள ஒன்றே முக்கால் (1 3/4) பரப்புக் காணியுடன் கூடிய நவீன முறையில் அமைக்கப்பட்டு கொண்டிருக்கின்ற வீட்டின் கட்டடம் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 659 0322, 077 324 6663, 0061 420 344 582

**JCB வாடகைக்குண்டு**
JCB வேலைகளுக்கு வாடகைக்கு உண்டு.
077 860 0093

**இணைந்த கணிதம்**
A/L 2017, 2018 & 2019
Group Classes
Mr.T.Suganthan B.Sc
Navalar Road, Jaffna.
076 672 5869

**Personal Class**
இரசாயனவியல் (A/L)
2017, 2018, 2019,
Repeat Batch
சி.அங்கஜன் B.Sc (Chem.Sp)
077 618 9610

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


உதயன்
நத்தார் சிறப்பிதழ்
25.12.2016



அனைவருக்கும் இனிய நத்தார்,
புதுவருட வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்
ஒளி அழகனின்
British College Of Beauty Studies
Since 1989
BCBS Beauty Studies
இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி
அழகுக்கலை
தையற்கலை
சமையற்கலை
Computer
கேக்ஐசிங்
ஆங்கிலம்
Ladies Skills Development
குறுகிய கால பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
3,6,மாத கால முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
எங்களிடம் எந்த பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் எப்பகுதியிலும் சுயமாக உரிய தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
20ற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பொருத்தமான டிப்ளோமா பாடநெறிகள்
Kathooriyar Road Jaffna 076 - 7011645 Palaly Road Thirunelvely Jaffna




அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

# தலைமுடி அதிகமாக உதிர்கிறதா?
# தலைமுடி பிரச்சினையா?
# ஆரோக்கியமான களங்கமற்ற சருமம் வேண்டுமா?

BIOTINEX E இன் துணைகொண்டு நிரந்தரமான அழகினைப் பெற்றிட இன்றே பாவியுங்கள்.

பண்டைய காலத்தை விட தலைமுடி உதிர்வு தலைமுடி நுனி வெடிப்பு இவை இப்போது அதிகளவில் இருந்து வருகின்றது. என்ன காரணம் என வினவுகின்றீர்களா?

- தலைமுடிப் பராமரிப்பு குறைவு
- நாகரிக மோகத்தினால் தேவைப்படும் எல்லா எண்ணெய்களையும் நாளுக்கு நாள் பாவிப்பது.
- இரசாயனக்கலவை கொண்ட பல வர்ணக் கலவை பாவிப்பது.
- செயற்கை சிகை அலங்காரங்கள்
- முறையற்ற உணவு பழக்கம்
- அதிக மன அழுத்தம்
- உள ரீதியான பாதிப்புக்கள்

இப்படியான முறைகேடான செயற்பாடுகளினால் நாம் நம் தேகாரோக்கியமான கூந்தலை இழக்க நேரிடலாம். ஆகையினால் நாம் எப்போதும் சரியான முறையான பராமரிப்பினை நம் தலைமுடிக்கு அழிப்பது நல்லது.

நாம் உட்கொள்ளும், உணவு உயிர்ச்சத்துக்கள் அடங்கியதாக இருப்பது நல்லது. கிடைக்கத் தவறிய உயிர்ச்சத்துக்களை சிறந்த தயாரிப்பான BIOTINEX E போன்ற வில்லைகளை பாவிப்பதன் மூலம் பெற்று குறுகிய காலப்பகுதியில் நல்ல பிரதிபலனை எம்மால் பெற முடிகின்றது. விசேடமாக தலைமுடி வளர்ச்சிக்கு தேவையான Bionutra formula அடங்கிய தரமுயர்ந்த சிறந்த தயாரிப்பாகும்.

இந்த வில்லைகளை தினந்தோறும் காலை மாலை உணவின் பின் உட்கொண்டு வர நாம் இழந்த தலைமுடி சருமப்பொலிவு எல்லாவற்றையும் திரும்பப் பெறும் வாய்ப்பு கிட்டுகிறது. மென்மையான மிருதுவான சருமத்தினை பெற்றுக் கொடுக்கும்.

செயற்கை அழகைவிட நம் இயற்கை அழகே அழகு. ஆகையினால் நாம் அனைவரும் இயற்கை அழகை பெறும் வழிமுறைகளை கையாள்வது சிறந்தது. இதற்கு இயற்கை மூலிகைகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த தயாரிப்பு களை இன்றே நாடுங்கள்.

உங்கள் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவு பெற BIOTINEX E வில்லைகள் என்றும் உறு துணையாகும். 15 வருட காலத்தினை பூர்த்தி செய்துள்ள இத் தயாரிப்புக்கள் என்றென்றும் எம் பாவனையாளர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு சிறந்த தயாரிப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கோதுமை விதை எண்ணெய், சன்ஸ்கிரீன், விட்டமின் E, சிலிக்கோன் கண்டிசனர் இந்த மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிறந்த ஒரு எண்ணெய் RIAL E (HAIR OIL) ஆகும். தலை முடியின் அடி முதல் நுனி வரை வழங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவசியமா்ன கேசப் பராமரிப்பு பொருள்களின் கலவை இதுவாகும். ஸ்கால்ப் மஸாஜ் முறையில் தலையில் தடவி விரல்களால் 5-10 நிமிடங்கள் மஸாஜ் செய்து வர தலைமுடியின் வேர்களுக்கு நல்ல போசாக்கு கிடைக்கும்.

நாம் எப்போதும் தலை முடிகளுக்கு மட்டுமன்றி முடிவேர்களுக்கும் முடியின் நுனிகளுக்கும் எண்ணெய் தேய்த்து மஸாஜ் செய்யப்பழகிக்கொள்ள வேண்டும். இப்படியான சரியான முறைகளை நாம் கையாள்வதனால் சிறந்த பிரதிபலனை எளிதில் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு தலைமுடி நுனி உடைதல் தலைமுடி வெடிப்பு தலைமுடி நிறமாற்றம் இவை யும் படிப்படியாக நிவர்த்தி செய்யக் கூடிய ஒரு சிறந்த கலவை தான் RIAL E (HAIR OIL). இன்றைய நாள்களில் பெண்களுக்குரிய தனி அழகினை மெருகூட்டுவது அவளது கூந்தல் தான். ஆகவே தான் பெண்கள் பல செயற்கை இரசாயன மூலிகைகளைக் கொண்ட தயாரிப்புகளை நாடி அதன் மூலமாக பல விளைவுகளை எதிர்நோக்குகின்றார்கள். அத்தோடு நாம் விரைவாக எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்ப்பதை கைவிட்டு எப்போதும் இயற்கை தயாரிப்பினை நாடுவது சாலச் சிறந்தது.

மேலதிகமாக சூரியக்கதிர்களிலிருந்து தலைமுடியின் நிறத்தை அதிகளவில் பாதுகாக்கும் தன்மை RIAL E (HAIR OIL) இன் ஒரு தனி சிறப்பம்சமாகும்.

நிஜமான போசாக்கிற்கு நிஜமான தீர்வு என்பது போல பல வர்ணங்களை தலை முடிக்கு பூசி அதன் விளைவுகளை எதிர்நோக்காமல் என்றும் தலைமுடியின் இயற்கை நிறத்தினை தனதாக்கி நம் அழகினை மெருகூட்டுவோம்.



# நிறைந்த வாழ்வு வாழ நமக்கு வழிவகுக்கும் கிறிஸ்மஸ்



கிறிஸ்தவ உலகம் முழுவதும் 2016ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு பெருவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் நன்மனது கொண்ட அனைவர்க்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நாம் மிகுந்த மகிழ்வடைகிறோம்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன்று இனங்க்ளை - மதங்களை - நாடுகளை கடந்த ஓர் உலகப் பெரு விழாவாக மாறிவிட்டது. எந்த வேறுபாடுமின்றி உலக மக்கள் அனைவரும் தம் தேவைகளுக்கு ஏற்றவாறு இவ் விழாவைக் கொண்டாடத் தொடங்கியுள்ளனர் என்பதே இங்கு உண்மையாகும். இந்தப் பெருவிழாவை ஆன்மிகம் நிறைந்ததாக - அர்த்தம் உள்ளதாக - அளவிற்கு அதிகமான ஆடம்பரம் அற்றதாக அமைப்பதே சிறந்தது. வெடிகளோ - வேடிக்கைகளோ - கொண்டாட்டங்களோ கோலாகலங்களோ - அளவோடு அமையட்டும் என்பதே எமது விருப்பமாகும். அன்று கிறிஸ்து பிறந்தபோது உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் நல்மனதோர்க்கு அமைதி உண்டாகுக (லூக்கா 2:13-14) என்று நல் மனதுடையோரின் தேவை பற்றியே பேசப்பட்டது. இன்றும் அத்தேவை பற்றியே பேசப்படவேண்டி உள்ளது. எமது நாட்டின் இன்றைய அரசியல் பொருளாதார சுபீட்ச வாழ்விற்கு அடிப்படையாகத் தேவைப்படுவோர் நன்மனதுடையோராவர். இன்று இலங்கை நாடடிற்கு நன்மனதுடையோரின் அர்ப்பணத்துடனான உழைப்பு - திறந்த மனதுடனான பங்களிப்பு - விருப்பு வெறுப்புக்களைக் கடந்த ஒத்துழைப்பு - யார் எதிர்த்தாலும் இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புவோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை என்பனவே தேவையாகும்.

இன மத மொழி பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒருமைப்பாடும் ஒற்றுமையும் எம்மிடையே தோற்றுவிக்கப்பட வேண்டும். இதுவே நாட்டின் நீடித்த நிலையான அமைதிக்கு அடிப்படையாக முடியும்.

நல்லெண்ண அரசு - புதிய அரசியல் அமைப்பு - மதங்கள் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பன பற்றி எல்லாம் பேசப்படும் போது நல்மனது கொண்டவர்களே எமக்கு அவசியம்; தேவையாகும். நன்மனது கொண்டவர்கள் எம்மிடையே தோன்ற வேண்டும் - எல்லோர் மனதுகளையும் நன்மனது கொண்ட மனதுகளாக மாற்ற வேண்டுமெனச் செபிப்பதே எமது பணியாக வேண்டும்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையானது 2017ஆம் ஆண்டை புனித யோசவ் வாஸ் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண மறை மாவட்டம் புனித யோசவ் வாஸ் அடிகளாரின் அர்ப்பணிப்பான பணியை நிறைவாகப் பெற்ற ஒரு மறைமாவட்டம். எமது மறை மாவட்ட மண்ணின் பல இடங்களில் அவர் பாதம் பதிந்துள்ளது என்பது சிறப்பான ஒரு விடயமாகும். குறிப்பாக சில்லாலை மண் அவருக்குப் பாதுகாப்பளித்து பெருமைப்பட்டு நிற்கிறது. சில்லாலையில் யாழ் மறைமாவட்ட யாத்திரைத் தலத்தை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தப்பணியை நிறைவு செய்ய அனைவரும் முன்வரவேண்டும் என அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

கிறிஸ்து பிறப்பு விழவானது மகிழ்வை - அன்பை - அமைதியை - பகிர்வையும் நமக்கு நினைவூட்டி அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வு வாழ நமக்கு வழிவகுப்பதாக. இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக

மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
யாழ் ஆயர்



## புனித நத்தார் தின வாழ்த்துச் செய்தி

இன்றைய தினத்தில் இயேசு நாதரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்ற அனைத்து கிறிஸ்தவ பக்தர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புனித நத்தார் தினமானது கிறிஸ்தவ மக்களின் முக்கிய தினங்களில் ஒன்றாகும். இயேசு நாதர் தமது வாழ்நாள் முழுவதிலும் மக்களுக்கு அன்பு காட்டுவதற்கான முன்மாதிரியினை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டி சமூகத்திலே புறக்கணிக்கப்பட்ட மக்களின் பக்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தமது முன்மாதிரிக்கேற்ப அன்பு, தார்மீகத் தன்மை மற்றும் துன்பத்திற்கு ஆளானவர்களுக்கு கருணை காட்டுதல் என்பவற்றினை தமது வாழ்க்கையுடன் இணைத்து வாழ வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் அன்னார் போதித்துள்ளார்கள்.

நாம் புனித நத்தார் தினத்தைக் கொண்டாடும் போது எமது நாட்டில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கும் உதவிகளை வழங்குவோம். அவ்வாறான மக்களை அரவணைத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளுமாறு உங்களிடம் நான் வேண்டுகிறேன்.

மேலும், இப்புனித நத்தார் தினத்திலே எமது நாட்டிலே நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றினை ஏற்படுத்துவதற்காக ஒற்றுமையாக பணியாற்றுவதற்கு முன்வருமாறு இலங்கைவாழ் அனைத்தின மக்களிடமும் நான் அழைப்பு விடுக்கின்றேன். புனித நத்தார் வாழ்த்துக்கள்!

**இரா. சம்பந்தன்**
இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்.

# இறைவனின் ஆவியால் புதுப்பிக்கப்பட்ட இறைவன் இயேசு

பெத்லகேமில் இயேசுவின் பிறப்பினூடாக மனித வரலாற்றில் இறைவன் பிரசன்னமாகிய நிகழ்வே கிறிஸ்மஸ் கொண்டாட்டமாகும். இறைவனின் இந்த மனிதஅவதார மறைநிகழ்ச்சி அவர் மனுக்குலத்தின்மீது கொண்ட ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தி நிற்கிறது. தம் ஒரேமகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவனும் அழியாமல் நிலைவாழ்வுபெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:15). இயேசு தனது மனித அவதார மறை நிகழ்ச்சிக் கொண்டாட்டத்தினூடாக தான் அளிக்கும் நிறைவாழ்வை அனுபவிக்குமாறு எல்லாருக்கும் அழைப்பு விடுக்கின்றார். எனவே கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்பது வெறுமனே ஒருநடந்து முடிந்த நிகழ்வை நினைவுபடுத்தும் ஒன்றாக அமைந்துவிடக்கூடாது. மாறாக,எமது வாழ்வின் உண்மையானபெறுமதியைஆழமாகஉணர்ந்து,அதன் முழுமையைநாம் வாழும் சமுதாயத்தில் சான்றுபகரும் நிகழ்வாகும்.

ஆகவே இயேசுவை எமதுவாழ்விலும் எமதுகுடும்பங்களிலும்.எமதுசமுதாயத்திலும் வரவேற்கவேண்டிய தேவையைக் கிறிஸ்து பிறப்புவிழா எமக்கு நினைவூட்டுகிறது. பெத்லகேம் மாட்டுத்தொழுவத்தில் நிகழ்ந்த இந்தஎளிமையானபிறப்புநிகழ்வு முழு உலகிற்கும் மனமாற்றத்திற்கானஅழைப்பைவிடுக்கும் அதேவேளையில், அடுத்தவரின் தேவையில் பாரபட்சமற்றவகையில் உதவிக்கரம் நீட்டும் மனநிலையைக் கொண்டுவாழவும் எம்மை அழைக்கின்றது. இறைவனின் தூய திட்டத்திற்குஎதிரான அனைத்துவிடயங்களிலும் நாம் மாற்றம் கண்டு,அமைதியின்,நல்லிணக்கத்தின்,ஒப்புரவின் தூதுவர்களாகஎம்மைநாம் அர்ப்பணிப்போமாக. இயேசுஎன்னும் அழகானகொடைக்காக இறைவனுக்கு நன்றிகூறும் நாம், இறைவனின் ஆவியால் புதுப்பிக்கப்பட்டு இறைவன் இயேசுவுக்கு வாழ்வினால் சாட்சிபகரும் மக்களாக வாழ வரம் கேட்போம்.

அனைத்து இறைமக்களுக்கும்,எமதுநாட்டுமக்களுக்கும்,நல்லெண்ணம் கொண்டஅனைவருக்கும் இறைஆசீர் நிறைந்தகிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை .

# ஒரு புதிய உலகம் பிறக்கின்றது



இன்று கிறிஸ்மஸ் தினம். இறைவன் கிறிஸ்துவில் மனுக்குலத்தைத் தேடிவந்த தினம். கிறிஸ்து பிறப்பைச் சித்திரிக்கும் மத்தேயு நற்செய்தி நூலாசிரியர் விண்தூதனால் யோசேப்புக்குக்கூறும் செய்தியில் சொல்லுபவை எமக்கு முக்கிய அர்த்தத்தைத் தரக்கூடும். பிறக்கும் குழந்தையின் பிறப்பு ஆவியானவருடையது. அதாவது, மானுட எண்ணங்களுக்கும்வரையறைகளுக்கும் அப்பாற்பட்டதாக இயேசுவின் பிறப்பு தரப்படுகிறது. குழந்தை ஆவியானவரால் உருவானது என்று சொல்லப்படுகையில் கடவுளுடைய ஆவியானவர் புதிதாகச் செய்பவற்றை அது சுட்டிநிற்கின்றது. திருமறை முழுவதும் இவ்வுண்மை பரவிக்கிடக்கின்றது.

ஆதியாகமம் 1ஆம் அதிகாரம் கூறுகின்றது, கடவுளுடைய ஆவி ஒரு புதிய உலகைப் படைக்கின்றது, புதிய வானமும் புதிய பூமியும் கடவுளுடைய ஆவியினால் படைக்கப்படுகின்றன. அதே கடவுளுடைய ஆவியே ஜலத்தை இழுத்து கடவுளுடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்த விடுதலைக்குள் கொண்டு செல்லவைக்கின்றது என்கின்றது யாத்திரை ஆகமம். கடவுளுடைய ஆவியே இறைவாக்கினர்களை, அப்போஸ்தலர்களைக் கீழ்ப்படிதலுக்கூடாகப் பல அரிய காரியங்களைச் செய்யவைக்கின்றது.

இதைச் செய்வதற்கு பிறக்கப்போகும் குழந்தைக்குத் தரப்படும் இரண்டு பெயர்களும் முக்கியமானவை. முதலாவது, இயேசு என்ற பெயர். இது மீட்க என்ற அர்த்தம்பெறும் சொல்லை அடியொற்றிவருகின்றது. திருமறையில் யோசுவா, ஏசாயா, ஒசேயா போன்ற பெயர்களையுடையவர்களது அர்த்தமும் இதுவே. எவ்விதம் இவர்கள் இஸ்ரவேலரது விடுதலைக்காக ஊடகங்களாகத் திகழ்ந்தார்களோ, அவ்வண்ணம் இப்பொழுது இயேசு முழுமனுக்குலத்துக்கும் விடுதலை அருளுபவராகக் காட்டப்படுகின்றார்.

இரண்டாவது பெயர் இம்மானுவேல், கடவுள் நம்மோடிருக்கிறார். மீட்கின்றவர் மனுக்குலத்தோடு இருக்கின்றவர். மானிடரின் அனைத்து நிலைபரங்களிலும் அவர்களோடிருப்பவர். எங்கெல்லாம் மக்கள் தேவையிலிருக்கின்றார்களோ அங்கெல்லாம் இயேசுவின் பிரசன்னம் கூட இருக்கின்றது. அந்தப் பிரசன்னம் குறைநீக்கும் பிரசன்னம். அது பாவம்நீக்கும் பிரசன்னம், அது பசிநீக்கும் பிரசன்னம், அது நோய்நீக்கும் பிரசன்னம், அது துன்பம்நீக்கும் பிரசன்னம், அது பயம்நீக்கும் பிரசன்னம், அது மரணம்நீக்கும் பிரசன்னம். ஆதலால் அது பலத்தை அருளும் பிரசன்னம், அது வாழ்வு இருக்கின்றது என்பதை நிரூபிக்கும் பிரசன்னம்.

குழந்தைக்குத் தரப்படும் இரண்டு பெயர்கள் மறுபடியும் இந்நாளில் எமக்கு நினைவூட்டப்படுகின்றது. மீட்பர் என்ற பெயர் எம்மைக்கொல்லும் அனைத்தினின்றும் எம்மை மீட்பவர் எமக்கிருக்கிறார் என்ற செய்தியை வழங்கும் அதேநேரத்தில், இம்மானுவேல் - கடவுள் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் நாம் ஒருபோதும் தனித்து விடப்படுவதில்லை என்ற நம்பிக்கையைத் தருகின்றது. ஆம். இந்தக் குழந்தையின் பிறப்பினால் ஒரு புதிய உலகு பிறப்பிக்கப்டுகின்றது. இயேசுவின் பிறப்பு புதிதாக்கலின் இரகசியத்தை எமக்கு இன்றும் எங்கள் உள்ளங்களில் ஏற்படுத்துகின்றது. இதுவே நற்செய்தி.

பேரருட்திரு கலாநிதி டீ.எஸ். தியாகராஜா
பேராயர், தென் இந்திய திருச்சபை

# கிறிஸ்மஸ் பெருவிழா நன்மனது கொண்ட உலக மக்கள் அனைவருக்குமான பெருவிழா



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இன்று கிறிஸ்தவ உலகம் முழுவதும் 2016 ஆம் ஆண்டுக்குரிய கிறிஸ்து பிறப்பு பெருவிழாவைக் கொண்டாடுகிறது. அவர்களோடு இணைந்து கிறிஸ்மஸ் பெருவிழா வாழ்த்துக் களை உதயன் ஆசிரியர் - பணியாளர்கள் - மற்றும் வாசக அன்பர்களுக்கும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.
உதயன் வாசக அன்பர்களுக்கு மட்டுமல்ல உலகெங்கும் உள்ள நன்மனது கொண்ட அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

### நன்மனது கொண்ட அனைவர்க்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்கள்

அன்று கிறிஸ்து பிறந்தபோது வானதூதர் உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் நல்மன தோர்க்கு அமைதி உண்டாகுக (லூக்கா 2:13-14) என்ற கீதத்தைப் பாடி நல்மனதுடையோர் அனைவர்க்கும் கிறிஸ்து பிறப்பின் செய்தியினை அறிவித்தனர். அன்று நன்மனது கொண்டோரின் தேவை பற்றியே பேசப்பட்டது. இன்றும் அத் தேவை பற்றியே பேசப்படவேண்டி உள்ளது.

### யாழ். ஆயரின் கிறிஸ்மஸ் செய்தியிலும் நன்மனதுடையோர்

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் தமது கிறிஸ்மஸ் செய்தியில் இந்த நன்மனதுடையோர் பற்றியே பேசுவது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். அவர் தம் செய்தியில் எமது நாட்டின் இன்றைய அரசியல் பொருளாதார சுபிட்ச வாழ்வுக்கு அடிப்படையாகத் தேவைப்படுவோர் நன்மனதுடையோராவர். இன்று இலங்கை நாட்டுக்கு நன்மனதுடையோரின் அர்ப்பணத்துடனான உழைப்பு - திறந்த மனதுடனான பங்களிப்பு - விருப்பு வெறுப்புக்களைக் கடந்த ஒத்துழைப்பு - யார் எதிர்த்தாலும் இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புவோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை என்பனவே தேவையாகும். இன மத மொழி பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒருமைப்பாடும் ஒற்றுமையும் எம்மிடையே தோற்றுவிக்கப்பட வேண்டும். இதுவே நாட்டின் நீடித்த நிலையான அமைதிக்கு அடிப்படையாக முடியும் என்கிறார்.
நல்லெண்ண அரசு - புதிய அரசமைப்பு - மதங்கள் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பன பற்றி எல்லாம் பேசப்படும் போது நல்மனது கொண்ட வர்களே எமக்கு அவசியம் தேவையாகும். நன்மனது கொண்டவர்கள் எம்மிடையே தோன்ற வேண்டும் - எல்லோர் மனதுகளையும் நன்மனது கொண்ட மனதுகளாக மாற்ற வேண்டும் எனச்செபிப்பதே எமது பணியாக வேண்டும் என அவர் மேலும் தெரிவிக்கிறார்.
இலங்கை இரு மொழிகளை மட்டும் பேசும் இனங்க ளைக் கொண்ட ஒரு நாடு. சுதந்தரம் பெற்ற காலம் முதல் சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே நிலவிய இனக்குரோதங்கள் சங்கிலித் தொடராக இன மோதல்களையே காலத்திற்குக் காலம் ஏற்படுத்தி இருக்கின்றது. பல தசாப்தங்களாகத் தொடரும் இன மோதல்கள் தீவிரமடைந்து காணப்பட்ட போதும் அண்மைய பதிவுகள் தென்னிலங் கையின் சில மனிதாபிமான மனிதர்களும் உள்ளதாகவே சுட்டிக் காட்டுகின்றன. அங்கும் நன்மனதுடையோர் உள்ளனர். அவர்களை ஊக்குவிப்பதும் அவர்கள் போன்றோரை இன்னும் அதிகமாக உருவாக்க வேண்டி யதும் இன்றைய காலத்தின் தேவையாகும் என்று அவரின் செய்தி நிறைவுறுகிறது.

### யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கோர விபத்தின் மூலம் நல்லிணக்கம்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் பல சிங்கள உயிர்களைக் காவு கொண்டபோதும் அது இரு இனங்களுக்கு இடையிலான மனிதாபிமானத்தை எற்படுத்தியுள்ளது. இந்த விபத்தின் போது யாழ்ப் பாண மக்கள் நடந்து கொண்ட விதம் தென்னிலங்கையில் அதிகம் பேசப்பட்டுள்ளது. இன முரண்பாடுகளைக் கடந்து இரு உயிர்களை காப்பாற்றும் முயற்சியில் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஈடுபட்டுள்ளதாக பெரும் பான்மை சிங்கள சமூகத்தவர் சமூக வலைத்தளங்களில பதிவேற்றி வருகின்றனர்.
இந்த அனர்த்தத்தின் மூலம் ஏற்பட்ட நல்லிணக்கம் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான ஆரம்ப புள்ளியாக அமைய வேண்டும். இந்த வழியிலே இன்னும் அதிக தூரம் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பயணிக்கவேண்டும்.
யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் அரச பேருந்தும் வானும் மோதியதில் 11 பேர் ஸ்தலத்தில் உயிரிழந்திருந்த செய்தி அனைவரும் அறிந்த செய்தியாகும். இக்கோர விபத்தில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காக விபத்து இடம்பெற்ற இடத்தில் 11 மெழுவர்த்தி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதும் அனைவரும் அறிந்த செய்தியாகும். தமிழர்களின் இந்த மனிதாபிமான நடவடிக்கையானது தென்னிலங்கை மக்களின் மனங்களை சிந்திக்கத் தூண்டியுள்ளது. தமிழர்கள் எல்லோரும் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்ற எண்ணப்பாட்டில் இருந்தவர்களின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.
இந்த நிலைப்பாடு தொடர்பில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக பல பதிவுகள் சமூக வலைத்தளங்களிலும் முகநூலிலும் பதியப்பட்டுள்ளது. அப்பதிவுகளின் சில பகுதிகளை இங்கு நோக்குவது பொருத்தமானது. உயிரிழந்த 11 பேரும் சிங்களவர்கள், உயிரிழந்தது தமிழ் பிரதேசத்தில், விபத்தின்போது இருவரையாவது மரணத்தில் இருந்து காப்பாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதும் தமிழர்கள் உயிரிழந்த சிங்களவர்களுக்காக அஞ்சலி செலுத்தி துன்பத்தை பகிர்ந்துக் கொண்டதும் தமிழர்கள். அங்கு மனிதாபிமானம் நட்பு மற்றும் தோழமையே தலை தூக்கியது. தமிழ் சிங்களம் என்ற பேதமற்ற இலங்கையர்களாக செயற்படுவதற்கு இந்த 11 பேரின் உயிரிழப்பானது காரணமாக இருக்கட்டும். மேலும் இந்த விபத்தின் போது யாழ் மக்கள் நடந்து கொண்ட விதம் பற்றி உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நன்றி தெரிவித்திருந்தமையும் அங்கு கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

### திருத்தந்தையின் கிறிஸ்தவ நம்பிக்கை குறித்த கிறிஸ்மஸ் சிந்தனை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் கிறிஸ்மஸ் பெருவிழாவிற்கு தயாரிக்க உதவும் இறைவாக்கினர் எசயாவின் வார்த்தைகளை மையமாக வைத்து தன் சிந்தனைகளை பகிர்ந்துள்ளார். இச்சிந்தனை கிறிஸ்தவ நம்பிக்கை குறித்த கிறிஸ்மஸ் மறையுண்மையை இவ்வுலகிற்கான நம்பிக்கையின் வருகையாக தியானிக்க வழி நடத்திச் செல்கின்றது. தன் வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக கன்னிமரியாவிடம் தன் மகன் பிறப்பெடுக்க வைத்ததன் வழியாக இவ்வுலகில் தன் அரசாட்சியை நிலைநாட்டியதுடன் முடிவற்ற வாழ்வை நோக்கி தம் நம்பிக்கைகளையும் திசை திருப்பினார். இந்த நம்பிக்கையானது உண்மைத்தன்மையுடையது மட்டுமல்ல நம்பகத்தன்மையும் கொண்டது. இந்த நம்பிக்கையானது மீட்டு காப்பாற்றுகிறது. ஏனெனில் மனித உடலெடுத்து வந்ததன் வழியாக இயேசு தந்தையாம் இறைவனை நோக்கிச் செல்லும் வழியை நமக்குத் திறந்துள்ளார்.
இந்த நாள்களில் கிறிஸ்மஸ் குடிலை நம் வீடுகளிலும் கோவில்களிலும் அமைக்கும்போது, அந்தக் குடில் தன்னுள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் செய்தி குறித்து கவனமுடன் செவிமடுப்போம். நாம் எவ்வளவு சிறிய வர்களாக தாழ்நிலையுடையவர்களாக இருந்தாலும், நம் ஒவ்வொருவருக்கும் கடவுளின் அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதை பெத்லேகம் என்ற சிற்றூரில் நாம் பார்க்கிறோம். இறை வார்த்தையில் முழு நம்பிக்கைக் கொண்டிருந்த அன்னை மரியா அவர்களில் நாம் நம்பிக்கையின் அன்னையைக் காண்கிறோம். புனித யோசேப்பும் நம்பிக்கையின் மனிதரே. அவரே இயேசுவுக்கு அப்பெயரை இட்டார். அதற்கு 'இறைவன் மீட்பளிக் கிறார்' என்று பொருள். வான தூதர்களால் அறிவிக்கப்பட்ட அமைதியின் செய்தி இடையர்களால் மகிழ்வுடன் செவிமடுக்கப்பட்டது. இறை மீட்பரின் பிறப்புக் குறித்த நற் செய்திக்கு நம்மைத் திறந்தவர்களாக இருந்து, அவர் கொண்டுவந்த புனிதத்துவம் அமைதி மற்றும் நீதியின் அரசைக் குறித்த நம்பிக்கையை புதுப்பிப்போமாக.



மேலும், இந்த மறைக்கல்வி உரையின்போது, உரோம் நகரின் ரொட்டித் தயாரிப்பாளர்கள் இணைந்து ஒன்றரை மீற்றர் உயரம் கொண்ட ரொட்டியாலான கிறிஸ்மஸ் குடில் ஒன்றைத் திருத்தந்தைக்குப் பரிசாக அளித்தனர். அவர்களுக்கு நன்றி கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார்.

### கிறிஸ்மஸ் கிறிஸ்து பிறப்பு பெருவிழா

கிறிஸ்மஸ் அல்லது கிறிஸ்து பிறப்பு பெருவிழா - நத்தார் என்பது ஆண்டு தோறும் இயேசு கிறித்துவின் பிறப்பைக் குறிக்க கொண்டாடப்படும் பெருவிழாவாகும். நத்தார் என்பது கிறிஸ்மஸ் விழாவிற்கான போர்த்துக்கேய மொழிச் சொல்லின் தமிழாக்கமாகும். இவ் வார்த்தை இன்றும் இலங்கையில் பயன்பாட்டில் இருந்தாலும் கிறிஸ்மஸ் என்பதே முதன்மையாக உள்ளது.
இவ்விழாவின் கொண்டாட்டங்களில் கிறிஸ்மஸ் குடில்களை வீடுகளிலும் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் அமைத்தல் - கிறிஸ்மஸ் தாத்தா பரிசு வழங்கல் - கிறிஸ்மஸ் தாத்தா வீடுகளுக்கு வரல் - கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அனுப்புதல் - கிறிஸ்மஸ் பரிசுப் பொருள்கள் பரிமாறல் - கிறிஸ்மஸ் மரம் சோடித்தல் - கரோள் எனப்படும் கிறிஸ்மஸ் கீதம் இசைத்தல் - கிறிஸ்மஸ் விருந்து பரிமாறல் எனப்பல விடயங்கள் பொதுவாக அடங்கும்.
கிறிஸ்மஸ் இன்று உலகின் பெரும்பா லான நாடுகளில் கிறிஸ்தவத்தினது பரவல் காரணமாகவும் அக்கொண்டாட்டங்களில் காணப்படும் மேற்குலக நாகரிகங்களின் கவர்ச்சி காரணமாகவும் கொண்டாடப்படுகிறது.

### இலங்கையின் வரலாற்றில் முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகை

கிபி 6வது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கொஸ்மாஸ் இண்டிகொப்லெய்ட்ஸ் எழுதிய நூலில் அக்காலப் பகுதியில் தப்ரபேனில் கிறிஸ்தவர்கள் வசித்ததாகவும் அவர்களுக்கு ஒரு தேவாலாயம் இருந்ததாகவும் அங்கு ஒரு பாதிரியார் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கையில் அனுராதபுர இராச்சியத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாக 1913 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் நடைப்பெற்ற அகழ்வாராய்சிகளில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு சிலுவைகளாலும் வவுனியாவுக்கு அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட திருமுழுக்குத் தொட்டியின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பண்டுகாபய மன்னர் புதிய நகரைக் கட்டுவிக்கும் போது தேவாலயம் ஒன்றை கட்டி கொடுத்ததாக மகாவம்சம் கூறும் யோணா பிரிவினர் நெஸ்டோரியன் கிரேக்க மரபு வழி கிறிஸ்தவர்கள் எனக் கருத்தப்படுகிறார்கள். அக் காலத்தில் இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடினார்களா என்பதற்கு ஆதாரங்கள் எதுவும் கிடையாது.
இலங்கையில் வரலாற்றில் எழுத்தப்பட்ட முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகை 1505 இல் இலங்கைக்கு கத்தோலிக்கர்களான போர்த்துக்கேயர் வருகையை அடுத்தே நடைபெற்றது. 1505 நவம்பர் 15 இல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்த லோரோன்சோ டி அல்மேதா தலைமையிலான போர்த்துக்கேய மாலுமிக் குழுவினர் அங்கு தமது கப்பலை பழுதுபார்க்கும் பணிகளிலும் கோட்டே அரசனுடன் தொடர்புகளையும் மேற் கொண்ட அதே வேலை கொழும்புத் துறைமுகத்தில் சிறிய தேவாலயம் ஒன்றை கட்டினார்கள். இத்தேவாலயத்தில் 1505 முதலாவதாக கிறிஸ்மஸ் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்கள்.
2016ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பில் நல்மனதுடையோர் அன்று கிறிஸ்து பிறந்தபோது வானதூதர் பாடிய உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் நல்மனதோர்க்கு அமைதி உண்டாகுக (லூக்கா 2:13-14) என்ற கீதத்தை நாமும் இன்றும் பாட அழைக்கப்டுகிறோம். இப்பாடல் மூலம் நன்மனது கொண்டோர் இலங்கை நாட்டில் பெருகி இலங்கையில் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வும் நீடித்த அமைதியும் எல்லோருக்கும் கிடைக்க செபிப்போம்.



# இயேசு பிறந்த நன்னாளில்

## சாந்தி, சமாதானத்துடன் கூடிய மக்கள் ஆட்சி நிலவட்டும்

பி.ஏ.அந்தோனி மார்க்

இயேசு பிறந்த தினம் சகல கிறிஸ்தவர்களுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான பரிசுத்த தினமாகும். உலகத்தில் உள்ள சகல கிறிஸ்தவர்களும் இத்தினத்தை பரிசுத்த தினமாகவும் பக்தியுள்ள-மேன்மையுள்ள-சமய வழிபாடாகக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்மஸ் விழாவில் சிறப்புத்தன்மை என்னவென்றால், தற்காலத்தில் உள்ள பிரிவினைகளும் சிறையிருப்புக்களும் அகற்றப்பட்டு மக்கள் சாந்தியும் சமாதான சக வாழ்வுடனும் வாழ உதவி செய்வதாகும். ஆனால் இயேசுவின் பிறப்பின் நோக்கத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் ஒன்றும் இக்காலத்தில் நடைபெறுவதில்லை. எங்கும் கொலைகள். போர் அழிவுகள், குடி வெறிகள், கற்பழிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இந்நாளிலே இதற்கோர் எண்ணக்கருவை நாம் கொடுக்க வேண்டும். கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான தாற்பரியம் என்ன என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். மனிதம், இரக்கம், கிருபை, கருணை என்றால் என்ன என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். உலக மக்களுக்காகக் கடவுளின் குமாரன் இயேசு மனிதனாகப் பிறந்தார்.

மனித அவதாரம் எடுத்து வாழ்ந்த காலத்தில் அவர் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை, அளவிடமுடியாதவை. மனிதனின் இரட்சிப்புக்காகவும், நல்வாழ்வுக்காகவும் தம்மை சிலுவையில் பலியாக்கினார். அவர்களோடு உலகத்தில் வாழ்ந்த காலத்தில் மரித்தோரை உயிர்ப்பித்தார். குருடர்களைப் பார்வையடையச் செய்தார். செவிடர்களுக்கு செவிப்புலனைக் கொடுத்தார். ஊமைகள் பேசினார்கள். முடவர்கள் எழுந்து நடந்தார்கள். நோயாளிகள் சொஸ்தமடைந்தார்கள். அநீதியையும், அடிமைத்தனத்தையும் பகிரங்கமாக எதிர்த்தார்.

நீதிக்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடினார். உண்மையில் இந்த நத்தார் தினத்தை முன்னிட்டு உலகத்திலும் இலங்கையிலும் உள்ள சகல கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட ஞாபகார்த்த ஆராதனைகள் நடைபெறுகின்றன. 24 ஆம் திகதி நடு இரவில் மக்கள் குடும்பம் குடும்பமாகச் சென்று பிறந்த இயேசு பாலனையும் வணங்குவார்கள். இந்த இரவில் பல இடங்களிலும் நத்தார் கரோல் சேவைகளும் நடைபெறும். இயேசு பிறந்த சந்தோசத்தினால் வீடு வீடாக இன்னிசைப் பாடல்களுடன் பவனி வருவார்கள். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, பல மதத்தவர்களும் பல்லினத்தவர்களும் இப்படியான விழாவில் பங்குபற்றி ஆனந்தம் கொண்டாடு வார்கள். ஆடு, மாடுகளை வெட்டி சுவையான உணவுகளைச் சமைத்து தாங்கள் உண்பதுடன் உறவினர்களுக்கும் கொடுப்பார்கள். மதுபானத்தைப் பாவித்து மதிமயங்குவார்கள். ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக் களைக் கூறுவார்கள். விலை உயர்ந்த அன்பளிப்புக்களை ஒருவருக்கொருவர் கொடுத்து சந்தோசமடைவார்கள். கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களை அனுப்புவார்கள். கிறிஸ்மஸ் மரத்தை உண்டுபண்ணி அதில் வெளிச்சம் தரும் பல வர்ண மின்சார விளக்குகளை அந்த மரத்தைச் சுற்றி இணைத்து அழகுபடுத்துவார்கள். லூக்கா 2-7 இன் படி யூதேயா நாட்டில் உள்ள பெத்தலகேம் என்னும் தாவீதின் ஊரிலே அவள் தனது முதற்பேறான குமா ரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கிடைக்காமையால் பிள்ளையைத் துணியால் சுற்றி முன்னணியிலே கிடத்தினார்கள். லூக்கா 2:10 இல் தேவதூதன் ஆடு மேய்க்கும் இடையர்களைக் கண்டு பயப்படாதிருங்கள். இதோ எல்லா இனத்தாருக்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். லூக்கா 2:11. இன்று கர்த் தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக பெத்தலகேம் என்னும் ஊரிலே பிறந்திருக்கிறார் எனக் கூறினார். லூக்கா 2:16 இடையர்கள் தீவிரமாக வந்து மரியாளையும் ஜோசேப்பையும் முன்னணியில் கிடத்தி இருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். 03 வானசாஸ்திரிகள் நட் சத்திரங்களைப் பற்றிப் படித்தவர்கள். கிழக்கிலிருந்து வந்த நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து ஜெருசலேமிற்கு வந்து குழந்தை இயேசுவைக் கண்டு ஆராதனை செய்தார்கள். பொன், தூபம், வெள்ளி, மீறை போன்ற திரவியங்களை அன்பளித்துச் சென்றார்கள்.

தாவீதின் அரசன் இயேசு பிறந்துள்ளார் என்ற செய்தி ஏரோது மன்னனுக்கு கிடைத்தவுடன் அவன் பயந்து இயேசுவைக் கொல்ல வழிதேடினான். கர்த்தருடைய தூதன் அன்றிரவு யோசேப்புக்கு கனவில் தோன்றி, ஏரோது அரசன் குழந்தையைக் கொலை செய்யவிருப்பதால் இரவோடு இரவாக எகிப்து தேசத்துக்குப் போகும்படி கூறிய படியால் யோசேப்பு குடும்பத்துடன் எகிப்து தேசத்துக்குச் சென்றார். ஆனாலும், ஏரோது அரசன் இயேசுவைக் கொல்லும் நோக்கத்தில் இஸ்ரேல் தேசத்தில் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட சகல ஆண் குழந்தைகளையும் கொலை செய்தான். தாய்மாரின் அழுகைச் சத்தமோ தேசமெங்கும் பரவியது. லூக்கா 23-27 இயேசு கூறியவை வருமாறு:

மாயைக்காரர்களே வேதபாதகரே-பலிசேயர்களே உங்களுக்கு: ஐயா, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பாய் இருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரம் காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுசருக்கு முன்பாக நீதிமான்கள் எனக் காணப்படுகிறீர்கள். ஆனாலும் உள்ளத்திலே மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

மத்தேயு 5:3. இயேசு 'ஆவியில் எழுமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்' பரலோக இராச்சியம் அவர்களுடையது: எனக் கூறினார்.

மத்தேயு 19:23 அப்போது இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி ஐஸ்வரியவான்கள் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பது மிகவும் அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்' என்றார்.

மேலும் நல்லெண்ணம், நல்லொழுக்கம் மூலம் உருவாகும் ஏழ்மையான வாழ்க்கையானது. பொய்யான, நீதியற்ற முறையில் வஞ்சகமான முறையில் செல்வந்தராகி வாழும் வாழ்க்கையை விடச் சிறந்தது எனக் கூறினார். இயேசு வாழ்ந்து காட்டிய துர்நடத்தைகளை எதிர்த்துச் செய்த நற்கருமங்களை நாம் கைக்கொள்ள வேண்டும். ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உயர்ந்த மனித பண்புகள் நிறைந்த வாழ்க்கையை வாழ முயற்சிக்க வேண்டும். புது ஆடைகள் அணிந்து வீதிகளைச் சோடனை செய்து வீடுகளை அலங்கரித்து பல வர்ண மின்சார விளக்குகளை இணைத்து புசித்தும், குடித்தும் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதை விடப் பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதக்காரன்கூறுவது போன்று நல் வாழ்க்கை என்பது ருசியான சாப்பாடுகள் சமைத்துச் சாப்பிடுவ்து அல்ல. ஏழைகளுக்குத் தான தருமம் செய்து கோப சுபாவம் அற்றவர்களாய், பழிவாங்கும் மனமற்றவர்களாய், பிரிவினைகள் சாதி-சமய-பகைமைகளை மறந்து மனமாற்றம் அடைந்தவர்களாய் மாற வேண்டும். அப்போது நீதியும்-நியாயமும் - சமத்துவமும் நாட்டில் நிலைநிற்கும். கிறிஸ்மஸ் நற் செய்தியானது யாவருக்கும் சமாதானம் என்பதாகும். எனவே, இயேசுவின் சிலுவை மரணத்தையும் பாடுகளையும் நினைவு கூர்ந்து நல்மகிழ்ச்சி உடையவர்களாக ஜீவிப்பதோடு படித்தவர் பாமரர், ஏழை பணக்காரன் என்ற வேறுபாடுகளையும், இனம், மொழி, நாடு, நிறம் என்ற எல்லைகளையும் தாண்டி கிராமங்களிலும் நாட்டிலும் வாழும் சகல மனிதர்களும் சகல உரிமைகளுடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டும். மேலும் சிறைச்சாலையில் பல ஆண்டுகளாகத் துன்பம் அனுபவித்துவரும் சிறைக்கைதிகள் விடுதலை அடையவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தமது குடும்பங்களுடன் மீண்டும் இணைய வேண்டும். போரில் கணவர்களை இழந்த விதவை களும் ஊனமுற்றோர்களும் வீடு வாசல்களை இழந்து அநாதைகளாய் வாழ்பவர்களும் பூரண விடுதலைப் பெற்று சந்தோச சமாதானத்துடன் சக வாழ்வை பெற்று நீடுழி வாழ இறைவனை வேண்டி நிற்கிறோம். சிறந்த கொள்கை பிரகடனங்களுடன் புதிய அரசை அமைத்திருக்கும் நல்லாட்சி அரசு கடந்த 68 ஆண்டுகளாக துன்புறும் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை தீர்த்து அவர்களுடைய ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் வழங்க முன்வரவேண்டும்.

அந்த வகையில் மன்னார் சமாதான அமைப்பு நல்லாட்சி அரசின் கவனத்துக்கு கீழ்வரும் விடயங்களை முன்வைக்கிறது.

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி ஆட்சியின் அடிப்படையில் மாநில அந்தஸ்தை வழங்குதல். சமஷ்டி என்பது பிரிவினை வாதமில்லை. இந்தியா, அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போன்ற ஓர் உன்னதமான ஆட்சிமுறையாகும். அங்கு அனைவரின் மதங்களும் நலன்களும் உரிமைகளும் மொழிகளும் பாதுகாக்கப்பட்டு வருவதை காணலாம். சிங்கள பௌத்த தேசிய அரசு என்ற நிலை மாற்றப்பட்டு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலைநாட்டு தமிழர்கள் ஆகிய அனைவருக்கும் பொருத்தமான நல்லாட்சி அரசை ஸ்தாபித்தல் முக்கியமானதாகும்.

சர்வ அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு குடும்ப ஆட்சி அகற்றப்பட்டு மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகள் கொண்ட பிரதமர் ஆட்சியை ஸ்தாபித்தல். தமிழ்மொழிக்கும் சிங்கள மொழிக்கு கொடுத்துள்ள தேசிய அந்தஸ்தை வழங்குதல்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிவந்து மீன்பிடித்துச் செல்லும் இந்தியர்களையும் அவர் களது படகுகளையும் பறிமுதல் செய்து அதிகூடிய தண்டனையும் சிறைவாசமும் அளித்தல். அத்துடன் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களிலும் தென்பகுதி சிங்களவர் கள் வந்து மீன்பிடித்தல் தடைசெய்தல்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை இராணுவ மயமாக்கி அதன் மூலம் சிங் கள குடியேற்றங்களை உருவாக்கி பௌத்த விகாரைகளை அமைத் தல் தடைசெய்யப்பட வேண்டும்.

இறுதியாக யேசு பிறந்த நன்னாளில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு ஜனநாயக உரிமைகளையும் வழங்கி மனித உரிமைகளையும் வழங்கி உலகிலே சாந்தி சமாதானத்தோடு கூடிய நல்லாட்சி நடைபெறும் நாடு என்ற பெருமையை உலகத் திற்கே எடுத்துக்காட்டி, தர்மம் காக்கும் ஒரு புண்ணிய பூமி என்ற நற்பெயரை உலகத்திற்கு வழங்க வேண்டும். ஐ.நா. சபையும் உலகநாடுகளும் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கு சமா தானத்திற்கான நோபல் பரிசை வழங்க வேண்டுமென கேட்டு நிற்கிறோம்.



# எத்தனை உண்மைகள் வந்து பிறந்தன இயேசு பிறந்ததிலே!



## கிறிஸ்மஸ் விழாவின் காத்திரமான செய்திகள்

- அருட்திரு தமிழ் நேசன் அடிகள் -

கிறிஸ்மஸ் விழா என்பது இறைவன் மனிதனான நிகழ்வு ஆகும். இது வரலாறு பதிவு செய்துள்ள மா பெரும் நிகழ்வாகும். அதனால்தான் உலக வரலாறே கிறிஸ்துவுக்கு முன் (கி.மு), கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) எனப் பிரிக் கப்படுகின்ற அளவுக்கு வரலாற்றில் இந் நிகழ்வு முக்கியமான ஒன்றாகிவிட்டது. வர லாற்றையே வகுத்த நிகழ்வாக கிறிஸ்துவின் பிறப்பு அமைகின்றது.

கவிஞர் கண்ணதாசன் இறவாக் காவியம் என்று குறிப்பிடும் தான் எழுதிய இயேசு காவியம் என்ற நூலை நிறைவுசெய்யும் போது இவ்வாறு பாடுகின்றார்

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது யூத நிலத்தினிலே
சத்திய வேதம் நின்று நிலைத்தது தாரணி மீதினிலே
எத்தனை உண்மைகள் வந்து பிறந்தன இயேசு பிறந்ததிலே
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது இயேசுவின் வார்த்தையிலே

ஆம், இயேசுவின் பிறப்பிலே எத்தனையோ உண்மைகள் வந்து பிறந்தன! கிறிஸ்மஸ் விழா இன்று நமக்குத் தரும் ஆழமான, அர்த்தம் நிறைந்த அந்த உண்மைகளை, காத்திரமான செய்திகளைச் சுருக்கமாக விவரிப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

### கிறிஸ்மஸ் என்பது அன்பின் விழா

கிறிஸ்மஸ் விழா என்பது அடிப்படையில் அன்பின் விழா கடவுளுடைய அன்புக்கு எடுக்கப்படும் விழா. கடவுள் எந்த அளவுக்கு இந்த உலகத்தை அன்புசெய்தார் என்ற கேள்வியை எழுப்பினால், தம் ஒரே மகன் மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழியா மல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மீது அன்பு கூர்ந் தார் (யோவான் 3: 26) என்பதே விடையாகும்.

நாம் வாழ்வு பெறும்பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது (1 யோவான் 4:9) என யோவான் நற்செய்தியாளர் எழுதுகிறார். கடவுள் நம்மீது கொண்ட பேரன்பின் வெளிப்பாடே கிறிஸ்துவின் மனுவுடலேற்பு என புனித அகுஸ்தீனார் கூறுகின்றார்.

முற்காலத்தில் பல்வேறு இறைவாக்கினர்கள், நீதித் தலை வர்கள் எனப் பலர் வழியாகப் பேசிய கடவுள், காலம் நிறை வேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு, கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்ட வராகவும் அனுப்பினார் (கலாத்தியர் 4:4). இங்கே கடவு ளின் அன்பு இயேசுவில் அதிஉன்னதமான முறையில் வெளிப்படுவதை புனித பவுல் எடுத்துக்காட்டுகின்றார்.

### கிறிஸ்மஸ் என்பது அமைதியின், சமாதானத்தின் விழா

கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்திகள் பரி மாறப்படுகின்றன. இந்த உலகத்திலே பரிமாறப்பட்ட முதல் கிறிஸ்மஸ் செய்தி, உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உரித் தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டா குக (லூக்கா 2:13,13) என்பதாகும். இது கிறிஸ்து வினு டைய பிறப்பின்போது வானதூதர்கள் பாடிய மகிழ்ச்சிக் கீதம். வெளியில் யுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு மனி தனின் உள்ளத்திலும் யுத்தம் ஏற்படுகின்றது. மனித உள் ளத்தில் ஏற்படும் யுத்தத்தின் பிரதிபலிப்பே சமுதாயத்தில், நாட்டில், உலகத்தில் யுத்தமாக உருவெடுக்கின்றது. எனவே முதலில் ஒவ்வொரு மனித உள்ளமும் அமை தியை, சமாதானத்தை அனுபவிக்க வேண்டும்.

அமைதி சமாதானம் இழந்து வாடும் இன்றைய மனுக் குலத்திற்கு இயேசு கொண்டுவந்த சமாதானம் இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது.

### கிறிஸ்மஸ் என்பது மீட்பின், இரட்சிப்பின் விழா

அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்க ளுடைய பாவங்களிலிருந்து மீட்பார் (மத்தேயு 1: 21) என இயேசுவின் முக்கிய பணி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர் அவதரித்தது துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் என்று கூறப்படுவதுபோன்ற கெட்டவர்களை அழித்து நல் லவர்களைக் காப்பாற்றுவதற்காக அல்ல. மாறாக, பாவி களை மீட்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகத்ததிற்கு வந் தார் இக்கூற்று உண்மையானது எல்லாராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது (திமொத்தேயு 1:15) என புனித பவுல் கூறுகின்றார். பாவத்திற்கு அடிமைப்பட்டுக்கிடந்த மனி தனை மீட்கவே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். ஆகவே கிறிஸ்மஸ் என்பது இரட்சிப்பின் விழா, மீட்பின் விழா, விடுதலையின் விழா.

உலக சரித்திரத்திலே மிகப்பெரிய விஞ்ஞானிகளில் ஒருவராகிய தோமஸ் அல்வா எடிசனுடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது நீங்கள் இதுவரை கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளில் மிகச்சிறந்ததாக நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்? என் பதே அக்கேள்வி. இதற்கு அந்த மாபெரும் விஞ்ஞானி பதில் சொன்னார், இதுவரை நான் கண்டுபிடித்த கண்டு பிடிப்புகளிலே மிகச்சிறந்த கண்டுபிடிப்பு எனது பாவத்தில் இருந்து என்னை மீட்க இயேசுக்கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் என்ற கண்டுபிடிப்பே ஆகும்.

இங்கே இரண்டு விடயங்கள் நமது அவதானத்திற்குரியன. ஒன்று இயேசு கொண்டுவந்த மீட்பை, இரட்சிப்பை அனு பவிப்பது மற்றது கொண்டாடுவது. முதலாவது நடைபெற் றால்தான் இரண்டாவதற்கு அர்த்தம் இருக்க முடியும். ஆனால் இன்றைய உலகின் நடைமுறை என்ன? கிறிஸ்து கொண்டுவந்த மீட்பை, இரட்சிப்பை அனுபவிக் காமல் வெறும் கொண்டாட்டங்களோடு கிறிஸ்மஸ் விழா வழக்கம்போல, பழக்கதோசமாக, வருடாந்த நிகழ்வாக நிறைவுபெற்று விடுகின்றது!

### கிறிஸ்மஸ் என்பது இறைபிரசன்னத்தின் விழா

கிறிஸ்துவின் பிறப்பு விழா கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற ஆறுதலின் செய்தியை, மகிழ்ச்சியின் செய்தியை நமக்குத் தரும் விழாவாகும். இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களில் ஒன்று இம்மானுவேல் என்பதாகும். இம்மானு வேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பது பொருளாகும். (மத்தேயு 1:23) இறைவனுடைய பிரசன் னத்தை, உடனிருப்பை உணருகின்ற, அனுபவிக்கின்ற விழாவாக கிறிஸ்மஸ் அமைகின்றது.

இயேசுவுக்கு வழங்கப்பட்ட பெயர்களில் ஒன்று வாக்கு அல்லது வார்த்தை என்பதாகும். வாக்கு மனிதரானார் நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1:1) என்ற யோவானின் வார்த்தைகளில் இறைவன் மனி தரிடையே பிரசன்னமாகினார் என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது. கடவுள் தன்மையில் விளங்கிய கிறிஸ்து கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண் டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. மாறாக தம்மையே வெறுமையாக்கி மனிதருக்கு ஒப்பானார் பிலிப்பியர் 2: 6,7) என பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் புனித பவுல் குறிப்பிடுகின்றார்.

இன்று தனிமையில், வெறுமையில் வாடும் மனிதனுக்கு இறைவன் தன்னுடன் இருக்கின்றார் என்ற செய்தி முக்கியமான ஆறுத லின் செய்தியாக அமைகின்றது. நாம் விசு வாசிக்கும் கடவுள் எங்கோ வான மேகத்தில், ஆகாய மண்டலங்களில் வாழுகின்ற கடவுள் அல்ல மாறாக அவர் தம் மக்கள் மத்தியில் வாழுகின்ற, குடிகொள்கின்ற கடவுள் என்பதை இவ்விழா உணர்த்தி நிற்கின்றது.

### கிறிஸ்மஸ் என்பது ஒளியின் விழா

கிறிஸ்மஸ் விழாவை ஒளி விழா என்ற பெய ரில் கொண்டாடு வதை நாம் அறிவோம். ஏனெனில் இயேசு ஒளியாக உலகத் திற்கு வந்தார். அனைத்து மனிதரையும் ஒளிர் விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண் டிருந்தது (யோவான் 1: 9) என யோவான் நற்செய்தியாளர் இயேசுவை அறிமுகம் செய்கின்றார். உலகின் ஒளி நானே என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் (யோவான் 8:12) என இயேசுவே கூறியிருக்கின்றார்.

இன்றைய உலகம் பாவத்தின், சாபத்தின் இருளில் மூழ்கிக்கிடக்கின்றது. இருளின் செயல்களான தீமைகள் இன்றைய உல கில் மலிந்துவிட்டன. இந்நிலையில் இயேசு வின் பிறப்பு ஒளியின் பிறப்பாக, கிறிஸ்மஸ் விழா ஒளியின் விழாவாக அமைந்துள்ளது.

### கிறிஸ்மஸ் என்பது மகிழ்ச்சியின் விழா

எல்லா மதங்களிலும் மனிதன் இறைவ னைத் தேடிச்செல்கின்ற நிலைப்பாட்டையே காண்கின்றோம். ஆனால் கிறிஸ்தவத்தில் தான் இறைவன் மனிதனைத் தேடிவரு கின்ற வினோதத்தைப் பார்க்கின்றோம். இது ஆச்சரியமான, அபூர்பமான ஒரு நிகழ்வாகும். இறைவன் மனிதனைத் தேடிவந்தது - இறைவனே மனிதனாக இந்த மண்ணில் வந்து பிறந்தது - உண் மையில், எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி யூட்டும் நற்செய்தி (லூக்கா 2:10) ஆகும்.

இறைவன் மனிதனான இந்த நிகழ்வை - எல்லா மக்களுக்கும்பெரும்மகிழ்ச்சியூட்டிய இந்த நிகழ்வை உலக மக்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடுவது சாலவும் பொருத்த மானதே! தேவையானதே!

கிறிஸ்மஸ்காலம்வந்துவிட்டால்மனித மனங் களில்மகிழ்ச்சி பிரவாகித்து ஓடும். உலகத்தின் பெருநகரங்கள் உற்சாக வெள்ளத்தில் மிதக்கும். அலங்கார மின்விளக்குகள் அழ கழகாக ஒளிரும். கிறிஸ்மஸ் பப்பா, கிறிஸ்மஸ்மரம், கிறிஸ்மஸ் கேக், கிறிஸ் மஸ் கீதங்கள், கிறிஸ்மஸ் விடுமுறை, கிறிஸ் மஸ் வாழ்த்துக்கள் என உலகம் உற்சாகத்தில் திளைக்கும். கிறிஸ்மஸ் விழா அண்மித்துவிட்டால் வர்த்தக நிலையங் கள் எல்லமே உஷார் அடைந்துவிடும். வண்ண விளக்குக ளும், அலங்காரங்களும் எங்கும் நிறைந்திருக்கும். புத் தாடை, பலகாரங்கள், வான வேடிக்கைகள், க்ரோல் கீதங் கள் என கிறிஸ்மஸ் அண்மித்தால் எல்லோருடைய உள் ளங்களிலும் புத்துணர்வுகளை கட்டிவிடும். இதிலொன்றும் தவறில்லை. அளவான, ஆரோக்கியமான கொண்டாட் டங்கள் மனித வாழ்வுக்கு தேவையானதே.

ஆனால் கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படையை மறந்து விட்டு, இயேசு கொண்டுவந்த பாவமன்னிப்பின் அனு பவத்தை, புதுவாழ்வு அனுபவத்தை மறந்துவிட்டு வெற்று ஆடம்பரங்களிலும், கொண்டாட்டங்களிலும் மட்டும் மூழ்கி விடுவது என்பது கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் விழா வாகவே அமையும். இது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது மட்டுமல்ல, கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத உலகம் இறைவன் மனி தனாகப் பிறக்க வந்தார். அவர் பிறக்க மனிதன் இடம்கொடுக்க வில்லை. இயேசு மனிதனாகப் பிறந்தது பெத்தலேகம் ஊருக்கு வெளியில் இருந்த மாட்டுத் தொழுவத்தில். இதை லூக்கா நற்செய்தியாளர், விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து. தீவனத் தொட்டியில் கிடத்தினர் (லூக்கா 2:7) எனக் குறிப்பிடுகின்றார். மாடுகள் அடையும் கொட்டிலில், எளிமையின் கோலத்தில், புறக்கணிப்புக்கள் மத்தியிலே இயேசு ஓர் மனிதக் குழந்தையாகப் பிறக்கின்றார். உலகைப் படைத்த இறைவனுக்கு உலகில் பிறக்க சரியான இடம் கிடைக்கவில்லை! "மனிதன் இறைவனைப் புறக்கணித்தா லும் அந்த இறைவனோ மனிதனை விடுவதாக இல்லை. தனது அளவுகடந்த அன்பினால் அந்த மனிதனைத் தேடிவருகின்றார். இதுதான் கடவுளின் இரக்கம்! இதுதான் கடவுளின் இயல்பு!

நிறைவாக - கிறிஸ்மஸ் விழா என்பது அடிப்படையில் அன்பின் விழா, அமைதியின் வீழா, சமாதானத்தின் விழா. மீட்பின் விழா, இரட்சிப்பின் விழா, இறைபிரன்னத்தி ன் விழா, ஒளியின் விழா, மகிழ்ச்சியின் விழா. இயேசு தனது பிறப்பின்மூலம் கொண்டுவந்த இந்த அன்பை, அமைதியை, சமாதானத்தை, மீட்பை, இரட்சிப்பை, இறைபிரசன்னத்தை, ஒளியை, மகிழ்ச்சியை அனுபவிப்பதும், அதைக் கொண்டாடுவதும் தான் கிறிஸ்மஸ் விழா.

ஆனால் இன்றைய உலகின் அனுபவம் என்ன? இயேசு தனது பிறப்பிலே கொண்டுவந்த இந்த அரிய தெய்வீக மதிப்பீடுகளை, விழுமியங்களை இன்றைய உலகம் மறந்து விட்டது. கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான அர்த்தம் ம றக்கப்பட்டு அது இன்று வர்த்தக விழாவாக, வேடிக்கை விழாவாக, வாடிக்கை விழாவாக மாறிவிட்ட யதார்த்தத்தை கவலையோடு நோக்கவேண்டி உள்ளது. எனவே கிறிஸ்மஸ் விழா இந்த உலகத்திற்கு வழங்கும் அடிப்படையான பண்புகளை மீண்டும் கண்டுபிடிப்போம் வாழ்வாக்குவோம். இந்த உலகத்தை நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழும் இல்லிடமாக மாற்றுவோம்.

# சாவையும் மனநோயையும் தரும் கஞ்சாப் பாவனை



ஆ. பேரின்பநாதன்

அஞ்சி அஞ்சி வாழ்ந்த இனம் இன்று சாவைக் கண்டு சிரிக்கின்றது. பயங்கர நோய்களை நொடிப் பொழுதே சேர்க்கும் மருந்து வகைகளைப் படைத்த கடவுளே வியக்கும் வண்ணம் சீர்செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைக் கருவிகள், இயக்கம் கெட்ட இதயத்தில் வேலை செய்யும் மாற்று இதயம்–மாற்றாரின் இதயம், இதய வால்வுகள், கத்தியின்றி குருதியின் றிச் செய்யப்படும் லேசர் அறுவைச் சிக்ச்சை முறைகள், ஸ்கான்கள் இப்படியாக வளர்ச்சி பெற்றுள்ள எம் மருத்துவ விஞ்ஞானம் இருமை நிறைந்த உலகத்தில் எதிர்மறை விளைவுகளையும் தத்துவார்த்த நீதிப்படி கொண்டிருப்பது வேதனை அளிப்பதாகும்.

உயிர் காக்கும் மருந்துகள் அவற்றைத் தவறான வழியில் பயன்படுத்துவோரின் உயிர்ப்போக்கும் மருந்தாக உள்ளது. விளக்கேற்றும் தீக்குச்சி வீடெரிப்பதுபோல் உதாரணமாக பொப்பிக்காய் பாலில் இருந்து பெறப்படும் அபின் Opiumத்தை வலிவு கூட்டி தாங்கமுடியாத வேதனையாளர்களுக்கு MorPhine ஆக மருத்துவர்கள் பயன்படுத்துவர். மோபின் இன் இர சாயன அமைப்பு வீரியத்தை 20 தொடக்கம் 25 வீதம் கூட்டி பாவிக்கப்படும் போதைப் பொருளே கெரொயின் ஆகும். இது ஓர் உயிர் ஆபத்தான நாக்கோட்டிக்ஸ் வகை போதைப் பொருளாகும். இதேபோன்றே உளமாயத் தோற்றத்தை ஐம்பொறிகளில் புலன்களில் பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தி தெளிவான குரூர முகத்தோற்றத்தையும் பிழையான ஆளுமையையும் மன உணர்வுகளையும் ஏற்படுத்துபவை இந்த உளமாய மருந்துகள். உளமாய மருந்தின் இயல்புகள் ஒரு முன் இணக்க மனநோயை 'Model Psychosis' ஏற்படுத்தி பாவிப்பவரை மனநோயாளி ஆக்கி விடுகின்றது.

இந்தக் குணங்களைக் கொண்ட LSD, MARIJUNNA போன்ற செயற்கைத் தயாரிப்பு வில்லைகளும் பாவனையில் உள்ளன. இந்த மருந்தை உளமருத்துவர்கள் மது அடிமை நிலையினருக்கும் ஆளுமைப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் கண்ணில் பொய்யான தோற்றங்கள் தெரிபவர்களுக்கும் நோய் நீக்கும் மருந்தாகப் பாவிக்கின்றனர். இவை சுகதேகிகளால் பாவிக்கப்படும்போது உளவியல் ரீதியான பல விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

மேலும் இதனை எடுத்தவுடன் மனமானது தீவிர மகிழ்ச்சி பெற்று வானத்தில் பறப்பது போன்ற ஒரு நிலையை உண்டாக்கும். மது தொடக்கம் மற்றைய அனைத்துப் போதைப் பொருள்களையும் உண்பவர்கள் கூறும் சமாதானம் மகிழ்ச்சிக்காகத் தாம் அதை எடுப்பதென்பதாகும். போதைப் பொருள் என்பது பாவிப்பவருடைய மூளைச் செயற்பாட்டைத் திருடும். அதன் பின் விளைவுகள் பற்றி இதன் பாவனையாளர்கள் ஒருபோதும் அறிவதில்லை. இது பலவகையான உடல் உளக்கோளாறுகளையம் உளமாயத்தையும் ஏற்படுத்தி இதன் பாவனையாளரை மன நோயாளியாக்கி சாவில் கொண்டுசென்றுவிட்டுவிடுகின்றது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதனால் உலகில் வாழும் 700 கோடி மக்களின் சமூகச் சீரழிவுகள் கொலைகள், கொள்ளைகள், விபத்துக்கள் அனைத்துக் குற்றச் செயல்களுக்கும் பிறப்பிடமாக இக்கஞ்சாப் பாவனை அமைந்துவிடு கிறது. இந்தப் பாவனையானது மத்திய நரம்பு மண்டலத்தில் தூண்டுதல்களையும் அதன் பின் சோர்வையும் ஏற்படுத்திச் சுயநினைவை இழக்கச் செய்கிறது. இந்தப் பாவனை யாளர்கள் செய்யும் சமூகச் சீரழிவுக்கு இறைவன் அளிக்கும் தண்டனை இலவச இணைப்பாக தற்கொலை, தீராத நோய், அகாலச் சாவு, மருந்தறியாத நோய்களான புற்றுநோய் மற்றும் போதை ஊசிப் பாவனையால் எயிட்ஸ் எச்.ஐ.வி என்பவற்றையும் வழங்கிவிடுகிறார்.

உளமாயத்தை ஏற்படுத்தும் மருந்துகள் மூன்று வகைப்படும் 01. கணாப்பினோன் 02 பிணையின் வித்திமை 03 இண்டோல் அல்கலொயிட். இதில் கஞ்சா கணாப்பினோல் மருந்துவகைக் குடும்பத்தைச் சேர்ந்தது.

**நாவலர் பிறந்த மண்ணில் கஞ்சா**

எமது பிரதேசத்தில் பூச்சாடியில் வளர்க்கப்படும் கஞ்சாச்செடி கணாப்பினோல் மருந்து வகையைச் சேர்ந்த Marijuana செடியின் தோற்றம் வருமாறு.

இந்தப் பூச்சாடியில் நிற்பது Cannabinol Sativa என்னும் பெண் செடியாகும். இது 3/16 அடி வரை வளரும். இலைகள் 5 தொடக்கம் 11 அங்குலம் வரை நீளமானவை. மேல் பகுதி இலையின் நிறம் கடும் பச்சையாகும். பின்பாகம் சற்று வெளிறி இருக்கும். இதன் பாவனை ஆதிகாலம் தொட்டு இருந்த போதிலும் இதன் ஆரம்ப உற்பத்தி நிலம் இந்தியாவாகும். அங்கிருந்தே பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. பெண் செடியில் தண்டு நுனியில் பூக்கள் பூக்கும் . பூக்களிலும் இலை களிலும் மஞ்சள் நிறமான இரசாயனக் கலவை கொண்ட பிசினைக் கொண்டிருக்கும். Chemical, Chnnabine, Chnnabinol, Tetraltydro Cannabinol என்பன கஞ்சாவில் வீரியம் கூடியவை. அவற்றை பாவிப்பவரின் மனோநி லையை மாற்றுவதாலும் நடத்தையை மாற்றுவதாலும் இதற்கு உலகளாவிய ரீதியில் பல பெயர்கள் உள்ளன. மற்றைய தாவரங்களைவிட இந்தியன் செடிகள் (HIV) கோகோ, வீட், கிறாய், பொட், மர்யுணா, 13 மரியாணி, கிவ், காசிஸ், காஸ், கஞ்சா இன் வீரியம்–போதை நிலையானது கனாபிசிவில் இருந்தே பெறப்படுகிறது. வீரியம் மிக்க குழுசையான LSD கூட Chanabis மூலத்தில் இருந்தே செயற்கை முறையில் செய்யப்படுகின்றது Marijuana மிகக் குறைந்த வீரியம் உடையது Marijuana வையே பெரும்பாலானோர் பாவிக்கின்றனர். இன்று எமது சமூகம் பாவிப்பது இதுவே. இதன் இலையையும் பூவையும் சிகரெட் வடிவில் கடதாசியில் சுற்றிப் புகைக்கின்றனர். இதனை ஜோயின்ட் என அழைப்பர். Marijuana சிகரெட் ஆனது எரியும் போதும் மிகவும் சூடாக இருக்கும். புகையிலை சிகரெட் போன்று அல்லாது எரியும் போது மணக்கும். இந்தப் புகையை இழுக்கும் போது மிக்க மகிழ்ச்சி அடைவதுடன் அமைதியான கனவு நிலையை அடைகின்ற னர். அதே பொழுதில் உளமாயத் தோற்றத்தையும் அடைவர். பொய்யான தோற்றங்களைக் காண்பர். இவர்கள் ஒரு கூட்டத்தில் இருப்பின் கதை கூடியவர்களாகவும் கலகலப்பானவர்களாகவும் வன்முறையாளராயும் இருப்பர். ஆனால் அவர்களின் இயல்பான ஆற்றல்கள் அடிபட்டுப் போய்விடும். தொடு உணர்வும் அறிவுணர்வும் மந்தம் அடைந்து விடும். அவரின் திட்டங்கள் அடிபட்டுவிடும். அவரின் காலம் இடைவெளி வேகம் என்பன குருபியாகி விடும். தனக்கு ஏற்பட்டிருக்கும் இம் மாற்றங்களை அவர் அறியாது இருப்பதுடன் தம் ஆற்றல் ஆளுமை அடிபட்டுப் போய் இருப்பது பற்றியும் அவர் அறியாது இருப்பார். இவை அனைத்தும் அவரது சூழ்நிலையைப் பொறுத்து அமையும். சுய உணர்வு என்பதும் அவர் எடுத்த புகையின் அளவைப் பொறுத்து பிழையாக அமையும். மனப் பயம் திகில் கொண்டவராக இருப்பர். தொடர்ந்து புகைக்கின் இலகுவாகக் குழப்பம் அடைவதுடன் வாய் கொன்னை அடிப்பதுடன் பயம் ஏற்பட்டு சாவைத் தழுவுவார். இன்று நம் வடக்கை ஆக்கிரமித்திருப்பது பல மில்லியன் லீற்றர் மதுவும் பண்டல் கணக்கான கஞ்சாவும். எம் நாட்டில் புகையிலையின் விலை உயர்வு கஞ்சாப் பாவனையை ஊக்குவித்துள்ளது. தினம் 60ஆவது உயிர்களை மட்டும் உயிர் குடிக்கும் புகைப் பொருள். ஆனால் கஞ்சாப் பாவனை தினம் தினம் உலகில் இடம்பெறும் அத்தனை கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்ற குற்றச் செயல்களின் மூலவேர். யாழ். மாவட்டத்தின் புதிய காட்சி கோளாக்கஞ்சாக்கட்டுகள் முடிவு புகைக்கும் சிறையும் புதைகுழிகள் நிறையும்.

– [illegible] – [illegible]



> மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதனால் உலகில் வாழும் 700 கோடி மக்களின் சமூகச் சீரழிவுகள் கொலைகள், கொள்ளைகள், விபத்துக்கள் அனைத்துக் குற்றச் செயல்களுக்கும் பிறப்பிடமாக இக்கஞ்சாப் பாவனை அமைந்துவிடுகிறது. இதன் அடிப்படைக் காரணம் இந்தப் பாவனையானது மத்திய நரம்பு மண்டலத்தில் தூண்டுதல்களையும் அதன் பின் சோர்வையும் ஏற்படுத்திச் சுய நினைவை இழக்கச் செய்கிறது.

## மைந்தனைத் தந்த நாளிதேனப்பாடு

பாடினர் அன்று ஆதாம் ஏவாள்
பாவப் பெரும் பாட்டு – அவர்
பாடலினாலே பாரினில் மக்கள் பட்டபெரும் பாடு
வாடிய மக்கள் பாடிய வேதனைப்
பாடலினைக் கேட்டு – தேவன்
நாடியே எமக்கு மைந்தனைத் தந்த நாளிதெனப் பாடு

தீர்க்க தரிசிகள் ஞானிகள் என்று
எத்தனையோ பேர்கள் –தேவ
மார்க்க முறைகளை மக்களுக்குரைக்க
மண்ணில் பிறந்தார்கள்
மூர்க்க மனம்கொண்ட மாந்தர் அவர்களை
ஏற்க மறுத்தார்கள் – அவரை
சீர்ப்படுத்தலே தேவன் தன் மைந்தனைப் பூமியில் தந்தார்கள்

நாடியே வந்த தூதன் உரைத்த நற்
செய்தியிலே மகிழ்ந்து – ஒன்று
கூடியே மேய்ப்பர் கோமானைக் காண சென்றனரே விரைந்து
ஆடிக்களித்து ஆண்டவனின் திருப்
பாதமதை அடைந்து – அவரை
பாடிப் புகழ்ந்து போற்றிப் பரவி நின்றனரே பணிந்து

பூத்திருந்த புது வெள்ளியொன்று உயர்
வானத்திலே அன்று – நடு
ராத்திரி வேளை மைந்தன் உதிப்பைக் காட்டியதே நின்று
சாஸ்திரி மூவர் மின்னொளி காட்டிய
வழியினில் சென்று – தேவ
புத்திரனை வழிபட்டு வணங்கினர் பரிசுகள் ஈந்து

– டே.த.எட்வின், உடுவில்.

அரச அங்கீகாரம் பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# நியூ நெல்சன்

## சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## New Nelson Driving School





- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள், அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்



கிளைகள்

இல. 89, கண்டி வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். 021 222 4527 / 077 358 1916

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 021 225 6955 / 077 794 2312 / 071 735 8440

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி. 077 374 7179 / 021 227 1313

இல. 97A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393 / 077 111 3382

பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711 / 021 492 3733



LONDON METROPOLITAN COLLEGE

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS LIFE SKILLS (A1)**

Speaking & listening
**Duration : 48 hours** (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான **IELTS A1** புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

**IELTS**

Academic & General
**Duration : 48 hours** (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
**IELTS 5.5 - 6.5 Band** பெறுவதற்கான உத்தரவாதம் ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.

HOTLINE : 021 753 8395

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

LONDON METROPOLITAN COLLEGE



**IELTS LIFE SKILLS (A1)**

Speaking & listening
**Duration : 48 hours** (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான **IELTS A1** புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.

HOTLINE : 0714150995 | 021 753 8395

அனைவருக்கும் எமது நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்

# MODERN CITY INN

## நீர்கொழும்பு மொடேன் சிற்றி இன்

- ✓ குறுகிய தூரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பஸ் நிறுத்தம்
- ✓ 15 நிமிட ஓட்டத்தில் விமான நிலையம்
- ✓ அதிவேக பாதை மூலம் 30 நிமிடங்களில் கொழும்பு நகருக்கு
- ✓ வசதியான குளிரூட்டப்பட்ட அறைகள் இணைப்பு குளியல் அறை சுடுநீர் வசதியுடன்
- ✓ மிக நடுத்தரமான கட்டணம்
- ✓ பஸ் நிறுத்தத்தில் இருந்தும், விமான நிலையத்திற்கும் தேவையான Taxi போக்கு வரத்து ஒழுங்கு செய்துதரப்படும்.

WiFi Available



ஆடம்பர அறைகள்
குடும்பமாக தங்கும் அறைகள் சிறிய மாநாட்டு மண்டபம் கொண்டாட்டம், களியாட்டங்களுக்கான வசதி. விமான நிலைய சவாரி. கடற்கரை சுற்றுலா.

426, பிரதான வீதி நீர்கொழும்பு.
தொடர்பு:- 031 2233 967
077 901 1900 / 078 450 6918
moderncityin@yahoo.com moderncityinn.com

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

# Adshya
# அட்ஷயா
## Bombay Sweets





அனைத்து மங்கல கரமான வைபவ நிகழ்வுகளுக்கும் Sweets மற்றும் பலகாரங்கள் ஓடருக்கு செய்து தரப்படும். வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவுகளுக்கு தேவையான இனிப்பு பலகாரங்கள் பொதி செய்து தரப்படும்.

தரம்! மலிவு ! தூய்மை!

No: 347, Kasthuriyar Road, Jaffna.

S.I. Suresh
077 175 1495


அனைவருக்கும்
நத்தார் புதுவருட
வாழ்த்துக்கள்
உங்கள் இல்லங்கள், அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள் போன்ற அனைத்திற்கும் அதி உயர் தரத்திலான பாதுகாப்பினை வழங்கும் அனைத்து தொழில்நுட்பங்களும் ஒரே இடத்தில்....
Billing Program
கணனி மூலம் கொடுக்கல் வாங்கல்
உங்கள் வியாபார நிலையத்தின் அன்றாட கொடுக்கல் வாங்கல்கள் கணனி மூலம் பதிவு செய்யும் வசதி.
உங்கள் வியாபாரத்தின் கொள்முதல், விற்பனை, இருப்பு ஆகியவற்றை இலகுவாக அறிந்துகொள்ளும் வசதி.
உங்கள் வாடிக்கையாளர்களுக்குரிய பற்றுச்சீட்டுகள் கொடுக்கும் வசதி.
CCTV Camera
பாதுகாப்பு கமரா
24 மணிநேர கண்காணிப்பு
இரவு நேரத்திலும் கண்காணிக்கும் வசதி (Night Vision)
கைத்தொலைபேசி மூலமாகவும் கண்காணிக்கும் வசதிகள்.
CCTV Cameras
Inter Com
Finder Print
Bar Code
Mobile / Unlock / Repairing
மிகக் குறைந்த விலையில் இரண்டு வருட உத்தரவாதத்துடன் கண்காணிப்புக் கமராக்களை ஒரே நாளில் பொருத்தி தருகின்றோம். உலகின் எந்த பாகத்திலிருந்தும் கையடக்க தொலைபேசி மூலம் கண்காணிக்கும் வசதி.
Finger Print
விரல் அடையாளம் பதிவுக்கருவி
உங்கள் வியாபார நிலையத்தில் / நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் அன்றாடமாக வந்து செல்லும் தகவல்களை (நேரம், நாள்) விரல் அடையாளத்தின் மூலம் கண்காணிக்கும் வசதி.
Home Security
வீட்டுப் பாதுகாப்பு
உங்கள் வீட்டில் / நிறுவனத்தில் கதவுகள், ஜன்னல்கள் மற்றும் கூரைவழியாக அன்னியர்கள் உள்நுழைய முற்பட்டால் கையடக்க தொலைபேசி மூலம் அல்லது எலாம் (Alarm) மூலம் சமிஞ்சையை ஏற்படுத்தும் வசதி.
சமையல் வாயு பயன்படுத்தும் போது லீக் ஆகும் என்ற பயமா? அதற்கு தீர்வு தருகிறோம் லீக் ஆகும் போது எச்சரிக்கை சமிஞ்சை மூலம் தெரியப்படுத்தும் வசதி.
தீ விபத்து ஏற்பட்டால் தெரியப்படுத்தும் வசதி.
Intercom
உள்செய்தி தொடர்பு கருவி
உங்கள் வியாபார நிலையத்தில் / நிறுவனத்தில் உள்ள ஊழியர்களுடன் இலவசமாக தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளும் வசதி. வெளியில் இருந்துவரும் தொலைபேசி அழைப்புக்களை சம்மந்தப்பட்ட ஊழியர்களுக்கு அனுப்பும் வசதி
Mobile Unlock
Reparing / Software
அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகள் Unlocking செய்து கொடுக்கப்படும் மற்றும் எல்லா வகையான போன்களுக்குமான உதிரிப்பாகங்களும் மற்றும் திருத்த வேலைகளுகம் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
* CCTV Cameras
* Bar Code
* Finger Print
* Inter com
* Mobile Accessories
Mobile Accessories
SAMSUNG
NOKIA Connecting People
htc
அனைத்து விதமான போன்கள் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Tecnology at the Speed of Life
arun
Software Developers
No: 273, Hospital Road, Jaffna.
J.A.ARUN
T.P: 077 712 3313 / 021 221 5828



# என்றும் கிறிஸ்மஸ் தான்

ஆவின் குடிலிடையே அவனியின் அரசனாக
பாவியயம் துயர் தீர்க்கும் தேவபாலகன் பிறந்தார்
மேவிடும் மகிழ்வோடு அவர்பாதம் பணிவோம்
தாவியே அரவணைத்து அமைதியை தந்திடுவார்

தாழ்மையே உயர்வென இடையரோ டிணைந்தார்
ஏழ்மையின் வடிவிலே மரிமடி தவழ்ந்தார்
மேன்மைமிகு செய்தியை மேதினிக் குவந்தார்
கோன்நிகர் இறைமகனை நெஞ்சார வாழ்த்திடுவோம்

அடிமைக்கு உரிமையும் வறுமைக்கு செழுமையும்
கொடுமைக்கு எதிர்க்குரலும் தனிமைக்கு அரவணைப்பும்
முதுமைக்கு அன்புறவும் கிடைத்திட உழைத்திடு
உன்வாழ்வு என்றும் கிறிஸ்மஸ் தான்.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

**Dollar Multi Center**

LEDவல்ப் வகை ~~90~~/= 60/= Pannal LED வல்புகள் 3~~80~~ 340/= மின்சாதனப் பொருள்கள் Kevilton மின் உபகரணங்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

3W
5W
9W

இல. 11. ஸ்ரான்லி வீதி,
முட்டாஸ் கடை சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.
077 063 2559

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும்
வங்கியியலில் புதிய பரிமாணம்
மற்றும் சௌகரியமான
சேமிப்பு கணக்கு உங்கள் விரல் நுனியில்

- இலவச வைப்புப் புத்தகத்துடனான சேமிப்பு கணக்கு
- இணையத்தள கணக்கினை துரிதமாக செயற்படுத்தல்
- டெபிட் அட்டைக்கான உடனடி காப்புறுதி
- இலவச SMS சமிஞ்ஞைகள் மற்றும் மாதாந்த ஈ.கூற்று
- தகுதியுடைய வாடிக்கையாளர்களுக்கு கடன் அட்டை
- கணக்கு மீதியினை பொறுத்து 90% வரையிலான கடன் வசதி




மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்: 011 220 4444

நிபந்தனைகளுக்குட்பட்டது.

www.boc.lk

தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சதுக்கம்" இலக்கம் 1,
இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

Fitch Rating
AA+(lka)

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## உங்கள் கனவு வெளிநாடா ?

நேர்மையான முறையில் உங்கள் கனவு நாட்டினை சென்றடைய இன்றே நாடுங்கள்

**WINSTAR VISA CONSULTANTS**

* Student Visa * Spouse Visa * Tourist Visa * Skilled Migrations
Other Visas........

*கடந்த மூன்று வருடங்களாக எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் இயங்கும் ஓர் நிறுவனம்.
*எவ்வித சமரசமும் இன்றி குறித்த காலத்தினுள் வேலை முடித்துக் கொடுக்கப்படும்
*நீங்கள் செலுத்தும் பணத்திற்கு 100 % உத்தரவாதம்
*அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான மொழி வகுப்புக்கள்
சிறந்த ஆலோசனைகளைப் பெற இன்றே நேரில் வாருங்கள்

**WINSTAR VISA CONSULTANTS**
106, Post box Junction,
Palaly Road, Thirunelveli Jaffna.
T.P : 070 236 3676
fb : winstar visa consultants
web : www.winstarjaffna.com

## இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி

**ILANKAI VENTHAN ART'S COLLEGE**

இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள்




அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல், திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் மற்றும் பொது வைபவங்களுக்கும்.

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
63, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். தொ.பே - 077 754 9803

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்

## யாழ் போன்சொப்



## YARL PHONE SHOP

## *Phone Sales & Repair*

இல. 09, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை வெளிப்புறம்,
யாழ்ப்பாணம்.
021 222 3817, 021 222 7125, 021 221 5455,
077 36 11282

அனைத்து மாணவர்களுக்கும் நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**2017 ஆம் ஆண்டுக்கான புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன!**

**DIPLOMA IN ENGLISH (6 MONTHS)**
16 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்
(பல்கலைக்கழகத்துக்கு தெரிவான / பல்கலைக்கழக / உயர் கல்வி மாணவர்கள் / வெளிநாடு செல்ல இருப்போர் / அலுவலர்கள்)



**CERTIFICATE IN ENGLISH**
(3 மாதங்கள்)
(இந்த வருடம் O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பாடநெறி)

திருமணம் புரிந்து UK செல்பவர்களுக்கான பாடநெறி மற்றும் பரீட்சை
IELTS LIFE SKILLS A1
(100% சித்திகளை தொடர்ந்து வழங்கி வரும் ஒரே நிறுவனம்)

ஆரம்பம் :- 07.01.2017
மாலை 2.00 மணி
(சனி / ஞாயிறு தினங்களில் பாடநெறி நடைபெறும்)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
T.P: 021 2217106 / 0212217898 / 0774924166 / 0770610271/ 0773400418

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்



# YOGI'S

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt.)Ltd.



**அழகுக் கலையின் தன்னிகரற்ற நிறுவனம்**

***Our Service:***
Skin Care:
★ Advanced Facial Treatments,
★ Dermabrasion treatment for face marks and pits ★ Acne treatment,
★ Skin whitening treatment
Bridal Facials :
★ Pedicure, ★Manicure
Make-up
★ Bridal Make-up ★ Dance Make-up
★ Society & Party Make-up
Hair Care :
★Hair cutting & Styling ★Straightening,
★Waving & cutting ★Colouring (gray coverage, fashion and highlights)
★Hair treatment for falling Hair & Dandruff
★Hair Spa conditioning treatment
Permanent Tattoos and letter writing

***Our courses:***
Advanced Beauty Culture & Hair Dressing
Diploma Course (அழகுக் கலை)
Advanced Cosmetology (Diploma Course)
Advanced Bridal Make-up with Air Brush Makeup & Hair Styles
(நவீன ஒப்பனையும் தலை அலங்காரமும்)
Different Types of Saree Draping
(வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்)
Cake Decoration Classes (கேக் ஐசிங்)

*Mrs. Yogini Shanmuganathan*
Diploma in High-Tec Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Advanced Mordern Make-up with Air Brush Makeup (India)
Diploma in Home Economics (Sri Lanka)
*BECOME AN QUALIFIED BEAUTICIAN FROM AN EXPERIENCED TRAINER*

75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.
yogi'sbeauty@gmail.com
021 222 2796. 0777 164 923
www.yogisbeauty.com

Yarl Aquarium & Plant Paradise

## யாழ். அக்கூரியம் & பிளாண்ட் பரடைஸ்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்



➔வளர்ப்பு இன மீன்கள், மீன்தொட்டிகள் வளர்ப்பு பறவைகள், வளர்ப்பு செல்லப் பிராணிகள்




**நல்லின குரோட்டன்கள், பூக்கன்றுகள் என்பனவும் 60 வீதமான பூக்கன்றுகள் ஒவ்வொன்றும் 80/= மட்டுமே.**



பூச்சாடிகள், மீன்தொட்டிகள் பறவைக் கூடுகளை மலிவான விலையில் தரமாக பெற்றுக்கொள்ளலாம்.

**917, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.**
Tel: 075 991 0060 / 0777 0707 11
e-mail:- yarlapp@gmail.com.

நத்தார் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
25.12.2016 - 01.01.2017 வரையான
தினங்களில் 20% கழிவு வழங்கப்படும்

**மாறியோ**
**கிறீம் ஹவுஸ்**

எமது நிறுவனத்திற்கு சமுகமளிக்கும் குடும்பத்தினருக்கு
லொத்தர் மூலம் பரிசுகள் வழங்கப்படும்

முதலாம் பரிசு ரூபா 1000/=
இரண்டாம் பரிசு ரூபா 500/=
மூன்றாம் பரிசு ரூபா 250/=
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள் ரூபா 100/=

எமது தயாரிப்புகளான
சண்டே ஸ்பெஷல், மெகா ஸ்பெஷல், ஸ்பெஷல் புறுட் சலற், நோமல் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம், கிறீம் சர்பத், பிளேன் சர்பத், (f)விறஸ் யூஸ்வகைகள் என்பன 20% கழிவில் வழங்கப்படும்.

இல.63, பிரதான வீதி, நெல்லியடி. T.P: 076 8373190

**ஓவியருகவி**
டிஜிற்றல் கலர் லாப்
பிரதான வீதி
நெல்லியடி.
021 226 2850
4K
போட்டோ பிறின்ட் 4R - 12 x 36
டிஜிற்றல் பனர் பிறின்டிங் (சகல அளவுகள்)
டிஜிற்றல் பனர் பிறின்டிங் RGB Colour
3D HEAT PRESS
MUG
PLATE
CRYSTAL
JOB ID CARDS
EPSON
பிறின்டிங்
திருமண அழைப்பிதழ்கள்
OFFSET
பிறின்டிங்

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார் வாழ்த்துக்கள்

**பூரணி**
**நகை மாடம்**
**Purane Nakai Maadam**
Genuine 22Kt Jewellery Manufacturing Jewellery

1/4, Kasthuriar Road, Jaffna. 021 222 3121

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

**V.K.Rajaratnam**
Sony, Ahuja, Panasonic and Home Appliances & Assessaries

SONY
AHUJA
Panasonic

ஒறிஜினல் AHUJA
ஒலிபெருக்கி சாதனங்கள்
யாழ். மாவட்ட
விநியோகஸ்தர்கள்.

1C, Stanley Road, Jaffna. Tel: 021 222 5973

வாடிக்கையாளர்
அனைவருக்கும் இனிய
நத்தார் வாழ்த்துக்கள்

# றமணன் டிசைனிங்

## றமணன் பியூட்டி பார்லர்

01. மணப்பெண் அலங்காரம்
   - மருதாணி இடுதல்
   - நக அலங்கரிப்பு
   - சாறி பிலீட்
02. பேசியல் / முக ஒப்பனை
03. ஐபுறோ திரெட்டிங்
04. கெயார் கட்டிங்
   - ஸ்ரெயிட்டினிங்
   - பேமிங்
   - மெனிக்கியூர்
   - பெடிக்கியூர்

போன்ற அனைத்து விதமான அலங்கரிப்பு வேலைகள் சிறந்த முறையில் செய்து கொள்ளலாம்.

## றமணன் பான்சி

1. பாடசாலை உபகரணங்கள்
2. கிறீம் வகைகள்
3. நறுமண வகைகள் (சென்ட்)
4. பெண்களுக்கான கைப்பைகள் ( Hand bag)
5. சூ/பாட்டா வகைகள்
6. அன்பளிப்புப் பொருள்கள்
7. அழகு சாதனப் பொருள்கள்

போன்ற அனைத்துவிதமான பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## றமணன் பந்தல் சேவை

1. பந்தல்
2. கதிரை
3. நவீன மணவறை
4. பூமாலை
5. பலூன் டிசைனிங்
6. நிழல்க் குடை, மேசை, கதிரை
7. கம்பளங்கள், நில விரிப்புகள்
8. செல்ப் சேவிஸ் பாத்திரங்கள்
9. சமையல் பாத்திரங்கள்
10. கேக் ஐசிங், றெஜிபோம் கேக் ஐசிங்
11. குளிர் ஊட்டப்பட்ட வான்
12. குளிர் ஊட்டப்பட்ட கார்

திருமணத்துக்குரிய சகல விதமான பொருள்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு சகல பொருள்களும்
மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
உடனே நாடுங்கள் **றமணன் டிசைனிங்**

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
T.P:- 077 4911 974, 021 221 5666, 070 277 2990 Mail :- uramanandesign@gmail.com

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார் தின வாழ்த்துக்கள்

மீண்டும் புதுப்பொலிவுடன் சாறிகளின் சாம்ராஜ்ஜியமான

# சரவணா ரெக்ஸ்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு



- திருமணப்பட்டு சாறிவகைகள், Office wear சாறிகள்.
- நவீன டிசைன் சல்வார்கள், சல்வார்த் துணிகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்.
- பட்டு வேட்டி சேட் வகைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைத் தினுசுகள் மற்றும் அனைத்து ஆடைவகைகளும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சிவன்கோயில் அருகில்)
077 844 8045/ 021 221 6866

நெல்லியடி சரவணா ரெக்ஸ்
171, பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
(சம்பத்வங்கி அருகில்)
021 226 2992

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்

# யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளி நாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய, வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு: ஸ்ரீகௌசிக அகஸ்தியநாடி சோதிட நிலையம் (Pvt)Ltd

P.ஜெய்சங்கர்

384 A , நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார்
கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944

கொழும்பு முகவரி:
19. 1/1, கொத்தலாவல மாவத்தை,
பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180
011 258 6208

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

# ரட்ணா ஜுவல்லர்ஸ்

தங்க நகை வியாபாரம்



உரிமையாளர் : வை.இரத்தினம்
கே.கே.எஸ். வீதி,
தாவடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
Tel:021 205 3191

கற்கைநெறிகள் ஆரம்பம்
விசேட புலமைப்பரிசில்
O/L , A/L 2016 மாணவர்களுக்கு
SMS Your name & Course to 759520941 & Get Schol.

கல்வியங்காட்டு சந்தியில்

*Ms Office *Web Design *Keyboard-Organ *Engineering - USA
*AutoCAD *Revit *Maya *3D Max *Multimedia- AICT

நீங்கள் விரும்பும் நேரத்தில் விரிவுரை, செய்முறை வகுப்புக்கள்
பதிவுகளுக்கு முந்துங்கள்
மேலதிக விபரங்களுக்கு நேரில்,

# MCAI CAMPUS

No 243, Adiyapatham Road, Kalviyankadu Junction
The Island Wide leader in ICT

10% Discount All Credit Card Payment

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
நவீன அழகிய தங்க, வைர நகைகளுக்கு சிறந்த இடம்

# டோனிகா

நகைத் தொழிலகம்

நகை வியாபாரிகள்

நம்பிக்கை, நாணயம், நயமான சேவை



அழகுக்கு அழகு செய்யும்
ஆபரணங்களுக்கு சிறந்த இடம்

T.P: 077 888 6191
82, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

# MARUTHAM PAINT DEALERS

021 226 3214 , 077 2347 453

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

# தவம் போட்டோ
THAVAM PHOTO

புகைப்படத்துறையில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக கால்பதித்த வேளையில்...... சகல மங்கலகரமான நிகழ்வுகளுக்கும் மற்றும் அனைத்து விதமான நிகழ்வுகளுக்கும் போட்டோ, அல்பம், வீடியோ என்பன சிறந்த முறையில் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
167, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

- திருமண நிகழ்வுகள்
- பிறந்தநாள் நிகழ்வுகள்
- பூப்புனித நீராட்டுவிழா
- ஒன்று கூடல்கள்

போன்ற நிகழ்வுகளை உங்கள் மனநிறைவுக்கு ஏற்ப கொண்டாடி மகிழ்ந்திட, நிகழ்வுகளை அலங்கரிக்க இன்றே நாடுங்கள்.

# கீதன் பந்தல் & கீதன் டெக்கரேஷன்

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு
காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு.
T.P.077 527 3660/ 021 300 2219

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்

## இளவரசி சேலைச்சோலை

SPECIALIST IN WEDDING SAREES



காலங்களுக்கேற்ற ஆடை
வகைகளினதும்
பாரம்பரியத்தின்
கைராசியான திருமணப் பட்டுப்
புடைவைகளினதும்
சாம்ராச்சியம்

வாகன தரிப்பிட வசதியுண்டு ஏற்றுக்கொள்ளப்படும்

125, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
021 222 2503/ 021 222 8441 + 9476 807 90 80



## English Trainer Training Diploma (Teacher Training)

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்

- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர் களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- " English Medium " மாணவர்களுக்கும்
- Speaking, Writing, Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.

New Batches Start on 02.01.2017 — 9.00 a.m / 1.30 p.m } Weekdays; 07.01.2017 — 9.00 a.m / 1.00 p.m } Weekend

ELAS
Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040



PASYALE

மறைக்க முடியாத இருமலை ஒழிக்க
பஸ்யாலை ஆடாதோடை அதிமதுரம்

## இருமல் பாணி

சகல விதமான இருமல், தடிமல், பீனிசம், இளைப்பு,
தொண்டைக்கரகரப்பு மற்றும் சுவாசப்பை
நோய்களுக்கும் நிவாரணம் அளிக்கும்
100% தாவரசார் அடங்கிய பாரம்பரிய ஔடதமாகும்.

தொடர்புகள்: Mr.Sridaran 076 824 0023

இலங்கையின் சகலவிதமான மருந்தகங்களிலும்
பெற்றுக்கொள்ள முடியும்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567

PASYALE AYURVEDA OSU (PVT) LTD.
321/3, Dalupitiya Road, Mahara,
Kadawatha.
Tel:011 481 8196



அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## சோதி போட்டோ

ALL DIGITAL SOLUTIONS Sothy Studio

K.K.S. Road, Mallakam. New Sothy Studio sothystudio@gmail.com

Photography
Album Making
Album designing



Branches:-
Kupilan Junction. / K.K.S. Road, Thellipalai.



10% -40% வரையிலான விலைக்கழிவு

## மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

# JAFFNA ELECTRICALS

DEALERS IN QUALITY ELECTRICAL & ELECTRONIC ITEMS

LG Authorized Dealer for Abans Ltd.

KTK PVC, KEVILTON, USHA, OSRAM, :hager, KML, ORANGE, HAVELLS

ஆரம்பம் 1969

15.12.2016 தொடக்கம் 31.12.2016 வரை

உங்கள் நிறைவே! எங்கள் தேவை!

47 வருட கால முதற்தரமான மின்சாதனப் பொருள்கள் விற்பனையில் வாடிக்கையாளரின் நன்மதிப்பையும், தமக்கென தனி இடத்தையும் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

குறிப்பாக இன்று முதல் உத்தரவாதத்துடன் முதற்தரமான வீட்டு மின்னிணைப்புப் பொருள்களை கொள்வனவு செய்வோருக்கு 10% - 40% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்

விசேடமாக இப் பொருள்களுக்கு இலவச மின் உபகரணங்களும் வழங்கப்படும்.

- Mixer Grinder 4750/= — Steel Kettle
- Induction Cooker 4500/= — Iron
- 5L/Pressure Cooker 3750/= — Hoper Pan
- 18/ Electric oven 6900/= — Plastic Kettle
- Gas Cooker (Double Burner) 2990/= — Iron
- Rice Cooker 2990/= — Toaster
- Water Purifier 2750/= — Torch
- Ceiling Fan 3690/= — 23 W Bulb 1Year Warranty

குறிப்பு:- கையிருப்பு உள்ளவரை மட்டும், நிபந்தனைக்கு உட்பட்டது

No: 94(6) Stanley Road Jaffna
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
Email:- jaffnaelectricals@yahoo.com
Web:- www.jaffnaelectricals.com

# ASR Wedding Halls





திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் உட்பட சகலவிதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.**

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 373 4116, 021 222 1355

**Annamalaiyan Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd**

asrhall@hotmail.com Find us on : Facebook.com/jaffnaasrenterprises

---

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்

BAJAJ

# சந்நிதி முருகன்
## வேக்ஸ் சொப் & சேவிஸ்

இன்றே முந்துங்கள்

15% OFF



15/12/2016 - 02/01/2017

வரை எமது புதிய கிளையில் கொள்வனவு செய்யும் அனைத்து முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களுக்கும் விசேட விலைக்கழிவினை 15 % பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்து நிற்கின்றோம்.

உங்கள் அசல் உதிரிப்பாகங்களை உறுதிப்படுத்திக்கொள்ள 077 766 5577 எனும் இலக்கத்துக்கு SMS செய்யவும்

**இல.102, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.**

0212225202 / 0777110199 / 0772018275

---

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின்
# மாபெரும் மெகா சேல்



அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்



அதிரடி விலைக்கழிவில் சகல விதமான சாறிவகைகள், சல்வார், சல்வார்த் துணிகள் மற்றும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

**இந்தியன் பஜாருக்கு**

**16/12/2016 முதல்
31/12/2016 வரை**

உங்கள் தெரிவுகளுக்கு
இன்றே முந்துங்கள் இந்தியன் பஜாருக்கு

இடம்

**வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.**

**இந்தியன் செலக்ஷன்**
கஸ்தூரியார் வீதி,
மாநகரசபைக் கட்டடத் தொகுதி,
யாழ்ப்பாணம்.


Happy Christmas and New Year
Worried about your child's teeth?
Introducing
Topical Flouride Application
Keep your child smiling all the time,
With the treatment, your child will have,
Reduced Calcium removal and
Protected tooth decay
ROYAL
Royal Medical Centre
458, Hospital Road, Jaffna.
T.P: 021 320 2300 / 077 045 7976


இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்
கன்னிஹா
ஜுவல்ஸ்
அதி நவீன டிசைன்களில்
22 கரட் தரம் குன்றா
தங்க நகைகள்
கண்கவர் புத்தம் புதிய
டிசைன்களுக்கு
முந்துங்கள்
இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4448
(c.23130) (13.18.21)


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்கள்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
NEW V.M.K. Jewellery
Dealers in 22 Kt. Gold Jewellery
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
வீ.எம்.கே.ஜுவல்லறி
இல. 80/03, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 720 1117/ 021 222 2515

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்கள்.
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும்
கண்ணாடிகளை சரிவரப் பெற்றுக்கொள்ளவும்,
நவீன ரக Frame களையும் தரமான Lenses களையும் பெற்றுக்கொள்ள
அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளிற்கு பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்

# எரிக் கணேஸ்

இல.566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2486

கிளைகள்:
இல.105, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 021 224 0255
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். 021 222 5233 (23127) (13.18.21)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

# நதியா
நகை மாடம்

இல. 02 -149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7189, 021 567 0313, 021 222 3479

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்

# மயூரன்ஸ்
நகை மாளிகை

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

TP: 077 651 0251/
021 222 3015

95.கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.23130)
(13.18.21)

வாடிக்கையாளர் அனைவருக்கும் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்கள்

# செல்வி
நகை அகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

Chelvi Nakai agam
Manufacturers of Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.

1/3, Kasthuriar Road,
Jaffna.

இல. 1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 9441

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் பண்டிகை வாழ்த்துக்கள்

# உதயா
ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

அனைத்துக் கொள்வனவிற்கும்
தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

உதயாவின் தங்கப் பவுண்
நகைகள் உங்கள் இளமைக்கு
மேலும் மெருகூட்டும்

இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 4434

79 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 221 6877

www.facebook.com/uthayaajewellery
uthayaajewellers4434@gmail.com

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் வாழ்த்துக்கள்

# K.S.T TEX



முகூர்த்தப் பட்டு சாறிகள்,
குர்தாக்கள் மற்றும் பட்டு
வேட்டிகள் அனைத்து
ரெடிமெட் ரகங்களும்
கிடைக்கும்.



இல.127/18, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9470

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்



பல சரக்குப் பொருள்களை
நியாயவிலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

# கல்கமுவ ஸ்ரோர்ஸ்

இல.133/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0966
077 183 6625

British Business College

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்
BBC பாலர் பாடசாலையின்
2017ஆம் ஆண்டிற்கான புதிய அனுமதிகள்

BBC 15வது வருடத்தில்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

- Sports Meet
- English Day Concert
- முத்தமிழ் விழா
- Art & Craft Exhibition
- Carols
- Pre School Graduation

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்



- 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்
- வயதின் அடிப்படையில் வகுப்புக்கள்

## பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 2+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

## BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் | நீர்வேலி |
|---|---|---|---|
| இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | இல.625, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. | பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி. |
| **மானிப்பாய் 1** | **மானிப்பாய் 2** | **சுன்னாகம் 1** | **சுன்னாகம் 2** |
| இல. 252, யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி, (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல.142, K.K.S வீதி, சுன்னாகம். (NSB வங்கி முன்பாக) |
| **வடமராட்சி** | **சாவகச்சேரி** | **சங்கானை** | **புத்தூர்** |
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பொன்னாலை வீதி, பிரதான வீதி, சங்கானை. | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

Tel: 077 362 7055, 077 4682951

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்

# ஸ்ரீதேவி ஜுவல்லர்ஸ்

ஓடர் நகைகள்
22 கரட்டில் குறித்த
தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.



## ஸ்ரீதேவி ஜுவல்லர்ஸ்

இல.80/7 , கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1787, 077 104 2848

பல வருடங்கள் பாரம்பரிய நல்லெண்ணெய் உற்பத்தியில் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது.

முதல்தரமாக விளங்கும்



இல்லத்தரசிகளின் நன்மதிப்பினையும்
நம்பிக்கையினையும் பெற்றது.
சுத்தமாக்கப்பட்ட எள்ளிலிருந்து பாரம்பரிய
முறையில் தயாரிக்கப்பட்டது.

# V.S.S

**Special Lunch Gingelly Oil**
(Sesame Oil)

வி.எஸ்.எஸ். சாப்பாட்டு
நல்லெண்ணெய்
சமையுங்கள்! சுவையுங்கள்!
ஆரோக்கியமாக வாழுங்கள்...



கொழும்பில்:
சிவசத்தி
41, சென்ஜோன்ஸ்வீதி,
கொழும்பு 11.
011 233 8631

நியூவெள்ளவத்தை
மாக்கற்கவுன்ஸ்
295, காலிறோட்,
வெள்ளவத்தை.
011 258 9372

...ளர்: வ.ச.சுந்தரலிங்கம்
...ரம் வீதி, ஆனைக்கோட்டை.
021 225 5675, 021 300 1285

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்



வட மாகாணத்தில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்.

A9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505/071 454 6955
216, A9 வீதி,
வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777/
077 710 0444



தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200,
077 722 5292

- வாகனப் பயிற்சிகள் சகல கிளைகளிலும் வழங்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர்,
- பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத்தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- எழுத வாசிக்க கஸ்ரமானவர்களுக்கும் மற்றும் சிறந்த சாரதிகளை உருவாக்குவதற்கும் நவீன முறை வீதிச் சட்டம் பற்றிய வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்.

227/6 கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம், (மதவடி அண்மையில்)
021 224 2022 / 071 454 6956

கண்டி வீதி, சாவகச்சேரி (நீதிமன்றம் அண்மையில்)
021 227 0700 / 021 492 3202

முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை
021 492 3201 / 071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி (பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550 / 077 474 7417

36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
076 722 5292 / 071 777 5454

ஒம்பினாசா பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்
021 222 6688/071 7776969

புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு
021 320 1516/071 454 6955

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்
021 300 6544/071 454 6955

வாடியடி சந்தி, பூநகரி
021 320 1818/ 071 454 6955



KIRUBA LEARNERS
(Govt. Approved A Grade
Driving Training School)



அன்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
அண்ணாவின்
உளம் கனிந்த
கிறிஸ்மஸ் மற்றும்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

# AnnA COFFEE

அண்ணா தொழிலகம்
இணுவில்



வாடிக்கையாளர் அனைவருக்கும் நத்தார் பண்டிகை வாழ்த்துக்கள்

ROYAL
MEDICAL CENTRE

# றோயல் மெடிக்கல் சென்ரர்

# Royal Medical Centre

458, Hospital Road, Jaffna.

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக

## விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள்...

- காது, மூக்கு தொண்டை (ENT) சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்திய நிபுணர்
- எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர்
- சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்பு நோய் (அஸ்மா/இருமல்) வைத்திய நிபுணர்
- பல்முக சீராக்கல் வைத்திய நிபுணர்
- பல் தாடை சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்
- பற்சிகிச்சை நிபுணர்கள்
- பிளாஸ்ரிக் ( Plastic ) சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்

தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்
021 720 1587 / 021 320 2300 / 021 221 3668 / 077 045 7976
royalmedicalcentre458@gmail.com



அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்கள்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

THE SASIKA DRIVING SCHOOL

# த சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

DS No - 882

தற்போது புதிய கிளை மல்லாகத்திலும்

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்



- ✓ தேசிய அடையாள அட்டை
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப் பிரதி)
- ✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி - பெண்களுக்கு மட்டும்)
- ✓ மருத்துவச் சான்றிதழ் (தேசிய போக்கு-வரத்து வைத்திய நிறுவகம்)
- ✓ சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

- விண்ணப்பதாரி கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.
- காணொளி மூலமும் (வீடியோ மூலம்) கற்பிக்கப்படும்.

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

## தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 021 221 7678, 077 614 0361
HOTLINE - 077 722 6247
SasikaLearners
sasikadrivingschool@gmail.com

## கிளை நிறுவனங்கள்:

| வேலணை | மல்லாகம் | சங்கானை |
|---|---|---|
| வங்களாவடிச் சந்தி, வேலணை. | கே.கே.எஸ்.வீதி | ஓடக்கரை வீதி, சங்கானை. |
| 021 221 5472 | 021 224 3393 | 021 225 1664 |
| 070 301 3012 | 070 301 3014 | 070 301 3016 |

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

# GLOBAL RENT A CAR



Prop : T. Kamal

Office : 021 221 7424
Mobile : 077 071 2317
E.Mail : globalrent25@gmail.com

---

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார்தின வாழ்த்துக்கள்

# ARUN TEX
& Fancy Palace

அருண்
புடைவையகம் & அழகுமாடம்



சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட், ரீசேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகள். அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்.

பிரதான வீதி,
நெல்லியடி.
021 226 2857

---

பண்டிகைக் காலத்து ஏசியன் தளபாடத்தின்
## மாபெரும் மலிவு விற்பனை

| பொருள் | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| Table mat | ~~2400/=~~ | 1550/= |
| Kitchen Rack | ~~2000/=~~ | 1450/= |
| Iron Board | ~~1300/=~~ | 990/= |
| மெத்தை | ~~2600/=~~ | 2250/= |
| பிரம்பு செற் | ~~16500/=~~ | 14750/= |
| லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) | ~~41400/=~~ | 36500/= |
| 6 கதிரை ரீப்போ | ~~5500/=~~ | 4000/= |
| ஸ்ரீல் அலுமாரி | ~~10999/=~~ | 8750/= |
| 6X4 கட்டில் | ~~10500/=~~ | 8750/= |
| TV ஸ்டான்ட் | ~~10750/=~~ | 8500/= |

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415,
077 358 3879

---

# SAI BEAUTY PARLOUR
## சாயி பியூட்டி பார்லர்

அனைத்து வாடிக்கையாளருக்கும் இயேசு பாலனின் பிறந்த தின வாழ்த்துக்கள்.



➢ இயற்கையான....
அமைதியான...
ரம்மியமான சூழலில்.....

பேஷியல்கள், ஐபுறோ, முடி சுருள் பண்ணுதல், முடி அயன் செய்தல் மற்றும் திருமணம், பிறந்த நாள், ஐசிங் கேக் சேவைகளும் வழங்கப்படுகின்றன. மணப்பெண் ஒப்பனைகள் காலத்திற்கு ஏற்ப நவீன முறையில் மேற்கொள்ளலாம்.

பயிற்சி வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. மணப்பெண் ஒப்பனைக்கு கற்பனைத்திறன் கொண்ட பெண்கலைஞர்களின் சேவை.

சுனிதா அசோக் - 077 882 0006
பிரதான வீதி, பருத்தித்துறை பஸ் நிலையம்,
அன்னை மெடிக்கல் அருகில்

---

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை
நாவலர் வீதியில் அமைந்துள்ள
# JAMUNA FURNITURE

MEGA SALE

அனைத்துக்கும் 3 வருட உத்தரவாதம்

Unmatched Damro Warranty
Excellent after sales service even after the warranty



25% விசேட விலைக்கழிவு

Free

Free

## தம்ரோ, பியஸ்ரா
ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்.

- ✓ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு SOFA செற்றிகளுடனும் 7500/= பெறுமதி Glass Coffee Table இலவசம்
- ✓ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்.
- ✓ 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- ✓ Damro, Pyestra, Nilkamal, Phonix, Arpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

விடுமுறை நாள்களிலும் (ஞாயிற்றுக்கிழமை) எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

JAMUNA FURNITURE 181, Navalar Road, Jaffna.
T.P: 021 2221092, 077 7574776

அனைத்து மாணவர்களுக்கும் எமது நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்

நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி!

My Hope Group

O/L இன் School of Nursing IVA

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

இம்முறை க.பொ.த சா/த

பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்

After A/L Medical Laboratory Technology Assistant
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக
க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.

6 மாத நிறுவனத்தினுடனான பயிற்சிக்குப் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.

மருந்தாளர் பாடநெறி

தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையில் மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புகள் நடைபெறும்.

நடாத்துபவர் ( வைத்தியர் ராஜவேலாயுதம்

ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

Hot line :
0710 770 770

யாழ்ப்பாணம்
இல 323, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.071-8722350, 0718-722 353

Registered Education Institute in the republic of Sri Lanka

பிரதான காரியாலயம்
அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல:28 பார் வீதி, மட்டக்களப்பு
NTS
P.V. 91973

தொ.பே : 021 221 7411

வவுனியா
தொ.பே. 0718-722 351, 0718-722 353

மட்டக்களப்பு

கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம்.071 077 0770

www.nursingiva.com

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

ரூபி ஜுவல்லரி
(ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு: 1982)

இங்கு 916 தங்க நகைகள் ready - made ஆக வாங்கவோ அல்லது order கொடுத்து செய்து கொள்ளவோ முடியும்.
தங்கத்தை தரம்பார்க்கும் நவீன இயந்திரம் எம்மிடம் உண்டு.

S.N.G. BUILDING
RUBE JEWELLERS

227-229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
www.rubejewellery.com
021 221 6919 / 077 734 4074
எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரிலோ இலங்கையின் வேறு எப் பாகத்திலோ கிளைகள் கிடையாது.

இயேசுபாலன் பிறந்ததின வாழ்த்துக்கள்
நெல்லியடியில் பிரமாண்டமான புடைவை மாளிகை

விதம் விதமான சாறிவகைகள், சல்வார் துணிகள், சேட், ரீசேட், பஞ்சாபிகள் இன்னும் ஏராளமான புடைவைகளுடன்

சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற பல வகையான ஆடைகளைப் பெற்றிடலாம்.

செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி,
நெல்லியடி,கரவெட்டி.
தொ.பே.இல. 021 226 3238

BRITISH COLLEGE
of Education

முழு / பகுதி நேரப் பாடநெறி

BRITISH COUNCIL
IELTS
Students Registration Centre

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

COMPUTER COURSES WITH 50% DISCOUNT

இம்முறை O' level பரீட்சை எழுதியவர்களுக்கு விசேட time-table

DIP. IN COMPUTER STUDIES
- Introduction to Computer
- MS-Word, MS-Excel,
- MS-Access, MS-Power Point
- VB, Internet & E-mail

GRAPHIC DESIGNING
- Adobe Pagemaker
- Adobe Photoshop
- Corel Draw
- Adobe Illustrator

INFORMATION TECHNOLOGY
- Office Application
- Designing Application
- System Engineering
- Software Development
- Final Project

COMPUTERIZED ACCOUNTING
- AccPack
- M.Y.O.B.
- Quickbook
- Tally

Full time : 1 Month
Part time: 3 Months

சிறந்த கல்விக்கு 100% வீத உத்தரவாதம்

Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1

Hot Line
0777-596148

23, Kachcheri nallur Rd, Jaffna.
Tel : 021-4927113

103, Mannar Rd, Vavuniya.
Tel : 024-4930041

Pettah Rd, Mannar.
Tel : 023-4924124

Main Street, Mullaithivu
Tel : 021-4927497

Colombo 011-2362775
Kandy - 081-4949590

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

# இஷாரா

## நியூ டிரெஸ் மார்ட் (பி.லிமிட்)

### பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இஷாரா வழங்கும் விசேட சலுகைகள்

ரூ.5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட பரிசுக் கூப்பன்களும், பரிசுப் பொதிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

இவை தவிர ரூ. 5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்பவர்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக மவுன்டன் துவிச்சக்கர வண்டியும் மற்றும் ஐந்து பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

அதிர்ஷ்டம் பார்க்கப்படும் திகதி:- 22.01.2017
நேரம் :- மாலை 6.00 மணி

தெரிவுசெய்யப்பட்ட ஆடைகளுக்கு, விசேடவிலைக் கழிவுகளுக்கு நாடுங்கள்

**இஷாரா நியூ டிரெஸ் மார்ட் பி.லிமிட்**
இல.199A,199B, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9925

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

நத்தார் புதுவருட கொண்டாட்டத்தை முன்னிட்டு
**மது பான்சி அன் பிள்ளையார் சுப்பர்மாற்**
நடத்தும் வருடாந்த

## மாபெரும் மலிவு விற்பனை

**21/12/2016 தொடக்கம் 15/01/2017 வரை**

பொங்கலை முன்னிட்டு கீழ்வரும் பொருள்களான பலசரக்குப் பொருள்கள், சுவிற், மஸ்கட், பிஸ்கட் வகைகள், சோடா வகைகள், பிறஸ் குடிதண்ணீர், கேக் வகைகள்.

பான்சி வகைகள், பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருள்கள்.

அலுமினியப் பொருள்கள், பொங்கல் பானை, கிடாரங்கள், அடுக்கு சட்டிகள்,

தாய்மார், குழந்தைகளுக்கான அனைத்து பொருள்களும்.

பிளாஸ்ரிக் வகைக் கதிரைகள், வாளிகள், பேசின்வகை, தும்புத்தடி பிளாஸ்ரிக் பாய்கள் ஏனைய பிளாஸ்ரிக் பொருள்கள்.

**யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

அனைத்து விதமான பட்டாசுகள், வாணவேடிக்கைகள், சக்கரவாணங்கள் எம்மிடம் உள்ளன.

**வேலைக்கு ஆள் தேவை**
புதிய பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள மொத்த சில்லறை வியாபார முகாமையாளர், விற்பனையாளர்கள் (ஆண்,பெண்) தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.
021 2255148 / 077 4156111

யாழ் வீதி, மானிப்பாய். 021 5613047

## அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## யாழ். நொதேண் சென்றல் வைத்தியசாலையில் இன்னுமோர் அறிமுகம்

## வெகு விரைவில் CT Scan சேவைகள் ஆரம்பம்!




### Other Services

- Cardiac Surgeries Orthopaedic Surgeries Spirometry/ Lung Function test
- MRI
- Ultra sound scan
- Electrocardiogram (ECG)
- Eye Surgeries
- Echocardiogram (ECHO)
- Ear, Nose and Throat (ENT)
- Exercise Tolerance Test (ETT)
- Oral & Maxillofacial Surgery (OMS)
- Electroencephalogram (EEG)
- Neurosurgeries
- Electromygram (EMG)
- Uro-surgeries
- Sleep Study
- Gyn & Obs
- Physiotherapy
- Fertility Centre
- Speech Therapy
- Dental and ENT clinic
- கணினி மயப்படுத்தப்பட்ட X-ray
- Eye Clinic

**Northern Central Hospital**
No:- 342, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: 021 221 9988 / 021 221 9977 / 021 222 2263
e-mail:- nchjaffna@gmail.com / Web:- www.nchjaffna.com

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## ரூபின்ஸ் மருத்துவமனை



வடமராட்சிப் பிரதேசத்தில் தற்காலத்திற்கேற்ப நவீன வைத்திய வசதிகளுடன் கூடிய அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஒரே தனியார் வைத்தியசாலை 24 மணிநேர சேவையில்

24 மணிநேர

இல: 160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பேசி: 021 226 1500, 021 492 7232

Rubbins Hospital

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## மலாயன் கபே

குறை இருப்பின் எம்மிடம் கூறுங்கள்
சுவை இருப்பின் நண்பர்களிடம் கூறுங்கள்

யாழ். மக்களின் பாரம்பரியம் மிக்க

**சைவ உணவின் சாம்ராஜ்யம்**



இல.36,38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2373/ 077 791 7753
web: www.malayancafe.com

**அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**

## வாயுபுத்ரா போன் சொப்



Samsung Galaxy

- ✓Phone Sales
- ✓Computer Repairs
- ✓Phone Repairs
- ✓Camera fitting

மற்றும் இதர சேவைகள் எம்மால் வழங்கப்படும்.

## வாயுபுத்ரா ஆசனப் பதிவகம்



யாழ் - கொழும்பு சேவைகளுக்கான ஆசன பதிவுகள் செய்து தரப்படும்

இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 077 3644 246

**கிறிஸ்மஸ் மற்றும் 2017 புது வருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைச்சலுகை**

### System 1
intel core i3 3.7 GHz
Mother Board Asus
4GB DDR 111 RAM
500 GB HDD
DVD Writer ASUS
Casing
Monitor 19" LED Viewsonic
Keyboard
Mouse
UPS DCP
**57,999/=**

### System 2
intel Duo core 3.2 GHz
Mother Board Asus
4GB DDR 111 RAM
500 GB HDD
DVD Writer ASUS
Casing
Monitor 19" LED Viewsonic
Keyboard
Mouse
UPS DCP
**48,799/=**

### System 3
intel Core 2 Duo 3.06GHz
Mother Board HP
2GB DDR 111 RAM
250 GB HDD
DVD Writer HP
Casing HP
Monitor 17"
Keyboard
Mouse
**23,999/=**

**Free**
For System
Speaker
Head Phone
Card Reader
Mouse Pad

### Laptop 1
intel core i3 5th G
4GB DDR 111 RAM
1000 GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
WLAN / BT
**57,999/=**

### Laptop 2
intel core i3 6th G
4GB DDR 111 RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
WLAN / BT
**63,999/=**



**Free**
For Laptop
Laptop Cooler
Head Phone
Card Reader
Mouse
Laptop Bag

| | |
|---|---|
| View Sonic Monitor 19" | 12,299/= |
| 8GB Pendrive | 749/= |
| 16GB Pendrive HP | 1199/= |
| 32GB Pendrive HP | 2199/= |
| Mouse | 170/= |

## COMPUTER CORNER

பாதுகாப்பு கமரா பொருத்தும் சேவையை எம்மிடம் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்



**K.K.S Road,
Mallakam Junction**
021 205 9044
021 561 8547

**Kasthuriyar Road,
Jaffna.**
021 222 1323
077 353 7126

# அன்பின் அடையாளம்

அகிலத்தில் ஆயிரம் அவலங்கள் வாழ்விலே
ஆண்டுகள் போயினும் துன்பங்கள் தோளிலே
இலட்சியங்கள் மாறிடும் அபாயங்கள் மனதிலே
ஈசனவன் அருளால் மாற்றங்கள் நாளுமே

உலகின் மாயைகள் உற்சாகம் கொடுத்திட
ஊரும் உறவும் தூரத்தே தெரிந்திட
எல்லாமே ஆக்கிடும் பணமென்று எண்ணிட
ஏராளம் இன்பங்கள் தருமென்று எண்ணிட

ஐயங்கள் உறவுகளில் நம்பிக்கை இல்லை
ஒற்றுமை காணாமல் ஒதுக்கிடும் தொல்லை
ஓங்கிடும் வலியவர் ஏங்கிடும் நலியவர்
ஔடதமாய் மாறிட மறுத்திடும் மானிடர்

அன்பிற்காய் ஏங்கியே அலைந்திடும் உள்ளங்கள்
அரவணைக்கும் கரங்களைக் காணாத உறவுகள்
அடைக்கலம் ஏதுமின்றி அல்லாடும் நிலையிலே
அன்பின் அவதாரமாய் அன்னைமரி பாலகன்

அவனியில் மனிதனாய் அவதாரம் மீட்பராய்
அண்டிடும் பாவிகளை மீட்டிடும் நோக்கமாய்
அன்னைமரி மடியினில் நம்மோடு கடவுளாய்
அன்பினை அள்ளி வழங்கிட இயேசு பாலகனாய்

சில்லையூர் றமணி



# கிறிஸ்துவே உம்மை ஆராதிக்கிறோம்!

கிறிஸ்து அரசரின் கிருபை பெரிது
அவரது ஆட்சி அழிவில்லாதது
அவரது மகிமை நித்தியமானது
அனைவரும் அவரை ஆராதிப்போம்

அவரே அமைதியின் அரசருமாவார்
அவரே அன்பின் நியதியுமாவார்
இறைமகன் இயேசுவின் ஆயுதம் அன்பு
இயேசு ஒருவரே எமக்கு முன்பு

இறைவனை மறந்து விலகிப்போனீர்
சாத்தானாலே வஞ்சிக்கப்பட்டீர்
எம்குலம் மீட்க மீட்பர் வந்தார்
எளிமைக் கோலமாய் மெசியா வந்தார்

மனுக்குலம் மீட்க வந்த பெருமான்
குற்றவாளியாய்ப் பிலாத்து முன் நின்றார்
தலையிலே முள்முடி சூட்டப்பட்டுச்
சாட்டை அடியிலே உடல் புண்ணானார்

கோலைக் கையில் ஏந்திய படியே
குருதி கொட்டக் காணப்பட்டார்
பாரச் சிலுவையை முதுகினில் சுமந்தே
பாதகர் கையால் அடியும் பட்டார்

கல்வாரி மலைக்குக் கொண்டு சென்றே
சுமந்த சிலுவையில் அறையப்பட்டார்
மனுக்குலம் மீட்க வந்த பெருமானார்
மனிதம் இல்லாரால் மரணமடைந்தார்

மறுபடி உயிர்ப்பேன் என்றபடியே
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
மீட்பர் அவரே பாவிகள் நாமே!
நல்லாயன் அவரே மந்தைகள் நாமே!

சுந்தர் பேரின்பம், தீவான்

HNB
CREDIT CARDS

மகிழ்ச்சியை பிற்போடாதீர்கள்


HNB கடன் அட்டை வாடிக்கையாளர்களுக்கு பண்டிகைக் கால விசேட சலுகைகள் 30% வரை விசேட விலைக் கழிவு

| மாவட்டம் | விற்பனை நிலையம் | கழிவு % |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | KFC - யாழ்ப்பாணம் | *ஒன்றுக்கொன்று இலவசம் |
| | ரொப்பாஸ் | 25% |
| | ரொப்பாஸ் மால் | 25% |
| | கிங்ஸ் இலக்ரோனிக்ஸ் | 20% |
| | யுனிமெக்ஸ் | 20% |
| | நியூ பஷன் பார்க் | 20% |
| | ராசி கெலக்சன் | 20% |
| | வலம்புரி ஹோட்டல் | 15% |
| | இஷாரா புடைவையகம் | 15% |
| | ரில்கோ ஹோட்டல் | 15% |
| | கிறீன் கிறாஸ் ஹோட்டல் | 15% |
| | கபிலா சூ பலஸ் | 15% |
| | NRS ஒப்ரிக்கல்ஸ் | 15% |
| | அன்னை நாகர் பூட் சிட்றி | 10% |
| கிளிநொச்சி | ஸ்ரீ குமரன் ரெக்ஸ் | 30% |
| | இஷாரா பெஷன் | 15% |
| | பெசன் கெனக்சன் | 15% |
| வவுனியா | நெல்லி ஸ்ரார் | தங்குமிட வசதி 25% உணவு 15% |
| | ஸ்ரார் பெஷன் | 20% |
| | ரொப் லேடி | 20% |
| | பேமிலி ஸ்ரைல் (Style) | 20% |
| | ஹோட்டல் பிறின்செஸ் ரோஸ் | 20% |
| | அம்மா பெஷன் | 20% |
| | JPK சொப்பிங் | 10% |

KFC
0772750275
HNB

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய நத்தார் வாழ்த்துக்கள்

பெஸ்ட் இன்ஸ்
BEST IN'S
Textiles




Specialis in Wedding Sarees,
Salwar kameeze & Ladies Gents
& Children Garments

No.59/2, Grand Bazzar, Jaffna.
64, Grand Bazzar, Jaffna.
Tel: 0771 326 447

MIS ICT COLLEGE

Mr.R.Kumaran - B.Sc.

G.C.E. (A/L) ICT 2019 Batch Starts On...
01/01/207 Sunday at 5.00 pm

G.C.E.(A/L) ICT 2017 Batch
- Web Developement
- Computer Networking
- Paper Class

- Practical Lab Facility
- MMProjector Facility
- Hardware Lab Facility
- Monthly Examination
- Past Papers

பொதுப் பரீட்சைகளில் ஒவ்வொரு வருடமும் அதிகளவானோர் A சித்தி

G.C.E.(A/L) ICT 2018 Batch
- Python Programming
- Operating System (OS)
- Paper Class

ICT பாடத்திற்குத் தனித்துவமான நிறுவனம்
15 வருட கற்பித்தல் அனுபவம்

for university students....

G.C.E. (O/L) ICT
Grade 10 ICT
Grade 6-9 ICT

C Java C++ php MySQL

#74, Sabapathy Lane, Jaffna-Near Kokuvil.
TP: 077 6577359

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
JStar இல் கார்கில்ஸ் பூட்சிற்றி எதிரில்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்கள், சிறுமியர்களுக்கான ஆடைகள்
மாபெரும் மலிவு விலையில் 23 முதல் 31 வரை



கொட்டன் சல்வார் 1999/=
மஸ்தானி Grand Net சல்வார் 3199/=
Grand Top மற்றும் பல வகையான ஆடைகள்
கொட்டன் சாறி 999/= இலிருந்து
பாவாடை Model சல்வார்கள்
Grand சாறி

62, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு 077 818 6460, 077 223 3308




- அதி நவீன இல்லங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியன நிர்மாணங்கள்
- அனைத்திற்குமான வரைபடங்கள்
  - முப்பரிமாண வரைபடங்கள்
  - உள்ளக அலங்கரிப்பு
  - தளபாட வடிவமைப்பு
  - நீச்சல் தடாக நிர்மாணம்
- பொறியியலாளர்களின் நேரடி வழிநடத்தல்
- தொழில்நுட்ப உதவியாளர்களின் பூரண மேற்பார்வை
- இலகுக் கொடுப்பனவு
- குறைவான நிர்மாண கால எல்லை
- அதிநவீன உள்ளக வடிவமைப்பு
- பூரண மேலைத்தேய வடிவினாலான கட்டட நிர்மாணம்
- கட்டடங்களுக்கான வரைபடங்கள் முற்றுமுழுதாக இலவசம்
- நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கான காப்புறுதி முற்றுமுழுதாக இலவசம்.

Aayushman AAYUSHMAN
CIVIL ENGINEERS & CONSTRUCTION
Palali Road, Urumpirai South, Urumpirai.
0765 747 666 / 0765 761 800
Aayushman

YARL BEAUTY ACADEMY

Yarl Beauty & Language's Skills College

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

சனி, ஞாயிறு பிரிவுகள் 01.01.2017 (ஞாயிறு) 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 02.01.2017 (திங்கள்) 10.00 மணிக்கு

அனைத்துப் பயிற்சிகளும் மிகச்சிறந்த செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பயிற்சியின் நிறைவில் தொழில்வாய்ப்பு, சுய தொழில் ஆரம்பிப்பதற்கான வங்கிகடன் வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.17, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

அனைவருக்கும் எமது இனிய நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்.

கல்சிய மக்னீசிப் படிவுகளிலிருந்து

விடுதலை! விசேட விலைக்கழிவுடன்!

விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machines மற்றும் தொழிற்சாலைகளில் காணப்படும் விலையுயர்ந்த இயந்திரங்களை கல்சிய, மக்னீசியப் படிவுகளிலிருந்து காத்திடுங்கள்.

பண்டிகைக்கால 10% விசேட விலைக்கழிவுடன்!

நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பகரமான உத்தரவாதத்துடனான நிரந்தர தீர்வுகளுக்கும், சிறந்த நிபுணத்துவ ஆலோசனைகளுக்கும் இன்றே நாடுங்கள்.

EVER PURE HI-TEC (PVT) LTD
341,K.K.S ROAD ,JAFFNA.
TEL:- 0215677567, 0212226888, 0773626230

புளோரன்ஸ் நைற்றிங் கேல்
தாதியர் பாடசாலை

Florence Nighhtingaale
School of Nursing

O/L, A/L பரீட்சை முடித்துவிட்டு காத்திருக்கின்றீர்களா?
ஒருவருட தாதியர் பயிற்சிப் பாடநெறி ஊடாக உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளவும், நிரந்தர தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் முடியும் என நாங்கள் உறுதியளிக்கின்றோம்.

2017 இல் உங்களுக்கான ஓர் அரிய சந்தரப்பம்

- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி
- 03 மாதம் தனியார் வைத்தியசாலையில் முழுமையான பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலை வாய்ப்புக்கள்



அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

நீங்கள் எம்முடன் இணைவதற்கான தகைமைகள்

O/L 6 பாடம் சித்தி / வயது 16-35 வரை

( MLT ) வகுப்புக்கள்

- 06 மாத கால பயிற்சி பாடநெறி
- 3 மாத ஆய்வுகூட பயிற்சிகள் தகைமைகள்
- A/L (விஞ்ஞானபீடம்)

கடமை நேரம் 8.00 - 4.00

அரச வைத்தியசாலையில் உள்ள வைத்தியர், சிரேஸ்ட தாதியர் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படும்.

கே.கே.எஸ். வீதி, மருதனார் மடம்,
ஆஞ்சநேயர் கோயில் முன்பாக
( RDB வங்கி மேல் மாடி)

மேலதிக தொடர்புகளுக்கு:-
0777 186 438,
021 492 8916.

உ/த ஆரம்பிப்பதற்கு முன்
உங்கள் சிறப்பான எதிர்காலத்திற்கான திறன் அபிவிருத்தியை உறுதிசெய்யும் அகில இலங்கை ரீதியில் பிரசித்தி பெற்ற
இரட்டை டிப்ளோமாக்கள்

assured by PEARSON



DUAL DIPLOMA

IT + ENGLISH

Diploma in Information Technology
- MS Office, Hardware & Networking
- Graphics & Animation
- Web Designing
- Software Engineering
- Programming (Java, C#.net) and many more

Diploma in English
- Grammar
- Spoken
- Comprehension
- Role Play and more

FREE DVD with Role - Play Videos

ESOFT + Pearson UK)

Premier Value pack
- Personal Grooming
- Social Etiquette
- Public Speaking
- Leadership Building
- Emotional Inteligence

25% கழிவு
50% கழிவு

COMMENCEMENT 28th Dec 2016

Pearson Annual Awards 2015 GOLD PARTNER

ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308
Shaping Lives, Creating Futures.

Sri Lanka's Largest Private Sector Higher Education Network

ESOFT SCHOOL OF COMPUTING

REGISTRATIONS NOW OPEN

WANT TO MOVE UP YOUR CAREER?

HND IN COMPUTING SPECIALISING IN

PEARSON BTEC HND
- Software Engineering
- Networking

Durations: 18 months

Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree

TVEC APPROVED

NEW INTAKE January
FREE
for all Registrations

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY
BEng (Hons) in Software Engineering
BSc (Hons) in Computing

Pearson Annual Awards 2015 GOLD PARTNER

UGC APPROVED

CALL.: 021 7 572 572 | 077309 2626

The Highly Qualified and experienced lecture panel ensure that students have the right kind of practical knowledge and exposure to back their book learning.

ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308
Shaping Lives, Creating Futures.

Sri Lanka's Largest Private Sector Higher Education Network













## இன்று 25.12.2016

## 60ஆவது அகவை காணும் எனது சகோதரிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்



திருமதி
### சிவானந்தன் சாந்தகுமாரி

"அகவை அறுபதில் - உம்மை
அன்புடன் வாழ்க வாழ்கவென்று
வாயார வாழ்த்துகின்றோம்.. நீவிர்!!!
அறுபது என்ன நூறாண்டு வாழ்கவென
உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அன்பிற்கு அன்னையாய் ...
அறிவிற்கு தந்தையாய் ...
பண்பிற்கு வள்ளுவனாய் ...
கல்விக்கு வழிகாட்டியாய் ...
வாழ்க்கைக்கு நல்லாசானாய் ...
நீவிர் ...

வாழ்ந்த அறுபதில்
எத்தனை எத்தனை
நல்வழிகாட்டல்கள் தான் ...
வாழ்க பல்லாண்டு ...
வாழ்க என வாழ்த்தும்

தம்பி சுகு குடும்பத்தினர்


Multy Farm
Pet Paradise
அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
வளர்ப்பு கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்பு இன புறாக்கள் மற்றும் பல இன குருவிகள், முயல், கினிபிக் நாய்க் குட்டிகள் வளர்ப்பு இன கோழிக்குஞ்சுகள் என்பவற்றையும், அதற்குரிய உணவுகள், மருந்து, கூடுகள் ஆகியவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
941, கே.கே.எஸ். றோட், தட்டாதெரு சந்தி, யாழ். T.P: 021 221 7600 / 075 988 0000 / 077 937 0000
e-mail:-multyfarmpetparadise@gmail.com
fb:-Multi Farm Jaffna


ES
Printers
ES GiftZ
Poster / Notice / Lable
Wedding / Card / Bag Print
Award / Frame Item / Batch
Vehicle Brand / T-Shirt / Cap
ID Card / Key Tag / Book Mark
Pen Print / Book Printing
Woodent Print
உங்கள் உறவினர்களுக்கு அன்பளிப்பு பொருள்களை எம் இணையத்தளம் ஊடாக அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com
கலண்டர்கள், டயறிகள், போன்றவற்றை மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
021 492 7471 / 021 492 7472
#357, Kasthuriyar Road, Jaffna.
esprintersjaffna@gmail.com